# தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இறப்புச் செய்திகள்

## ASPECTS OF ELEGIES IN TAMIL CLASSICAL LITEARATURE

கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு


**ஆய்வாளர்**

**சசிகுமார் செ.** எம்.ஏ, பி.எட்.

(முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்)

**(Reg.No.CWEJ18123)**

**நெறியாளர்**

முனைவர் **விஜயன் அ.** எம்.ஏ, பி.எட், எம்.ஃபில்., பி.எச்.டி.

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை & ஆய்வுமையம்

அரசுக்கல்லூரி, சித்தூர்,

பாலக்காடு 678-104



அக்டோபர்-2023

# ASPECTS OF ELEGIES IN TAMIL CLASSICAL LITEARATURE

# தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இறப்புச் செய்திகள்

**THESIS SUBMITTED TO THE UNIVERSITY OF CALICUT**
**FOR THE AWARD OF DOCTOR OF PHILOSOPHY DEGREE IN TAMIL**

**By**

**SASIKUMAR S. M.A, B.Ed.**

**(Reg.No. CWEJ18123)**

**Research Guide**
**Dr.VIJAYAN. A, M.A., B.Ed., M.phil., P.hD.**

**Assistant Professor**

**DEPARTMENT OF TAMIL & RESEARCH CENTRE**

**GOVT. COLLEGE CHITTUR, PALAKKAD**

**OCTOBER - 2023**

**Dr. A. VIJAYAN**
Assistant Professor & Research Supervisor
Department of Tamil & Research Centre
Govt. College, Chittur, Plakkad
Kerala-678104

# CERTIFICATION OF SUPERVISOR

This is to certify that all the correction/suggestion from the adjudicators have been incorporated in this thesis.

**Dr. A. VIJAYAN**
Assistant Professor & Research Supervisor

**முனைவர் விஜயன்.அ**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை & ஆய்வு மையம்
அரசுக்கல்லூரி, சித்தூர்
பாலக்காடு 678104

# நெறியாளர் சான்றிதழ்

**‘தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இறப்புச் செய்திகள்’** என்னும் தலைப்பில் சசிகுமார் செ **(பதிவெண்-CWEJ18123)** அவர்களால் கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாய்வேடு எனது மேற்பார்வையின் கீழ் ஆய்வாளரது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இவ்வாய்வின் மீது ஆய்வாளருக்கு எந்தப் பல்கலைக்கழகத்தாலும் பட்டம் எதுவும் அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : சித்தூர் நெறியாளர்

**சசிகுமார் செ**
**(பதிவெண்-CWEJ18123)**
தமிழ்த்துறை & ஆய்வு மையம்
அரசுக்கல்லூரி, சித்தூர்
பாலக்காடு 678104

## ஆய்வாளர் உறுதிமொழி

**'தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இறப்புச் செய்திகள்'** என்னும் தலைப்பில் அமைந்துள்ள இந்த ஆய்வேடு 2017-2023 கால அளவில் கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெறுதல் தொடர்பாக சித்தூர், அரசுக்கல்லூரித் தமிழ்த்துறை & ஆய்வு மையத்தில் ஆக்கப்பட்டது. இவ்வாய்வு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இந்த ஆய்வின் மீது இதற்கு முன் எந்தப் பட்டமும் அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

இடம் : சித்தூர்

சசிகுமார் செ
(ஆய்வாளர்)

## உறுதிக்கையொப்பம்

| நெறியாளர் | துறைத்தலைவர் |
|---|---|
| **முனைவர் விஜயன். அ** | **முனைவர் க. முத்துஇலக்குமி,** |
| உதவிப்பேராசிரியர், | பேராசிரியர் |
| தமிழ்த்துறை & ஆய்வு மையம் | தமிழ்த்துறை & ஆய்வு மையம் |
| அரசுக்கல்லூரி, சித்தூர் | அரசுக்கல்லூரி, சித்தூர் |
| பாலக்காடு 678104 | பாலக்காடு 678104 |

## நன்றியுரைத்தல்...

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது**

**'தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இறப்புச் செய்திகள்'** என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகத்திற்கும் சித்தூர் அரசுக்கல்லூரித் தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையத்தின் தலைவர் முனைவர் க.முத்துஇலக்குமி அவர்களுக்கும் ஆய்வு நெறியாளர் முனைவர் அ.விஜயன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்விற்கான தலைப்பு தொடங்கி, ஆய்வேட்டைக் கட்டமைக்கும் ஒவ்வொரு அங்கத்திலும், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் எனதாய்வை செம்மை செய்து என்னை உருவாக்கிய எனது நெறியாளர் முனைவர் அ.விஜயன் அவர்களுக்கு மதிப்பிற்குரிய நன்றிகள்.

ஏழ்மையிலும் தலைமுறை தலைமுறையாக அயராதுழைத்து, ஓர் ஏழாம் சுவை தேநீர்க்குத் தங்களின் குருதியைச் சிந்தி, இந்நாள் வரை என்னைப் படிக்க வைத்துச் சான்றோனாக்கிய என் தந்தை, செல்வமாகக் கிடைத்த செல்வகுமார் அவர்களுக்கும் தாய்ப்பாலுடன் தமிழையும் பருகத்தந்த என் தாய் தமிழ்ச்செல்வி அவர்களுக்கும் எத்தனை நன்றி சொல்லியும் மாளாது. எப்பொழுதும் என்னைப் புறந்தள்ளாத இருவரின் பொற்பாதங்களுக்கு என் இதழ் பதித்த முத்தங்கள்.

இவ்வாய்வு தொடர்பான தர்க்கங்கள் வினாக்கள் தொடங்கி ஆய்வு தொடர்பான அனைத்து செயல்களிலும் உடனிருக்கும் என் தோழியும் மனைவியுமாகிய சித்ராவிற்கு என் அன்பு கலந்த நன்றிகள். என்னுடைய இன்ப துன்பங்களில் எப்போதும் உடனிருந்த, உடனிருக்கும் என் உடன் பிறப்புகள் வித்யா மற்றும் சுகுணாவிற்கும் என்னுடைய குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் என் நன்றிகள்.

ஆய்வு தொடர்பான என்னுடைய சந்தேகங்களுக்கும் வினாக்களுக்கும் தங்களின் பொன்னான மணித்துளிகளைப் பகிர்ந்தளித்த முனைவர் க முத்துஇலக்குமி அவர்களுக்கும் முனைவர் த.கவிதா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள். இக்கட்டான ஆய்வுத் தலைப்பைப் தெரிந்தெடுத்த எனக்கு ஆய்வு தொடர்பான நூல்களை வழங்கி, நிலையாமை குறித்து கலந்துரையாடி, பேருதவி புரிந்த முனைவர்

ந.மனோகரன் அவர்களுக்கும், முனைவர் க.சிவமணி அவர்களுக்கும் முனைவர் க.கதிரவன் அவர்களுக்கும் சிரம் தாழ்த்தி என் நன்றிகளைக் கூறிக் கொள்கிறேன்.

சித்தூர் அரசுக் கல்லூரித் தமிழ்த்துறை பேராசிரியப் பெருமக்கள் முனைவர் ப.முருகன், முனைவர் வை.தர்மலிங்கம், முனைவர் ர.ரதி, திருமிகு த.சுஜாதா, முனைவர் சு.பாத்திமா, அரசு விக்டோரியா கல்லூரியில் பணிபுரியும் முனைவர் வே.இரவி, கேரளப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் முனைவர் ச.பொ.சீனிவாசன் ஆகியோருக்கும் என் நன்றிகள். மேலும், என்னுடன் ஆய்வு செய்யும் ஆய்வு நண்பர்களுக்கும் குறிப்பாகச் சகோதரி சுதா.மு அவர்களுக்கும், என்னுடைய துக்க காலங்களின் பயணித்த தோழமைகள் குறிப்பாக ஆண்டனி மற்றும் ரமேஷ்.வீ ஆகியோருக்கும் எனது அன்பு கலந்த நன்றிகள்.

தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இறப்புச் செய்திகள் என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்ட எனக்கு உயிரிகளின் நிலையாமை அதீதமான விந்தைகளை எனக்குள் புகுத்தியது. தலைப்பைக் கேட்டவர்களும் விவாதித்தவர்களும் சற்றே வியப்படைந்தாலும் அவரவர்க்கு வருகின்ற மரணத் துன்பம் என்னையும் என் குடும்பத்தாரையும் ஆட்டிப் படைத்தது என்றே கூறலாம். வந்தோம், இருந்தோம், சென்றோம் என இருந்துவிடக் கூடாதென்ற ஒற்றைக் காரணம் இத்தலைப்பை எனக்குத் தந்தது என்றால் மிகையாகாது.

நன்றி.

இவண்

சசிகுமார் செ

***சுருக்கக் குறியீட்டு விளக்கம்***

1. உ ஆ - உரை ஆசிரியர்
2. உ வி - உரை விளக்கம்
3. உ ந - உரை நடை
4. த ப ஆ - தலைமைப் பதிப்பு ஆசிரியர்
5. து ப - துணைப் பதிப்பாசிரியர்
6. ப ஆ - பதிப்பு ஆசிரியர்
7. மூ வி உ – மூல விளக்க உரை
8. எ.டு – எடுத்துக்காட்டு
9. பா.அ- பாடல் அடிகள்
10. பா.எ- பாடல் எண்
11. பக்- பக்கம், பக்கங்கள்

# பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1-6 |
| ஒன்று | இறப்பும் இறப்பு சார் பதிவுகளும் | 7-30 |
| இரண்டு | அக இலக்கியங்களில் இறப்புச் செய்திகள் | 31-104 |
| மூன்று | புற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள் | 105-166 |
| நான்கு | அற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள் | 167-214 |
| ஐந்து | இரட்டைக் காப்பியங்களில் இறப்புச் செய்திகள் | 215-262 |
| | முடிவுரை | 263-270 |
| | துணைநூற்பட்டியல் | 271-288 |
| | பின்னிணைப்பு | |

# முன்னுரை

**த**மிழ் மொழி ஈராயிரம் ஆண்டு தொன்மையும் பழமையுமுடையது. மனித இனம் காட்டுமிராண்டியாகத் திரிந்த காலம் முதலே மொழி உருவாக்கம் பெறத் தொடங்கியுள்ளது. தமிழ் மொழி எழுத்துக்கள் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டு உருப்பெற்ற காலம் தொடங்கி, தற்போது இணையத்தில் ஆதிக்கம் செலுத்தும் முதன்மையான மொழியாகத் தமிழ் மொழி திகழ்கின்றது. அறிஞர்களும் அறிவியலாளர்களும் தமிழ் மொழியின் காலத்தை கி.மு. 3-ஆம் நூற்றாண்டு வரை கொண்டு செல்கின்றனர் (இவற்றுள் பல்வேறு கருத்து வேறுபாடுகளும் உண்டு). தென் தமிழகம் தொடங்கி இந்தியாவின் வடக்குப் பகுதிகள் வரைக்கும் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பெற்று அவற்றின் வழியாகக் கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில் உலகத்தின் மூத்த மொழியெனத் தமிழ் மொழியின் தொன்மையினை அறிஞர்கள் வரையறுத்துள்ளனர்.

இந்திய அரசாங்கம் தமிழ் மொழியைச் செம்மொழியாக கடந்த 2004-ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. தமிழ் மொழியானது செம்மொழித் தன்மை பொருந்திய மொழியாதலால் செம்மை எனும் சொல் இங்கு ஆராயத் தக்கது. செம்மை என்ற சொல்லிற்கு முழுநிறைவு, ஒழுங்கு, நேரிய தன்மை, செப்பம், ஒத்திசைவு, பெருமை, தூய்மை, வனப்பு முதலிய பல்வேறு விளக்கங்களைத் தமிழ்ப் பேரகராதிகள் குறிப்பிடுகின்றன.

செந்தமிழானத் தமிழ் மொழி, செம்மை வாய்ந்த மொழியாக மாற்றம் கண்ட பிறகு தமிழ் மொழியிலுள்ள இலக்கண நூல்கள் (தொல்காப்பியம், இறையனார் களவியல்) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள் (சிலம்பு, மணிமேகலை), முத்தொள்ளாயிரம் ஆகிய நாற்பத்தியொரு நூல்களுக்கு மட்டும் செவ்விலக்கியத் தகுதி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள உயிர்களின் இறப்புச் செய்திகளையும், பின்புலத்தையும், சூழல்களையும் இவ்வாய்வு ஆய முனைகின்றது.

செவ்விலக்கியங்களின் வழியாகச் சேகரிக்கப்பட்ட தரவுகளின் வழி இந்த ஆய்வேடானது பின்வரும் முறைமைகளை அடியொற்றி உருவாக்கப்பட்டுள்ளது.

***ஆய்வுத் தலைப்பு***

'தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இறப்புச் செய்திகள்' என்பது இவ்வாய்வேட்டின் தலைப்பாக அமைகிறது. 'ASPECTS OF ELEGIES IN TAMIL CLASSICAL LITEARATURE' என்பதாய் இத்தலைப்பினை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கலாம்.

***ஆய்வு நோக்கம்***

- காலந்தோறும் இறப்பைக் குறித்த தமிழர்களின் நிலைப்பாடு, அந்நிலைபாட்டினால் தமிழர்களின் வாழ்க்கை முறைமைகளில் ஏற்பட்ட மாறுதல்கள் ஆகியவற்றை அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.
- தமிழ்ச் சமூகத்தின் இறப்பு குறித்த நம்பிக்கைகள் இந்தியச் சமூகத்தின் இறப்பு குறித்த நம்பிக்கைகளோடு சில ஒற்றுமைகள் உடையதாக இருப்பினும் தனக்கெனத் தனித்தன்மை வாய்ந்த நம்பிக்கைகளையும் உடையதாக இருக்கின்றது என்பதை எடுத்துரைப்பதும் இவ்வாய்வு தன் நோக்கமாகக் கொண்டுள்ளது.

***கருதுகோள்***

- தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இறப்பும் இறப்பு சார்ந்ததுமான பல்வேறு செய்திகள் கூறப்பட்டுள்ளன. தமிழர்களின் தமிழ்ச்சமூகத்தின் இறப்பு குறித்த நம்பிக்கைகளில் இடையறுபடாத ஓர் ஈராயிரம் ஆண்டு மரபுத்தொடர்ச்சி இருக்கின்றது என்பதை இவ்வாய்வு கருதுகோளாகக் கொண்டுள்ளது.

***ஆய்வுச் சிக்கல்***

தமிழ்ச் செவ்விலக்கியங்களில் வேந்தர்கள், வீரர்கள், சாதாரண மனிதர்கள், பெண்கள், விலங்குகள் ஆகிய உயிர்களின் இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு பாடப்பெற்றுள்ள பாடல்கள் புலவர்களால் ஏற்றிக் கூறியிருத்தல் சிக்கலை உண்டாக்குகிறது. இறப்பை மனிதர்கள் கொண்டாடியுள்ளமை, தற்கொலை முயற்சி, உயிர்க் கொலைகள் பலவும் அரங்கேறியுள்ள சூழல்கள் ஆகியவை இவ்வாய்வின் சிக்கல்களாகும்.

***ஆய்வுஎல்லை***

ஈராயிரமாண்டு இலக்கிய நெடும்பரப்பு கொண்ட தமிழ் மொழியில் தமிழ்ச் செவ்விலக்கியத் தகுதிநிலைப் பெற்றுள்ள இலக்கண நூல்கள் (தொல்காப்பியம், இறையனார் களவியல்) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள் (சிலம்பு, மணிமேகலை), முத்தொள்ளாயிரம் ஆகிய நாற்பத்தியொரு நூல்கள் மட்டும் இவ்வாய்வுக்குரிய ஆய்வு எல்லையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

***ஆய்வு மூலங்கள்***

இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பெறுகின்ற ஆய்வு மூலங்கள் இரண்டு வகையில் அமைகின்றன. அவை பின்வருமாறு

***முதன்மைச் சான்றுகள்***

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்ட உரைகளுடன் கூடிய சங்க இலக்கிய நூல்களும், பெரியார் பல்கலைக்கழகம் வெளியிட்ட நச்சினார்க்கினியர் உரையுடன் கூடிய தொல்காப்பிய நூல்களும், ச.வே சுப்பிரமணியன் அவர்கள் உரை எழுதிப் பதிப்பித்த கீழ்க்கணக்கு நூல்களும் இவ்வாய்விற்குரிய முதன்மைச் சான்றுகளாக அமைந்துள்ளன.

***துணைமைச் சான்றுகள்***

மனிதர்களின் இறப்பு குறித்து உரையாடும் ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இறப்பு தொடர்பான இதழ்கள், இறப்பு தொடர்பான சமய நம்பிக்கை குறித்த நூல்கள், தத்துவ நூல்கள், உயிர்களின் இறப்பு தொடர்பான நூல்கள் ஆகியவை துணைமைச் சான்றுகளாக அமைந்துள்ளன.

***ஆய்வு முன்னோடிகள்***

'பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும்' எனும் பொருண்மையில் ஆ.சிவசுப்பிரமணியன் எழுதிய ஆய்வு நூலும், 'தமிழிலக்கியத்தில் மூப்பும் இறப்பும்' எனும் பொருண்மையில் முனைவர் இரா.நிர்மலா அவர்களால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அளிக்கப்பெற்றுள்ள ஆய்வேடும், ஆய்வு முன்னோடிகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

***ஆய்வு அணுகுமுறை***

தமிழ்ச் செவ்விலக்கியங்களின் வழியாகப் பெறப்பட்ட இறப்பு குறித்த தரவுகளின் அடிப்படையில், வரலாற்றியல் அணுகுமுறையும், அவற்றை விளக்கிக் கூறுவதால் விளக்கமுறை அணுகுமுறையும், தற்காலத்துடனான தொடர்பைச் சுட்டுவதால் ஒப்பீட்டு அணுகுமுறையும், மானுடர்களின் நிலையாமையைக் குறிப்பதால் சமுதாயவியல் அணுகுமுறையும் இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

***ஆய்வுப் பகுப்புமுறை***

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

**இயல் 1. இறப்பும் இறப்புசார் பதிவுகளும்**

**இயல் 2. அக இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்**

**இயல் 3. புற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்**

**இயல் 4. அற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்**

**இயல் 5. இரட்டைக் காப்பியங்களில் இறப்புச் செய்திகள்**

***முன்னுரை***

இப்பகுதியில் ஆய்வுத்தலைப்பு, ஆய்வுநோக்கம், கருதுகோள், ஆய்வு எல்லை, ஆய்வு ஆதாரங்கள், ஆய்வு முன்னோடிகள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வுப்பகுப்புமுறை ஆகியவை இடம்பெறுகின்றன.

***இயல் 1. இறப்பும் இறப்புசார் பதிவுகளும்***

முதல் இயலான '**இறப்பும், இறப்புசார் பதிவுகளும்**' எனும் இவ்வியலில் மனிதர்களின் இறப்பு எவ்வாறெல்லாம் நிகழ்கிறது, அகராதிகள், நிகண்டுகள், இலக்கியங்கள் குறிப்பிடும் இறப்பிற்கான வேறு சொற்கள் (மங்கல, அமங்கல வழக்கு எள்ளல் சொற்கள்). அறிஞர்கள், ஆய்வாளர்கள் இறப்பை எவ்வாறு நோக்கியுள்ளனர். சமயங்கள் மனிதர்களின் இறப்பை எவ்வாறு குறிப்பிடுகின்றன இன்றைய நிலையில்

குற்றச் செயல்களும் மரண தண்டனைகளும், மனித இறப்பும் பின்புலமும் ஆகிய தலைப்புகளின் கீழ் ஆராயப்பட்டுள்ளன.

***இயல் 2. அக இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்***

இரண்டாம் இயலான '**அக இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்**' எனும் இவ்வியலில் பதினெண்மேற்கணக்கிலும், பதினெண்கீழ்க்கணக்கிலும் உள்ள அகம் சார்ந்த நூல்களில் உள்ள இறப்பு பதிவுகள், கொலை குறித்த பதிவுகள், பழிக்குப்பழி, விபத்தால் ஏற்பட்ட இறப்புகள், இறப்போடு ஒப்பிடப்படும் மன உணர்வுகள், வீர விளையாட்டுக்களால் நேரும் இறப்புகள், பயணத்தின் போது ஏற்படும் இறப்புகள், பிணப்பதுக்கைகள், நடுகற்கள், சங்கத் தலைவிகளின் இறப்பு குறித்த அச்சங்கள், மடலேறுதல், விலங்குகளின் இறப்புகள் ஆகியன தொகுக்கப்பட்டு ஆராயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

***இயல் 3. புற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்***

மூன்றாம் இயலான '**புற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்**' எனும் இவ்வியலில், பதினெண்மேற்கணக்கிலும், பதினெண்கீழ்க்கணக்கிலும் புறம் சார்ந்த நூல்களில் உள்ள இறப்பு பதிவுகள், குறுநில மன்னர்கள் தொடங்கி பெரு வேந்தர்கள் வரையிலான இறப்புகள், அவர்களின் இறப்புக் கொண்டாட்டங்கள், இறப்புத் தத்துவங்கள், யாக்கை நிலையாமை, போரியல் இறப்புகள், இறப்பினால் கிடைக்கும் பீடுகள், தற்கொலைகள், வேந்தர்களின் மனைவிகளின் இறப்பு, போர் மறவர்களின் இறப்பு, இறப்பினால் துயருறும் மகளிரின் நிலை, ஆடவர் நிலை, பிணப்பதுக்கைகள், நடுகற்கள், விலங்குகளின் இறப்புகள், முத்தொள்ளாயிரத்திலுள்ள இறப்புச் செய்திகள் ஆகியன தொகுக்கப்பட்டு ஆராயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

***இயல் 4. அற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்***

நான்காம் இயலான '**அற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்**' எனும் இவ்வியலில், மனித உயிர்களின் நிலையாமை, இறப்பைக் குறித்த அறம் சார்ந்த கருத்துகள், இறப்போடு இணைவைக்கப்படும் மனிதச் செயல்பாடுகள், இறந்தும் அடைய வேண்டிய மனித மதிப்பீடுகள், இறப்பு ஒப்புமைகள், அற வழியில் இறப்பை நிகழ்த்துதல், மனிதர்களின் இறப்பிற்குப் பின்னான வாழ்க்கை, வாழ்க்கை நிகழ்வுகளும் இறப்பும், உயர்ந்தோர், தாழ்ந்தோர் இறப்பு கருத்தாக்கங்கள், கொலை குறித்த இறப்பு

அறங்கள், மானம் குறித்த இறப்பு அறங்கள், பிற இறப்பு அறங்கள் ஆகியவை குறித்து ஆராயப்பட்டு மதிப்பிடப்பட்டுள்ளன.

### *இயல் 5. இரட்டைக் காப்பியங்களில் இறப்புச் செய்திகள்*

ஐந்தாம் இயலான '**இரட்டைக் காப்பியங்களில் இறப்புச் செய்திகள்**' எனும் இவ்வியல் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. முதல் பகுதியான சிலம்பில் நீலி இறப்பு, சங்கமன் இறப்பு, கண்ணகி கோவலனின் ஊழ்வினை, சாபங்கள், பாண்டியன், கோப்பெருந்தேவியின் இறப்பு, இறப்புச் சொப்பனங்கள், மாதரியின் தற்கொலை, கவுந்தியடிகளின் தற்கொலை, கண்ணகி கோவலன் தாயார்களின் இறப்பு, கொல்லர்களின் கொலை, சிலம்பில் பிற இறப்புகள், பூத சதுக்கங்கள், வீரர்களின் தற்கொலைகள், செங்குட்டுவனின் கொலைக்களம், கொற்றவையின் கூற்றம் ஆகியவை குறித்து ஆராயப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதி மணிமேகலை குறிப்பிடும் இறப்பு பதிவுகள், உதய குமரன் இறப்பு, இறப்பு குறித்த மணிமேகலையின் விளக்கம், ககந்தனின் புதல்வர்கள் இறப்பு, சிறுவன் சார்ங்கலன் இறப்பு, மணிமேகலையின் தங்கைகளான வீரை, தாரை இறப்பு, நெடுமுடிக் கிள்ளியின் மகன் இறப்பு, ஆபுத்திரன் இறப்பு, பத்தினிகளின் இறப்பு, கோட்டங்களின் அமைப்பு, துர்க்கைக்குப் பலி கொடுத்தல், பிணந்தின்னி மக்கள், மனிதர்களைக் கொன்றுண்ணும் பூதங்கள் ஆகியவை குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.

### *முடிவுரை*

ஐந்து இயல்களில் ஆராயப்பட்டதன் முடிவுகளை தொகுத்து விளக்கும் பகுதியாக முடிவுரை அமைந்துள்ளது. முடிவுரையைத் தொடர்ந்து துணைநூற்பட்டியலும், பின்னிணைப்பும் தரப்பட்டுள்ளன.

துணைநூற்பட்டியலில் தமிழ் நூல்கள், ஆங்கில நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள் எனப் பாகுபடுத்தப்பட்டு ஆய்விற்குத் துணைநின்ற சான்றாதாரங்கள் அகரவரிசையில் தரப்படுள்ளன.

தமிழ் இலக்கியங்களில் இறப்பு குறித்த பாடல்களின் எண்ணிக்கையை விளக்கும் வரைபடங்கள் உருவாக்கப்பட்டு பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

# இயல் – ஒன்று

## *இறப்பும் இறப்புசார் பதிவுகளும்*

'**இ**றப்பு' மனித இனம் கண்டஞ்சும் பெருந்துயர். முடி சூடிய வேந்தர்கள் முதல் பாமரர்கள் வரைக்கும் பட்டனர் என்பது அனைவரும் ஏற்கக்கூடிய நிதர்சனமான மெய். இறப்பைக் கேட்டிடாத, கண்டிடாத, சிந்திக்காத எவரும் இவ்வுலகினில் இருக்கவியலாதென்பதை தீர்க்கமாக அறுதியிட்டுக் கூறிவிட முடியும். இவ்வுலகினில் ஊனுயிராகத் தோற்றம் பெற்ற உயிர்களனைத்திற்கும் இறுதி எனப்படுவது இயல்பான ஒன்றாக அமைந்துள்ளது. தமிழ் மொழியில் மெய்யெழுத்துக்களை, உயிரெழுத்துக்கள் உயிர்ப்புடன் வைத்திருப்பதைப் போன்று உயிர்களின் 'மெய் இயக்கத்தை உயிரானது உறுதி செய்கின்றது'. ஓரறிவுள்ள புட்கள் முதல் ஆறறிவு உள்ளதாகக் கருதப்படும் மனிதர்கள் வரை இறப்பென்பது நிலையானதும் பொதுவானதாகவும் அமைந்துள்ளது.

உயிர்களின் இறப்பை இயற்கை, செயற்கை என இருவகைப் படுத்தலாம். வயது மூப்பினாலும் நோயுற்று உடலுறுப்புகள் தானே செயலிழப்பதாலும் ஏற்படும் இறப்புகள் இயற்கை எனவும், போர், விபத்து, கொலை போன்ற இன்னபிற காரணங்களால் ஏற்படும் இறப்புகள் செயற்கை எனவும் கொள்ளலாம். மனித இனம் காட்டுமிராண்டியாகத் திரிந்த காலம் தொடங்கி நாகரிகப் போர்வை போர்த்திக் கொண்ட தற்போதைய நிலை வரைக்கும் இறப்பென்பது இதுதான், இப்படித்தான் என எவராலும் வரையறுத்துக் கூற இயலவில்லை. மனித இனத்தின் நாகரிக வளர்ச்சிப் படிநிலைகளில் ஏற்பட்ட மாறுதல்களால் பகுத்தறிவு கிட்டிய நூலாளர்களின் சிந்தை மிகு எழுத்துக்கள் உயிர்களின் இறப்பையும் இறப்பிற்கான சூழல்களையும் பல்வேறு நூல்களின் வழியாக எடுத்தியம்புகின்றன.

இறப்பைக் குறித்த நுண் நோக்கில், உயிர்கள் பிறப்பதே இறப்பதற்காகத்தான் எனும் சிந்தை, இறப்பினாற் கிடைக்கும் புகழ், இறப்பை அறவழியில் நிகழ்த்துதல் ஆகிய அறிவுப் புரிதல்களைத் தமிழிலக்கியங்கள் எடுத்தியம்பியுள்ளன. மனித இனத்தின் ஊனுயிரின் தொடர்புகளையும் உடலியக்கக் காரணி உயிர்தான் என்பதையும் மனிதத் தத்துவங்கள் மாசற்றதாகக் கருதுகின்றன.

‘இறப்பும் இறப்புசார் பதிவுகளும்’ எனும் இவ்வியல்

- **இறப்பு**
- **இறப்பும் அறிவியலும்**
- **அகத்தியரின் இறப்பு நோக்கு**
- **அறிஞர்கள் நோக்கில் இறப்பு**
- **சமயங்கள் காட்டும் இறப்பு**
- **கிறித்தவம்**
- **இசுலாமியம்**
- **வைணவம்**
- **இராமாயணம்**
- **பகவத்கீதை**
- **சைவம்**
- **சமணம்**
- **பௌத்தம்**
- **இறப்பு தொடர்பான சொல்லாடல்கள்**
- **மங்கல வழக்குச் சொற்கள்**
- **இழி வழக்குச் சொற்கள்**
- **நேர்ச்சி குறித்த இறப்புச் சொற்கள்**
- **குற்றச் செயல்களும் மரண தண்டனையும்**
- **மனித இறப்பின் பின்புலம்**

ஆகிய பல்வேறு தலைப்புகளில் ஆய்கின்றது. உயிர்களின் இறப்பு குறித்த புரிதல்கள், விளக்கங்கள், ஊகங்கள், இறப்பு சார் பதிவுகள் ஆகியவற்றைத் தத்துவவியலாளர்களின் வழியாகவும் உயிர்களின் மரணத்தை விளக்குவதான பல்வேறு நூல்களின் அடிப்படையிலும் இவ்வியலானது ஆராய முனைகின்றது.

## இறப்பு

இவ்வையகம் உருவானது தொடங்கி ஊனும் உயிருமாகத் தோற்றம் பெற்று இயக்க நிலை கொண்ட உயிர்களின் சுவடுகள் இல்லாமற் அழிந்து போவதை இறப்பு

என வரையறுக்கலாம். தொல்காப்பியர், தொல்காப்பிய மரபியலில் உயிர்ப் பாகுபாடுகளாகச் சிலவற்றைச் சுட்டுகின்றார். உயிர்களுக்கு அறிவுண்டென்பதையும் அவ்வறிவு நிலைகள் ஆறு வகைப்படும் என்பதையும்

**ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே**
**இரண்டு அறிவதுவே அதனொடு நாவே**
**மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே**
**ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.**[1]

எனக் குறிப்பிட்டுள்ளார். ஓரறிவுள்ளதாகக் கருதப்படும் உயிரினங்கள் முதல் பகுத்தறியும் அறிவைப் பெற்றுள்ள மனிதர்கள் வரை பல்வேறு உயிர்களைப் புலவர் குறிப்பிட்டுள்ளார். ஆக, புலவர் குறிப்பிடும் இயக்க நிலையையுடைய உயிர்களின் நிலையாமையை இறப்பென வரையறுத்துக் கொள்ளலாம்.

**இறப்பும் அறிவியலும்**

மனித இனம் தோற்றம் பெற்றது முதல் தற்போது வரைக்கும் மனித இனத்தின் இறப்பிற்கான காரணங்களை அறிவியல் வல்லுநர்கள் பலரும் ஆராய்ந்து வருகிறார்கள். உயிர்களின் உடலியக்கம் தடைப்பட்டு, இயக்கமில்லாத ஜட நிலை இறப்பாகக் கொள்ளப்படுகிறது. உயிர்களின் இறப்பை உடலியக்க நிறுத்தம் உறுதி செய்வதை அறிவியல் ஆராய்ச்சிகள் கீழ் வருமாறு சுட்டுகின்றன.

**இதயம் செயற்படாது**
**மூச்சு நின்றுபோகும்**
**உடல் வெப்பநிலையில் மாற்றம்**
**தோல் வெளிறிப் போகும்**
**உடல் விறைத்துப் போகும்**
**உடல் வறண்டுப் போகும்**
**மெழுகு தன்மையிலான மாற்றம் ஏற்படும்**
**மேலும், இதயத் துடிப்பு சப்தம் 30 நிமிடங்களுக்கு நின்றால் உயிர் நீங்கியதாகப் பொருளாகும்.**[2]

இதனைச் சட்டப்படியான பிரேத பரிசோதனை எனும் நூலில் வேங்கடாச்சலம் குறிப்பிட்டுள்ளார். தற்போது விபத்தினாலும் இன்னபிற காரணங்களாலும் மனிதர்கள்

‘மூளைச்சாவடைவதாக மருத்துவத் துறையினர் குறிப்பிடுகின்றனர்’. உடலுறுப்புகளின் இயக்கச் செயல் தடைப்பட்டு மனிதர்கள் இறக்க நேரிடுவதாகவும் அறிவியல் ரீதியாக அறிய முடிகின்றது.

**அகத்தியரின் இறப்பு நோக்கு**

அகத்தியர், மனிதர்களின் இறப்பைக் குறிப்பிடுகையில் உயிரற்ற உடல் வெறும் பிணம், உயிர் பிரியும்முன் தீய வழியைச் சேராமல் அறவழியில் வாழ்க்கையை ஒப்புவியுங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். உயிர்களை எப்போது வேண்டுமானாலும் மரணம் கட்டி அணைத்துக் கொள்ளும் என்பதை

**“பாரப்பா சீவன் விட்டுப் போகும் போது**
**பாழ்த்த பிணம் கிடக்குதென்பார் உயிர் போச்சென்பார்**
**ஆரப்பா அறிந்தவர்கள்? ஆரும் இல்லை**
**ஆகாய சிவத்துடனே செருமென்பார்**
**காரப்பா தீயுடன் தீச் சேருமென்பார்**
**மானிடர்கள் கூட்டமப்பா**
**சீரப்பா சாமிகள் தாமொன்றாய்ச் சேர்ந்து**
**தீயவழி தனைத் தேடிப் போவார் மாடே.**[3]

என அகத்தியர் குறிப்பிட்டதாக குருஜி வாசுதேவ் ‘மரணத்துக்குப் பின்’ எனும் நூலில் சுட்டியுள்ளார். மரணத்தை அறிந்தவர்கள் இவ்வுலகினில் எவரும் இல்லை. மனித உயிர்கள் நிச்சயம் இறந்து போகும் ஆகவே இறப்பதற்கு முன் அறம் செய்தல் வேண்டுமென்ற கருத்து இங்கு மேலோங்கிக் காணப்படுகின்றது. மனிதர்களின் இறப்பு நிலையானது. ஒருவரின் இறப்பு பிறருக்கு அச்சத்தையும் வியப்பையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயப்பாடில்லை என்பது இங்குத் தெளிவுறுகிறது.

**அறிஞர்கள் நோக்கில் இறப்பு**

இறப்பு எனும் இறுதி, இனம், மொழி, மதம், குடி எனக் கட்டுண்டு கிடக்கும் மனிதர்களை உருக்குலையச் செய்வதாக அமைந்துள்ளது. புவியில் இறப்பை வென்றவர்கள் எவரும் இல்லை. அறிஞர்களும் தத்துவவியலாளர்களும் உயிர்களின் இறப்பைத் தங்களின் எழுத்துக்களின் வழியாகக் கொண்டாடியுள்ளனர். மனிதர்களின் இறப்பு அறவழியில் அமைய வேண்டுவதான தத்துவங்களும் அறிவுரைகளும் எழுத்து வடிவில் பரவலாகக் கிடைக்கப் பெறுகின்றன. மனிதர்களின் இறப்பைக் குறித்த

புரிதல்களை அறிஞர்கள் பலரும் வாழ்க்கைத் தத்துவமாக எடுத்துரைத்துள்ளனர். அவற்றுள் ஒருசில பின்வருமாறு

> **“மரணம் ஒரு முகத்திரை. அதை வாழ்பவர்கள் வாழ்க்கை என்கிறார்கள். அவர்கள் உறங்கும்போது முகத்திரை பறிக்கப்படுகின்றது.[4]**

என, மனிதர்களின் இறப்பைக் குறித்து பி.பி ஷெல்லி குறிப்பிடும் தத்துவத்தை, சந்தியா நடராஜன் ‘இனி இல்லை மரண பயம்’ எனும் தமது நூலில் சுட்டியுள்ளார்.

ரூபாயத் உமார் கய்யாமின் கவிதைகள் பலவும் உயிர்களின் இறப்பைச் சார்ந்ததாக அமைந்துள்ளன. இறப்பைக் குறித்துப் பாடியுள்ள கய்யாமின் கவிதைகளை, தமிழில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மொழி பெயர்ப்பு செய்துள்ளார். அவற்றுள் மனிதர்களின் இறப்பை

**“இருக்கும் காலம் சிறிதேயாம்**
**இதனுள் இன்ப வாழ்வினையாம்**
**பெருக்கு மளவு பெருக்கிடுவோம்**
**பிழையொன் றதனால் உண்டோ? சொல்**
**உருக்கும் பாடல் கேளாமல்**
**உண்ணும் மதுவும் உண்ணாமல்**
**பொருக்கு மண்ணில் மண்ணாகப்**
**புதைந்து போனால் என்செய்வோம்?[5]**

என, ஒரு நாள் இல்லாமற் போகும் வாழ்க்கையை மனித இனம் பெற்றுள்ளது. மனிதர்களின் இறுதி வரும்முன் வாழ்க்கையை மனித இனம் கொண்டாட வேண்டும் எனும் பொருள் இக்கவிதையில் பொதிந்துள்ளது.

மாவீரன் நெப்போலியன், தோல்வியால் வரும் இழி நிலையை மரணமாகக் குறிப்பிடுகின்றார். வெற்றியானது புகழைத்தரும் ஆனால் தோல்வியானது மனித இறப்பினைக் காட்டிலும் இழிவானதென்பதை,

**“மரணம் என்பது ஒன்றுமில்லை.**
**தோற்று இழிவில் வாழ்வது தினசரி மரணம்.[6]**

என்றும் நெப்போலியன் கூறியதாக சந்தியா நடராஜன் ‘இனி இல்லை மரண பயம்’ எனும் நூலில் சுட்டியுள்ளார். மனிதர்கள் மரணத்தை வீரத்துடன் தழுவ வேண்டும்

அவ்வாறாக வீரமில்லாதவர்களின் இறப்பு இழிநிலையடையும் என்பதை இத்தத்துவம் வெளிப்படுத்துகின்றது.

மனிதர்களின் இறப்பு விந்தையானது, மனிதர்களின் அறிவு வெளிப்பாட்டில் வாழ்க்கை நிரந்தரம் எனும் கோமாளித்தனம் நுழைந்துள்ளது எனத் தத்துவவியலார்கள் குறிப்பிடுகின்றனர். மனிதர்களின் இறப்பைக் குறித்ததான கருத்தாக்கங்களை மேலை நாட்டு தத்துவவியலாளர்களும் அறிஞர்களும் எடுத்துரைத்துள்ளனர். அவற்றில் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

மனிதர்களின் இறப்பு குறித்த தத்துவத்தை சாமுவேல் பட்லர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

> **"ஒருவனுக்கு அவன் நித்யனே; சாகப் போகிறான் என்பதை அவன் அறிந்திருக்கலாம். ஆனால் இப்போது அவன் செத்துவிட்டத்தை ஒருபோதும் அறியமாட்டான்.**[7]

அறிஞர் ஹெரோடாடஸ் உயிர்களின் இறப்பு குறித்த புரிதலை தத்துவ ரீதியில் வெளிப்படுத்தியுள்ளார்.

> **"ஆய்ந்து ஓய்ந்த மனிதர்களின் மகிழ்ச்சியான மறைவிடம் மரணம்.**[8]

மனிதர்கள் எப்போதும் உயிருடன் நிலைத்திருப்பதில்லை என்பதை யுரிபிடஸ்

> **"நாளை நான் உயிரோடு இருப்பேன் என்று உறுதிபட எவராலும் சொல்ல முடியாது.**[9]

என்று விளக்குகிறார்.

மனிதர்களின் பிறப்பும் இறப்பும் எவ்விதக் காரணமுமின்றியே அமைகின்றன என்பதை

> **"உயிர் வாழும் அனைத்தும்**
> **எவ்விதக் காரணமின்றியே பிறக்கின்றன**
> **பலவீனத்தால் வளர்கின்றன**
> **தற்செயலாக இறக்கின்றன.**[10]

என அறிஞர் ழான் பால் சாத்தர் தத்துவமாகக் குறிப்பிட்டுள்ளார்.

> **"அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மரணமே தீர்வு. மனிதன் இல்லை எனில் பிரச்சனை ஏது?**[11]

என மனித இனத்தின் அனைத்துத் துன்பங்களுக்கும் மரணமானது தீர்வாக அமைவதை ஜோசப் ஸ்டாலினின் தத்துவத்தின் வழி அறியமுடிகின்றது.

**“மனித ஆசிர்வாதங்களில் ஆகப்பெரிது மரணம்.**[12]

என்பதை, தத்துவமேதை சாக்ரட்டீஸ், மனித இனம் குறைவுகளோடு வாழ்வதைக் காட்டிலும் மரணமடைவது வரம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**“நதியும், கடலும் ஒன்று போல, வாழ்வும் மரணமும் ஒன்றே.**[13]

என கலீல் ஜிப்ரான், மரணத்தை மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து பிரிக்கவியலாது என்பதை உரைக்கின்றார்.

எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்கள்

> **“மனிதர்களின் மரணமானது பூச்செடியைப் போலத்தான், ஒரு பூ உதிர மற்றொரு பூ பூக்கும். அதேபோல ஒருவர் மரணம் அடைய அவரது இடத்தைப் பூர்த்தி செய்ய வேறொரு ஆத்மா புதிய உடலுடன் பிறக்கின்றது எனக் குறிப்பிடுகின்றார்.**[14]

இவ்வாறு, மனிதர்களின் இறப்பைக் குறித்த புரிதல்களைத் தத்துவவியலாளர்கள் தங்களுடைய கருத்துகளின் வழி மனித இனத்திற்கு அறிவுறுத்தியுள்ளனர். இறப்பைக் குறித்த அச்சம் மக்கட் சமூகத்தை நிலைகுலையச் செய்கின்றது. அவ்வச்சத்தைப் போக்கும் விதமான தத்துவப் பதிவுகள் பலவும் இங்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. மனிதர்கள் தீமையான வழியை ஒழித்து, நன்மையான வழியில் பயணிக்க இத்தத்துவங்கள் துணைபுரிவதாக அமைந்துள்ளன. அழிந்து போகும் மனித இனத்தின் மரணத்தைப் பகுத்தறிதல் மூலம் தெளிந்து ஏற்க இவ்வகைத் தத்துவங்கள் வழி செய்கின்றன.

**சமயங்கள் காட்டும் இறப்பு**

இறை வழிபாடு, இறை நம்பிக்கை என்பன மனிதர்களின் அச்சத்தைக் கருவாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டுள்ளன என இறைமறுப்பாளர்கள் கூறி வருகின்றனர். இயற்கையின் கோரத்தாண்டவம் அவ்வப்போது ஏற்பட்டு பூமியில் பல்வேறு மாற்றங்களை விளைவிக்கின்றது. மண்சரிவு, ஓயாத மழை, கடல் சீற்றம், பூகம்பம் எனப் பல்வேறு இயற்கைச் சூழல்களினால் காலந்தோறும் மாண்டோர் ஏராளம். உயிரச்சம் மனித இனத்தை ஆட்டிப் படைக்க இறை வழிபாடு தோற்றம் பெறுகிறது.

மனிதர்கள் இன்புறும் நிகழ்வுகளை ‘நல்லவை’ எனவும் துன்புறும் நிகழ்வுகளை ‘அல்லவை’ எனவும் பிரித்துள்ளனர். இறை உருவங்களும் சமயங்களும் சமயம் சார்ந்த நூல்களும் உயிரச்சத்தைக் கொண்டே உருப்பெற்றுள்ளன என இறைமறுப்பாளர்கள் கருதுகின்றனர். இதற்கு மாறான கருத்துடைய சமயங்கள் உயிர்களின் மரணத்தை இறைவழிபாட்டின் மூலம் கட்டமைத்துள்ளன. சமயங்கள் மனித மரணத்தை எவ்வாறு நோக்கியுள்ளன என்பதைப் பின் வருவனவற்றின் வழியாகக் காணலாம்.

**கிறித்தவம்**

கிறித்தவ நூலான வேதாகமத்தில் உயிர்களின் மரணம் நிலையானதென்றும் பிற உயிர்களுக்குப் பாவம் விழைவித்தல் மரணத்தில் முடியும் எனும் போதனைகளையும் மனிதர்களின் மனத்தில் விதைத்துள்ளது. அவற்றுள் மனித மரணத்தை

> **“அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்து போகும்.[15]**

என கிறித்தவ நூல் குறிப்பிடுகின்றது. மனிதர்கள் நெடுங்காலம் சீவனோடு இருப்பதில்லை என்ற கருத்து இதன் வழி வெளிப்படுகின்றது. உயிர்கள் பல்லாண்டு காலம் நிலைத்து வாழாது நிச்சயமாக இறக்கும். மனிதர்கள் மண்ணால் படைக்கப்பட்டவர்கள், இறுதியில் மண்ணுக்கே திரும்புவார்கள் என்பது இறப்பின் மையக் கருத்தாக அமைகின்றது.

**இசுலாமியம்**

உயிர்களின் இறப்பைக் குறித்துக் கிறித்தவ நூலும் இசுலாமிய நூலும் ஒரே மாதிரியான கருத்துக்களையே தம்முட் கொண்டு வெளிப்படுத்துகின்றன எனலாம். மனிதர்கள் வாழ்க்கையில் மேம்பட்டவர்களாகவும் உயரிய பதவியில் இருந்தாலும் மரணம் அவர்களைத் தழுவும் என்பதை

> **“நீங்கள் எங்கிருந்தாலும் மரணம் உங்களை அடைந்தே தீரும். நீங்கள் உறுதிமிக்க கோட்டைகளில் இருந்தாலும் சரி![16]**

என இசுலாமியம் குறிப்பிடுகின்றது. மனிதர்கள், மரணம் தங்களை நெருங்காது, மரணத்திடமிருந்து வெகு தொலைவிலுள்ளோம் என்ற எண்ணம் கொண்டவர்களை மட்டுமல்லாது அனைவரையும் மரணம் அழைத்துச் செல்லும் என்பதை இசுலாமிய நூலான குர்ஆன் குறிப்பிடுகின்றது.

**வைணவம்**

வைணவத் தத்துவமானது, உயிர்களின் மரணம் நிலையானது ஆன்மா அழிவில்லாததும் நிலைத்திருப்பதுமாகும் என்பதை

> **“ஞானத்திற்கு இடமான ஆன்மா அல்லது உயிர் ‘சித்து’ என வழங்கப்பெறுகின்றது. அணுவின் வடி வினையுடைய இந்த ஆன்மா ஆனந்த வடிவினைக் கொண்டது, என்றும் நிலை பெற்றிருப்பது.**[17]

எனப் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் ‘வைணவமும் தமிழும்’ எனும் நூலின் வழியாக உயிர்களின் மரணத்திற்கு விளக்கமளித்துள்ளார். நிலையாமை குறித்த தத்துவத்தை மனிதர்களுக்குப் போதிக்கும் வண்ணம் வைணவம் அமைந்துள்ளது.

***இராமாயணம்***

இந்துத்துவக் கருத்துக்களை மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட இராமயணத்தில் உயிர்களின் மரணம் குறித்த பதிவுகள் கிடைக்கின்றன. உலகத்தில் நிலையானது எதுவுமில்லை என்ற தத்துவத்தை உயிர்களின் இறப்புடன் தொடர்பு படுத்தியுள்ளதை

> **வாழ்வும் சாவும்**
> **இன்பமும் துன்பமும்**
> **லாபமும் நஷ்டமும்**
> **இந்த இருமைகளைத் தவிர்க்க முடியாது**
> **உன்னால் எதை மாற்ற முடியாதோ**
> **அதை ஏற்கப் பழகு.**[18]

என இராமாயணம் குறிப்பிடுகின்றது. உயிர்களின் பிறப்பும் இறப்பும் தொடர் செயல் என்பது இங்குப் புலப்படுகின்றது. மனிதர்களால் மரணத்தை வெல்லமுடியாது எனும் பொருள் பொதிவை இராமாயணம் கொண்டுள்ளது. இராமாயணம் மனிதர்களின் நிலையாமையைக் குறிப்பிடும் செய்திகளைச் சந்தியா நடராஜன் ‘இனி இல்லை மரண பயம்’ எனும் தமது நூலின் வழிச் சுட்டியுள்ளார்.

***பகவத்கீதை***

பிறத்தல், இருத்தல், வளர்தல், மாறுதல், தேய்தல், மாய்தல் ஆகிய ஆறுவித பாவ விகாரங்கள் பூதங்களாகிய உடலத்துக்கு உண்டு ஆத்மாவுக்கு விகாரம் இல்லை என்பதை பகவத்கீதை குறிப்பிடுகின்றது. அது பின்வருமாறு

**"இவ்வாத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை. இது இல்லாதிருந்து பிறகு பிறந்ததன்று. இது பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது. காயம் கொல்லப்படுமிடத்தும் ஆத்மா கொல்லப்படுவதில்லை.**[19]

உடலில் உறைந்துள்ள உயிரை ஆன்மா எனவும் அவ்வான்மா பிரிந்த பின் உடல் அழியும் ஆனால் ஆன்மா அழியாது என கீதை குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது.

**சைவம்**

சைவம் உயிர்களின் கருப்பொருள்களாக பதி, பசு, பாசம் என்பனவற்றை வரையறுக்கின்றது. இதனை சிவஞான சித்தியார்

**பதிபசு பாசமெனப் பகர் மூன்றில்**
**பதியினைப் போல் பசுபாச மநாதி**

எனக் கூறுவதாக, 'சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகள்' எனும் நூலில் டாக்டர்.வா.ஆ.சேனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இவை மூன்றும் என்றும் உள்ளவை என்பது சித்தாந்தம். 'இல்லது வாராது உள்ளது போகாது' என்பது சித்தாந்தம் ஏற்கும் முற்கோள். இதனை சற்காரியவாதம் என்று சைவம் விளக்கம் தருகின்றது. பதி-கடவுள், பசு-உயிர், பாசம்-உயிரைப் பிணிக்கும் கட்டு. இந்த மூன்று பொருள்களில்தான் ஏனைய பொருள்கள் தோன்றி ஒடுங்குகின்றன எனச் சைவம் குறிப்பிடுகின்றது.

**சமணம்**

சமண சமயத் தத்துவம் உயிர்களின் பிறப்பு, இறப்பு குறித்த ஒன்பது பொருள்களைக் குறிப்பிடுகின்றது. அவை

**"உயிரும்உயி ரல்லதும், புண்ணியம், பாவம், ஊற்றும்**
**செயிர்தீர்செறிப் பும், உதிர்ப்பும், கட்டும், வீடும், உற்ற**
**துயர்தீர்க்கும் தூய நெறியும்கருக் காய்யுரைப்பன்;**
**மயல்தீர்ந்த காட்சி யுடையோய்! இது கேண்மதித்தே!**[20]

என்பனவாகும். உயிர்கள் எண்ணிலடங்காதன, அழிவில்லாதன எனச் சமண சமயம் குறிப்பிடுகின்றது. உயிர்கள் நல்வினை, தீவினை எனும் இரு நிலைகளை அடைகின்றன. சமணம், உயிர்களுக்கான வினைகளின் அடிப்படையில் நரககதி, விலங்குகதி, மக்கள்கதி, தேவகதி என நான்கினைக் குறிப்பிடுகின்றது. உயிர்களைக்

கடவுள் படைக்கவில்லை எனும் தத்துவச் சிந்தனையை சமணம் குறிப்பிடுவதாக மயிலை சீனி வேங்கடசாமி தம்முடைய நூலில் குறிப்பிடுகின்றார்.

**பௌத்தம்**

உயிர்களுக்கான இவ்வுலக வாழ்க்கை துன்பத்தையுடையது. நோய், பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய துன்பங்கள் நம்மை எப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. மனிதன் தான் இன்பமாக வாழ வேண்டும் என்ற தன்னிலை ஆசையே துன்பத்திற்குக் காரணமாக அமைகின்றது. தன்னல ஆசைகளை விட்டொழித்தால் துன்பங்கள் அறவே நீங்கும். மனிதர்கள் வீடுபேறடைவதற்கு, நோய், நோய்க் காரணம், நோய் நீங்கும் வாய், நோய் நீங்கும் வழி என நான்கு உண்மைகளாக பௌத்தம் குறிப்பிடுகின்றது. அவை

> **"பிறத்தல் துன்பம். பிணி, மூப்பு, சாக்காடடைவது துன்பம், அரற்று, கவலை, கையாறு இவை எல்லாம் துன்பந் தருவன. சுருங்கக்கூறின், புலன்களால் உண்டாகும் பற்றுக்கள் எல்லாம் துன்பம் தருவன என்று அறிதல் முதல் உண்மை.**[21]

என்பனவாகும் என்று 'பௌத்தமும் தமிழும்' எனும் நூலில் மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிட்டுள்ளார்.

பௌத்தக் காப்பியமான மணிமேகலையில், உயிர்களின் சாக்காடு குறித்த கருத்தாக்கங்கள் இடம் பெறுகின்றன. அவற்றுள்,

> **...சாக்கா டென்ப தருவுருத் தன்மை**
> **யாக்கை வீழ்கதி ரெனமறைந் திடுதல்**[22]

என மணிமேகலை குறிப்பிடுகின்றது. அருவும் உருவும் கலந்த யாக்கை அழிந்து மறைதல் சாக்காடு எனப்படும் எனச் சாத்தனார் இதற்கு விளக்கம் தருகின்றார். சமயங்கள், தத்துவங்கள்,போதனைகள் என எங்கு நோக்கினாலும் உயிர்களின் மரணம் நிலையானது என்ற கருத்து மட்டும் மாசற்றதாகக் கிடைக்கின்றது. அழியக் கூடிய உயிர்கள் அழிவை நோக்கியுள்ள போழ்திலும் தங்களுக்கான வாழ்க்கையை அறவழியில் நிகழ்த்த வேண்டுவதான கருத்துக்கள் இங்கு நிறைந்து காணப்படுகின்றன.

## இறப்பு தொடர்பான சொல்லாடல்கள்

மனித இனம் நாகரிக வளர்ச்சியின் பயனாக அனைத்துச் செயல்களிலும் முன்னேற்றம் கண்டு அடுத்த கட்டடத்திற்கு நகர்ந்து கொண்டே செல்கின்றது. மனிதர்கள், உயிர்களின் மரணத்திற்குப் பல்வேறு காரணங்களை அடுக்கி வைத்துக்கொண்ட போதிலும் மரணத்தைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. உயிர்களின் மரணத்தை மனத்திலிருந்தும் உடலிலிருந்தும் சிந்தையிலிருந்தும் பிரிக்கவியலாத மனித இனம் உயிர்களின் மரணத்திற்குப் பல்வேறு சொல்லாடல்களைப் பயன்படுத்தி வழக்கில் கொண்டு வந்துள்ளது. இறந்தவர்களை மரியாதை நிமித்தமாகக் குறிப்பிடுவதிலிருந்து அவமரியாதையாகவும் ஏளனமாகவும் குறிப்பிடும் சொல்லாடல்கள் பரவலாகக் கிடைக்கின்றன.

தமிழ்ப் பேரகராதிகள், கலைக்களஞ்சியங்கள், தமிழிலக்கியங்கள் ‘இறப்பு’ என்பதைப் பல்வேறு சொற்களால் குறிக்கின்றன. அவை

- அழிகை
- இறத்தல்
- இறவு
- இறுதி
- உரங்கல்
- கடத்தல்
- கெடுதல்
- சாக்காடு
- செல்லுதல்
- துஞ்சல்
- துறத்தல்
- பிசாசம்
- போக்கு
- பெரும்பிறிதாதல்
- போதல்
- மறைதல்

- மரணம்
- மரித்தல்
- மாய்தல்
- வீவு

என்பனவாகும்.

**மங்கல வழக்குச் சொற்கள்**

உயிர்களின் வாழ்க்கை முறைமை பிறப்பு, இறப்பு என இரு நிலைகளைக் கொண்டுள்ளன. மனித வாழ்வியல் கூறுகளில், இன்பம், துன்பம், நன்மை, தீமை, மேல், கீழ், உயர்வு, தாழ்வு ஆகிய பல்வேறு இருமைக் காரணிகள் பின்னிப் பிணைந்துள்ளன. மனிதர்கள் உயிர்களின் இறப்பினைக் குறித்த பல்வேறு சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். சமூகத்தில் மேன்மை பொருந்தியவர்களாகக் கருதப்படும் மனிதர்களின் இறப்பை மங்கல வழக்காக

- அடங்கினார்
- அமரலோகம் சென்றார்
- அந்தி சாய்ந்தார்
- அஸ்தியானார்
- ஆவி நீத்தார்/துறந்தார்
- ஆகாதவர்/வேண்டாதவராயிட்டார்
- இறைவனடி சேர்ந்தார்
- இறைவனடித் துஞ்சினார்
- இறைவனோடிணைந்தார்
- இல்லறம் துறந்தார்
- இயற்கை எய்தினார்
- உயிர் துறந்தார்
- உலகைத் துறந்தார்
- ஊன் பிண்டமானார்
- எழுதுவதை நிறுத்தினார்
- ஒடுங்கிப் போனார்

- ஓலை வந்தது
- கண்மூடினார்
- கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்
- காலமானார்
- காலம் சென்றார்
- காலகதியடைந்தார்
- காலத்தை வென்றார்
- காற்றில் கரைந்தார்
- கைலாச பதவியடைந்தார்
- சரிந்தார்
- சரித்திரமானார்
- சவமாயிட்டார்
- சன்னிதியடைந்தார்
- சிதையுண்டார்
- சிவனடி சேர்ந்தார்
- சிவலோகப் பதவி அடைந்தார்
- சீவன் பிரிந்தார்
- சுவர்க்கம் புகுந்தார்
- சுவாசிப்பதை மறந்தார்
- நல்லுலகு எய்தினார்
- நித்திய இளைப்பாறினார்
- நினைவில் நின்றார்
- நித்திரையானார்
- நாள் கழிந்தது
- தவறிட்டார்
- திரிமலம் சென்றார்
- துயருலகுச் சென்றார்
- தென்புலம் சென்றார்
- துன்பக்கேணியில் நிறைந்தார்

- துறக்கமெய்தினார்
- தேகவியோகமானார்
- பரலோக ராஜ்ஜியம் அடைந்தார்
- பிராணன் பிரிந்தது
- புகழுடம்பு எய்தினார்
- புதையுண்டார்
- பூத உடல் நீத்தார்
- மண்ணானார்
- மண்ணுள் புதைந்தார்
- மண்ணுலகு சென்றார்
- மறுவுலகு சென்றார்
- மவுத்தானார்
- மாண்டார்
- மூச்சை நிறுத்தினார்
- மேலோர் உலகம் சென்றார்
- மோட்சம் அடைந்தார்
- விண்ணுலகு சென்றார்
- வீட்டிற்குத் தூரமானார்
- வைகுண்டம் சென்றார்
- ஜோதியானார்

என்பன போன்று பல்வேறு சொல்லாடல்களைப் பயன்படுத்துகின்றனர். இறந்தவர்களுக்கு மரியாதை செய்யும் விதமாகவும் இறந்தவர்களின் இறப்பினைப் புனிதப்படுத்தும் விதமாகவும் சமூகத்தில் உயரியோராகக் கருதப்படுபவரின் இறப்பினை மங்கல வழக்காக மனிதர்கள் குறிப்பிடுகின்றனர். மேலோர், கீழோர் என்ற பாகுபாடுகளும் மனித மனத்தில் நஞ்சாகப் பொதிந்து கிடக்கின்றது என்பது இத்தகைய சொல்லாடல்கள் வழியாக தெளிவுபடுகின்றது. ஒருவரின் மரணத்தை விளிக்க சாதியப் பாகுபாடுகளும் முக்கிய காரணமாக விளங்குகின்றன.

**இழி வழக்குச் சொற்கள்**

தமிழ்ச் சமூகம் புகழ் குன்றி இறந்த மனிதர்களின் இறப்பை இகழ்ந்து, அவர்களின் மரணத்தை எள்ளி நகையாடியதுடன் கீழான சொற்களாலும் குறிப்பிடுகின்றது. தீது பயக்கும் தொழில் செய்வோர், பிறருக்குத் துன்பம் விளைவிக்கக் கூடிய செயல்களைச் செய்வோர், அயோக்கிய குணம் கொண்டு பிறரை வஞ்சிப்போர் சுருங்கக் கூறின் அனைவருக்கும் ஏதோ ஓர் வகையில் இன்னல் புரிவோர் ஆகியோரின் இறப்பு பிறருக்கு மகிழ்வைத் தருவதாக அமைகின்றது. வர்ணப்பாகுபாடுகள், சாதிய ஏற்றத் தாழ்வுகள் வழியாகவும் ஒருவரின் இறப்பை ஏளனப்படுத்தும் சமூகம் தற்காலத்தில் பெருகி வருகின்றதென்றால் மிகையில்லை. அவ்வாறாகப் பிறரால் கைகூப்பி வணங்கும் புகழைப் பெறாதவர்களின் இறப்பானது சிறப்புற்றமையாது என்பதனை,

- அப்பிட்டாயிட்டார்
- ஆண்டியானார்
- இளிச்சவாயாயிட்டார்
- இழுத்துக் கொண்டார்
- கதை முடிந்தது
- காத்த விட்டார்
- காலாவதியாயிட்டார்
- குசுவவிட்டார்
- கூத்தாடப் போய்ட்டார்
- நட்டுக்கிட்டார்
- படமாயிட்டார்
- புட்டுக்கிட்டார்
- பொட்டுன்னு போய்ட்டார்
- போய்ச் சேந்தார்
- மண்டையப் போட்டார்
- வாய் கோணினார்

என்பது போன்ற சொல்லாடல்கள் உணர்த்துகின்றன. அறமற்று இறந்தவர்களின் இறப்பை பல்வேறு சொற் பயன்பாடுகளால் இழிவாக மக்கள் குறிப்பிடுகின்றனர். ஒருவருக்கு நன்மை செய்யாவிடினும் தீமை செய்யாதிருங்கள் என்பதை

**...நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,**
**அல்லது செய்தல் ஓம்புமின்**[23]

என நரிவெரூஉத்தலையாரின் புறநானூற்று அடிகள் எடுத்துரைக்கின்றன. நன்மை செய்பவரின் இறப்பு மேன்மையானதாகவும் தீமை செய்பவரின் இறப்பு இழிவானதாகவும் இருக்கும் என்பதற்கு இவ்வடிகள் சான்று பகர்கின்றன.

இவற்றுள் தற்கொலை செய்து கொண்டவர்களின் இறப்பையும் நேர்ச்சிகளால் (விபத்து) இறந்தவர்களின் இறப்பையும் குறிப்பதாக

- அல்பாயுசுல போய்ட்டார்
- ஆறடிக்குழியில நாத்து நட்டார்
- காணாப் பொணமாயிட்டார்
- தண்ணிக்குள்ள காத்தவிட்டார்
- டிக்கட் வாங்கிட்டார்

ஆகிய சொல்லாடல்களும் மக்களால் பயன்படுத்தப் பெறுகின்றன.

### நேர்ச்சி குறித்த இறப்புச் சொற்கள்

இயற்கைக்கு மாறாக இறந்துபடும் மனிதர்களின் சூழலை விபத்தாகக் குறிக்கலாம். எதிர்பாராத விபத்து, தவறுதலான மரணம் ஆகிய இன்னபிற காரணங்களால் இறந்தவர்களை

- அகால மரணமடைந்தார்
- அகோரமாக இறந்தார்
- காலனிடம் சிக்கினார்
- குருதிபாய மடிந்தார்
- துர் மரணமடைந்தார்
- பரிதாபமாக இறந்தார்

எனவும் குறிக்கின்றனர். பாபநாசம் அருவியில் குளிக்கச் சென்ற வ.வெ.சு ஐயர், தவறி விழுந்த தன்னுடைய மகளைக் காக்க முனைந்து சுழலில் சிக்கி இறந்தார். விபத்தாக இறந்த ஐயரின் மரணச் செய்தியை சுதேசமித்திரன் நாளிதழ் 'தேகவியோகமானார்' என உயர்வாகக் குறிப்பிட்டுள்ள செய்தி இங்கு நோக்கத்தக்கது.

தமிழ்ச் சமூகம் மனிதர்களின் மரணத்தை மங்கல, அமங்கல வழக்காக வேறுபிரித்து குறிப்பிடுகின்றது. இறந்தவர்களின் இறப்பை அவரவர் புகழை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு சொற் பயன்பாடுகளால் சுட்டிக் காட்டுவதை இங்கு உணர முடிகின்றது. மனிதர்களின் உயிர் உடலை விட்டும் உடல் உலகை விட்டும் நீங்கல் எனும் இறுதி பல்வேறு சொல்லாடல்களால் குறிக்கப்படுவதும் நோக்கத்தக்கது.

**குற்றச்செயல்களும் மரண தண்டனையும்**

மனித இனத்தின் வாழ்க்கை முறைமைகளின் ஒழுங்கமைவிற்காக, அறத்தைப் போதிக்கும் நூல்களும் நூலாளர்களின் தத்துவங்களும் கிடைக்கப் பெற்றாலும் தற்காலத்தில் மனிதர்களின் குற்றச் செயல்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. ஒருவருக்குத் துன்பம் விளைவிக்கும் அனைத்துச் செயல்களும் குற்றமாகக் கருதப்படுகின்றன. தனிமனித சுய வாழ்வு முதல் கூட்டுச் செயல்கள் வரைக்கும் குற்றங்கள் பெருகியுள்ளன. தினசரி நாளிதழ்களில், காதல், காமம், சாதி, மதம், கௌரவம், மொழி, இனம் எனப் பல்வேறு சூழல் காரணமாக வன்முறைகள் பலவும் கொடுஞ் செயல்களாக மாறி மரணத்தில் முடிகின்ற செய்திகள் அதிகம்.

மனுநீதிச் சோழனின் மகன், தேரோட்டிச் சென்ற பொழுது அரிதான விபத்தொன்றால் கன்று இறந்துபட்டது. பசுவின் துயரத்தைத் துடைக்கும் பொருட்டாகத் தன் மகனைக் கொன்ற சோழனின் பெருமையையும், பசிய மாங்கனி தின்றதைக் குற்றம் எனக் கருதி பெண்ணைக் கொலை செய்த நன்னனைக் குறித்த வரலாற்று உண்மைகளும் யாவரும் அறிந்தனவே. இவ்வாறு பிற உயிர்களுக்குக் கேடு விளைவித்து துன்பத்தை ஊட்டுகையில் அவை குற்றமாகக் கொள்ளப்படுகின்றன.

தற்காலத்தில் குற்றங்களுக்கும் அவற்றிற்கான தண்டனைச் சட்டங்களுக்கும் பஞ்சமில்லை. குற்றங்கள் சிறிதெனினும் பெரிதெனினும் அக்குற்றங்களுக்கு

தண்டனைகள் பாகுபாட்டுடனோ பாகுபாடின்றியோ வழங்கப் பெறுகின்றன. குற்றங்களுக்கேற்ப சட்டங்கள் வகுக்கப்பட்டு, மனிதர்களை அச்சம் கொள்ளச் செய்யும் விதமாக ‘மரண தண்டனைகள்’ வழங்கப்படுகின்றன.

மனிதர்கள் பிறரைக் கொலை செய்யும் குற்றத்திற்கு, அக்கொலைக்கு வழிவகை செய்தவர், அக்கொலைக்கு உடனிருந்து துணை புரிந்தவர் ஆகியோருக்கும் ‘மரண தண்டனை’ வழங்கப்படுகின்றது. பிற நாடுகளில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போதைப் பொருள் கடத்தல், நாட்டு இரகசியங்களை பிற நாட்டவர்க்கு விற்றல் போன்ற தேச துரோகக் குற்றங்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. பல்வேறு முறைகளில் நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் கொடூரத்தின் உச்சம் என்று அறிஞர்களும் மனிதநேய செயல்பாட்டாளர்களும் கூறுகின்றார்கள். ஆதலால் பலருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளதை செய்தித்தாள்கள் வழியாக அறியலாம். உயிரோடு தீவைத்தல், ஆணுறுப்பு அறுத்தல், கழுவேற்றுதல், கல்லெறிந்து கொல்லல், துப்பாக்கியால் சுடுதல், தூக்கிலிடுதல், மின்சாரம் பாய்ச்சிக் கொல்லுதல், வாளால் தலை கொய்தல் எனக் கொடுமையான முறைகளில் பல்வேறு நாடுகளில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுகின்றன.

இந்தியாவில் ‘இந்திய தண்டனைச் சட்டத்தின்படி (Indian Penal Code) குற்றம் செய்தவர்க்குச் சிறு தண்டனைகள் முதல் உச்சபட்ச தண்டனையான மரண தண்டனை வரை நீதி மன்றங்களால் வழங்கப்படுகின்றன.

- நாட்டிற்கு எதிராகப் போராடுதல், தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவோர் மீது, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு -121இன்படி (IPC,sec,121) மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.
- இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு -194இன்படி, ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கும்படிக்குப் பொய் சாட்சி உரைப்பவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.

- இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு -121(a)இன்படி, கலவரத்தில் ஈடுபட்டவர்களுக்கும், இந்திய தண்டனைச் சட்டம் 302-இன்படி கொலைக்குற்றங்கள் செய்தவர்களுக்கும், இந்திய தண்டனைச் சட்டம் 303இன்படி, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் மற்றொருவரைக் கொலை செய்ய நேர்ந்தால் அவருக்கும் மரண தண்டனை வழங்கப்படுகின்றது.
- இந்திய தண்டனைச் சட்டம் 305-இன்படி, 18 வயதிற்குக் கீழுள்ள சிறார்கள், மனநலம் குன்றியோர், குடிபோதையில் உள்ளோர் ஆகியோரை தற்கொலைக்குத் தூண்டுதல் மற்றும் கொலை செய்தலுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.
- இந்திய தண்டனைச் சட்டம் 376-இன்படி, பெண்ணை வன்புணர்வு செய்து கொலை செய்தவர்க்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.
- இந்திய தண்டனைச் சட்டம் 396-இன்படி, கூட்டுக்கொள்ளை செய்வோருக்கும் அதைத் தடுக்க வந்தவரைக் கொலை செய்தலுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.
- இந்திய தண்டனைச் சட்டம் 306(1,2)-இன்படி, ஒருவரை அடித்துக் கொலை செய்தவர்க்கும் மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.
- இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 100-இன்படி, யாராவது தாக்க முற்படும் போதோ அல்லது தங்களின் உயிருக்கும், உடமைக்கும் பிறரால் நெருக்கடி வரும் போதோ தற்காப்பு கருதி தடுக்க முயன்று, அது கொலையாக மாறினால் அதற்கு தண்டனை இல்லை எனக் குறிப்பிடுகின்றது.

மேலும், அரிதினும் அரிதான குற்றங்களுக்கும் இந்திய தண்டனைச் சட்டம் மரண தண்டனை வழங்குகின்றது. மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தங்களின் தண்டனையளவைக் குறைக்கும் விதமாக குடியரசுத் தலைவருக்கு கருணைமனு அளிப்பதன் மூலம் மரண தண்டனை ஆயுள்தண்டனையாகக் குறைக்கப்பட வாய்ப்புள்ளது. இந்தியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை, மேடையமைத்து தூக்குக்கயிற்றில் தொங்கவிடுகிறார்கள். தற்போது மரண

தண்டனைக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களும் கருத்து வேறுபாடுகளும் அரங்கேறி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**மனித இறப்பின் பின்புலம்**

தற்காலத்தில் போராட்ட குணமும் சகிப்புத் தன்மையும் இல்லாத மனிதர்களால் தினந்தோறும் அநேக மரணங்கள் நிகழ்கின்றன. குடும்பச் சிக்கல்கள் முதல் சமூகச் சிக்கல்கள் வரைக்கும் கொலைகளும் தற்கொலைகளும் தீர்வுகளாக அரங்கேறுகின்றன. உயரமான இடங்களிலிருந்து வீழ்தல், கயிற்றில் கழுத்தை மாட்டித் தொங்குதல், கூரான ஆயுதங்களால் தன்னைத் தானே வெட்டுதல், நஞ்சு குடித்தல், தீவைத்துக் கொள்ளல், வாகனங்கள் முன்பு பாய்தல் எனப் பல்வேறு விதங்களில் மனிதர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். சுய தேவைகளுக்காகப் பிறரைக் கொலை செய்யும் வழக்கம் தற்போது பெருகியுள்ளது. தற்காலத்தில் மனிதர்களின் மரணமானது, இயற்கையாகவும் இயற்கைக்கு மாறாகவும் நிகழ்கின்றது.

உயிரிகளின் படைப்பு விந்தையானது. அதே போல அவற்றின் இறப்பும் விந்தையாகவே அமைகின்றது. இவ்வுலகினில் இருக்கும் அனைத்தும் நிலையானது எனக் கருதுவோர்க்கு இறப்பு மாய்க்க முடியாத வடுவை உண்டாக்குகிறது. மொத்தத்தில் உயிரிகளின் வாழ்க்கை 'இறந்தும் பிறக்கும், பிறந்தும் இறக்கும்' என்பதில் ஐயமில்லை.

குறுந்தொகைப் பாடலொன்று மனிதப் பிறப்புகள் அனைத்தும் அறம் செய்து வாழ்தல் வேண்டும் அவ்வாறு இல்லாத மனிதர்களை 'உயிரில்லாத பிணம்' எனச் சுட்டுவதை.

> **'உள்ளது சிதைப்போர்' உளர்எனப் படாஅர்;**
> **இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு எனச்**
> **சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்**
> **சென்றனர்...**[24]

என பெருங்கடுங்கோ குறிப்பிடுள்ளார். தாம் முயன்று தேடாது, தம் தாயத்தாரால் தேடி வைக்கப்பெற்ற செல்வத்தைத் தானும் பயன் கொள்ளாது பிறருக்கும் கொடுக்காது அழிப்பவர் இறந்தவராகவே எண்ணப்படுவார். இல்லோராய் உயிர் வாழ்பவர் இரந்து உயிர் வாழ்வதை விட இச்செயல் இழிவாகும் என்பது புலப்படுகின்றது.

மேற்கண்ட அனைத்து கருத்துக்களும் உயிரிகளின் நிலையாமையைக் கருத்தில் கொண்டு அறம் செய்து வாழ்தலை மனிதர்களுக்கு அறிவுறுத்துகின்றது. பூமி அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதாகும். எந்த உயிர் தோற்றம் பெற்றாலும் அதன் இறுதி இங்கேயே உறுதியாகிறது.

மனிதர்களின் இறப்புச் சூழல்கள் வேறுபடினும் மனிதர்களின் இறப்பு நிரந்தரமானது என்பது பல்வேறு தத்துவவியலாளர்களின் வழிப் புலப்படுகின்றது. தற்போது சாதாரண மக்களின் மரணங்கள் எண்ணிலடங்காச் செய்திகளாகக் கிடைக்கப்பெறுகின்றன. சிலரின் மரணம் பலருக்கு இழப்பாகவும் இன்னும் சிலரின் மரணம் பலருக்கு கொண்டாட்டமாகவும் அமைகின்றது. உலகையே வென்ற மனித இனம், மரணத்தை மட்டும் நிச்சயமாக வெல்ல முடியாது என்பது எவராலும் மறுக்கவியலா மெய்யாகிறது.

## தொகுப்புரை

- பல்வேறு அறிஞர் பெருமக்கள் கூறிய இறப்பு குறித்தத் தத்துவப் பதிவுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- உயிர்களின் இறப்பு எங்கு, எப்படி, எவ்வாறு நிகழ்கின்றன என்பதை மானுட அறிவியல் வரையறுத்துள்ளது.
- சமயங்கள் உயிர்களின் இறப்பிற்கு காரணமாக இம்மை மறுமை குறித்த நம்பிக்கைகளைத் தாங்கியுள்ளன.
- தமிழ்ப் பேரகராதிகள், நிகண்டுகள், இலக்கியங்கள் ஆகியவற்றில் இறப்பு குறித்த சொற்கள் கண்டறிந்து தொகுக்கப்பட்டுள்ளன.
- இறப்பைக் குறிக்கும் மங்கல மற்றும் அமங்கலச் சொல்லாடல்களும் எள்ளல் சொற்களும் தொகுக்கப்பெற்றுள்ளன.
- சாதி மத ஏற்றத் தாழ்வு காரணமாக மரணத்தை இழிவான வழக்கால் குறிப்பிடும் வழக்காறுகள் காணப்படுகின்றன.
- மனிதர்களின் குற்றச் செயல்களுக்கு அரசே மரணதண்டனை விதிக்கின்றது. இந்த மரண தண்டனைகள் பல்வேறு விதமாகச் செயல்படுத்தப்படுகின்றது.
- மனிதர்களின் மரணம் இயல்பு, உயர்வு, இழிவு என மூன்று நிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழ்ச் சமூகம் பண்டைக் காலம் தொடங்கி இன்றளவும் மரணத்தை வீரமாக கருதுகின்றது.

## *அடிக்குறிப்புகள்*

1. தொல்காப்பியம், தொல்காப்பியர், மரபியல்:1525
2. சட்டப்படியான பிரேத பரிசோதனை, புலமை வேங்கடாசலம், பக்.3-4
3. மரணத்துக்குப் பின், குருஜி வாசுதேவ், பக்.301
4. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.37
5. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.50
6. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.99
7. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.55
8. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.55
9. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.55
10. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.89
11. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.99
12. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.99
13. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.99
14. தகவலாளர், கி.ராஜநாராயணன், எழுத்தாளர், பாண்டிச்சேரி, களஆய்வு, நாள் 01/01/2018
15. கிறித்தவ மறைநூல், பழைய ஏற்பாடு, சங்கீதம்:146-4
16. இசுலாமிய மறைநூல், திருக்குர்ஆன் :4-78
17. வைணவமும் தமிழும், பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், பக்.184-185
18. இனி இல்லை மரணபயம், சந்தியா நடராஜன், பக்.24
19. பகவத்கீதை, அத்தியாயம்2, சுலோகம்20. பக்.113
20. சமணமும் தமிழும், மயிலை.சீனி. வேங்கடசாமி, பக்.19
21. பௌத்தமும் தமிழும், மயிலை. சீனி. வேங்கடசாமி, பக்.16
22. மணிமேகலை, டாக்டர்.வ.சுப.மாணிக்கம், பவத்திறமறுகெனப் பாவைநோற்ற காதை, பக்.397
23. புறநானூறு, நரிவெரூஉத்தலையார், பா.எ:195:6-7
24. குறுந்தொகை, பாலை பாடிய பெருங்கடுங்கோ, பா.எ:283:1-4

# இயல்-இரண்டு

## *அக இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்*

**த**மிழ்ச் செவ்விலக்கிய வரிசையிலுள்ள அகநூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள இறப்புச் செய்திகளை இவ்வியலானது ஆய்கின்றது. அக இலக்கியங்கள் தலைமக்களின் காதல் வாழ்க்கையை மையப்படுத்தி இயற்றப்பட்டுள்ளன. அகம் எனப்படுவது, ஒத்த அன்பினையுடைய தலைவனும் தலைவியும் தனித்துக் கூடுகின்ற காலத்துத் தோன்றி, மன உணர்ச்சியால் நுகரப்படும் இன்பம். தலைமக்களுக்கிடையே நிகழும் நிகழ்வுகளை விளக்கிக் கூற இயலாமல், உள்ளத்தே நிகழும் உணர்ச்சியால் நுகரப்படுவதே ‘அகம்’ என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

அகத்தை உள் உள்ளம் எனவும் தலைவன், தலைவி பால் எழும் ஒழுக்கத்தை அகம் எனவும் ஆசிரியர்கள் சுட்டுகின்றனர். இதனைச் சுருங்கக் கூறின் அகம் என்பது காதல் இன்பம் என்பதாகும். தலைமக்களின் காதலின்ப உணர்ச்சி உள்ளத்தைப் பற்றியது ஆதலால் தலைமக்களைக் குறித்தச் செய்திகள் அகம் எனக் குறிக்கப்படுகின்றது.

அவ்வாறாகத் தமிழ்ச் செவ்விலக்கிய வரிசையில் அக நூல்களாகக் குறிப்பிடப்படும்

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறு நூறு
- கலித்தொகை
- அகநானூறு
- பரிபாடல்
- நெடுநல்வாடை
- ஐந்திணை ஐம்பது
- திணைமாலை நூற்றைம்பது
- முல்லைப்பாட்டு
- பட்டினப்பாலை

ஆகிய அக நூல்களில் இறப்பு தொடர்பான பாடல்களும் செய்திகளும் கிடைக்கப் பெறுகின்றன. காதலும் காமமும் நிறைந்த அக நூல்களில் வேந்தர்கள் முதல் விலங்குகள் வரையிலான இறப்புச் செய்திகள் பல்வேறு பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அக நூல்களில் தலைமக்களின் காதல், களவு வாழ்க்கை முறை, கபிலர், பரணர், கல்லாடனார் போன்ற புலவர்கள் பலராலும் எழில் கொஞ்சப் பாடப்பெற்றுள்ளது. பாடல்கள் எழுதப்பட்ட சூழல், காலம் ஆகியவற்றை மனிதர்கள் மற்றும் விலங்குகளின் இறப்புடன் தொடர்புபடுத்தியும் ஒப்பிட்டும் புலவர்கள் இயற்றியுள்ளனர்.

அக நூல்களில் குறுநில மன்னர்கள் தொடங்கி பேரரசர்கள் வரைக்கும் இறந்துபட்ட செய்திகளானது கிடைக்கின்றன. அக இலக்கியங்கள் குறிப்பிடும் மக்களின் வாழ்க்கை முறைமைகளில் இறப்பு பெரும் அங்கம் வகித்துள்ளது. அக இலக்கியங்கள் தற்கொலைகள், கொலைகள் இன்னபிற சூழல்களால் ஏற்பட்ட இறப்புகள் குறித்த பதிவுகளைச் சுமந்து நிற்கின்றன. அரியாசனத்தில் அமர்பவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை, நல்வழியிலும், அல்வழியிலும் நடத்துவதால் உயிர்களைக் காத்தலும் அழித்தலுமான செயல் காலந்தோறும் நிகழ்ந்து வருகின்றது.

அக இலக்கியங்கள், தலைமக்களின் காதல் வாழ்க்கையை மட்டும் பதிவு செய்யாமல், மனிதர்களின் இறப்புகளையும் இறப்புச் சூழல்களையும் பதிவு செய்துள்ளன. அக நூல்களைச் சற்று கூர்ந்து நோக்குதலால் போர், வீரம், விளையாட்டு போன்ற இன்னபிற காரணங்களால் மனிதர்கள் மரணமடைந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது. அக இலக்கியங்கள் குறிப்பிடும் விலங்குகளின் இறப்பானது போர்களுக்குத் துணை புரிதல், வேட்டைத் தொழில், உணவு ஆகியனவற்றை சார்ந்தவைகளாக அமைந்துள்ளன.

தமிழிலக்கியங்கள் அகம், புறம், அறம் எனப் பல்வகைப்பட்டாலும் இறப்பு எனும் செயலானது அனைவருக்கும் பொதுவானதாக அமைகின்றது. உயிரானது உடலில் பிணைந்து பிரியும் வரை இறப்பானது எங்கே எப்போது எப்படி என்பதை அறிந்தவர் இவ்வுலகில் எவரும் இல்லை. உயிர்கள் பிறக்கின்றன, பிறக்கும் உயிர்கள் இறக்கும் நாள் இதுவென்று அறிந்தாரில்லை என்பதை,

**...முறைநாள் கழிதல் உறாஅமைக் காண்டை**
**கடைநாள் இது என்று அறிந்தாரும் இல்லை.[1]**

எனப் பெருங்கடுங்கோ கலித்தொகைப் பாடலில் குறிப்பிடுகின்றார். தமக்கு வருகின்ற மூப்பும் இறப்பும் குறித்து சிந்திக்காத அறிவிலிகளைப் பின்பற்றாமல், நிலையாமை குறித்து அறிந்த உயர்ந்தோர் செல்லும் வழியை அடைதல் நற்பண்பு எனப் புலவர் இங்குக் குறிப்பிடுகின்றார்.

'அக இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்' எனும் இவ்வியல் மனிதர்கள், விலங்குகளின் இறப்பு குறித்து ஆய்வு செய்ய முனைகிறது.

**அகப்பாடல்களில் மனிதர்களின் இறப்பு**

- **பெண்கொலை**
- **பழிக்குப்பழி**
- **நேர்ச்சி (விபத்து)**
- **அலறும் ஆர்ப்பும்**
- **யானைக் கோடும் யாமரக் கிளையும்**
- **ஏறு தழுவல்**
- **வழிப்போக்கர்கள்**
- **பிணப்பதுக்கைகள்**
- **தலைவியர்**
- **மடலேறுதல்**
- **அகப்பாடல்களில் நடுகற்கள்**

**அகப்பாடல்களில் இதர உயிர்களின் இறப்பு**

- **வெறியாட்டு (உயிர்ப்பலி)**
- **யானைகள்**
- **யாளி (ஆளி)**
- **வேட்டைத் தொழில்**
- **இரலை**
- **விலங்குப் பலி**
- **புலிகளின் இயல்பு**
- **பசுக்கள்**
- **மான்கள்**
- **குரங்கு**
- **அன்றில்**

ஆகிய தலைப்புகளிலும் ஆய்கின்றது.

## *அகப்பாடல்களில் மனிதர்களின் இறப்பு*

**பெண்கொலை**

இவ்வுலகம் தோற்றம் பெற்றது முதல், மனித இனத்தின் வாழ்க்கை முறைமைகளில் முதல் முதலாக நடைபெறும் நிகழ்வுகள் வரலாற்றுப் பக்கத்தில் சேர்க்கப்படுகின்றன. தமிழிலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க இறப்புப் பதிவுகள் முதன் முதலாக வரலாறாகப் பொறிக்கப்பட்டுள்ளன. பெண்களின் குணநலன்களைப் பாடாதார் எவருமில்லை. தலைவியின் இல்லத்திற்குப் புதிய விருந்தினர்களோடு தலைவியைக் காண வந்த தலைவனை நற்றாய் கண்டு கொண்டாள். அன்று முதல் கண் துஞ்சாது தலைவியைக் காக்கத் தொடங்கினாள். தலைவிக்குக் கெடுதல் நினைக்கும் நற்றாய், நன்னனைப்போல நரகத்திற்குச் செல்ல வேண்டுமெனத் தோழி வேண்டுவதை,

> **“மண்ணிய சென்ற ஒள்நுதல் அரிவை**
> **புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு**
> **ஒன்பதிற்று – ஒன்பது களிற்றொடு,அவள் நிறை**
> **பொன்செய் பாவை கொடுப்பவும், கொள்ளான்,**
> **பெண்கொலை புரிந்த நன்னன்...**[2]

என்று பரணர் தம்முடைய பாடலடிகளில் குறிப்பிடுகின்றார். வேளிர் குல மன்னனான நன்னன் என்பவன் ஆற்றோரத்தில் அவனது காவல் மாமரமொன்றினை நட்டு வளர்த்தான். அம்மரத்தின் வழியாகக் கிடைக்கும் பலன்கள் அவனை மட்டுமே சார வேண்டுமென்ற எண்ணம் கொண்டான். அம்மரத்திலிருந்து விழுந்த மாங்கனி ஆற்று நீரில் அடித்துவரப்பட, பெண்ணொருத்தி அம்மாங்கனியை உண்டாள்.

இதனைக் குற்றமெனக் கருதிய நன்னன் அவளைக் கொலை புரிய முனைந்தான். அவளைக் கொல்ல வேண்டாமென அவளின் தந்தை, அவளின் நிறையளவு பொன்னாலான பாவையொன்றும் எண்பத்தியொரு களிற்றுயானைகளையும் கொடுப்பதாகக் கூறினான் ஆயினும் நன்னன் அப்பெண்ணைக் கொலை புரிந்தான். தலைவியின் துயர் கண்ட தோழி, பெண்ணைக் கொலை புரிந்த நன்னனின் செயலை நற்றாயுடன் இங்கு ஒப்பிட்டுக் காட்டியுள்ளாள். ஆக இப்பாடலின் வழியாக பெண்ணொருத்தி கொலை செய்யப்பட்ட செய்தியை அறியமுடிகின்றது.

**பழிக்குப் பழி**

அக இலக்கியங்களில் நிறைய பாடல்கள் இறப்பை ஒப்பிட்டுப் பாடப்பெற்றுள்ளன. தலைவன் தலைவியின், அக வாழ்வு, களவுத் துன்பங்களை இறப்புடன் ஒப்பிட்டு கூறும் வழக்கம் புலவர்களிடம் காணப்படுகின்றது. பரத்தையர் சேரிக்குச் சென்று வந்த தலைவனிடம் ஊடல் கொண்ட தலைவி, அவளுடைய துன்பத்தை இறப்புடன் தொடர்புபடுத்தியதை,

**...தந்தை**
**கண்கவின் அழித்ததன் தப்பல், தெருவர,**
**ஒன்றுமொழிக் கோசர்க் கொன்று, முரண்போகிய,**
**கடுந்தேர்த் திதியன் அழுந்தை, கொடுங்குழை**
**அன்னி மிஞிலியின் இயலும்**
**நின்நலத் தகுவியை முயங்கிய மார்பே.[3]**

என பரணர் குறிப்பிட்டுள்ளார். அன்னி மிஞிலியின் தந்தை கோசர் மரபினருக்குச் சொந்தமான வயல் வெளியில் பசுவை மேய விட்டான். அதைக் குற்றமாகக் கருதிய கோசர்கள் வன்மம் கொண்டு அவனது கண்களைப் பிடுங்கி எறிந்தனர். இதனைப் பொறுத்துக் கொள்ளாத அன்னி மிஞிலி 'கலத்தில் உண்ணேன், தூய ஆடையை உடுத்தேன்' எனச் சூளுரைத்தாள். தன்னுடைய தந்தைக்குத் தீங்கு நடந்ததை குறும்பியன், திதியன் ஆகியோரிடம் முறையிட்டு கோசர்களைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டாள். அவ்வாறாக அன்னி மிஞிலி கோசர்களைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டதை அகம் 262 ஆம் பாடலும் பதிவு செய்கின்றது.

**நேர்ச்சி (விபத்து)**

கரிகால்வளவன், காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பதினெட்டாம் நாள் தன் சுற்றத்துடன் புனல் விழாக் கொண்டாடினான். கரிகாலனின் மகள் ஆதிமந்தியும் ஆட்டன் அத்தியும் நீராடி மகிழ்கையில், அத்தி ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டான். அத்தி நீரில் மூழ்கி மறைந்ததை,

**ஏற்றுஇயல் எழில்நடைப் பொலிந்த மொய்ம்பின்,**
**தோட்டு இருஞ் சுரியல் மணந்த பித்தை,**
**ஆட்டன் அத்தியைக் காணீரோ? என**
**நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்**
**'கடல்கொண் டன்று' என, 'புனல் ஒளித் தன்று' என**

**கலுழ்ந்த கண்ணள், காதலற் கெடுத்த**
**ஆதி மந்தி...**[4]

எனப் பரணர் குறிப்பிட்டுள்ளார். தலைவி, பரத்தயர்களைத் தழுவி வந்த தலைவனைக் கடிந்து கொள்கிறாள். புலவர் தலைவியின் துன்பமானது அத்தியை இழந்த ஆதி மந்தியின் துயருக்கு இணையானது என அத்தியின் இறப்பைத் தலைவியின் துன்பநிலையை விளக்க எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் அத்தி இறந்த செய்தி அகநானூற்றில்

**...கலிகொள் சுற்றமொடு கரிகால் காண,**
**தண்பதம் கொண்டு, தவிர்ந்த இன்இசை**
**ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரள,**
**கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று,**
**இரும்பொலம் பாண்டில், மணியோடு தெளிர்ப்ப,**
**புனல்நயந்து ஆடும் அத்தி அணிநயந்து,**
**காவிரி கொண்டுஒளித் தாங்கும் அன்னோ...**[5]

எனவும்,

**...மந்தி**
**பனிவார் கண்ணன், பலபுலந்து உறைய,**
**அடுந்திறல் அத்தி ஆடுஅணி நசைஇ,**
**நெடுநீர்க் காவிரி கொண்டுஒளித் தாங்கு...**[6]

எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை அத்தியின் இறப்பிற்குச் சான்றாகின்றன.

**அலரும் ஆர்ப்பும்**

தலைவன் தலைவியின் களவு வாழ்க்கையை இயற்கை வருணனைகளால் அலங்காரம் செய்யும் புலவர்கள், அவர்களின் மன வருத்தங்களையும் அவர்களைப் பற்றிய ஊராரின் பழிச் சொற்களையும் புறத்துடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளனர். போர்க்களத்தில் வீழ்ந்துபடும் வேந்தர்கள் மற்றும் வீரர்களின் இறப்பினால் ஏற்படும் வெற்றியின் ஆரவாரம் ஆகியவற்றை விட தலைமக்களின் காதல் வாழ்க்கை மக்களிடையே பேசு பொருளாவதை,

**“மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்**
**முயங்கிய நாள் சிலவே, அலர;**

**கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்**
**பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்**
**களிறொடுபட்ட ஞான்றை,**
**ஒளிறுவாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே.**[7]

என பரணர் குறிப்பிடுகின்றார். அதிகன் என்பவன் பசும்பூண் பாண்டியனுக்காக, களிற்றின் மேற்சென்று போர் புரிந்து இறந்துபட்டான். அதிகன் இறந்தது சேரர்களுக்குக் கொண்டாட்டமான செய்தியாக அமைந்தது. அதிகனின் மரணத்தை விட, காதலர்களின் களவு வாழ்க்கை ஊரார் அறிந்து, பழிச்சொல் மிகுதியாகி ஆரவாரமாக மாறியது என்று அக வாழ்க்கைச் சூழலோடு புற நிகழ்வுகள் ஒப்பிட்டுக் காட்டப்படுள்ளன.

பழைய பரத்தையை விடுத்துப் புதுப்பரத்தையிடம் தஞ்சம் புகுந்தான் தலைவன். தலைவனின் செயல் முதற் பரத்தைக்கு வருத்தத்தை உண்டாக்கியது. புதுப் பரத்தையிடம் செல்லும் தலைவனைப் பழைய பரத்தை இகழ்ந்து வசை பாடுகின்றாள். தழையாடை உடுத்தி தெருவினில் நடந்து சென்ற பரத்தையைக் கண்ட ஊரார் ‘கல்’ எனச் சிரித்தனர். பரத்தை மீதான ஆரவாரப் பேரிரைச்சல் ஓரியின் தெருவில் கேட்டதை,

**...பழவிறல்**
**ஓரிக் கொன்ற ஒரு பெருந் தெருவில்**
**காரி புக்க நேரார் புலம்போல்**
**கல்லென்றன்றால், ஊரே...**[8]

எனக் கபிலர் புறம் சார்ந்த செய்தியை அகத்தில் பாடியுள்ளார். கடையேழு வள்ளல்களான மலையமான் திருமுடிக்காரிக்கும், கொல்லிமலைத் தலைவன் வல்வில் ஓரிக்கும் மூண்ட போரில், காரி ஓரியைக் கொன்றான். ஓரியைக் கொன்ற காரி, ஓரியின் தெருவில் செல்ல அங்கிருந்த ஓரியின் குடிமக்கள் அரற்றி பேரிரைச்சலிட்டதைப் போல, பழைய பரத்தையின் வருகையைக் கண்ட தெருவிலுள்ள பெண்கள் அஞ்சி பேரிறைச்சலிட்டனர். பரத்தையின் செயலைக் குறிப்பிடும் புலவரின் பாடலில் ஓரி இறந்த செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அதிகனைப் பற்றிய இறப்புச் செய்தி அகநானூற்றில்

**...ஊட்டுஅரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்**
**கூட்டுஎதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி,**
**புள்ளிற்கு ஏமம் ஆகிய பெரும்பெயர்**
**வெள்ளத் தானை அதிகற் கொன்று...**[9]

எனவும்

**...கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்**
**நெடுந்தேர் மிஞிலியொடு பொருது, களம் பட்டென...**[10]

எனவும்

**துன்அருங் கானமும் துணிதல் ஆற்றாய்,**
**பின்நின்று பெயரச் சூழ்ந்தனை ஆயின்,**
**என்நிலை உரைமோ – நெஞ்சே! – ஒன்னார்**
**ஓம்புஅரண் கடந்த வீங்குபெருந் தானை**
**அடுபோர் மிஞிலி செருவேல் கடைஇ,**
**முருகுஉறழ் முன்பொடு பொருதுகளம் சிவப்பா,**
**ஆஅய் எயினன் வீழ்ந்தென...**[11]

ஆகிய பாடல்களின் வழியாகவும் அதிகன் இறந்த செய்தி கிடைக்கின்றன.

**யானைக் கோடும் யாமரக் கிளையும்**

சோழன் இளம் பெருஞ்சென்னி பாழி மதிலை அழித்துத் தன்னுடைய குடி மக்களுக்காகப் போர் புரிந்தான். தன்னை எதிர்த்து வந்த வடுகர்களின் கருந்தலைகளை யானைப்படை கொண்டு நசுக்கிக் கொன்றான். பொருள்வயிற் பிரிந்த தலைவன் போர் நடைபெறும் கடுமையான வழியில் வரக்கூடும் எனும் அச்சம் தலைவியை வாட்டியது. பகைவரின் உயிரைப்பறித்த சென்னியின் யானைக் கோடுகளைப் போன்று யாமரக் கிளைகள் காட்சியளித்துத் தலைவனுக்கு அச்சமுண்டாக்கும் என்பதை,

**...செம்புஉறழ் புரிசைப் பாழி நூறி,**
**வம்ப வடுகர் பைந்தலை சவட்டி,**
**கொன்ற யானைக் கோட்டின் தோன்றும்.**
**அஞ்சுவரு மரபின் வெஞ்சுரம் இறந்தோர்**
**நோய்இலர் பெயர்தல் அறியின்...**[12]

எனச் சேந்தங் கொற்றனார் தம்முடைய பாடலில் குறிப்பிடுகின்றார். தலைவன், தலைவியுடன் வாழ்க்கையமைத்துக் கொள்ளும் நோக்கம் அகத்தைச் சார்ந்தாலும் களம் குறித்தப் புற நிகழ்வை இணைத்துக் குறிப்பிடுவது புலவரின் திறமைக்குச் சான்றாகும். இந்த உத்தியை புலவர்கள் பலரும் பின்பற்றியுள்ளனர்.

தலைவனொருவன் தலைவியை மட்டும் விரும்பாதவனாய், பரத்தையிடமும் சென்று வரும் வழக்கத்தைக் கொண்டான். பரத்தையிடம் சென்று வந்த தலைவன் தலைவியைச் சந்திக்க முயன்றான், தலைவனுக்கு வாயில் மறுத்த தோழி

**…பாணன்**
**மல்அடு மார்பின் வலிஉற வருந்தி,**
**எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்**
**நிறைத்திரள் முழவுத்தோள் கையகத்து ஒழிந்த**
**திறன்வேறு கிடக்கை நோக்கி, நல்போர்க்**
**கணையன் நாணி…**[13]

என பரணர் தலைவனின் பரத்தைமையை இறப்புடன் தொடர்புபடுத்துகிறார். மற்போர் புரிவதில் வல்லவனான பாணனிடம் ஆரியப் பொருநன் போர் செய்தான். பாணனின் கையகப்பட்ட பொருநனின் முழவு போன்ற தோள்கள் அற்று வீழ அவன் இறந்தான். பாணனின் போர் ஆற்றலையும் பொருநனின் இறப்பையும் கண்ட கணையன் என்பவன் நாணி நின்றதைப் போல, தலைவனின் பரத்தமை நாணமூட்டுவதாகத் தோழி குறிப்பிடுகின்றாள்.

தலைவனின் அறமற்ற செயலால், தலைவியைக் காண அவனுக்கு வாயில் மறுக்கப்படுகின்றது. பரத்தமை ஒழுக்கம் கொண்டவனுக்கு தலைவியின் அவல நிலை புரிய வேண்டும் இதனை

**…நெடுந்தேர்**
**இழைஅணி யானைப் பழையன் மாறன்,**
**மாடமலிமறுகின் கூடல் ஆங்கண்,**
**வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த**
**கிள்ளி வளவன் நல்அமர் சாஅய்,**
**கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி,**
**ஏதில் மன்னர் ஊர்கொள**
**கோதை மார்பன் உவகையின் பெரிதே.**[14]

என நக்கீரர் தம்முடைய பாடலில் குறிப்பிடுகின்றார். பரத்தையிடம் சென்று வந்த தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்க்க தோழியிடம் வேண்டினான், தோழி மாறனின் இறப்பை தலைவியின் நிலைக்கு ஒப்புமையாக அறிவிக்கிறாள். போர்க்களத்தில் பழையன் மாறனை கிள்ளிவளவன் கொன்றான். மாறன் இறந்த செய்தியை அறிந்த கோதை மார்பன் என்னும் சேர மன்னன் பெரும் மகிழ்ச்சியடைந்தான். மாறன் இறந்த செய்தி சேரனுக்குத் தந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் தலைவனின் செயல் பரத்தைக்குப் பெருமகிழ்வை உண்டாக்கியது என்பது இப்பாடலின் பொருளாகும்.

போர் புரியச் சென்ற தலைவன் போர் முடிந்து தலைவியைச் சந்திக்க வருகின்றான். அவ்வாறாக வரும் தலைவன் தன்னுடைய தேர்ப்பாகனிடம் சோழர்களுக்கும் சேரர்களுக்குமிடையே நடந்த போரில், சோழன் பெரும்பூண் சென்னியின் படைத்தலைவனாகிய பழையன் இறந்ததை,

**…பாக! ஒரு வினை, கழிய**
**நன்னன், ஏற்றை நறும் பூண் அத்தி,**
**துன் அருங் கடுந் திறர் கங்கன், கட்டி**
**பொன் அணி வல்வில் புன்றுறை, என்று ஆங்கு**
**அன்று அவர் குழீஇய அளப்பு அருங் கட்டூர்,**
**பருந்து படப் பண்ணி, பழையன் பட்டென…**[15]

எனக் குடவாயிற் கீரத்தனார் தம்முடைய பாடலில் குறிப்பிடுகின்றார். சேரப் படைத் தலைவர்களான, நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புந்துறை ஆகியோர் ஒன்று கூடிச் சோழப் படைத் தலைவனான பழையனைப் போர் புரிந்து கொன்றனர். தலைவியைக் காண வரும் தலைவன் வழியாகப் பழையன் இறந்த செய்தி கிடைக்கின்றது.

தலைவன், தலைவியைக் காணச் சென்றவிடத்து அவளைக் காணாமற் ஏக்கமுறுகிறான். ஆகவே தன்னைத் தானே ஆற்றுப்படுத்த தன் நெஞ்சுக்குச் சொல்லியதாக அகப் பாடல்கள் பல புனையப்பட்டுள்ளன. இங்கு ஒரு தலைவன் தன்னுடைய வருத்தத்தை, அன்னி என்னும் குறுநில மன்னனின் இறப்புடன் தொடர்புபடுத்தியதை

**…பயம்கெழு வைப்பிற் பல்வேல் எவ்வி**
**நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்**

**பொன்இணர் நறுமலர்ப் புன்னை வெஃகி**
**திதியனொடு பொருத அன்னி போல**
**விளிகுவை கொல்லோ, நீயே – கிளி எனச்**
**சிறிய மிழற்றும் செவ்வாய், பெரிய**
**கயல்என அமர்த்த உண்கண், புயல்எனப்**
**புறம்தாழ்பு இருளிய பிறங்குகுரல் ஐம்பால்,**
**மின்நேர் மருங்குல், குறுமகள்**
**பின்னிலை விடாஅ மடம்கெழு நெஞ்சே?**[16]

எனும் நக்கீரரின் பாடலடிகளால் அறியலாம். எவ்வி என்பவனின் நண்பன் அன்னி. அவன் திதியன் என்பவனின் செல்வத்தின் மீது மயக்கம் கொண்டான். எவ்வியின் சொல்லைக் கேளாமல் திதியனிடம் போர் புரிந்து இறந்தான். தலைவியைக் காணாமற் போகுமானால் நெஞ்சே நீ, எவ்வியின் சொல்லைக் கேளாத அன்னி போல இறப்பாய் எனத் தலைவன் தன்னுடையக் காதலை அன்னியின் இறப்புடன் ஒப்பிட்டுக் கூறுகிறான்.

**ஏறு தழுவல்**

தமிழிலக்கியங்களில், காதலைக் கடந்த வீரமும் மரணத்தைத் துணிவுடன் ஏற்கும் சிந்தையும் மரணத்தால் கிடைக்கப்பெறும் பீடும் உயர்வாகப் பதிவு செய்யப்படுள்ளன. வீரர்கள் எதிர் நோக்கும் எதிர் நோக்காப் போரினால், உயிர், உடைமை, உடனிருப்பவர்கள் என அனைத்தையும் இழக்க நேரிடும். யுத்தங்கள், வீர விளையாட்டுக்கள், வலிமை கொண்டவர்க்கு மட்டும் வெற்றியைத் தேடித் தரும் என்பது மிகையில்லை. வலிமையும் திறமையும் மிக்க ஆடவர்கள் மண்ணையும் பெண்ணையும் பொன்னையும் வென்றுள்ளதை வரலாற்று செய்திகள் பதிவு செய்கின்றன. பண்டைக்காலம் தொடங்கி தற்போது வரை ஆடவர்களின் வீரத்திற்கான விளையாட்டாக ஏறு தழுவுதல் இருந்து வருகின்றது.

அக இலக்கியமான கலித்தொகையில், முல்லைக் கலி ஏறுதழுவுதலை குறித்ததாக அமையப் பெற்றுள்ளது. ஆடவர்கள் ஏறு தழுவுதலின் சிறப்புக்களையும் அதனால் ஏற்படும் இறப்புகளையும் தலைவன் தலைவியரின் காதல் வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் புலவர்கள் பாடல்கள் புனைந்துள்ளனர். ஆயர்களால் உருப்பெற்ற ஏறுதழுவலானது, வலிமை பொருந்திய ஆடவர்களால் சிறப்புற்றது.

சங்ககால மகளிர் வீரர்களை மணப்பதையே பெருமையாகக் கருதியுள்ளனர். கூற்றுவனைப் போல வரும் காளைகளை அடக்கியவர்களே வாகை சூடியுள்ளனர். எதிர் வரும் காளைகளைத் தன்னுடைய வலிமையால் அடக்கும் ஆடவர்களையே பெண்கள் மணம் புரிவர். என்பதை

**...கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே ஆய மகள்...**[17]

என முல்லை பாடிய நல்லுருத்திரன் குறிப்பிடுகின்றார். எருது விடும் விழாவில், எருதிற்கு அஞ்சி ஓடுபவனை, இம்மை அல்லாமல் நம்பிக்கை அடிப்படையிலான மறுமையிலும் ஆய மகள் மணம் செய்து கொள்ளமாட்டாள் என்பதை இப்பாடலடிகள் விளக்குகின்றன.

ஆநிரைகளை உடைய பொதுவர், வெட்சி, பிடா, முல்லை, குல்லை, குருந்து ஆகிய பல வகைப்பட்ட பூக்களைச் சூடி ஏறுதழுவ முனைந்தனர். ஆயர்குலப் பெண்கள் ஏறுதழுவலைக் காண பரண் மீது அமர்ந்தனர். வீரர்களை மட்டுமே மணப்பதில் உறுதி கொண்ட மகளிர், அதற்காகத் தங்களுடைய திருமண வரைவை நீட்டுவார்கள் என்பதை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஏறுதழுவுதலின் பொருட்டு ஆடவர்கள் வீர மரணம் அடைந்ததை,

**...நோக்கு அஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக் குத்தி**
**கோட்டிடைக் கொண்டு, குலைப்பதன் தோற்றம்காண்...**

**------------------------------------------------------------------**

**...சுடர்விரிந்தன்ன சுரி நெற்றிக் காரி**
**விடரி ஆம் கண்ணிப் பொதுவனைச் சாடி,**
**குடர்சொரியக் குத்தி குலைப்பதன் தோற்றம் காண்...**[18]

என நல்லுருத்திரன் தம்முடைய பாடலில் குறிப்பிடுகிறார். ஏற்றிற்கு அஞ்சாத பொதுவன் ஒருவன், சாம்பல் நிறமுள்ள காளையை கைக்கொள்ளப் பாய்ந்ததன் விளைவாக, காளையின் கொம்புகள் அவனது குடலை வயிற்றிலிருந்து வெளிக்கொண்டு வந்தது. மற்றொரு வீரன் கருநிறக் காளையை அடக்க முற்பட்டதால் அவனது குடலும் மண்ணில் வீழ்ந்தது. பின்னும் ஒருவன் வெள்ளை எருதினை கைப்பற்ற முயன்று குடர் சரிந்து பட்டான்.

இவை அனைத்தையும் கண்ட தலைவி தன்னுடைய தலைவனும் காளையை அடக்க முனைந்து படுவானோ என அஞ்சினாள். ஆயர்கள் ஊதும் குழலோசை தலைவியின் அச்சத்தைப் போக்கும் நன்னிமித்தம் எனத் தோழி கூறினாள். தலைவன் வருவான் காளையை அடக்கி உன்னை மணம் புரிவான் எனத் தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகையில், ஏறு தழுவுதலின் பொருட்டு உயிர் துறந்தவர்களைக் குறிப்பிடும் செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன.

ஏறுதழுவும் ஆடவர்கள் பலரும் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடப்பதையும் காளைகளை அடக்க முற்பட்ட வீரர்களின் மரண நிகழ்வுகளையும் தோழி, தலைவிக்குக் கூறுகின்றாள். ஆடவர்களின் உடல் மற்றும் மன வலிமையால் ஏற்றைத் தழுவுகின்றனர். நிலத்தை உழும் கலப்பையைப் போல காளைகள் வீரர்களின் உடலைக் கிழித்துச் சாகக் குத்தி அவர்களின் உடலை விட்டு உயிரைப் பறிப்பதை

**...கோட்டோடு சுற்றிக் குடர் வலைந்த ஏற்றின் முன்**
**ஆடி நின்று, அக்குடர் வாங்குவோன் பீடு காண்...**[19]

என நல்லுருத்திரன் குறிப்பிடுகின்றார். காளையொன்று வீரன் ஒருவனின் குடலை, வயிற்றிலிருந்து பிரித்துக் கொம்பில் சுற்றிக் கொண்டது. அவ்வீரன் இடைவிடாமல் அக்காளையைத் தழுவி தன்னுடைய குடலை எடுத்து மீண்டும் வயிற்றில் போட்டுக் கொண்ட நிகழ்வை இப்பாடலடிகள் வெளிக்கொணர்கின்றன. மேலும்,

**...கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாக்குத்தி**
**கொள்வார்ப் பெறாஅக் குரூஉச் செகில் காணிகா**
**செயிரின் குறை நாளால் பின் சென்று சாடி,**
**உயிர் உண்ணும் கூற்றமும் போன்ம்...**[20]

எனும் பாடலிலும் வீரர்கள் ஏறுதழுவலின் போது, வீரர்கள் சாகும்படி காளைகள் குத்தியதாகவும் வீரர்களின் மார்பிலும் வயிற்றிலும் கொம்புகள் துளைத்ததாகவும் பாடல்கள் விளக்குகின்றன. காளைகளை அடக்க முற்பட்ட வீரர்கள் உடல் நலிந்து மரணத்தைத் தழுவினர். இவ்வாறான பாடல்களில் தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கையோடு இறப்பையும் தொடர்புபடுத்திய புலவரின் உத்தி வெளிப்படுகின்றது. மேலும் நற்றிணை 106ஆம் பாடலிலும் ஏறுதழுவலைக் குறித்த செய்தி கிடைக்கின்றது.

**வழிப்போக்கர்கள்**

பண்டைய காலங்களில் போக்குவரத்து வசதிகள் குறைவாகும். மனிதர்கள் தங்களுடைய தேவைகளுக்காக நடைப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர் அப்பொழுதெல்லாம் கள்வர்களுக்கும், விலங்குகளுக்கும் அஞ்சும் சூழல் இருந்துள்ளது. தூது, போர், வாணிகம், வேட்டை முதலிய இன்னபிற காரணங்களுக்காகவும் மனிதர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். அவ்வாறு பயணம் செய்தவர்கள் சிலரது சுயநலனுக்காகப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அக இலக்கியங்கள் பாலை நிலவெளியில் பயணம் செய்பவர்கள் ஆறலைக் கள்வர்களால் கொடூரமாகக் கொலை செய்த நிகழ்வுகளையும் பதிவு செய்துள்ளன.

பார்ப்பானொருவன், தன்னுடைய அரசனுக்காகப் பாலை நிலவெளியில் பலமுறை தூது சென்று வந்தான். வெண்மை பொருந்திய ஓலைச்சுருள் ஒன்றை கையிற் கொண்டு இம்முறையும் பயணம் மேற்கொண்டான். கள்வர்களாகிய எயினர்கள், பார்ப்பான் கையிலிருக்கும் ஓலைச்சுருளைப் பொன்னெனக் கருதி அவனைக் கொலை செய்ததை

**...தூதுஓய் பார்ப்பான் மடிவெள் ஓலைப்**
**படையுடைக் கையர் வருதொடர் நோக்கி,**
**உண்ணா மருங்குல் இன்னோன் கையது**
**பொன்ஆ குதலும் உண்டு என, கொன்னே**
**தடிந்துஉடன் வீழ்த்த கடுங்கண் மழவர்...**[21]

எனப் பெருங்கடுங்கோ அகநானூற்றுப் பாடலில் குறிப்பிடுகின்றார். பொருளீட்டச் செல்லும் தலைவன், பாலை நிலவெளியின் கொடூரத்தை எண்ணி தன்னைத்தான் ஆற்றுப்படுத்தும் வண்ணம் அவனது நெஞ்சிற்குச் சொல்லியதாக இப்பாடலடிகள் அமைந்துள்ளன. தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் செல்லும் தலைவன் கள்வர்களிடம் அகப்படாமல் வர வேண்டும் என்பது தலைவியின் எண்ணமாக உள்ளது இங்கு நோக்கத்தக்கது.

தலைவன், தலைவியின் காதல் வாழ்க்கையானது எப்பொழுதும் இன்பத்தைத் தர வல்லதாக அமைந்துவிடவில்லை. தலைவியை மணம் முடித்து வாழ்க்கை நடத்தப் பொருள் வேண்டும். அதனை ஈட்டி வருவது தலைவனின் கடமை. தலைவன்

பொருளீட்டச் செல்லும் வழியானது அத்தனை மென்மை பொருந்தியது அல்ல, மாறாக வன்மை கொண்டதாக அமைந்துள்ளது. கொடுமையான வழியில் பயணம் செய்யும் தலைவன், தீங்கு இல்லாதவனாய்த் திரும்புதல் வேண்டும் என்பதை

**...அம்புதொடை அமைதி காண்மார், வம்பலர்**
**கலன் இலர் ஆயினும் கொன்று,**
**-------------------------------------------**
**நோய்இலர் பெயர்தல் அறியின்,**
**ஆழல மன்னோ, தோழி! என் கண்ணே.**[22]

எனச் சேந்தங்கொற்றனார் தம்முடையப் பாடலடிகளில் குறிப்பிடுகின்றார். பாலை நிலக் கள்வர்கள், பாலைவெளியில் புதியவர்கள் வந்தாலும், வருபவர்கள் பொருளின்றி வந்தாலும் அவர்களைக் கொன்று, பிற உயிர்களுக்கு உணவாக அளிப்பதைப் தொழிலாகக் கொண்டுள்ளனர். அக்கொடுமையான வழியில் பொருளீட்ட பயணம் செய்த தலைவனின் தாமதம், தலைவியை நிலைகுலையச் செய்வதாக இப்பாடலடிகள் விளக்கம் தருகின்றன.

பாலை நிலவெளி வழியாக பொருளீட்டச் செல்பவர்களும் வணிகம் செய்பவரும் தங்களின் உயிரைத் துச்சமாக எண்ணியே பயணம் செய்தல் வேண்டும். காதலர்கள் இல்லற வாழ்க்கையைச் சிறப்பானதாக அமைப்பதற்கு பொருளீட்டுவதைத் தவிர வேறு வழி இல்லை. அவ்வாறு பொருளீட்டுவதற்காகப் பயணம் செல்பவர்களைக் கொன்று அவர்கள் துடிதுடிக்க இறந்துபடும் சூழல் கள்வர்களால் இரசிக்கப்படுவதை

**“வலிமுன்பின், வல்லென்ற யாக்கை, புலிநோக்கின்**
**சுற்றமை வில்லர், சுரிவளர் பித்தையர்,**
**அற்றம் பார்த்து அல்கும் கடுங்கண் மறவர் தாம்**
**கொள்ளும் பொருள் இலர் ஆயினும், வம்பலர்**
**துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து, உயிர்வெளவலின்...**[23]

எனப் பெருங்கடுங்கோ இப்பாடலடிகளில் குறிப்பிடுகின்றார். பாலை வெளியில் பொருளோடு வருபவர்களையும் பொருளின்றி வருவோரையும் இரக்கமில்லாத கள்வர்கள் அம்பெய்து கொல்வார்கள். அம்பு தைத்தவர்கள் பதைபதைத்துச் சாவதைக் கண்டு கள்வர்கள் அகமகிழ்ந்ததாக இப்பாடலடிகள் குறிப்பிடுகின்றன. மேலும் வழிப்போக்கர்கள் குறித்த இறப்புச் செய்திகளானது

**...செங்கோல் வாளிக் கொடு வில் ஆடவர்**
**வம்ப மாக்கள் உயிர்த் திறம் பெயர்த்தென**
**வெங்க டற்று அடை முதல் படு முடை தழீஇ...**[24]

என நற்றிணையிலும்

**...கூற்றத் தன்ன கொலைவேல் மறவர்**
**ஆற்றுஇருந்து அல்கி வழங்குநர்ச் செகுத்த**
**படுமுடைப் பருந்து பார்த்திருக்கும்**
**நெடுமூதிடைய நீர்இல் ஆறே...**[25]

எனக் குறுந்தொகையிலும்

**… இலை இல ஓங்கிய நிலை உயர் யாஅத்து**
**மேற் கவட்டு இருந்த பார்ப்பினங்கட்டு,**
**கல்லுடைக் குறும்பின் வயவர் வில் இட,**
**நிண வரிக் குறைந்த நிறத்த அதர்தொறும்,**
**கணவிர மாலை இடூஉக் கழிந்தன்ன**
**புண் உமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்**
**கண் உமிழ் கழுகின் கானம் நீந்தி...**[26]

**தோட் பதன் அமைத்த கருங்கை ஆடவர்**
**கனை பொறி பிறப்ப நூறி, வினைப் படர்ந்து,**
**கல்லுறுத்து இயற்றிய வல் உவர்ப்  படுவில்,**
**பார் உடை மருங்கின் ஊறல் மண்டிய**
**வன் புலம் துமியப் போகி...**[27]

**…விளர் ஊன் தின்ற வீங்குசிலை மறவர்**
**மை படு திண் தோள் மலிர வாட்டி,**
**பொறை மலி கழுதை நெடு நிரை தழீஇய**
**திருந்து வாள் வயவர் அருந்தலை துமித்த**
**படு புலாக் கமழும் ஞாட்பில், துடி இகுத்து**
**அருங்கலம் தெறுத்த பெரும் புகல் வலத்தர்,**
**வில் கெழு குறும்பில் கோள் முறை பகுக்கும்...**[28]

...கைப்பொருள் இல்லை ஆயினும், மெய்க் கொண்டு
இன் உயிர் செகாஅர் விட்டு அகல் தப்பற்குப்
பெருங்களிற்று மருப்பொடு வரி அதள் இறுக்கும்
அறன் இல் வேந்தன் ஆளும்
வறன்உறு குன்றம் பல விளங்கினவே.[29]

...நெறி செல் வம்பலர்க் கொன்ற தெவ்வர்
எறிபடை கழீஇய சேயரிச் சில் நீர்
அறுதுறை அயிர் மணற் படுகரைப் போகி...[30]

வினைவயிற் பிரிதல் யாவது? வணர்சுரி
வடியாப் பித்தை, வன்கண், ஆடவர்
அடிஅடிமை பகழி ஆர வாங்கி
வம்பலர்ச் செகுத்த அஞ்சுவரு கவலை...[31]

...சாத்துஎறிந்து
அதர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர் படுபகை வெரீஇ...[32]

வீங்கு விளிம்பு உரீஇய விசைஅமை நோன்சிலை
வாங்குதொடை பிழையா வன்கண் ஆடவர்
விடுதொறும் விளிக்கும் வெவ்வாய் வாளி
ஆறுசெல் வம்பலர் உயிர்செலப் பெயர்ப்பின்...[33]

கான்உயர் மருங்கில் கவலை அல்லது,
வானம் வேண்டா வில்ஏற் உழவர்
பெருநாள் வேட்டம் கிளைஎழ வாய்த்த...[34]

...கடுத்தது பிழைக்குவது ஆயின், தொடுத்த
கைவிரல் கவ்வும் கல்லாக் காட்சி,
கொடுமரம் பிடித்த கோடா வன்கண்,
வடிநவில் அம்பின் ஏவல் ஆடவர்,
ஆள்அழித்து உயர்ந்த அஞ்சுவரு பதுக்கை...[35].

...நல்இசை வலித்த நாணுடை மனத்தர்
கொடுவிற் கானவர் கணைஇடத் தொலைந்தோர்,
படுகளத்து உயர்ந்த மயிர்த்தலைப் பதுக்கைக்
கள்ளிஅம் பறந்தலைக் களர்தொறும் குழீஇ...[36]

சிலைஏ றட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்...[37]

…எருவை இருஞ்சிறை இரீஇய, விரிஇணர்த்
தாதுஉண் தும்பி முரல்இசை கடுப்ப,
பரியினது உயிர்க்கும் அம்பினர், வெருவர
உவலை சூடிய தலையர்...[38]

...பெரிய
நிதியம் சொரிந்த நீவி போலப்
பாம்புஊன் தேம்பும் வறம்கூர் கடத்திடை,
நீங்கா வம்பலர் கணைஇடத் தொலைந்தோர்...[39]

...கொடுவில் எயினர் குறும்பிற்கு ஊக்கும்
கடுவினை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
படுபிணம் கவரும் பாழ்படு நனந்தலை...[40]

...களர்கால் யாத்த கண்அகன் பரப்பின்
செவ்வாரைக் கொழிநீர் கடுப்ப, அரவின்
அவ்வரி உரிவை அணவரும் மருங்கின்,
புற்றுஅரை யாத்த புலர்சினை மரத்த
மைந்நிற உருவின், மணிக்கண், காக்கை
பைந்நிணம் கவரும் படுபிணக் கவலைச்
சென்றோர் செல்புறத்து இரங்கார் கொன்றோர்...[41]

...கொலைவெங் கொள்கைக் கொடுந்தொழில் மறவர்
ஆறுசெல் மாக்கள் அருநிறத்து எறிந்த
எஃகுஉறு விழுப்புண் கூர்ந்தோர் எய்திய...[42]

ஆகிய பாடல்களிலும் கிடைக்கப்பெறுகின்றன. மனிதர்களைச் சக மனிதர்களே வேட்டையாடுவது, கொடுந்துன்பம் செய்வது, கொலை செய்வது, அவர்களின் பொருட்களைக் கொள்ளை செய்வது பண்டைக்காலத்திலும் இருந்துள்ளது. வாழிடமும், புவியின் சூழலும் அதற்கான காரணங்களாக இருந்துள்ளன. ஆயினும் தமிழிலக்கிய வரலாற்றின் பொற்காலமாகக் கருதப்படும் சங்ககால தமிழரின் நற்பெயருக்கு இத்தகைய வன்செயல்கள் இழுக்கு ஏற்படுத்துவதாக தோன்றுகின்றன.

**பிணப் பதுக்கைகள்**

உயிரிகள் இறந்தப் பின் இயக்கமற்ற உடல்களைப் புதைக்கும் வழக்கம் மக்களிடையே தற்போது வரை இருந்து வருகின்றது. இறந்த பிணத்தை, மண்ணில் குழி தோண்டிப் புதைத்து அக்குழியைச் சுற்றி கற்கள் வைப்பதைப் பதுக்கைகள் என்கின்றன இலக்கியங்கள். அக இலக்கியங்கள் தலைமக்களைக் குறித்துப் பேசுகையில் பிணப் பதுக்கைகளைக் குறித்தும் பேசுகின்றன. உடல்களை எரிக்கும் வழக்கமும் புதைக்கும் வழக்கமும் மக்களிடையே பொதுவாக நிலவிவருகின்றது. பாலைநிலக் கள்வர்கள் வழிப்போக்கர்களைக் கொன்று அவர்களின் பிணங்களைக் கற்களாலும் இலைதளைகளாலும் மூடி வைக்கும் குவியலும் பதுக்கைகள் எனப்படுகின்றன. அவ்வாறாகக் கொலையுண்ட பிணங்களின் குவியலை

**…வெஞ்சுரத்து**
**உலர்ந்த வம்பலர் உவல்இடு பதுக்கை**
**நெடுநல் யானைக்கு இடுநிழல் ஆகும்…**[43]

என இளநாகனார் தம்முடைய பாடலடிகளில் குறிப்பிடுகின்றார். பாலைவெளியில் பயணம் செய்தவர்கள், கள்வர்களால் கொலை செய்யப்பட்டனர். உயிரற்ற பிணங்களை மலைபோல் குவித்து, அப்பிணங்கள் புறம் காணாதவாறு கற்களாலும் செடிகொடிகளாலும் மறைத்துவைத்துள்ளனர். அப்பிணப்பதுக்கைகள் யானைகளுக்கு நிழல் தரும் மலை போன்று காட்சியளித்தாக வருணிக்கப்படுகின்றது. எண்ணிலடங்காத வழிப் போக்கர்களைக் கொன்ற பாலை நிலவெளியில், பொருளீட்டச் செல்லும் தலைவனை நினைந்து தலைவி புலம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

சங்ககாலத் தலைவர்கள் பிறர் பொருளை நினையாது, சுயமாகப் பொருளீட்டும் தலைமைப் பண்பைப் பெற வேண்டும். பிறர் பொருளை எண்ணியும் அவர்களின் உடமைகளை அழித்தும் வாழ்பவர்கள் உலகோரால் உயிருள்ளோராகக் கருதப்படார். இதனை,

**'உள்ளது சிதைப்போர்' உளர்எனப் படாஅர்;**
**இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு எனச்**
**சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்**
**சென்றனர்...**[44]

எனப் பெருங்கடுங்கோ குறிப்பிடுகின்றார். தேடி வைத்த செல்வத்தை அழிப்போர், செல்வம் உடையார் எனக் கருதப்பட மாட்டார்கள். ஒருவரிடம் இரந்து பொருளீட்டுவது இறந்தார்க்கு ஒப்பாகும் என இப்பாடல் சுட்டுகின்றது. ஆடவர்கள் ஏற்ற காலத்தில் மணம் முடித்து, இல்லற வாழ்வைச் செழுமையானதாக அமைக்க பொருளீட்டுதல் வேண்டும். அவ்வாறு பொருளீட்டும் தலைவன், பொருள் தேடுதலை அற வழியில் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்து அடியொற்றுகிறது.

அகப்பாடல்கள் பல வர்ணனைகளாலும் உவமைகளாலும் நிறைந்து காணக் கிடைக்கின்றன. அக இலக்கியங்களில் தலைமக்களின் பிரிவுத் துயர், காட்டு வழியின் கொடுமை, விலங்குகளின் அவலம், கள்வர்களின் கொலை வெறி எனப் பல்வேறு சூழல்கள் அதீதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. கள்வர்களால் கொல்லப்பட்ட வழிப் போக்கர்களின் பிணங்கள், கற்குவியலாலும் இலைதளைகளாலும் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. பெருவெளியில் கொலையுண்ட பிணங்களைக் கழுகுகள், பருந்துகள், நரிகள் ஆகியவற்றிற்கு உணவாக அளிப்பதை,

**...கல்லுடைக் குறும்பின் வயவர் வில் இட,**
**நிண வரிக் குறைந்த நிறத்த அதர்தொறும்,**
**கணவிர மாலை இடூஉக் கழிந்தன்ன**
**புண் உமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்**
**கண் உமிழ் கழுகின் கானம் நீந்தி...**[45]

என மாமூலனார், பாலை வெளியில் கள்வர்களின் தாக்குதலுக்கு இறந்தவர்களின் நிலையைக் குறிப்பிடுகின்றார். பொருளீட்டச் செல்லும் தலைவன், கள்வர்களின் கண்களுக்குத் தப்பி தன்னிடம் வர வேண்டும் எனத் தலைவி வேண்டுகிறாள். கழுகுகள்,

உயிரற்ற பிணங்களின் கண்களைத் தோண்டி தன்னுடைய குஞ்சுகளுக்கு உணவாக ஊட்டும் நிகழ்வு இப்பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வன்மை நிறைந்த காட்டு வெளியின் கொடூரங்களை, மருதன் இளநாகனார், ஆலம்பேரி சாத்தனார், சீத்தலை சாத்தனார் ஆகிய புலவர்கள் தம்முடைய பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். நெல் ஏர் உழவர்களைப் புகழ்ந்து பாடும் புலவர்கள், வில் ஏர் புரியும் கொலைஞர்களை

**“கான்உயர் மருங்கில் கவலை அல்லது,**
**வானம் வேண்டா வில்ஏர் உழவர்**
**பெருநாள் வேட்டம் கிளைஎழ வாய்த்த...**[46]

என மருதன் இளநாகனார், வில்லை எராகக் கொண்டு வழிச் செல்வோரின் உடலை உழுபவர்களைத் (தாக்குவோரை) தம்முடைய பாடலில் குறிப்பிடுகின்றார். பாலை நிலக் கள்வர்களுக்குப் புதிய புதிய வழிப்போக்கர்கள் வரும் நாளே நன்னாள் எனும் செய்தி இங்குக் கிடைக்கின்றது. தலைமக்களின் அக வாழ்க்கையையும் அவர்களின் நாட்டு வளங்களையும் பாடியுள்ள புலவர்கள் ஆரலைக்கள்வர்களின் கொலைவெறித் தாக்குதல்களையும் மிகையாகப் பதிவு செய்துள்ளனர். மேலும் கள்வர்களைக் குறித்த பதிவுகள்

**இடுமுள் நெடுவேலி போல, கொலைவர்**
**கொடுமரம் தேய்த்தார் பதுக்கை நிரைத்த**
**கடுனவை ஆர் ஆற்று...**[47]

எனக் கலித்தொகையிலும்,

**...கள்ளி அம் காட்ட கடத்திடை உழிஞ்சில்**
**உள் ஊன் வாடிய கரி மூக்கு நொள்ளை**
**பொரி அரை புதைத்த புலம்பு கொள் இயவின்**
**விழுத் தொடை மறவர் வில் இட வீழ்ந்தோர்**
**எழுத்துடை நடுகல்...**[48]

**…களரி பரந்த கல் நெடு மருங்கின்,**
**விளர் ஊன் தின்ற வீங்குசிலை மறவர்**
**மை படு திண் தோள் மலிர வாட்டி,**
**பொறை மலி கழுதை நெடு நிரை தழீஇய**

திருந்து வாள் வயவர் அருந் தலை துமித்த...[49]

…வெண் நுனை அம்பின் விசை இட வீழ்ந்தோர்
எண்ணு வரம்பு அறியா உவல் இடு பதுக்கைக்
சுரம் கெழு கவலை கோட்பால் பட்டென,
வழங்குநர் மடிந்த அத்தம் இறந்தோர்...[50]

…நெறி செல் வம்பலர்க் கொன்ற தெவ்வர்
எறிபடை கழீஇய சேயரிச் சில் நீர்
அறுதுறை அயிர் மணற் படுகரைப் போகி...[51]

...வன்கண் ஆடவர்
அடிஅடிமை பகழி ஆர வாங்கி;
வம்பலர்ச் செகுத்த அஞ்சுவரு கவலை,
படுமுடை நசைஇய...[52]

…சாத்துஎறிந்து
அதர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர் படுபகை வெரீஇ...[53]

...வீங்கு விளிம்பு உரீஇய விசைஅமை நோன்சிலை
வாங்குதொடை பிழையா வன்கண் ஆடவர்
விடுதொறும் விளிக்கும் வெவ்வாய் வாளி
ஆறுசெல் வம்பலர் உயிர்செலப் பெயர்ப்பின்...[54]

…கடுத்தது பிழைக்குவது ஆயின், தொடுத்த
கைவிரல் கவ்வும் கல்லாக் காட்சி,
கொடுமரம் பிடித்த கோடா வன்கண்,
வடிநவில் அன்பின் ஏவல் ஆடவர்...[55]

**...கொடுவிற் கானவர் கணைஇடத் தொலைந்தோர்,**
**படுகளத்து உயர்த்த மயிர்த்தலைப் பதுக்கைக்**
**கள்ளிஅம் பறந்தலைக் களர்தொறும் குழீஇ**
**உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்குஅருங் கடத்திடை**
**வெஞ்சுரம் இறந்தனர்...[56]**

**... கல்அதர் மருங்கில் கடுவளி உதிரப்ப,**
**பொலம் செய் காசின் பொற்பத் தாஅம்**
**அத்தம் நண்ணி, அதர் பார்த்து இருந்த**
**கொலைவெங் கொள்கைக் கொடுந்தொழில் மறவர்...[57]**

ஆகிய அகநானூற்றுப் பாடல்களிலும் காணக்கிடைக்கின்றன.

**தலைவியர்**

தமிழிலக்கியங்கள் குறிப்பிடும் தலைவன் தலைவி பல்வேறு நிலத்தைச் சார்ந்தவர்களாக இருப்பர். தலைமக்களின் வாழ்க்கைச் சூழலைப் பல்வேறு புலவர்களால் எழுதப் பெற்ற பாடல்கள் வழியாக அறிய முடிகின்றது. அவற்றுள் சில அகப் பாடல்கள் தலைமக்களின் துயரம் மற்றும் பிரிவுநிலை, அவர்களின் மன ஓட்டங்கள் ஆகியவற்றை இறப்புடன் தொடர்புபடுத்தி இயற்றப்பட்டுள்ளன. தலைவிகள், தலைவர்களின் பிரிவால், பிரிவுத் துயர் மேலோங்கி இறந்துபடும் எண்ணத்தையும் பொருள்வயிற் பிரிந்த தலைவன் இறந்துபடுவானோ எனும் தலைவியரின் மன அச்சத்தை தலைவிகளின் இறப்பச்சமாக பாடல்கள் குறிப்பிடுகின்றன.

அக இலக்கியங்களில் புலவர்கள் பலர் இயற்றிய பாடல்கள் தலைமக்களின் பிரிவுத் துயரை மையப்படுத்தி எழுதப்பட்டிருப்பினும் தலைவர்கள் இறந்துபட்டனர் என எவரும் குறிப்பிடவில்லை. தலைவிகளின் இறப்பை மறைமுகமாகவும் ஊகங்களாகவும் மட்டுமே அக நூல்கள் குறிப்பிடுகின்றன. தலைவிகளின் இறப்பை, வாழ்வாளோ, வாழாள், வாழேன், வாழ்தல் இலள், ஆகிய சொற்களால் மட்டுமே அக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தலைவன் தன்னைப் பிரிந்து சென்றாலும் பிரிந்து சென்ற தலைவன் தன்னை வந்து சேராவிடினும் தலைவி தன்னுயிரை விட்டு விடுவாள் எனும் தலைவியின் மறைமுக இறப்பை

**...யான் ஒழிந்திருத்தல்**
**நகுதக்கன்று, இவ் அழுங்கல்ஊர்க்கே:**
**இனியான்,**
**உண்ணலும் உண்ணேன்; வாழலும் வாழேன்...**[58]

எனப் பெருங்கடுங்கோ தம்முடைய பாடலில் குறிப்பிடுகின்றார். தலைவனைப் பிரிந்த தலைவி, தலைவனில்லாமல் வீணாக நாளைக் கழித்தல் முடியாது எனவும் தலைவன் இல்லாவிடில் உயிர்த் துறத்தலே நலம் எனத் தலைவியர் எண்ணியுள்ளதையும் பல்வேறு பாடல்கள் குறிப்பிடுகின்றன. பிரிவாற்றாமையால் தலைவி, 'இறப்பேன்' 'உயிர் துறப்பேன்' எனக் கூறுவதை அக இலக்கியங்கள் குறிப்பிட்டாலும் அற இலக்கியமான திருக்குறள்

**விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்**
**அளியின்மை ஆற்ற நினைந்து.**[59]

எனக் குறிப்பிடுகின்றது. தலைவன், தலைவியுடன் இணைந்திருந்த காலத்தில், இருவரும் வேறு அல்லம் எனக் கூறினான். இப்போது தலைவன் தன்மீது அருளில்லாதிருப்பதால் இன்னும் என் உயிர் அழியாது இருக்கின்றது என்ற தலைவியின் புலம்பலை வள்ளுவர் குறிப்பிடுகின்றார். பிரிவுத் துயர் தாங்காத தலைவி தன்னுடைய உயிரைத் துறக்க எண்ணும் மன ஓட்டம் இங்குக் கிடைக்கின்றது.

தலைவன், தலைவியுடனான இல்லற வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகப் பொருளீட்டிவர முனைகின்றான். பொருளீட்டச் செல்லும் தலைவனின் பிரிவுத் துயரால் தலைவி இறக்க நேரிடும் என்பதை

**அறன் இன்றி அயல் தூற்றும் அம்பலை நாணியும்**
**வறன் நீந்தி நீ செல்லும் நீள் இடை நினைப்பவும்**
**இறைநில்லா வளைஓட, இதழ் சோர்பு பனிமல்க,**
**பொறை நில்லா நோயோடு புல்லென்ற நுதல் இவள்**
**விறல் நலன் இழப்பவும், வினைவேட்டாய்! கேஎள், இனி;**
**'உடைஇவள் உயிர் வாழாள், நீ நீப்பின்...**[60]

எனத் தோழி பெருங்கடுங்கோ குறிப்பிடுகின்றார். தலைவனின் பிரிவை அறிந்த தலைவி கைவளை உருண்டோட இறப்பு நிலை அடைவதை தோழி வழியாகப் புலவர் வெளிப்படுத்தியுள்ளார். பிரிவை வெறும் வார்த்தையில் கூறும் செயல் கூட

தலைவியின் உயிரைப் பறிக்கும் என்பது இப்பாடலின் உள்ளுறையாக அமைந்துள்ளது.

கீழ்க்கணக்கில் அக நூல்களான ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது ஆகிய நூல்களில் தலைவியரைக் குறித்தான செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன. பிரிவாற்றாமை கொண்ட தலைவியரின் மன ஓட்டங்களைப் புலவர்கள் இறப்புடன் தொடர்புபடுத்தி எழுதியுள்ளனர். பொருளீட்டச் செல்லும் தலைவனின் பிரிவானது தலைவியை இறக்கச் செய்யும் என்பதை

**மடவைகாண், நல் நெஞ்சே! மாண்பொருள் மாட்டு ஓட**
**புடைபெயர் போழ்தத்தும் ஆற்றாள், படர்கூர்ந்து**
**விம்மி உயிர்க்கும் விளங்கிழையாள்ஆற்றுமோ,**
**நம்மின் பிரிந்த இடத்து?**[61]

எனக் கூறி தலைவன் தன்னுடைய நெஞ்சை ஆற்றுப்படுத்தியதாக மாறன் பொறையனார் குறிப்பிடுகின்றார். தலைவனின் சிறு பிரிவையும் பொறுக்க மாட்டாத தலைவி, தலைவனின் பொருள்வயிற் பிரிவாற்றாமையால் 'உயிர் நீத்தாலும் நீப்பாள்' என இறந்துபடாத தலைவியின் இறப்பு நிலையை இப்பாடல் சுட்டுகின்றது.

தலைமக்களின் களவு வாழ்க்கையில் தோழி தூதாகச் செயல்படுகிறாள். தலைவியை விடுத்து பரத்தையிடம் செல்லும் தலைவனாலும் வாழ்க்கைச் சூழல்களால் தலைவியைப் பிரியும் தலைவனாலும் தலைவி இறக்க நேரிடும் அவல நிலையைத் தோழி

**கோட்டுஅமை வல்வில் கொலை பிரியா வன்கண்ணர்**
**ஆட்டிவிட்டு ஆறுஅலைக்கும் அத்தம் பல நீந்தி**
**வேட்ட முனைவியின் சேரீரோ! ஐய! நீர்**
**வாள்தடங்கண் மாதரை நீத்து?**[62]

என்றுரைக்கின்றார். வலிமையான வில்லினால் பாலைநில வெளியில் பயணிக்கும் வழிப்போக்கர்களை இரக்கமின்றிக் கொன்ற கள்வர்கள் இளைப்பாறுவார்கள். அக்கடுமையான வழியில் பொருளீட்டச் செல்லும் தலைவன் இறக்க நேரிடும் எனும் துன்பம் தலைவியைக் கொல்லும் என்பது இப்பாடல் உரைக்கும் உண்மை.

தலைவனின் பிரிவாற்றாமையால் தலைவியின் மேனி பசலை பூத்து மெலியத் தொடங்கும். எதன்மீதும் நாட்டம் இல்லாமற் போகும் நிலையில் தலைவியின் அரிய உயிரானது அவளை விட்டு நீங்கும் என்பதை

**ஆலி விருப்புற்று அகவி, புறவு எல்லாம்**
**பீலி பரப்பி, மயில் ஆல, சூலி,**
**விரிகுவது போலும் இக் கார் அதிர, ஆவி**
**உருகுவது போலும், எனக்கு.**[63]

என இப்பாடல் சுட்டுகின்றது. மழை வரும் பொருட்டு மயில்கள் ஆட, அவற்றின் விருப்பத்திற்கிணங்க மேகங்கள் கருக்கொண்டு மின்னலோடு முழக்கம் செய்கின்ற மழையானது உருகி மண்ணில் வீழ்வதைப் போன்று, தலைவனைப் பிரிந்த 'தலைவியின் உயிரானது உடலை விட்டு உருகி விழும்' எனத் தலைவி கூறுவதாக மூவாதியார் விளக்குகிறார். மேலும்

**பேழ் வாய் இரும்புலி குஞ்சரம் கோள் பிழைத்துப்**
**பாழ் ஊர்ப் பொதியில் புகாப் பார்க்கும் ஆர் இடை**
**குழாப் பொருள் நசைக்கண் சென்றோர், அருள்நினைந்து**
**வாழ்த்தியோ மற்று என் உயிர்?**[64]

எனவும் புலவர் குறிப்பிடுகின்றார். யானையைக் கொல்ல முயன்று தோல்வியுற்ற புலி பாழ்பட்ட ஊர்களில் புகுந்து இறை தேடும். அத்தகைய கொடுமையான வழியில் பொருளீட்டச் செல்லும் தலைவனின் அருளை நினைந்து இன்னும் இறவாதிருக்கும் தன்னுயிரை நினைத்து தலைவி வெறுப்படையும் நிலையை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

தலைவனின் பிரிவால் வாடும் தலைவி பிரிவாற்றாமையால், தான் உயிர் வாழ நினையாது இறந்துபட வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டுள்ளாள். தலைவன் தன்னைப் பிரிந்தால் தான் இறந்துபட வேண்டும் எனும் மற்றொரு தலைவியின் நிலையை

**பகல்பருகிப் பல்கதிர் ஞாயிறுகல் சேர,**
**இகல் கருதித் திங்கள் இருளை – பகல்வர**
**வெண்ணிலாக் காலும் மருள்மாலை – வேய்த்தோளாய்!**

**உள்நிலாது, என்ஆவி ஊர்ந்து.**[65]

எனக் கணிமேதாவியார் திணைமாலை நூற்றைம்பதில் குறிப்பிடுகின்றார். பகலவன் மறைந்த மாலை வேளையில் இருளைப் பகையென்று கருதிய திங்கள் தோன்ற தலைவியைத் தலைவன் பிரிந்தான். அவன் வருவதற்குத் தாமதம் ஆகும் நிலையில் 'தலைவியின் ஆவி உடலினுள் நில்லாது' ஊர்ந்து செல்கின்றதாம். மேலும்,

**கானம் தலைசெய, காப்பார் குழல்தோன்ற**
**ஏனம் இடந்த மணி எதிரே, வானம்,**
**நகுவது போல் மின்ஆட, நாணா என் ஆவி,**
**உகுவது போலும், உடைந்து.**[66]

எனத் திணைமாலை நூற்றைம்பதில் தலைவியின் நிலையைப் புலவர் குறிப்பிடுகின்றார். தலைவன் இல்லாத பொழுதுகள் தலைவியின் மனதை நிலைகுலையச் செய்து 'நாணமற்ற தலைவியின் உயிரானது துயரத்தினால் துகளாகி உதிர்ந்து விழுவது' போலுள்ளதாக பாடல் விவரிக்கின்றது.

தலைவன் காலம் தாழ்த்தாமல் தலைவியை மணந்து கொள்ள வேண்டும். தலைவனின் பிரிவுத் துயரால் வாடும் தலைவி தலைவனைச் சேராத் துன்பத்தால் இறப்பாள் என்பதை

**பிரைசம் கொள வீழ்ந்த தீம் தேன் இறா அல்**
**மரையான் குழவி குளம்பின் துகைக்கும்**
**வரையா நாட! வரையாய் வரின், எம்**
**நிரைதொடி வாழ்தல் இலள்.**[67]

எனத் தோழி விளக்குகிறாள். இது தலைவியின் இறப்பை முன்னதாக அறிவிக்கும் முறை அல்லது உத்தி எனலாம். தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொண்டால் அவளின் இறப்பைத் தடுத்து நிறுத்த முடியும் அவ்வாறு மணம்முடிக்காமலோ அல்லது மணம் முடிக்கக் காலம் தாழ்த்தினாலோ அவள் இறப்பது நிச்சயம் எனும் கருத்து வெளிப்படுகின்றது.

தலைமக்களின் களவு வாழ்க்கையைப் புலவர்கள் பலர் இன்ப துன்ப வர்ணனைகளைக் கொண்டு பாடல்களாக இயற்றியுள்ளனர். தலைவியின் இறப்பும் அதனைச் சார்ந்த சூழலும் பல்வேறு பாடல்களின் வழியாகக் கிடைக்கப் பெறுகின்றன.

தலைவி தன்னுடைய இறப்பைத் தானே அறிவிப்பதாகவும் தலைவனின் பிரிவால் தலைவிகள் மரணம் அடைவார்கள் எனத் தோழிகளும் தன்னுடைய பிரிவால் தலைவி இறப்பாள் எனும் தலைவனின் புலம்பல்களும் ஒருசேரக் கிடைக்கின்றன.

அகப் பாடல்களில் குறிப்பிடப்படும் தலைவிகள், தலைவர்களின் பிரிவுத்துயர், ஊராரின் பழிச்சொல், பொருள்வயிற் பிரிவு, களவு வாழ்க்கையின் அச்சம் எனப் பல்வேறு காரணங்களுக்காகத் தற்கொலை மிரட்டல்களை வெளிப்படுத்தியுள்ளனர். தங்களின் இறப்பு எண்ணங்களையும் கைக்கொண்டுள்ளனர். ஆயின் அக இலக்கியங்கள் குறிப்பிடும் எந்தத் தலைவியும் தாமாக இறந்துபடவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. மேலும் தலைவிகளின் இறப்பு எண்ணம் குறித்த பதிவுகள்

**கருங்கால் இளவேங்கை கான்றபூக் கல்மேல்**
**இருங்கால் வயவேங்கை ஏய்க்கும் – மருங்கால்**
**மழைவளரும் சாரல் இரவரின், வாழாள்**
**இழைவளரும் சாயல் இனி.**[68]

**தந்துஆயல் வேண்டாஓர் நாள்கேட்டுத் தாழாது**
**வந்தால்நீ எய்துதல் வாயால்மற்று, எந்தாய்!**
**மறிமகர வார்குழையாள் வாழாள்நீ வாரல்**
**எரிமகரம் கொட்கும் இரா.**[69]

**கண்பரப்பக் காணாய், கடும்பனி, கால்வல்தேர்**
**மண் பரக்கும் மா இருள் மேற்கொண்டு, மண்பரக்கு**
**மாறு, நீர் வேலை! நீ வாரல்! வரின், ஆற்றாள்**
**ஏறுநீர் வேலை எதிர்.**[70]

ஆகிய திணைமாலை நூற்றைம்பது பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன. மேலும்

**…ஓர்இரா வைகலுள், தாமரைப் பொய்கையுள்**
**நீர் நீத்த மலர் போல, நீ நீப்பின் வாழ்வாளோ?**[71]

**...செல் நவை அரவத்தும் இனையவள் நீ நீப்பின்,**
**தன் நலம் கடைகொளப்படுதலின்,**
**மற்றுஇவள் இன் உயிர் தருதலும் ஆற்றுமோ –**
**முன்னிய தேஎத்து முயன்று செய்பொருளே?**[72]

**…அன்பு அறமாறி, ‘யாம் உள்ளத் துறந்தவள்**
**பண்பும் அறிதிரோ?’ என்று, வருவாரை**
**என்திறம் யாதும் வினவல்; வினவின்,**
**பகலின் விளங்கு நின் செம்மல் சிதைய,**
**தவல் அருஞ் செய் வினை முற்றாமல், ஆண்டு ஓர்**
**அவலம் படுதலும் உண்டு.**[73]

**...யாம் உயிர் வாழும் மதுகை இலேமாயின்**
**தொய்யில் துறந்தார் அவர் என தம்வயின்**
**நொய்யார் நுவலும் பழிநிற்ப தம்மொடு**
**போயின்று சொல் என் உயிர்.**[74]

ஆகிய கலித்தொகைப் பாடல்களிலும் இத்தகைய செய்திகளைக் காணமுடிகின்றது. மட்டுமின்றி நற்றிணையில்,

**...இன மணி நெடுந்தேர் பாகன் இயக்க,**
**செலீஇய சேறிஆயின், இவளே**
**வருவை ஆகிய சில்நாள்**
**வாழாளாதல் நற்கு அறிந்தனை சென்மே.**[75]

**…அருங் கவலைப்**
**பிரிந்தோர் வந்து, நப்புணரப் புணர்ந்தோர்**
**பிரிதல் சூழ்தலின், அரியதும் உண்டோ?**
**என்று நாம் கூறிக் காமம் செப்புதும்;**
**செப்பாது விடினே, உயிரொடும் வந்தன்று-**
**அம்ம! வாழி, தோழி!**
**யாதனின் தவிர்க்குவம் காதலர் செலவே!**[76]

**ஒன்று இல் காலை அன்றில் போலப்**
**புலம்பு கொண்டு உறையும் புன்கண் வாழ்க்கை**
**யானும் ஆற்றேன்...[77]**

**...யாமம் கொள்பவர் நெடு நா ஒண் மணி**
**ஒன்று எறி பாணியின் இரட்டும்;**
**இன்றுகொல், அளியேன் பொன்றும் நாளே[78]**

**…இன்னாது அலைக்கும் ஊதையொடு ஓரும்**
**நும்இல் புலம்பின் மாலையும் உடைத்தே;**
**இன மீன் ஆர்ந்த வெண் குருகு மிதித்த**
**வறு நீர் நெய்தல் போல,**
**வாழாள் ஆதல் சூழாதோயே[79]**

**நாடல் சான்றோர் நம்புதல் பழி எனின்**
**பாடு இல கலுழும் கண்ணொடு சாஅய்ச்**
**சாதலும் இனிதே![80]**

ஆகிய பாடல்களிலும் காணமுடிகின்றது. குறுந்தொகையில்

**...பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமொடு**
**உடன்உயிர் போகுகதில்ல- கடன் அறிந்து,**
**இருவேம் ஆகிய உலகத்து**
**ஒருவேம் ஆகிய புன்மை நாம் உயற்கே.[81]**

**கடும்புனல் தொடுத்த நடுங்கு அஞர் அள்ளல்**
**கவிர் இதழ் அன்ன தூவிச் செவ்வாய்,**
**இரைதேர் நாரைக்கு எவ்வம் ஆகத்**
**தூஉம் துவலைத் துயர்கூர் வாடையும்**
**வாரார் போல்வர், நம் காதலர்**
**வாழேன் போல்வல் – தோழி! யானே.[82]**

**மழை விளையாடும் குன்றுசேர் சிறுகுடிக்**
**கறவை கன்றுவயின் படர, புறவில்**

பாசிலை முல்லை ஆசு இல் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்று;
உய்யேன் போல்வல்-தோழி-யானே.[83]

இலங்கு வளை நெகிழச் சாஅய், யானே
உளனே வாழி- தோழி! சாரல்
தழைஅணி அல்குல் மகளிருள்ளும்
விழவு மேம்பட்ட என் நலனே, பழவிறல்
பறை வலம் தப்பிய பைதல் நாரை
திரைதோய் வாங்குசினை இருக்கும்
தண்ணம் துறைவானொடு கண்மாறின்றே.[84]

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை
கிளி குறைத்து உண்ட கூழை இருவி
பெரும்பெயல் உண்மையின் இலை ஒலித்தாங்கு, என்
உரம் செத்தும் உளெனே-தோழி! என்
நலம் புதிது உண்ட புலம்பினானே.[85]

கேளிர்!வாழியோ, கேளிர்! நாளும் என்
நெஞ்சுபிணிக் கொண்ட அம்சில் ஓதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் ஆகம்
ஒரு நாள் புணரப் புணரின்,
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே.[86]

…இந்நிலை
தண்ணிய கமழும் ஞாழல்
தண்ணம் துறைவற்கு உரைக்குநர்ப் பெறினே.[87]

...மாரிமா மழை;
பொன்ஏர் மேனி நல்நலம் சிதைத்தோர்
இன்னும் வாரார் ஆயின்,
என் ஆம், தோழி நம் இன் உயிர் நிலையே.[88]

**சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோடு**
**எறிதிரைத் திவலை ஈர்ம்புறம் நனைப்ப,**
**பனிபுலந்து உறையும் பல்பூங் கானல்**
**இருநீர்ச் சேர்ப்பான் நீப்பின், ஒருநம்**
**இன்உயிர் அல்லது பிறிதுஒன்று**
**எவனோ- தோழி! நாம் இழப்பதுவே?**[89]

**அடும்பு அவிழ் அணிமலர் சிதைஇய மீன் அருந்தி**
**தடந்தாள் நாரை இருக்கும் எக்கர்த்**
**தண்ணம் துறைவர் தொடுத்து நம்நலம்**
**கொள்வாம் என்றி- தோழி! கொள்வாம்**
**இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய**
**கொடுத்து அவை தா எனக் கூறலின்,**
**இன்னாதோ, நம்இன்உயிர் இழப்பே.**[90]

ஆகிய பாடல்களிலும், அகநானூற்றில்,

**...ஒரு நாள் விழுமம் உறினும், வழி நாள்,**
**வாழ்குவள் அல்லள், என் தோழி...**[91]

**...யாக்கை**
**இன் உயிர் கழிவது ஆயினும், நின் மகள்**
**ஆய்மலர் உண்கண் பசலை**
**காம நோய்' எனச் செப்பாதீமே.**[92]

**...பனி இருஞ் சோலை 'எமியம்' என்னாய்**
**தீங்கு செய்தனையே ஈங்கு வந்தோயே;**
**நாள் இடைப்படின் என் தோழி வாழாள்...**[93]

**... நளிமுகை உடைந்த நறுங்கார் அடுக்கத்து,**
**போந்தை முழுமுதல் நிலைஇய காந்தள்**
**மென்பிணி முகைஅவிழ்ந்து அலர்ந்த**
**தண்கமழ் புதுமலர் நாறும்நறு நுதற்கே?**[94]

**வைகல் தோறும் பசலை பாய, என்**
**மெய்யும் பெரும்பிறிது ஆகின்று...**
**...............................................**
**ஈங்குயான்**
**சிலநாள் உய்யலென் போன்ம் எனப் பலநினைந்து...**[95]

**...'நீ செல்லல்' என்றலும் ஆற்றாய்; 'செலினே,**
**வாழலென்' என்றி, ஆயின்...**[96]

ஆகிய பாடல்களிலும் தலைவிகளின் இறப்பைக் குறித்தச் செய்திகள் பதிவு செய்யப்படுள்ளன. மேலும், அகநானூறு 113ஆம் பாடலும் தலைவியின் இறப்பு குறித்துக் கூறுகின்றது.

**மடலேறுதல்**

மடலேறுதல் எனப்படுவது, பனங்கருக்கால் குதிரை உருவம் செய்து அதற்கு மணியும் மயிற்பீலிகளும் மாலைகளும் சூட்டி, கச்சையினை அணிவித்து, கழுத்தில் எலும்பு மாலையணிந்த தலைவனை அதில் அமர வைத்துத் தெருவில் இழுத்து வருவர். உடல் முழுவதும் சாம்பலைப் பூசிக் கொண்ட தலைவன், தலைவியின் உருவப் படத்தை ஓவியமாகக் கையில் ஏந்தி, எவரும் விரும்பாத, யாரும் சூடிக்கொள்ளாத எருக்கம்பூ, பூளைப்பூ, ஆவிரம்பூ ஆகிய பூக்களை அணிந்து கொண்டு ஊர்வலம் வருவதைப் பல்வேறு அகப் பாடல்கள் சுட்டுகின்றன. தலைவன் தலைவியை மணம் முடிக்க விரும்பும் தற்கொலை மிரட்டலாக மடலேறுதல் நிகழ்வைக் கருதலாம். ஊராரையும் உறவுகளையும் அச்சமுறச் செய்யும் ஆடவர்களின் மடலேறுதலை

**...ஒறுப்பின், யான் ஒறுப்பது நுமரை; யான், மற்று இந்நோய்**
**பொறுக்கலாம் வரைத்து அன்றிப் பெரிதாயின், பொலங்குழாய்!**
**மறுத்து இவ்வூர் மன்றத்து மடல்ஏறி,**
**நிறுக்குவெண் போல்வல் யான், நீ படு பழியே**[97]

எனக் கபிலர் குறிப்பிட்டுள்ளார். காம நோய் முதிர்கின்ற போது தலைவன், தலைவியை அடைய விரும்பி மேற்கொண்ட உத்தியே மடலேறுதல் என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தலைவன் இறப்பான் எனும் அச்சம் தலைவிக்கு ஏற்பட்டு, வேறு

வழியின்றி தலைவனை மணம் செய்வாள் என்பதற்காக அச்சமூட்டும் செயலை ஆடவர்கள் புரிந்துள்ளமை இங்குப் புலப்படுகின்றது.

காம நோய் முற்றிய தலைவன், ஊரும் குதிரை என ஊராத மடல்மீதேறி ஊரார் பலரும் ஆரவாரிக்க வலம் வருவான். இதனை அறிந்தும் தலைவியின் வீட்டார் தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் முடித்து வைக்க முன் வரவில்லை எனில் தலைவன் சாகவும் துணிவான். ஆடவரின் மடலேறுதலைக் குறித்து

**ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்**
**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**
**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**
**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே**[98]

எனத் தொல்காப்பியர் தம்முடைய நூற்பாவில் ஆடவர் மடலேறுதலைச் சுட்டியுள்ளார். பனங்கருக்குக் குதிரையின் மீது அமரும் தலைவனின் இடையும் தொடையும் பனைமடலால் வெட்டப்பட்டு அவன் குருதிப் போக்கு ஏற்பட்டு இறந்துபடுவான் என்பதே மடலேறுதல் நிகழ்வின் விளைவு என உரையாசிரியர்கள் விளக்கமளிக்கின்றனர்.

தலைவர்களின் மடலேறுதலையும் பால் குறிப்பிடாதவர்கள் தற்கொலை செய்து கொண்டதையும் அக இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. தனியொருவர் தற்கொலை செய்து கொள்ளும் சூழல் பண்டைக்காலம் முதலே இருந்துள்ளது. சங்ககால மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டி தீராத விருப்பம் கொண்டு தற்கொலை செய்துள்ளதை

**…ஆராக் காமம் அடூஉ நின்று அலைப்ப**
**இறுவரை வீழ்நரின் நடுங்கி…**[99]

எனப் பரணர் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய துணையைப் பிரிந்த தலைவனோ தலைவியோ யார் எனக் குறிப்பிடாதவர் மலையுச்சியினின்றும் கீழே வீழ்ந்து (தற்கொலை செய்து) இறந்த செய்தி இங்குக் கிடைக்கின்றது. மனிதர்களின் தற்கொலை முயற்சிகளைப் பதிவு செய்துள்ள அக இலக்கியங்கள், தற்கொலை செய்து மரணமடைந்தவர்களின் பதிவுகளைக் குறிப்பிடாமல் 'மலையிலிருந்து வீழ்னர் போல' என உவமையாக்கித் தற்கொலைச் செயலைப் பதிவு செய்துள்ளன.

தமிழிலக்கியங்களின் வழியாக அறியப்படும் ஆடவர்கள், போர் புரிதல், பொருளீட்டுதல், குடி காத்தல் போன்ற பல்வேறு செயல்களில் தங்களை இணைத்துக் கொண்டாலும் தங்களின் காதலைத் தக்க வைத்துக் கொண்டு தலைவியை மணம் முடித்துக் கொள்வதற்காக மடலேறுதல் எனும் தற்கொலை மிரட்டலை மேற்கொண்டுள்ளனர். மடலேறுதலைக் குறித்து தொல்காப்பியக் களவியலில்

**"தோழி, நீங்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி**
**மடல்மா கூறும் இடனுமாருண்டே"**[100]

எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். தலைவியின் பிரிவாலும், தோழி தலைவனின் குறையை நீக்காத வழியும் களவு நீட்டித்தலாலும் தோழி தலைவனைக் குறை கூறும் போதும் தலைவன் மடலேறுவேன் என மிரட்டுவான் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

தலைவி, தலைவன் மீது காதல் புரிந்த பின் பிரிய நேர்ந்தாலும் தலைவியின் பெற்றோர் தலைவியைக் காதல் புரிந்த தலைவனுக்கு மணம் முடித்துக் கொடுக்காவிட்டாலும் தன்னைக் காதலிக்காத தலைவியைக் கூட மடலேறி அச்சுறுத்தி வன்மணம் புரிந்துள்ளனர். இதனை

**மாஎன மடலும் ஊர்ப; பூ எனக்**
**குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;**
**மறுகின் ஆர்க்கவும் படுப;**
**பிறிதும் ஆகுப – காமம் காழ்க் கொளினே.**[101]

எனப் பேரெயின் முறுவலார் தலைவனின் மடலேறுதல் நிகழ்வை கலித்தொகைப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். தலைவன் தலைவியின் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்த் தலைவியின் உறவார் திருமணத்திற்கு உட்பட வேண்டி தலைவன் மடலேறுதல் ஐந்திணைக்குரியதாயிற்று. தன் காதலுக்கு இசையாத தலைவியை அடையத் தலைவன் மடலேறுதல் கைக்கிளை ஆயிற்று என்பதைப் பல்வேறு உரைகளின் வழியாகப் பெற முடிகின்றது.

தன்னை விரும்பாத தலைவியை மனம் முடிக்க வேண்டி ஊர்ப் பொது மன்றத்தில் தலைவன் மடலேறி உயிர்த் துறக்க முயன்றதை,

.

**...மணிப்பீலி சூட்டிய நூலொடு, மற்றை**
**அணிப்பூளை, ஆவிரை, எருக்கொடு, பிணித்து, யாத்து,**
**மல்லல் ஊர் மறுகின்றகண் இவட்பாடும், இஃது ஒத்தன்-**
**எல்லீரும் கேட்டீமின் என்று,**
**படரும். பனை ஈன்ற மாவும்- சுடர்இழை,**
**நல்கியாள், நல்கியவை.**[102]

என நல்லந்துவனார் குறிப்பிடுகின்றார்.

அறம், பொருள், இன்பத்தைக் கூறும் வள்ளுவர் ஆடவர்கள் மடலேறுதலை நாணுத் துறவு உரைத்தல் எனும் அதிகாரத்தில் எடுத்துக் காட்டியுள்ளார். குறள் வருமாறு

**"காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்**
**மடல்அல்ல தில்லை வலி"** [103]

காதலியோடு கூடி இன்பம் அனுபவித்த பின் அது கிடைக்கப்பெறாது வருந்துவோர்க்கு மடல் ஏறுவது அல்லது வேறு வழி இல்லை என்பது இதன் பொருள். தலைவன் மடலேறுவதனால் அதற்கு அச்சம் அடைந்து தலைவியின் பெற்றோர் அத்தலைவனுக்கே தலைவியை மணம்முடித்துக் கொடுப்பர் எனும் செய்தி கூறப்பட்டுள்ளது.

தன்னைக் காதல் புரியாத் தலைவியைத் தலைவன் தன்னுடைய வன்முறைக் காதலால் மணம் முடிக்க முனைகின்றான். தலைவியை மணம் முடிக்கத் தன்னுடைய உயிரைத் துறப்பது என முடிவெடுத்த தலைவன் மடலேறுகையில், குடிப்பழிக்கு அஞ்சிய தலைவியின் வீட்டார் தலைவியைத் தலைவனுக்கு மணம் முடித்துக் கொடுத்ததைப் பின்வரும் பாடலில் எடுத்துக் காட்டுகின்றார் நல்லந்துவனார்

**...வருந்த மா ஊர்ந்து, மறுகின்கண் பாட,**
**திருந்திழைக்கு ஒத்த கிழவி கேட்டு ஆங்கே,**
**பொருந்தாதார் போர் வல் வழுதிக்கு அருந்திறை**
**போல, கொடுதார், தமர்.**[104]

தலைவன் மடலேறியதையும் அதற்கஞ்சிய தலைவியின் வீட்டார் குறுநில மன்னர்கள் போரில் வல்ல வழுதிக்கு, வெறுப்பாக இருப்பினும் வேறுவழியின்றி திறை கொடுப்பது போலத் தலைவியை மணம் முடித்துக் கொடுத்ததைக் குறிப்பிட்டுள்ளார். பாண்டியனின்

போர்த் தொழிலுக்கு அஞ்சிய பகைவர்கள் திறையாகச் செலுத்தியதைப் போன்று, மடலேறிய தலைவனின் செயலுக்கு அஞ்சித் தலைவியின் பெற்றோர் தலைவியைத் திறையாக மணம் முடித்துக் கொடுத்துள்ளனர் என்பதை இப்பாடலால் அறியலாம்.

பிறிதும் ஆகுப, வாழ்தலும் பழியே, பிரியின் வாழ்தல், அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் எனக் காதல் புரிந்த தலைமக்களை, அவர்களின் பெற்றோர்கள் திருமணம் முடித்து வைக்காததும் தன்னை விரும்பாத தலைவியை அடைய விரும்பும் சூழலுமே தலைவன் மடலேறுதலுக்குக் காரணமாக அமைந்துள்ளன. மடலேறுதல் ஆண்களுக்குரியது எனக் குறிப்பிடும் தொல்காப்பியர் பெண்களுக்கு மடலேறுதல் இல்லை என்பதை

**எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மையான**[105]

என அகத்திணையில் கூறியுள்ளார். மடலேறுதல் சிறப்புடைய ஒழுக்கம் இல்லாதலால் எந்த நிலத்திலும் பெண்டிற்கு மடலேறுதல் இல்லை என உரையாசிரியர்கள் விளக்குகின்றனர்.

மடலேறுதல் சிறந்த ஒழுக்கம் அல்லாத போழ்தும் பெண்களுக்கு மடலேறும் எண்ணம் மனத்தினில் எழுந்துள்ளதை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மடலேறுதலைக் குறித்துத் தலைவி உரையாடுவதான செய்தியை நல்லந்துவனார்

**...கனவினான் காணிய, கண்படா ஆயின்,**
**நனவினான், ஞாயிறே! காட்டாய் நீ ஆயின்,**
**பனை ஈன்ற மா ஊர்ந்து, அவன் வர, காமன்**
**கணை இரப்பேன், கால் புல்லிக் கொண்டு...**[106]

எனக் குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது. தலைவன் மடலூர்ந்து வந்து தன்னை மணம் முடிக்க வேண்டும் எனத் தலைவி கூறும் செய்தி இங்குக் கிடைக்கின்றது. பெண் மடலூர்தல் இல்லை என்பதை வள்ளுவர்

**“கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்**
**பெண்ணிற் பெருந்தக்க தில்”**[107]

எனும் குறள் வழி அறியமுடிகின்றது. மடலேறி உயிர் துறக்க முனையும் தலைவர்களின் செயல்கள் வெறும் தற்கொலை மிரட்டலாக அமைந்துள்ளதை அக இலக்கியங்கள் வழியாகப் புரிந்து கொள்ளலாம்.

பிரிவாற்றாமையால் உயிர்த்துறந்தவர்களின் மரணங்களை ‘இறப்பார் போல’ ‘உயிர் துறப்பேன்’ என்பது போலவே இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. முன்பு எவரேனும் தற்கொலை செய்திருக்கக் கூடும் எனவும் மடலேறுதல் மூலம் எவரேனும் இறந்திருக்கக் கூடும் என்பதிலேயே பதிவுகள் நின்றுவிட்டன. இவையன்றியும் ஆடவர்கள் மடலேறுதல் குறித்தான பதிவுகள், குறுந்தொகையில்

**அமிழ்து பொதி செந்நா அஞ்ச வந்த**
**வார்ந்து இலங்கு வைஎயிற்றுச் சின்மொழி அரிவையைப்**
**பெருகதில் அம்ம யானே! பெற்றாங்கு**
**அறிகதில் அம்ம, இவ்வூரே! மறுகில்**
**‘நல்லோள் கணவன் இவன்’ எனப்**
**பல்லோர்கூற யாஅம் நாணுகம் சிறிதே.**[108]

**காலையும், பகலும், கையறு மாலையும்,**
**ஊர் துஞ்சு யாமமும், விடியலும், என்று இப்**
**பொழுது இடை தெரியின் பொய்யே காமம்;**
**மா என மடலொடு மறுகில் தோன்றித்**
**தெற்றெனத் தூற்றலும் பழியே;**
**வாழ்தலும் பழியே-பிரிவு தலைவரினே.**[109]

**மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை**
**இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து**
**பெரும்பெயல் விடியல் விரித்து விட்டன்ன**
**நறுந் தண்ணியளே, நல்மா, மேனி;**
**புனற் புணை அன்ன சாய்இறைப் பணைத்தோள்**
**மணத்தலும் தணத்தலும் இலமே;**
**பிரியின் வாழ்தல் அதனினும் இலமே.**[110]

**பொன்நேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த**
**பல்நூல் மாலைப் பனைபடு கலிமாப்**

பூண்மணி கறங்க ஏறி, நாண் அட்டு,
பழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப,
'இன்னள் செய்தது இது என, முன் நின்று
அவள் பழி நுவலும், இவ்வூர்;
ஆங்கு உணர்ந்தமையின், ஈங்கு ஏகுமார் உளேனே.[111]

விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்
மணிஅணி பெருந்தார் மரபிற் பூட்டி,
வெள் என்பு அணிந்து, பிறர் எள்ளத் தோன்றி,
ஒருநாள் மருங்கில் பெருநாண் நீங்கி,
தெருவின் இயலவும் தருவது கொல்லோ-
கலிழ்கவின் அசைநடைப் பேதை
மெலிந்திலள், நாம்விடற்கு அமைந்த தூதே.[112]

கேளீர்! வாழியோ, கேளீர்! நாளும் என்
நெஞ்சுபிணிக் கொண்ட அம்சில் ஓதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் ஆகம்
ஒரு நாள் புணரப் புணரின்,
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே.[113]

வில்லாப் பூவின் கண்ணி சூடி,
'நல் ஏமுறுவல்' என, பல் ஊர் திரிதரு
நெடு மாப் பெண்ணை மடல் மானோயே...[114]

மடலே, காமம், தந்தது; அலரே
மிடை பூ எருக்கின் அலர் தந்தன்றே;
இலங்கு கதிர் மழுங்கி, எல் விசும்பு படர,
புலம்பு தந்தன்றே...[115]

சிறு மணி தொடர்ந்து, பெருங் கச்சு நிறீஇ,
குறு முகிழ் எருக்கங் கண்ணி சூடி,
உண்ணா நல் மாப் பண்ணி, எம்முடன்
மறுகுடன் திரிதரும் சிறு குறுமாக்கள்...[116]

**‘மா என மதித்துமடல் ஊர்ந்து, ஆங்கு**
**மதில் என மதித்து வெண் தேர் எறி,**
**என் வாய் நின் மொழி மாட்டேன், நின் வயின்**
**சேரி சேரா வருவோர்க்கு...[117]**

**மடல் மா ஊர்ந்து, மாலை சூடி,**
**கண் அகன் வைப்பின் நாடும் ஊரும்**
**ஒள் நுதல் அரிவை நலம் பாராட்டி...[118]**

ஆகிய பாடலடிகளில் இடம்பெற்றுள்ளன. மேலும் கலித்தொகையில்,

**...ஒறுப்பின், யான் ஒறுப்பது நுமரை; யான், மற்று இந்நோய்**
**பொறுக்கலாம் வரைத்து அன்றிப் பெரிதாயின், பொலங்குழாய்!**
**மறுத்து இவ்வூர் மன்றத்து மடல்ஏறி,**
**நிறுக்குவென் போல்வல் யான், நீ படு பழியே.[119]**

**…சொலின், மாறாதீவாள் மன்னோ, இவள்?**
**செறாஅது ஈதல், இரந்தார்க்கு ஒன்று, ஆற்றாது வாழ்தலின்,**
**சாதலும் கூடுமாம் மற்று...[120]**

**மணிப்பீலி சூட்டிய நூலோடு, மற்றை**
**அணிப் பூளை, ஆவிரை, எருக்கொடு, பிணித்து, யாத்து,**
**மல்லல் ஊர் மறுகின்றகண் இவட்பாடும், இஃது ஒத்தன்-**
**எல்லீரும் கேட்டீமின்...[121]**

**...அணி அலங்கு ஆவிரைப் பூவோடு எருக்கின்**
**பிணையல் அம் கண்ணி, மிலைந்து, மணி ஆர்ப்ப,**
**ஓங்கு இரும் பெண்ணை மடல் ஊர்ந்து...[122]**

**கண்டவிர் எல்லாம் கதுமென வந்து, ஆங்கே,**
**பண்டு அறியாதீர் போல நோக்குவீர்; கொண்டது**
**மா என்று உணர்மின்; மடல் அன்று; மற்று இவை**
**பூ அல்ல; பூளை, உழிஞ்சையோடு, யாத்த**
**புன வரை இட்ட வயங்கு தார்ப் பீலி,**
**பிடி அமை நூலொடு பெய்ம் மணி கட்டி,**
**அடர் பொன் அவிர் ஏய்க்கும் ஆவிரங் கண்ணி...[123]**

**...ஓரொருகால் உள்வழியள் ஆகி, நிறை மதி**
**நீருள் நிழல் போல், கொளற்கு அறியள் – போருள்**
**அடல் மாமேல் ஆற்றுவேன் என்னை மடல் மாமேல்**
**மன்றம் படர்வித்தவள்...**[124]

ஆகிய பாடல்களிலும் ஆடவர்கள் மடலேற முற்பட்டமையை அறியலாம்.

**அகப்பாடல்களில் நடுகற்கள்**

தமிழ்ச் சமூகத்தில், இறந்தவர்களைத் தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கம் பண்டைக்காலம் முதல் இருந்து வருகின்றது. இறந்தவர்களுக்கு கல்லறைகள் எழுப்புதல், நினைவுத் தூண் அமைத்தல், கோவில் கட்டுதல் என்று இறந்தவர்களுக்கான நினைவுகளைத் தமிழ்ச் சமூகம் தாங்கி நிற்கின்றது. இறந்தவர்களுக்காக நடுகற்கள் அமைத்துள்ள செய்திகளை அக இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

புறம் சார்ந்த செய்திகளையும் கருத்துக்களையும் புலவர்கள் பலர் அக இலக்கியங்களின் பொருளாக வைத்து இயற்றியுள்ளனர். தலை மக்களின் களவு வாழ்க்கையை ஊரார் அறிந்து அலர் தூற்றியதும் தலைவி தலைவனுடன் உடன் போக்கை மேற்கொள்கின்றாள். தலைவனுடன் செல்லும் தலைவி இளையவள், மெல்லியவள், உடன் போகும் அத்தலைவி கடுமையான வழியில் பயணிக்க நேரிடும். அத்தகைய வன்மை பொருந்திய வழியில் பயணிக்கும் தலைவிக்கு கொடுமை நேரும் என அச்சமுற்ற நற்றாயின் கூற்றாக

**...தனி மணி இரட்டும் தாளுடைக் கடிகை,**
**நுழை நுதி நெடுவேல், குறும் படை, மழவர்**
**முனை ஆத் தந்து, முரம்பின் வீழ்த்த**
**வில் ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்**
**வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்,**
**நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து,**
**தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்...**[125]

என குடவாயிற் கீரத்தனார் குறிப்பிடுகின்றார். தமிழ்ச் சமூகத்தில் பண்டைக்காலம் முதலே ஆநிரைகள் செல்வமாகக் கருதப்படுகின்றன. ஆநிரைகள் அதிகமுள்ள நாடானது செழுமை வாய்ந்தது என்ற கருத்தும் மக்களிடையே நிலவி வருகின்றது.

அவ்வாறாக பிற நாட்டு வளமான ஆநிரைகளைக் களவாடி வருவோர்க்கும் களவுச் செயலைத் தடுத்து நிறுத்துவோருக்கும் ஏற்படும் போரில் பலர் இறந்துள்ளனர்.

அவ்வாறு இறந்தவர்களுக்காகப் பதுக்கை உண்டாக்கி நடுகற்கள் நடப்பட்டு அக்கற்களின் மீது மயிற்பீலி சூட்டி துடி இசைத்து தோப்பிக் கள்ளுடன் செம்மறியாட்டை பலிகொடுத்து வழிபட்டுள்ளனர். இல்லத்தைத் துறந்து தலைவனுடன் செல்லும் தலைவி, கொடுமையான வழியில் பயணம் செல்வாள் என்ற அச்சத்தை மறவர்களின் மரணத்துடனும் நடுகற்களுடனும் தொடர்புபடுத்தி புலவர் பாடலை இயற்றியுள்ளனர்.

பகைவர் புலம் சென்று போர் புரிந்து இறந்த வீரர்களின் உடல்களைப் புதைத்த இடத்தில் நடுகற்கள் நடப்படுகின்றன. அவ்வாறு இறந்தவர்களுக்காக நடப்படும் நடுகல்லைத் தேடிக் கண்டடைந்து அக்கல்லை நீராட்டி பீடெழுதி பீலி சூட்டும் வழக்கம் தமிழ்ச் சமூகத்தில் நிலவியுள்ளதை

**…நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்**
**வேல் ஊன்று பலகை வேற்று முனை கடுக்கும்**
**மொழி பெயர் தேஎம் தருமார்…**[126]

என நோய்பாடியார் குறிப்பிடுகின்றார். சங்ககால மக்கள் போர் புரிந்து இறந்த வீரர்களைக் கொண்டாடியுள்ளனர். இறந்த வீரர்களின் நினைவாக நடுகல் நட்டு அதன் முன்னே வீரர்கள் போருக்காகப் பயன்படுத்திய வேல் நாட்டி வழிபட்ட செய்தியும் கிடைக்கப் பெறுகின்றது.

நிமித்தங்களை அடிப்படையாகக் கொண்டு சங்ககால மக்கள் அன்றாட வாழ்க்கை முறைமைகளை வகுத்துள்ளனர். தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் செல்லும் தலைவனைத் தீய நிமித்தங்கள் கூறி தோழி பயணத்தடை செய்வதை எடுத்துக்காட்ட முனையும் புலவர் நடுகல் வரிசையைக் குறிப்பிடுகின்றார்.

**…வில்ஈண்டு அருஞ்சமம் ததைய நூறி,**
**நல்இசை நிறுத்த நாணுடை மறவர்**
**நிரைநிலை நடுகல் பொருந்தி, இமையாது,**
**இரைநசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி**

**சிறிய தெற்றுவது ஆயின்...**[127]

என மதுரை மருதன் இளநாகனார் தீய நிமித்தம் குறித்த செய்திகளை இப்பாடலில் குறிப்பிடுகின்றார். போர் புரிந்து இறந்த வீரர்களின் நடுகற்கள் வரிசையாக அமைந்திருக்கும் வழியாகப் பொருளீட்டச் செல்லும் தலைவனைத் தோழி, தீய நிமித்தம் கூறி அவனது செயலைத் தடை செய்ய முனைகின்றாள்.

இறந்த வீரர்களுக்கு நடப்பட்ட கற்களிலிருந்து பல்லி சத்தமிடுவது தீய சகுனம் எனக் கருதி யானை மீது பயணம் செய்யும் அரசர்களும் பயணத்தைத் தடை செய்தலுண்டு. மேலும் மனிதர்களின் இறப்பையும் அவர்களுக்காக நடப்பட்ட நடுகற்களைக் குறித்தச் செய்திகளையும் தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பாடியதாக அகநானூற்றில்

**...விழுத்தொடை மறவர் வில் இட வீழ்ந்தோர்**
**எழுத்துடை நடுகல் இன் நிழல் வதியும்**
**அருஞ் சுரக் கவலை...**[128]

**...நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்**
**வேல் ஊன்று பலகை வேற்று முனை கடுக்கும்...**[129]

**...நாள்ஆ உய்த்த நாமவெஞ் சுரத்து**
**நடைமெலிந்து ஒழிந்த சேண்படர் கன்றின்**
**கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்**
**பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்...**[130]

**...ஏறுடை இனநிரை பெயர, பெயராது,**
**செறிசுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய**
**தறுக ணாளர் நல்இசை நிறுமார்,**
**பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்,**
**நட்ட போலும் நடாஅ நடுகல்...**[131]

**...கடுங்கண், மறவர் பகழி மாய்ந்தென,**
**மருங்குல் நுணுகிய பேஎம்முதிர் நடுகல்,**
**பெயர்பயம் படரத் தோன்றுகுயில் எழுத்து**
**இயைபுடன் நோக்கல் செல்லாது...**[132]

**...வில்ஈண்டு அருஞ்சமம் ததைய நூறி,**
**நல்இசை நிறுத்த நாணுடை மறவர்**
**நிரைநிலை நடுகல் பொருந்தி...**[133]

ஆகிய பாடல்களிலும், ஐந்திணை ஐம்பதில்,

**கொடுவில் எயினர்தம் கொல்படையால் வீழ்த்த**
**தடிநிணம் மாந்திய பேஎய், நடுகல்**
**விரிநிழல், கண்படுக்கும் வெங்கானம் என்பர்**
**பொருள்புரிந்தார் போய சுரம்.**[134]

ஐந்திணை எழுபதில்,

**எழுத்துடைக் கல் நிரைக்க வாயில் விழுத் தொடை**
**அம் மாறு அலைக்கும் சுரம்நிரைத்து, அம் மாப்**
**பெருந் தகு தாளாண்மைக்கு ஏற்க அரும் பொருள்**
**ஆகும், அவர் காதல் அவா.**[135]

ஐங்குறுநூற்றில்,

**விழுத் தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்**
**எழுத்துடை நடுகல் அன்ன விழுப் பிணர்ப்**
**பெருங் கை யானை இருஞ்சினம் உறைக்கும்**
**வெஞ்சுரம் ‘அரிய’ என்னார்,**
**வந்தனர்-தோழி! – நம் காதலோரே.**[136]

ஆகிய பாடலிலும், பட்டினப்பாலையில்

**...கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி,**
**நடு கல்லின் அரண் போல,**
**நெடுந்தூண்டிலில் காழ் சேர்த்திய...**[137]

ஆகிய பாடலடிகளிலும் கிடைக்கின்றன.

## *அகப்பாடல்களில் இதர உயிர்களின் இறப்பு*

தமிழிலக்கியங்கள் மாந்தர்களின் வாழ்க்கைச் சூழல், இயற்கை குறித்தான வர்ணனைகள், நாட்டு வளங்கள் என அனைத்துக் கூறுகளையும் அகத்தில் பாடியுள்ள புலவர்கள் மனிதர்களின் மரணங்கள் மட்டுமல்லாமல் விலங்குகளின் மரணங்களையும் பதிவு செய்துள்ளனர். உயிர்கள் பிறப்பதும் இறப்பதும் பல்லுயிர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக என்பதில் மாற்றுக் கருத்து இருக்க இயலாது. மனிதர்கள் உணவை சைவம் அசைவம் எனப் பிரித்துள்ளனர். சைவ உணவை உண்ணும் விலங்குகள் இயற்கை உணவுகளை உண்கின்றன. அசைவ உணவை உண்ணும் விலங்குகள் பிற விலங்குகளின் மாமிசத்தை உண்பதற்கு வேட்டையாடுகின்றன.

### வெறியாட்டு (உயிர்ப்பலி)

வேண்டுதல்களின் நிமித்தமாக உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் தமிழ்ச் சமூகத்தில் தொன்று தொட்டு நிலவி வருகின்றது. போருக்குச் செல்லும் வீரர்கள் பாலை நிலக் கடவுளான கொற்றவைக்கு உயிர்களைப் பலி கொடுத்துள்ளனர். தலைவியின் காதல் நோய் தீரக் குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுக்கு உயிர்களைப் பலி கொடுத்த செய்திகளும் அக இலக்கியங்கள் வழியாகக் கிடைக்கின்றன. தலைவனைப் பிரிந்த தலைவி பசலை பூத்து, உடல் மெலிந்து, முகம் வாடி துன்புற்ற நிலையைக் கண்ட நற்றாய் தன்னுடைய மகளினுட் வேலன் புகுந்துள்ளான் என எண்ணி ஆட்டுக் கிடாயைப் பலியிடுவதை

**...படியோர்த் தேய்த்த பல் புகழ்த் தடக்கை**
**நெடு வேட் பேணத் தணிகுவள் இவள் என**
**முது வாய்ப் பெண்டிர் அது வாய் கூற**
**களம் நன்கு இளைத்து, கண்ணி சூட்டி,**
**வள நகர் சிலம்பப் பாடி, பலி கொடுத்து,**
**உருவச் செந்தினை குருதியொடு தூஉய்,**
**முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு நடு நாள்...**[138]

என வெறிபாடிய காமக்கண்ணியார் குறிப்பிடுகின்றார். பலியிடுவதற்கான களத்தைச் சுத்தம் செய்து வேல் ஊன்றி அதன் மீது மாலை அணிவித்து ஆட்டுக்கிடாயைப் பலி

கொடுத்துள்ளனர். தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை கண்டு முருகனுக்குப் பலி கொடுக்கின்ற செய்தியானது இப்பாடலடிகளில் கிடைக்கின்றது. மேலும்,

**…அணங்கு அறி கழங்கின் கோட்டம் காட்டி,**
**வெறி என உணர்ந்த உள்ளமொடு மறி அறுத்து,**
**அன்னை அயரும் முருகு நின்**
**பொன் நேர் பசலைக்கு உதவாமாறே?**[139]

என நல்வெள்ளியார் குறிப்பிடுகின்றார். தலைவியின் பிரிவு நோய் அறியாத அவளின் அன்னை அவளைக் காக்க முற்பட்டு முருகனுக்குப் பலி கொடுத்த செய்தி இப்பாடல் வழியாகக் கிடைக்கின்றது. மேலும் குறுந்தொகையில்

**மறிக் குரல் அறுத்து, தினைப் பிரப்பு இரீஇ,**
**செல்ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்க,**
**தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா**
**வேற்றுப் பெருந்தெய்வம் பலஉடன்வாழ்த்தி,**
**'பேஎய்க் கொளீஇயள் இவள்'…**[140]

எனப் பெருஞ்சாத்தன் குறிப்பிடுகின்றார். தலைவியின் நோய்நிலை மாற வெள்ளாட்டின் குட்டியைப் பலி கொடுத்து முருகன் அல்லாத வேறு தெய்வங்களையும் வணங்கியுள்ளனர். அக்கால மக்கள் தங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு விலங்குகளைப் பலி கொடுத்த தகவலானது கிடைக்கப் பெறுகின்றது. இவை மட்டுமின்றி நற்றிணையில்

**…அணங்கு அறி கழங்கின் கோட்டம் காட்டி,**
**வெறி என உணர்ந்த உள்ளமொடு மறி அறுத்து,**
**அன்னை அயரும் முருகு நின்**
**பொன் நேர் பசலைக்கு உதவாமாறே?**[141]

**…நல் மலை நாடனை நயவா, யாம்,அவன்**
**நனி பேர் அன்பின், நின் குரல் ஓப்பி,**
**நிற் புறங்காத்தலும் காண்போய், நீ? என்**
**தளிர் ஏர் மேனித் தொல் கவின் அழிய**
**பலி பெறு கடவுட் பேணி…**[142]

**...அணங்கு என உணரக் கூறி, வேலன்**
**இன் இயம் கறங்கப் பாடி,**
**பல் மலர் சிதறிப் பரவுறு பலிக்கே...**[143]

ஆகிய பாடல்களிலும், அகநானூற்றில்

**...'படியோர்த் தேய்த்த பல் புகழ்த் தடக்கை**
**நெடு வேட் பேணத் தணிகுவள் இவள்' என,**
**முது வாய்ப் பெண்டிர் அது வாய் கூற,**
**களம் நன்கு இழைத்து, கண்ணி சூட்டி,**
**வள நகர் சிலம்பப் பாடி, பலி கொடுத்து,**
**உருவச் செந்தினை குருதியொடு தூஉய்...**[144]

**...'பொய்தல் ஆடிப் பொலிக!' எனவந்து**
**நின்நகாப் பிழைத்த தவறோ- பெரும!**
**கள்ளும் கண்ணியும் கையுறை யாக**
**நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்**
**நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி...**[145]

**...ஆர்கலி விழவுக் களம்கடுப்ப, நாளும்,**
**விரவுப்பூம் பலியொடு விரைஇ, அன்னை**
**கடியுடை வியல்நகர்க் காவல் கண்ணி,**
**'முருகு' என வேலற் தரூஉம்**
**பருவ மாகப் பயந்தன்றால், நமக்கே...**[146]

ஆகிய பாடல்களிலும், முத்தொள்ளாயிரத்தில்

**காராட் டுதிரந்தூஉ யன்னை களனிழைத்து**
**நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ-போராட்டு**
**வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்கென்**
**நெஞ்சங் களங் கொண்ட நோய்.**[147]

ஆகிய பாடலிலும் முருகனுக்கு ஆடுகளைப் பலி கொடுத்ததைக்காணமுடிகின்றது.

**யானைகள்**

தமிழிலக்கியங்கள் குறிப்பிடும் விலங்குகளில் யானைகள் பெருமிடம் வகிக்கின்றன. யானைகள் பெரிதானவும் விலங்குகளில் முக்கியமான விலங்காகவும் கொள்ளப்படுகின்றன. யானைகளைக் குறித்த வர்ணனைகள், அவற்றின் இறப்புகள், புலவர்கள் யானைகளைக் காட்சிப்படுத்துதல், பிற விலங்குகளுக்கு யானைகள் உணவாதல் ஆகியவற்றைத் தலைவன் தலைவி காதல் வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் பாடல்கள் இயற்றியுள்ளனர்.

புலி தன்னுடைய பசியைப் போக்க கரிய யானையைக் கொன்று அதன் ஊனை உண்டு மிச்சத்தை விட்டுச் சென்றதை அவ்வழிச்சென்ற வேட்டுவர்களும் பாலை நிலக் கள்வர்களும் உப்பு விற்கும் உமணர்களும் சமைத்து உண்டதை

**...புலிதொலைத்து உண்ட பெருங்களிற்று ஒழிஊன்**
**கலிகெழு மறவர் காழ்க்கோத்து ஒழிந்ததை;**
**ஞெலிகோற் சிறுதீ மாட்டி, ஒலிதிரைக்**
**கடல்விளை அமிழ்தின் கணம்சால் உமணர்**
**சுனைகொள் தீம்நீர்ச் சோற்றுஉலைக் கூட்டும்**
**சுரம்பல கடந்த நம்வயின் படர்ந்து...**[148]

எனத் தொண்டியாமூர்ச் சாத்தனார் அகநானூற்றுப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

விலங்குகளின் மரணத்தை தலைமக்களின் காதல் வாழ்க்கையோடு ஒப்பிட்டு பாடல்கள் பல இயற்றப்பட்டுள்ளன. தலைவியைக் காண வரும் தலைவன் வன்மையான காட்டு வழியில், கொடுமையான விலங்குகளின் மத்தியில் வரக்கூடும் என்ற அச்சம் தலைவியை வாட்டுகின்றது. தலைவியைச் சந்திக்க வரும் தலைவன் இரவுக்குறியில் வருவதால் விலங்குகளால் அவன் இறக்க நேரிடும். தலைவன் நலமுடன் இருந்தால் மட்டுமே தலைவியும் உயிர் வாழ்வாள் ஆகையால் தோழி தலைவனிடம் இரவில் வருதல் வேண்டாம் எனத் தலைவனை வேண்டுவதை

**...ஈன்று அணி வயவுப் பிணப் பசித்தென, மறப் புலி**
**ஒளிறு ஏந்து மருப்பின் களிறு அட்டுக் குழுமும்**
**பனி இருஞ் சோலை, எமியம் என்னாய்,**
**தீங்கு செய்தனையே ஈங்கு வந்தோயே...**[149]

என நெய்தற்சாய்த்துய்த்த ஆவூர்கிழார் இப்பாடலை யானையின் இறப்புடன் தொடர்புபடுத்தியுள்ளார். ஈன்று பசித்திருந்த பெண் புலியின் பசியைப் போக்க ஆண்புலி கொம்புடைய பெரிய யானையைக் கொன்று இழுத்துச் செல்லும் வழியில் வரும் தலைவனின் உயிருக்குத் தீங்கு நேரலாம் எனத் தலைவி அஞ்சுவதாகத் தோழி குறிப்பிடுகின்றாள்.

மனித உயிர்களையும் பிற உயிர்களையும் இயற்கை அரவணைத்துக் காத்துக் கொள்கின்றது. இயற்கை சில வேளைகளில் உயிர்களைத் தன்னுடைய கோரத் தாண்டவத்தால் பலியிடவும் செய்கின்றது. உயிர்களைக் காப்பதில் வான்மழை இன்றியமையாததாகும். மழையைப் போற்றும் வள்ளுவர்

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று**[150]

எனக் குறிப்பிட்டுள்ளார். மழையானது குறைவின்றிப் பொழிந்து உலக உயிர்களைச் சாவாமையிலிருந்து காக்கின்றதனைப் புலவர் சுட்டுகின்றார். உலக உயிர்களுக்கு நன்மைகளைச் செய்யும் மழை இருக்க இடியானது கோட்டுடை யானையைப் பலி வாங்கியதை

**...ஈர்ங் குரல் உருமின் ஆர் கலி நல் ஏறு**
**பாம்பு கவின் அழிக்கும் ஓங்கு வரை பொத்தி,**
**மையல் மடப் பிடி இனைய,**
**கை ஊன்றுபு இழிதரு களிறு எறிந்தன்றே.**[151]

எனத் தொல்கபிலர் குறிப்பிடுகின்றார். பெருமழை பொழிந்து இடி இடித்ததில் அவ்விடி களிற்றின் தலையில் விழத் துதிக்கையைத் தரையில் ஊன்றி இறந்துபட்டது. இரவுப் பொழுதில் தலைவியைச் சந்திக்க வரும் தலைவன் பல்வேறு இன்னல்களால் இறக்க நேரிடும் என்பதை யானையின் இறப்போடு புலவர் தொடர்புபடுத்தியுள்ளார். இறந்த யானையின் நீண்ட தந்தங்களைப் பாறையிடத்து காயவைத்தும் அதன் நகங்களை மண்ணில் புதைத்துவைத்தச் செய்தியும் இப்பாடலடிகளின் வழிக் கிடைக்கப் பெறுகின்றன.

யானைகளைக் கொன்றுண்பதில் புலிகள் சிறப்பிடம் பெறுகின்றன. புலிகளைக் கொல்லும் யானைகளையும் யானைகளைக் கொல்லும் புலிகளையும் இலக்கியங்கள்

விலங்குகளின் இறப்புச் செய்திகளாகப் பதிவு செய்துள்ளன. புலியினத்தில் ஒன்றான கரும்புலியானது முகத்தினில் புள்ளிகளையுடைய யானையை

**…விடர் முகைச் செறிந்த வெஞ் சின இரும் புலி**
**புகர் முக வேழம் புலம்பத் தாக்கி,**
**குருதி பருகிய கொழுங் கவுட் கய வாய்**
**வேங்கை முதலொடு துடைக்கும்…** [152]

என வெள்ளைக்குடி நாகனார் புலியின் தாக்குதலுக்கு இறந்த யானையின் நிலையைக் குறிப்பிடுட்டுள்ளார். யானையைக் கொன்ற புலி தன்னுடைய குருதி சிவந்த வாயை வேங்கை மரத்தடியில் துடைக்கும் செயல் இங்கு காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. தலைவியைக் காண வரும் தலைவன் கொலைக்கஞ்சாத புலிகள் திரியும் கடுமையான வழியில் வரக் கூடும் என்ற தலைவியின் அச்சம் இங்கு வெளிப்படுகின்றது. மேலும் அக இலக்கியங்களில் யானைகள் இறந்த செய்திகள் அகநானூற்றில்,

**…வென்வேல்**
**இலைநிறம் பெயர ஓச்சி, மாற்றோர்**
**மலைமருள் யானை மண்டுஅமர் ஒழித்த**
**கழற்கால் பண்ணன் காவிரி வடவையின்…**[153]

**…இரும்புலி**
**களிறுஅட்டுக் குழூஉம் ஓசையும், களிபட்டு**
**வில்லோர் குறும்பில் ததும்பும்,**
**வல்வாய்க் கடுந்துடிப் பாணியும், கேட்டே.**[154]

**…பொறிவரிப்**
**பூநுதல் யானையொடு புலிபொரக் குழைந்த**
**குருதிச் செங்களம் புலவுஅற, வேங்கை…**[155]

ஆகிய பாடல்களிலும், நற்றிணையில்

**பெருங் களிறு உழுவைத் தாக்கலின், இரும் பிடி**
**கருவி மா மழையின் அரவம் அஞ்சுபு…**[156]

**கல் அயற் கலித்த கருங் கால் வேங்கை**
**அலங்கல் அம் தொடலை அன்ன குருளை**

**வயப் புனிற்று இரும் பிணப் பசித்தென,வயப் புலி**
**புகர் முகம் சிதையத் தாக்கி, களிறு அட்டு...**[157]

ஆகிய பாடல்களிலும் கிடைக்கின்றன. மேலும் அகநானூறு 112ஆம் பாடலும் யானையின் இறப்பைக் குறிப்பிடுகின்றது.

**யாளி (ஆளி)**

உலகம் தோற்றம் பெற்றது முதல் இன்றளவும் வாழ்ந்தழிந்த விலங்குகள் குறித்த பதிவுகள் ஏராளம் கிடைக்கின்றன. அவற்றுள் ஒருசில விலங்குகள் இன்றளவிலும் கனவு விலங்குகளாக வலம் வருகின்றன. அவ்வரிசையில் ‘யாளி’ எனும் விலங்கை வாழ்ந்தழிந்த விலங்காகத் தமிழிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நற்றிணைப் பாடலில் இளநாகனார், கொடூரத் தோற்றத்தைக் கொண்ட யாளியை

**அருவி ஆர்க்கும் பெரு வரை அடுக்கத்து**
**ஆளி நன் மான், வேட்டு எழு கோள் உகிர்ப்**
**பூம் பொறி உழுவை தொலைச்சிய, வைந் நுதி**
**ஏந்து வெண் கோட்டு, வயக் களிறு இழுக்கும்**
**துன் அருங் கானம்...**[158]

எனக் குறிப்பிட்டுள்ளார். பெரிய மலைப்பக்கத்தில் ‘ஆளி’ எனும் கொடிய விலங்கு வாழ்ந்ததாகவும் புலியால் அடித்துக் கொல்லப்பட்ட யானையை ஆளி இழுத்துச் சென்று இரையாக உண்ணும் என்ற செய்தியும் புலவர் வழியாகக் கிடைக்கப் பெறுகின்றது. ஆளி தங்கியிருக்கும் வழியாகத் தலைவியைக் காண வரும் தலைவன் இறவாமல் வருதல் வேண்டும் இல்லையேல் தலைவனில்லாத தலைவியின் மாமை நிறம் கெட்டு அவளும் இறக்கக் கூடும். மேலும் ஆளியை

**...ஆளி**
**உயர்நுதல் யானைப் புகர்முகத்து ஒற்றி,**
**வெண்கோடு புய்க்கும் தண்கமழ் சோலைப்**
**பெருவரை அடுக்கத்து...**[159]

என அகநானூறு சுட்டுகின்றது.

**வேட்டைத் தொழில்**

மனித இனம் காட்டுமிராண்டியாகத் திரிந்த காலம் முதல் உயிர்களைக் கொல்லும் வேட்டைத் தொழில் புரிந்துள்ளனர். அக இலக்கியங்கள் குறிப்பிடும் எயினர்கள் வேட்டைத் தொழில் செய்யும் குடியினராகத் திகழ்கின்றனர். பண்டைக்கால மக்கள் விலங்குகளைக் கொன்று அதன் தோல்களை ஆடைகளாகவும் ஊனை உணவாகவும் பயன்படுத்தியுள்ளனர்.

உணவுத் தேவையைக் கருதி வேட்டைத் தொழில் புரிந்தாலும் கொல்லப்பட்ட விலங்குகளின் எலும்புகளை ஆயுதங்களாகவும் யானைத் தந்தங்களில் ஆபரணங்களும் உருவம் பொறித்த பொம்மைகளும் செய்துள்ள செய்திகள் இலக்கியங்களில் கிடைக்கின்றன. யானைகள், மான்கள், பன்றிகள் போன்ற விலங்குகளையும் மனிதர்கள் வேட்டையாடிக் கொன்றுள்ளனர். வேட்டுவன் ஒருவன் தந்தங்களுக்காக மலை போன்ற யானையைக் கொன்றதை

**...இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்**
**விரிமலர் மராஅம் பொருந்தி, கோல்தெரிந்து,**
**வரிநுதல் யானை அருநிறத்து அழுத்தி,**
**இகல்அடு முன்பின் வெண்கோடு கொண்டு, தன்**
**புல்வேய் குரம்பை புலர ஊன்றி...**[160]

என மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார் குறிப்பிட்டுள்ளார். இரும்பைப் போன்ற கைகளையுடைய வேட்டுவன் கடம்ப மரத்தின் அருகில் நின்று தேர்ந்தெடுத்த அம்புகளால் யானையைக் கொன்றான். அவ்யானையின் நீண்ட தந்தங்களைப் புலால் நாற்றமெடுக்க அவனது வீட்டின் முற்றத்தில் நட்டு வைத்த செய்தி இப்பாடலில் கிடைக்கின்றது. தலைவனின் பிரிவால் தலைவியின் துயரானது தந்தங்களுக்காகக் கொல்லப்பட்ட யானையின் நிலையை ஒத்தது என்ற விளக்க ஒப்புமை கூறப்பட்டுள்ளது.

தலைவியின் காதல் நோய்க்குக் காரணமான தலைவனைத் தோழி இகழ்ந்து பாடுகின்றாள். தலைவியின் மீது கருணை இல்லாத தலைவனின் நாடு கொடுமை வாய்ந்ததென்பதை

**பெருமலைச் சிலம்பின் வேட்டம் போகிய,**
**செறிமடை அம்பின், வல்வில், கானவன்**
**பொருதுதொலை யானை வெண்கோடு கொண்டு,**
**நீர்திகழ் சிலம்பின் நன்பொன் அகழ்வோன்,**
**கண்பொருது இமைக்கும் திண்மணி கிளர்ப்ப...**[161]

எனத் தொல்கபிலர் குறிப்பிடுகின்றார். வேட்டுவனொருவன் மலைபோன்ற யானையைக் கொன்று அதன் தந்தங்களைக் கொண்டு நிலத்தை உழ ஒளி படைத்த மணிகள் வெளிப்பட்டுள்ளன. தந்தங்கள் ஒடிந்ததும் ஆலங்கட்டியைப் போன்ற முத்துக்கள் நிலத்தில் வீழ்ந்த செய்தியும் இப்பாடலடிகள் சுட்டுகின்றன. முத்துக்களைப் போன்ற விலைமதிப்பற்ற தலைவியின் காதல் யானையின் இறப்போடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

வேட்டுவர், எயினர், பாணர் ஆகியோர் மான், பன்றி, முள்ளம்பன்றி, காளை, பசு ஆகிய விலங்குகளை உணவிற்காக வேட்டையாடிக் கொன்றுள்ளனர். பொருள்வயிற் பிரிந்த தலைவன் தன்னுடைய தலைவியை விரைந்து சந்திக்கும் பொருட்டு தன்னுடைய மனவலியை விலங்கின் இறப்போடு தேர்ப் பாகனுக்கு உரைத்ததை

**...புன்புலம் தழீஇய பொறைமுதல் சிறுகுடி**
**தினைக்கள் உண்ட தெரிகோல் மறவர்,**
**விசைத்த வில்லர், வேட்டம் போகி,**
**முல்லைப் படப்பைக் புல்வாய் கெண்டும்**
**காமர் புறவி னதுவே...**[162]

என்று இடைக்காடனார் குறிப்பிடுகின்றார். குறிஞ்சி நிலத் தலைவியின் நாட்டில் வாழும் வேட்டுவர்கள், மானை வேட்டையாடி அதன் ஊனைச் சமைத்து உண்ட செய்தி கிடைக்கின்றது. தலைமக்களின் பிரிவுத் துன்பத்தை உணர்த்த மானின் இறப்பைப் புலவர் ஒப்பிட்டுள்ளார்.

தினைப் புனங்களில் இயற்கை உணவுகள் கிடைத்தாலும் அக்கால மக்கள் விலங்குகளைக் கொன்றுண்பதையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். தலைமக்களின் வாழ்க்கையைக் கூறும் பாடல்கள் இறப்போடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றன. மானைப் போன்ற மருட்சியுடைய தலைவியின் நிலையை வேட்டைத் தொழிலுடன் இணைத்துக் கூறுவதை

**கண மா தொலைச்சித் தன்னையர் தந்த**
**நிண ஊன் வல்சிப் படுபுள் ஓப்பும்**
**நலம் மாண் எயிற்றி போலப் பல மிகு**
**நன்னல நயவரவு உடையை –**
**என் நோற்றனையோ? – மாவின் தளிரே!**[163]

என ஓதலாந்தையார் குறிப்பிடுகின்றார். எயினர் குல ஆண்கள் விலங்குத் தொகுதிகளை வேட்டையாடிக் கொன்று தங்களுடைய குடிகளுக்குக் கொண்டு செல்கின்றனர். வெட்டிக் கொண்டுவரப்பட்ட தசைத் துண்டங்களைக் காய வைக்கும் எயிற்றியைக் கண்டோர் விரும்புவதைப் போல, பேரழகு படைத்த தலைவியைத் தலைவன் விரும்புகிறான் எனத் தலைவனின் செயலை விலங்குகளின் இறப்போடு புலவர்ஒப்பிட்டுள்ளார்.

**இரலை**

நாணேற்றிய வில்லினால் வலிமை பொருந்திய மறவர்கள் பெண் இரலையைக் கொன்று ஆண் இரலையிடமிருந்து பிரித்தார்கள். அன்னையின் மரணத்தை அறியாத குட்டிகள் களித்தாட ஆண் இரலை வருந்துவதை

**அவ்விளிம்பு உரீஇய விசைஅமை நோன்சிலை,**
**செவ்வாய்ப் பகழி, செயிர்நோக்கு ஆடவர்**
**கணைஇடக் கழிந்ததன் வீழ்துணை உள்ளி,**
**குறுநெடுந் துணைய மறிபுடை ஆட,**
**புன்கண் கொண்ட திரிமருப்பு இரலை**
**மேய்பதம் மறுத்த சிறுமையொடு...**[164]

என்று எயினந்தை மகன் இளங்கீரனார் குறிப்பிடுகின்றார். தலைவியைப் பிரிந்த தலைவன், அருஞ்சுரம் கடந்து செல்லும் துன்பத்தைக் காட்டிலும் தன்னைப் பிரிந்து வாழும் தலைவியின் துன்பம் இறவாத இரலையின் துன்பத்தை ஒத்தது என விலங்கின் இறப்பை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார் புலவர். இரலைக்கு இணக்கமான விளக்கத்தை

**“வெளிமான் என பொதுவாக குறிப்பிட்டாலும் இவை இரலை (Antelope) எனும் இனத்தைச் சேர்ந்தவை. கொம்புகள்தான் மானுக்கும் இரலைக்கும் முக்கிய உள்ள வேறுபாடு. மானின் கொம்புகள் ஆண்டுக்கொருமுறை விழுந்தும் மறுபடியும் புதிய கொம்புகள் முளைக்கும். இரலையின் கொம்புகள் இவ்வாறு**

**உதிரா. வெளிமான் எனப்படும் Black buck இன் மற்றொரு பெயர் Indian Antelope.**[165]

என எழுத்தாளர் சு.தியடோர் பாஸ்கரன் அவர்கள் ‘இன்னும் பிறக்காத தலைமுறைக்காக’ எனும் தம்முடைய நூலில் விளக்கம் தந்துள்ளார்.

இசையில் வல்ல பாணர்கள் தம்முடைய கொடும்பசியைப் போக்க பசுக்களையும் காளைகளையும் வேட்டையாடிக் கொன்றுண்டதை அக இலக்கியப் பாடல்கள் வழி அறியலாம். அவ்வாறாகக் கிடைக்கப்பெறும் பாடல்களில் பலவும் தலைமக்களின் பிரிவு நிலையை மையப்படுத்தியும் தொடர்புபடுத்தியும் இயற்றப்பட்டுள்ளன.

வேட்டைத் தொழிலால் கொல்லப்படும் விலங்குகளின் மரணத்தோடு பொருள்வயிற் பிரிந்தும் பரத்தையிடம் உறவாடும் தலைவனைத் தலைவி விலங்குகளின் இறப்புடன் தொடர்புபடுத்திப் புலம்பியுள்ளாள். தலைவன், பொருள்வயிற் பிரிதலாலும் பரத்தமை தொழில் கொண்டதாலும் தலைவியை ஆறுதல்படுத்த விறலி, பாணன் ஆகியோரைத் தூதனுப்புகிறான். தூதைப் பாடும் புலவர்கள் அப்பாடல்களில் விலங்குகளின் மரணத்தை ஒப்பிட்டு பாடியுள்ளனர்.

**விலங்குப் பலி**

பண்டைக்கால மன்னர்கள், மறவர்கள், மக்கள் ஆகியோர் பிற நாட்டு வளங்கள் மீதான மோகத்தால் கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். செல்வங்களாகக் கருதப்படும் ஆநிரைகளைக் கவர்ந்து வரும் பொருட்டு வீரர்கள் பலர் இறந்துள்ளனர். இவற்றுடன் ஆநிரைகளின் மரணங்களும் நிகழ்ந்துள்ளதை அக இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. அவ்வாறு கவர்ந்து வரும் பசுக்களில் கொளுத்த பசுவினைக் கொன்று உண்டதை

**வயவாள் எறிந்து, வில்லின் நீக்கி**
**பயம்நிரை தழீஇய கடுங்கண் மழவர்,**
**அம்புசேண் படுத்து வன்புலத்து உய்த்தென,**
**தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்**
**கொழுப்புஆ எறிந்து, குருதி தூஉய்,**
**புலவுப்புழுங்கு உண்ட...**[166]

எனக் கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார் குறிப்பிடுகின்றார். ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வெட்சி வீரர்களுக்கும் ஆநிரைகளை மீட்க வந்த கரந்தை வீரர்களுக்கும் போர் மூண்டது. ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வெட்சி வீரர்கள் கொழுப்பு நிறைந்த பசுவினைக் கொன்று அதன் குருதியை வேப்ப மரத்தில் தெளித்து ஆவின் ஊனைச் சுட்டு உண்டுள்ளனர்.

தலைமக்களின் திருமண வரைவின் பொருட்டாகத் தலைவன், பொருளீட்டுவதற்குப் பாலை நிலவெளியில் பயணம் மேற்கொள்கின்றான். தலைவன் பயணம் மேற்கொள்ளும் வழியில் ஆறலைக் கள்வர்கள் குன்றின் மேல் நின்றிருந்த பசுவைக் கொன்றதை

**...வயங்கு ஒளி**
**நிழற்பால் அறலின் நெறித்த கூந்தல்**
**குழற்குரல் பாவை இரங்க, நத்துறந்து,**
**ஒண்தொடி நெகிழச் சாஅய், செல்லலொடு**
**கண்பனி கலுழ்ந்துயாம் ஒழிய, பொறைஅடைந்து,**
**இன்சிலை எழில்ஏறு கெண்டி...**[167]

என்று மாமூலனார் தலைவியின் நிலையை விலங்கின் இறப்போடு தொடர்படுத்தியுள்ளார். வழிப் போக்கர்களைக் கொன்று அவர்களின் பொருட்களைக் களவாடும் இரக்கமில்லாத கள்வர்கள் ஆவைக் கொன்று அதன் ஊனை நெருப்பிலிட்டு உண்கின்றனர். பொருள்வயிற் பிரிந்த தலைவன் காலம் தாழ்த்த அவனது உயிருக்குக் கேடு விளையும் எனும் தலைவியின் புலம்பலை பசுவின் இறப்போடு புலவர் ஒப்பிட்டுள்ளார்.

இவைமட்டுமல்லாது மனிதர்கள் உணவுத் தேவை கருதி வேட்டைத் தொழில் புரிந்து பசுக்கள், பன்றிகள், முள்ளம் பன்றிகள் ஆகியவற்றைக் கொன்றதையும் விலங்குகள் விலங்குகளை வேட்டையாடிக் கொன்றதையும் அக நூல்கள் பதிவிடுகின்றன. மேலும் ஐங்குறுநூற்றில்

**புலி கொல் பெண்பால் பூ வரிக் குருளை**
**வளை வெண் மருப்பின் கேழல் புரக்கும்**
**குன்று கெழு நாடன் மறந்தனன் –**
**பொன்போல் புதல்வனோடு என் நீத்தோனே.**[168]

**...ஈர் உயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய,**
**இருங் களிறு அட்ட பெருஞ்சின உழுவை...**[169]

**...கலங்குமுனைச் சீறூர் கைதலை வைப்ப,**
**கொழுப்புஆ தின்ற கூர்ம்படை மழவர்,**
**செருப்புடை அடியர் தெண்சுனை மண்டும்**
**அருஞ்சுரம் அரிய அல்ல...**[170]

**...பல்பூங் கானத்து அல்குநிழல் அசைஇ,**
**தொகைத் தூவித் தொடைத்தார் மழவர்**
**நாகுஆ வீழ்த்து, திற்றி தின்ற**
**புலவுக்களம்...**[171]

ஆகிய பாடல்களிலும், நற்றிணையில்,

**...கொடு விற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்**
**பச்சூன் பெய்த பகழி போல...**[172]

**...வன் கைக் கானவன் வெஞ் சிலை வணக்கி,**
**உளமிசைத் தவிர்த்த முளவுமான் எற்றையொடு...**[173]

**பிணர்ச் சுவற் பன்றி தோல்முலைப் பிணவொடு**
**கணைக் கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்,**
**கல் அதர் அரும் புழை அல்கி, கானவன்,**
**வில்லின் தந்த வெண் கோட்டு ஏற்றை...**[174]

ஆகிய பாடல்களிலும் விலங்குகள் கொலை செய்யப்பட்டுள்ள செய்தி குறிப்பிடப்பட்டுள்ளன. இதேபோன்று புலியானது தன் பசியைப் போக்கிக்கொள்ள எருதைக் கொன்ற செய்தி அகநானூறு 238ஆம் பாடலில் கிடைக்கின்றது. பன்றியைக் கொல்ல வைத்த பொறியில் புலி புகுந்து இறந்த செய்தி அகநானூறு 8 மற்றும் 72 ஆகிய பாடல்களிலும் நற்றிணை 119 மற்றும் 247 ஆகிய பாடல்களிலும் கிடைக்கின்றன.

**புலிகளின் இயல்பு**

புலிகளைக் குறித்த பல்வேறு செய்திகளை அக இலக்கியப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. விலங்குகளில் துரிதமாகச் செயல்படும் விலங்காகப் புலி குறிப்பிடப்பட்டுள்ளது. பிற விலங்குகளைக் கொன்று பசியைப் போக்கிக் கொள்ளும் புலி பெரியதும் பலத்தில் வலிமையுடைய யானையைத் தாக்கிக் கொன்றது. புலி தன்னுடைய இரையை அடித்துக் கொல்லும் போது அதற்கு இரையாகும் விலங்குகள் இடப்பக்கம் வீழ்ந்தால் அதை உணவாகக் கொள்ளாதென்பதை

**தொடங்கு வினை தவிரா, அசைவு இல் நோன் தாள்,**
**கிடந்து உயிர் மறுகுவது ஆயினும், இடம் படின்**
**வீழ் களிறு மிசையாப் புலியினும் சிறந்த**
**தாழ்வு இல் உள்ளம் தலைத்தலைச் சிறப்ப...**[175]

என வெள்ளாடியனார் பதிவிட்டுள்ளார். இரையானது இடப்பக்கம் வீழ்ந்தால் அதை உண்ணாது, வேறு விலங்கைக் கொன்றுண்ணச் செல்லும் புலியைப் போல, வினைமேற் சென்ற தலைவன் மிகுதியாகப் பொருளீட்டும் நோக்கில் தலைவியைத் தனித்திருக்கச் செய்த சூழலை விலங்கின் இறப்போடு ஒப்பிட்டுள்ளார்.

புலி பிற விலங்குகளுடன் போர் புரிந்து, அதனிடம் அகப்பட்டு இறக்கும் விலங்குகள் இடப்பக்கம் வீழ்ந்தால் உண்ணாது, வலப்பக்கம் விழுந்தால் உண்ணும் எனும் செய்திகள் அகநானூறு 357, 389 ஆகிய பாடல்கள் வழியாக கிடைக்கப் பெற்று வலுச் சேர்க்கின்றது.

தன்னுடைய பாதுகாவலாக அமையப் பெற்றுள்ள பலம் பொருந்திய தந்தங்களைக் கொண்ட யானை தன்னுடைய இனத்தை அழிக்கும் ஆற்றலுடைய புலியைத் சாகக் குத்திக் கொல்வதைப் பாடலொன்று எடுத்துக் காட்டுகின்றது

**நினையாய் வாழி – தோழி! – நனைகவுள்**
**அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென**
**மிகுவலி இரும்புலிப் பகுவாய் ஏற்றை**
**வெண்கோடு செம்மறுக் கொளீஇய, விடர் முகைக்**
**கோடை ஒற்றிய கருங்கால் வேங்கை**
**வாடுபூஞ் சினையின், கிடக்கும்**
**உயர்வரை நாடனொடு பெயருமாறே.**[176]

என ஈழத்துப் பூதன் தேவன் குறிப்பிடுகின்றார். மதநீர் வழிந்த கன்னத்தையுடைய யானை எதிர்ப்பட்ட புலியைக் கொன்று வீசியதில் காய்ந்த வேங்கை மலர்களைப் போல கிடந்தது என்ற உவமை உள்ளுறையாக அமைந்துள்ளது. தலைவனோடு உடன்போக்குச் செல்லத் துணிந்த தலைவியிடம் தோழி, தலைவனது நாட்டின் கொடுமையைப் புலியின் இறப்போடு ஒப்பிட்டு தலைவியின் செயலுக்கு மறுத்துக் கூறியுள்ள செய்தி இங்கு கிடைக்கின்றது.

பச்சைத் தளிர்களை உணவாக உண்டு நீர் வேட்கையால் நீர்த்துறை சென்று நீர் அருந்தும் யானைகள் தம்மைத் தாக்க வந்த புலியைக் கொன்றதனைக் கபிலர் காட்டுகின்றார்

**முளைவளர் முதல மூங்கில் முருக்கி,**
**கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை,**
**நீர்நசை மருங்கின் நிறம்பார்த்து ஒடுங்கிய,**
**பொருமுரண் உழுவை தொலைச்சி, கூர்நுனைக்**
**குருதிச் செங்கோட்டு அழிதுளி கழாஅ...**[177]

இப்பாடலில் கபிலர், போர்க்குணம் வாய்ந்த புலியைக் கொன்ற யானை தன்னுடைய தந்தங்களை மழைநீரில் கழுவிய செய்தியைக் குறிப்பிடுகின்றார். புலியைக் கொன்ற யானை செருக்கு கொண்டு தன் இணையுடன் உறங்குவது போல, இனிய மார்புடைய தலைவன் விரும்புபவர்க்கு அமிழ்து போன்றவன். தலைவியைக் காக்கும் செருக்கு கொண்டவன் எனத் தலைவனின் நற்குணங்களை விலங்கின் இறப்போடு ஒப்பிட்டு தலைவியிடம் தோழி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

கலித்தொகையில் கடவுள் வாழ்த்தைப் பாடியுள்ள நல்லந்துவனார் கொடு கொட்டி ஆடும் சிவன் போர் செய்யும் குணத்தையுடைய புலியைக் கொன்ற புராணச் செய்தியை

**...கொலை உழுவைத் தோல் அசைஇ, கொன்றைத்தார் சுவற்புரள,**
**தலை அங்கை கொண்டு, நீ கபாலம் ஆடுங்கால்...**[178]

எனச் சிவன் கொல்லும் ஆற்றலுடைய புலியைக் கொன்று அதன் தோலையுரித்து ஆடையாக உடுத்தியுள்ளான். சிவனைப் பாடிய புலவர் அவனது பெருமையை ஏற்றிக் கூறும் விதம் அவனது கொலைத் தொழிலையும் பாடியுள்ளார்.

புலாலுணவை விரும்பி உண்ணும் புலியினம் பிற விலங்குகளைக் கொன்று தன்னுடைய இரையைத் தேடிக் கொண்டாலும், புலிகள் கொலை புரிந்தும் கொலையுண்ட செய்திகள் அகநானூறு 88, 238, 251, 272, 332 ஆகிய பாடல்களிலும் நற்றிணை 1, 9, 119, 154, 247, 294, 344, 383 ஆகிய பாடல்களிலும் கிடைக்கின்றன.

**பசுக்கள்**

புலவர்கள் மனிதர்களுக்கு அச்சத்தையூட்டும் விலங்குகளையும் மனிதர்களைக் கொலை செய்யும் விலங்குகளைக் குறித்த பாடல்கள் பலவற்றையும் அக இலக்கியங்களில் பாடியுள்ளனர். காடுகளில் கூட்டமாக வாழும் செந்நாய்கள் பல்வேறு விலங்குகளைக் கொன்றுண்ணும். காட்டு வழியில் வாடிய பசுவினைச் செந்நாயொன்று அப்பசுவினைக் கொன்றுண்டதை ஓர் பாடலில் பதிவு செய்துள்ளார் ஒரு புலவர்

**துகில் விரித்தன்ன வெயில் அவிர் உருப்பின்**
**என்றூழ் நீடிய குன்றத்துக் கவாஅன்,**
**ஓய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலைச்சி**
**ஆர்ந்தன ஒழிந்த மிச்சில் சேய் நாட்டு**
**அருஞ் சுரம் செல்வோருக்கு வல்சி ஆகும்...**[179]

இப்பாடலில் செந்நாயால் கொல்லப்பட்ட பசுவைக் குறிப்பிட்டுள்ளார். தலைவியைப் பிரிந்து செல்ல இருக்கும் தலைவனின் போக்கைத் தடை செய்த தோழி, செந்நாயானது தன்னால் உயிரிழந்த பசுவை வழிப்போவோர் உண்ண மிச்சம் வைத்துச் செல்வதைப் போன்று தலைவியினுடனான காதலை மிச்சம் வைத்துச் செல்லும் தலைவனின் இயல்பை விலங்கின் இறப்புடன் ஒப்பிட்டுள்ளார்.

தலைமக்களின் பிரிவை விலங்குகளின் மரணத்துடன் இணைத்துக் கூறும் புலவர், தலைவியை திருமணம் முடிப்பதற்கு பொருள்வயிற் பிரிந்த தலைவன் அவர்களின் திருமணத்திற்குப் பின்பும் பொருளீட்டுவதற்காக தலைவியைப் பிரிகின்றான். பிரிவாற்றாத தலைவியின் துன்பத்தை இப்புலவரின் மகன் பாடியுள்ளார்.

**...வான் தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்**
**துளங்கு நடை மரையா வலம் படத் தொலைச்சி,**
**ஒண் செங் குருதி உவற்றி உண்டு அருந்துபு,**
**புலவுப் புலி துறந்த கலவுக் கழி கடு முடை,**

**கொள்ளை மாந்தரின் – ஆனது கவரும்**

**புல் இலை மராஅத்த அகன் சேண் அத்தம்...**[180]

இப்பாடலில் எயினந்தை மகனார் இளங்கீரனார் விண்ணைத் தொடும் மலையின் அருகில் அசைந்த நடையுடைய பசுவைப் புலியானது கொன்று உண்டதின் மிச்சத்தை விட்டுச் செல்வதைப் போன்று தலைவன் செயல் அமைந்துள்ளதைப் பசுவின் இறப்போடு தொடர்புபடுத்திப் பாடியுள்ளார். மேலும் அகநானூறு 309ஆம் பாடலிலும் பசுவின் மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மான்கள்**

மானினங்களையும் அதன் இயல்புகளையும் வருணனைகளாகக் குறிப்பிடும் புலவர்கள், பிற விலங்குகளால் வேட்டையாடப்பட்டு மரணமடையும் மான்களின் அவல நிலையையும் இணைத்துப் பதிவு செய்துள்ளனர். காட்டில் வசிக்கும் விலங்குகளால் தலைவனின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு அவனை நிரந்தரமாகப் பிரியக் கூடும் (இறக்க நேரிடும்) எனும் தலைவியின் அச்சத்தை

**‘ஒழியச் சென்மார், செல்ப’ என்று. நம்**
**அழிபடர் உழக்கும் அவல நெஞ்சத்து**
**எவ்வம் இகந்துசேண் அகல, வைஎயிற்று**
**ஊன்நசைப் பிணவின் உறுபசி களைஇயர்,**
**காடுதேர் மடப்பிணை அலற, கலையின்**
**ஓடுகுறங்கு அறுத்த செந்நாய்...**[181]

எனக் காரிக்கண்ணனார் பாடுகின்றார். இப்பாடலில் பெண் நாயின் பசியைப் போக்க ஆண் நாயானது, இளம் பெண் மான் அலறி ஓடும்படிக்கு ஆண் மானை விரட்டி வேட்டையாடிக் கொன்றதைக் குறிப்பிட்டுள்ளார். தலைவனின் பிரிவை உணர்ந்த தலைவி பெரிதும் வருந்தினாள். தலைவியின் நிலை குறித்துத் தலைவனிடம் தோழி, தலைவியையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டி சம்மதம் பெற்றாள். தலைவியின் வருத்தம் ஆண் மானை இழந்த பெண் மானின் வருத்தத்தை ஒத்தது. இதனைப் போன்று

பெண் செந்நாய்க்கு வேண்டி ஆண் செந்நாயானது ஆண் பன்றிகளைக் கொன்று உணவாகக் கொடுத்துள்ளமை அகநானூறு 21, 111, 199 ஆகிய பாடல்கள் வழியாக கிடைக்கப்பெறுகின்றது.

ஊர் மன்றத்தில் மரைஆக்கள் அச்சம் கொண்டு ஓடுமாறு ஆண் மானைக் கொன்ற புலி முழக்கமிடும். தலைவியை நள்ளிரவில் சந்திக்க வரும் தலைவன் புலியிடம் சிக்கித் துன்புற வாய்ப்புள்ளமையை

**...மன்ற மரையா இரிய, ஏறுஅட்டு,**
**செங்கண் இரும்புலி குழுமும்; அதனால்,**
**மறைத்தர் காலையோ அன்றே...**[182]

எனப் பெயரறியப்படாத புலவர் ஒருவர் கூறியுள்ளார். தலைவன் தலைவியைச் சந்திக்க இரவில் வருகிறான். அவன் கடந்து வரும் வழியின் கொடுமையை உணர்த்த மானின் இறப்போடு ஒப்பிட்டுத் தோழி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. மேலும் அகநானூறு 371ஆம் பாடலில் மான் இறந்த செய்தி கிடைக்கின்றது.

**குரங்கு**

மனிதர்கள் பிரிவு ஆற்றாமையாலும் தனித்திருக்கும் அவல நிலையைக் காரணமாகக் கொண்டும் தற்கொலை செய்து தங்களின் அரிய உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். நாள்தோறும் தங்களுடைய அவலங்களைப் புலம்பித் தீர்க்கும் மனித இனம் தற்கொலையை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றதைப் போல குரங்கும் தற்கொலை செய்து கொண்டுள்ளதை

**கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றென,**
**கைம்மை உய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி,**
**ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர் செகுக்கும்...**[183]

எனக் கடுந்தோட் கரவீரன் குறிப்பிட்டுள்ளார். ஆண் குரங்கு இறக்க பெண் குரங்கானது பிரிவாற்றாமையால், தன்னுடைய குட்டியை உடனிருந்த குரங்குகளிடம் கொடுத்துத் தற்கொலை செய்து கொண்டது. இரவுக் குறியில் தலைவியைக் காண வரும் தலைவன் மரணமடைய நேர்ந்தால் தலைவி தன்னுடைய உயிரை விடுவாள் எனும் உள்ளுறை இப்பாடல் வழியாகக் கிடைக்கப்பெறுகின்றது.

**அன்றில்**

மனிதர்கள், விலங்குகளைத் தொடர்ந்து பறவைகளும் தற்கொலை செய்து கொள்ளும் அரிய செய்திகளை அக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தன் துணை பிரிந்த காலத்தில் மற்றொரு அன்றிற் பறவை பிரிவாற்றாது இறக்கும் நிலையை

**ஒன்று இல் காலை அன்றில் போலப்**
**புலம்பு கொண்டு உறையும் புன்கண் வாழ்க்கை**
**யானும் ஆற்றேன்...**[184]

என மோசி கண்ணத்தனார் பாடியுள்ளார். பிரிவுத் துயர் ஆற்றாத அன்றிலானது தன் உயிரைத் துறந்தது போலத் தலைவனைப் பிரிந்த தலைவியும் தன்னுடைய உயிரை மாய்ப்பாள் என்பது இப்பாடலின் பொருளாகும்.

**தொகுப்புரை**

- அக இலக்கியங்களின் வழியாக மன்னர்கள், சாதாரண மனிதர்கள் ஆகியோரின் இறப்புச் செய்திகளும் விலங்குகள், பறவைகள் போன்றவற்றின் இறப்புச் செய்திகளும் கிடைத்துள்ளன.
- பசிய மாங்கனியைத் தவறுதலாக உண்டதைக் குற்றமெனக் கூறிய நன்னன், அக்கனியை உண்ட பெண்ணை இரக்கமின்றி கொலை செய்தமை அறியமுடிகின்றது.
- கோசர்களின் வயல்வெளியில் பசுவை மேய்ச்சலுக்கு விட்டதை குற்றமெனக் கருதிய கோசர்கள், அன்னி மிஞிலி என்பவளின் தந்தையின் கண்களைப் பிடுங்கியதையும் அன்னி மிஞிலி அதற்குப் பழிக்குபழியாக குறும்பியனிடமும் திதியனிடமும் முறையிட்டு கோசர்களைக் கொன்றதையும் பாடல்கள் பதிவு செய்துள்ளன.
- காவிரிப் புதுவெள்ள நீராடலின் பொருட்டு கரிகால் வளவனின் மகள் ஆதி மந்தியும் ஆட்டன் அத்தியும் ஆற்று நீரில் களிக்க, அத்தி வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு இறந்தான்.
- புறம் சார்ந்த செய்திகளையும் புற இறப்புகளையும் தலைமக்களின் காதல் வாழ்க்கையோடு ஒப்பிட்ட பாடல்களில் பெரும்பான்மையான இறப்புக் குறிப்புகள் கண்டடையப்படுள்ளன.
- பாண்டிய மன்னனுக்காகப் போர் புரிந்த அதிகன் போர்க்களத்தில் பகைவர்களால் கொல்லப்பட்ட நிகழ்வு அகப்பாடல் வழி கிடைக்கின்றது.
- போர் களத்தில் சோழன் இளம் பெருஞ் சென்னி வடுகர்களைக் கொன்று குவித்ததை அக இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.
- கடையேழு வள்ளல்களில் இருவரான காரிக்கும் ஓரிக்கும் மூண்ட பகையில் காரி ஓரியைக் கொன்று வெற்றி கண்டதை அக இலக்கியங்களால் அறிய முடிகின்றது.

- சோழனின் படைத்தலைவனான பழையனை, நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புந்துறை ஆகிய அறுவரும் சேர்ந்து கூட்டுக் கொலை புரிந்ததை அக இலக்கியம் பதிவு செய்துள்ளது.
- அன்னிக்கும் திதியனுக்கும் ஏற்பட்ட போரில், அன்னி திதியனைக் கொன்றான்.
- அக்கால மக்களிடையே மற்போர் புரிதல் வீரமாகக் கருதப்பட்டுள்ளது. அவ்வாறாக நடந்த யுத்தத்தில், மற்போரில் வல்லவனான பாணன் தன்னை எதிர்த்து வந்த ஆரியப் பொருணனின் திரண்ட தோள்களை உடைத்துக் கொன்றான்
- தலைமக்களின் காதல் வாழ்க்கையைக் குறிப்பிடும் அக இலக்கியங்கள் புற செய்தியான இறப்புகளையும் குறிப்பிட்டுள்ளன.
- கிள்ளிவளவன், பழையன் மாறனைப் போரில் கொன்ற செய்தியினை அக நூல்கள் வழி அறிய முடிகின்றது.
- ஏறு தழுவலின் பொருட்டு குடற் சரிந்து மரணம் கண்ட வீரர்களின் நிகழ்வுகளையும் பாலை நிலக் கள்வர்களால் வழிப் போக்கர்கள் கொல்லப்பட்ட செய்திகளும் வழிப் போக்கர்களைக் கொன்ற கள்வர்கள் அவர்களின் பிணங்களை பதுக்கைகளாக்கி வைத்த செய்திகளும் கிடைக்கப் பெறுகின்றன.
- துன்பம் நேர்கையில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் அக்கால மக்களிடையில் இருந்துள்ளதை அகப்பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.
- காதல் புரிந்த தலைமக்களின் பிரிவுத் துன்பங்களை அக இலக்கியங்கள் இறப்புடன் தொடர்புபடுத்தியுள்ளன. தலைவர்களின் பிரிவுத் துயரைச் சகித்துக் கொள்ள முடியாத தலைவிகளின் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் கொண்டிருந்தனர்.
- தலைவிகளை மணம் முடிக்க முயன்ற தலைவர்கள் மடலேறுதல் என்ற தற்கொலை முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.
- தலைவனும் தலைவியும் சில சூழல்களில் தற்கொலை செய்வதாக அச்சுறுத்தியுள்ளனர்.

- அகப்பாடல்களில், போரில் மரணமடைந்த வீரர்களின் நினைவாக நடப்பட்ட நடுகற்கள் குறித்தான செய்திகள் கிடைக்கின்றன.
- தலைவிகளின் காதல் நோயைப் போக்க வெறியாட்டு நடத்தி ஆடுகளைப் பலிகொடுத்த செய்திகளை அக நூல்கள் பதிவு செய்துள்ளன.
- விலங்குகள், பறவைகள் குறித்த தற்கொலைகளும் வேட்டைத் தொழில் புரிந்து விலங்குகளின் உயிர்களைப் பறித்த செய்திகளும் அகப் பாடல்களில் கிடைக்கின்றன.

## அடிக்குறிப்புகள்

1. கலித்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:12:14-15
2. குறுந்தொகை, பரணர், பா.எ:292:1-5
3. அகநானூறு, பரணர், பா.எ:196:8-13
4. அகநானூறு, பரணர், பா.எ:236:14-20
5. அகநானூறு, பரணர், பா.எ:376:5-11
6. அகநானூறு, பரணர், பா.எ:396:11-14
7. குறுந்தொகை, பரணர், பா.எ:393
8. நற்றிணை, கபிலர், பா.எ:320:4-7
9. அகநானூறு, பரணர், பா.எ:142:10-13
10. அகநானூறு, பரணர், பா.எ:148:7-8
11. அகநானூறு, பரணர், பா.எ:181:1-7
12. அகநானூறு, இடையன் சேந்தங் கொற்றனார், பா.எ:375:13-17
13. அகநானூறு, குடவாயிற் கீரத்தனார், பா.எ:44:6-11
14. அகநானூறு, நக்கீரர், பா.எ:346:18-25
15. அகநானூறு, குடவாயிற் கீரத்தனார், பா.எ:44:6-11
16. அகநானூறு, நக்கீரர், பா.எ:126:16-22
17. கலித்தொகை, நல்லுருத்திரன், முல்லைக்கலி, பா.எ:103:63-64
18. கலித்தொகை, நல்லுருத்திரன், முல்லைக்கலி, பா.எ:101:16-23
19. கலித்தொகை, நல்லுருத்திரன், முல்லைக்கலி, பா.எ:103:28-29
20. கலித்தொகை, நல்லுருத்திரன், முல்லைக்கலி, பா.எ:105:35-38
21. அகநானூறு, பெருங்கடுங்கோ, பா.எ:337:7-11
22. அகநானூறு, இடையன் சேந்தங் கொற்றனார், பா.எ:375:3-18
23. கலித்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:4:1-5

24. நற்றிணை, சாத்தனார், பா.எ:164:6-8

25. குறுந்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:283:5-8

26. அகநானூறு, மாமூலனார், பா.எ:31:5-11

27. அகநானூறு, குடவாயிற் கீரத்தனார், பா.எ:79:1-5

28. அகநானூறு, மதுரைக் காஞ்சிப் புலவர், பா.எ:89:10-16

29. அகநானூறு, கருந்தொடைக் காவினார், பா.எ:109:11-15

30. அகநானூறு, கல்லாடனார், பா.எ:113:18-20

31. அகநானூறு, மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், பா.எ:144:1-4

32. அகநானூறு, கடியலூர் உருத்திரங் கண்ணனார், பா.எ:167:7-9

33. அகநானூறு, ஆலம்பேரி சாத்தனார், பா.எ:175:1-4

34. அகநானூறு, மதுரை மருதன் இளநாகனார், பா.எ:193:1-3

35. அகநானூறு, இருங்குகுடிக் குன்ற நாடன், பா.எ:215:7-11

36. அகநானூறு, மதுரை ஈழத்துப் பூதன் தேவனார், பா.எ:231:4-7

37. அகநானூறு, எயினந்தை மகன் இளங்கீரனார், பா.எ:289:1-3

38. அகநானூறு, பாலை பாடிய பெருங்கடுங்கோ, பா.எ:291:10-13

39 . அகநானூறு, பாலை பாடிய பெருங்கடுங்கோ, பா.எ:313:10-13

40. அகநானூறு, எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், பா.எ:319:3-6

41. அகநானூறு, மருங்கூர்ப் பாகைச் சாத்தன்பூதனார், பா.எ:327:11-17

42. அகநானூறு, மதுரை பொன்செய் கொல்லன் வெண்ணாகனார், பா.எ:363:10-13

43. குறுந்தொகை, இளநாகனார், பா.எ:77:2-4

44. குறுந்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:283:1-4

45. அகநானூறு, மாமூலனார், பா.எ:31:7,11

46. அகநானூறு, மதுரை மருதன்இளநாகனார், பா.எ:193:1-3

47. கலித்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:12:1-3

48. அகநானூறு, சீத்தலைச் சாத்தனார், பா.எ:53:7-11

49. அகநானூறு, மதுரைக் காஞ்சிப் புலவர், பா.எ:89:9-13

50. அகநானூறு, கடுந்தொடைக் காவினார், பா.எ:109:7-10

51. அகநானூறு, கல்லாடனார், பா.எ:113:17-19

52. அகநானூறு, மதுரை புல்லங்கண்ணனார், பா.எ:161:2-5

53. அகநானூறு, கடியலூர் உருத்திரங் கண்ணனார், பா.எ:167:7-9

54. அகநானூறு, ஆலம்பேரி சாத்தனார், பா.எ:175:1-4

55. அகநானூறு, இறங்குகுடிக் குன்ற நாடன், பா.எ:215:7-10

56. அகநானூறு, மதுரை ஈழத்துப் பூதன் தேவனார், பா.எ:231:5-9

57. அகநானூறு, மதுரை பொன்செய் கொல்லன் வெண்ணாகனார், பா.எ:363:7-10

58. கலித்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:23:6-7

59. திருக்குறள் 1209

60. கலித்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:3:1-6

61. ஐந்திணை ஐம்பது, மாறன் பொறையனார், பா.எ:39

62. ஐந்திணை ஐம்பது, மாறன் பொறையனார், பா.எ:34

63. ஐந்திணை எழுபது, மூவாதியார், பா.எ:19

64. ஐந்திணை எழுபது, மூவாதியார், பா.எ:31

65. திணைமாலை நூற்றைம்பது, கணிமேதாவியார், பா.எ:94

66. திணைமாலை நூற்றைம்பது, கணிமேதாவியார், பா.எ:122

67. ஐந்திணை எழுபது, மூவாதியார், பா.எ:10

68. திணைமாலை நூற்றைம்பது, கணிமேதாவியார், பா.எ:26

69. திணைமாலை நூற்றைம்பது, கணிமேதாவியார், பா.எ:46

70. திணைமாலை நூற்றைம்பது, கணிமேதாவியார், பா.எ:55

71. கலித்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:5:14-15

72. கலித்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:7:18-21

73. கலித்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:19:8-13

74. கலித்தொகை, பெருங்கடுங்கோ, பா.எ:24:14-17

75. நற்றிணை, நக்கண்ணையார், பா.எ:19:6-9

76. நற்றிணை, கண்ணகனார், பா.எ:79:4-10

77. நற்றிணை, மோசி கண்ணத்தனார், பா.எ:124:1-3

78. நற்றிணை, பா.எ:132:9-11

79. நற்றிணை, பா.எ:183:7-11

80. நற்றிணை, அம்மூவனார், பா.எ:327:1-3

81. குறுந்தொகை, சிறைக்குடி ஆந்தையார், பா.எ:57:3-6

82. குறுந்தொகை, வாயிலான் தேவன், பா.எ:103

83. குறுந்தொகை, வாயிலான் தேவன், பா.எ:108

84. குறுந்தொகை, அம்மூவன், பா.எ:125

85. குறுந்தொகை, உறையூர் முதுகண்ணன் சாத்தன், பா.எ:133

86. குறுந்தொகை, நக்கீரர், பா.எ:280

87. குறுந்தொகை, பெருங்கண்ணன், பா.எ:310:5-7

88. குறுந்தொகை, தாயங்கண்ணன், பா.எ:319:5-8

89. குறுந்தொகை, இளம் பூதனார், பா.எ:334

90. குறுந்தொகை, சாத்தன், பா.எ:349

91. அகநானூறு, கபிலர், பா.எ:18:9-10

92. அகநானூறு, நொச்சிநியமங் கிழார், பா.எ:52:12-15

93. அகநானூறு, நெய்தற்சாய்த்துய்த்த ஆவூர் கிழார், பா.எ:112:7-9

94. அகநானூறு, கபிலர், பா.எ:238:15-18

95. அகநானூறு, நக்கீரர், பா.எ:253:1-8

96. அகநானூறு, அம்மூவனார், பா.எ:370

97. கலித்தொகை, கபிலர், பா.எ:58:20-24

98. தொல்காப்பியம், தொல்காப்பியர், பொருளதிகாரம், அகத்திணை:51

99. அகநானூறு, பரணர், பா.எ:322:3-4

100. தொல்காப்பியம், தொல்காப்பியர்,களவியல்:11

101. குறுந்தொகை, பேரெயின் முறுவலார், பா.எ:17

102. கலித்தொகை, நல்லந்துவனார், பா.எ:138:9-13

103. திருக்குறள், 1131

104. கலித்தொகை, நல்லந்துவனார், பா.எ:141:22-25

105. தொல்காப்பியம், தொல்காப்பியர்,பொருளதிகாரம்,அகத்திணை:35

106. கலித்தொகை, நல்லந்துவனார், பா.எ:147:57-60

107. திருக்குறள் 1137

108. குறுந்தொகை, தொல்கபிலர், பா.எ:14

109. குறுந்தொகை, அள்ளூர் நன் முல்லையார், பா.எ:32

110. குறுந்தொகை, சிறைக்குடி ஆந்தையார், பா.எ:168

111. குறுந்தொகை, மதுரைக் காஞ்சிப் புலவர், பா.எ:173

112. குறுந்தொகை, மடல் பாடிய மாதங்கீரன், பா.எ:182

113. குறுந்தொகை, நக்கீரர், பா.எ:280

114. நற்றிணை, கந்தரத்தனார், பா.எ:146:1-3

115. நற்றிணை, ஆலம்பேரி சாத்தனார், பா.எ:152:1-3

116. நற்றிணை, குண்டுகட்பாலியாதனார், பா.எ:220:1-4

117. நற்றிணை, மோசி கீரனார், பா.எ:342:1-4

118. நற்றிணை, மடல் பாடிய மாதங்கீரனார், பா.எ:377:1-3

119. கலித்தொகை, கபிலர், பா.எ:58:20-23

120. கலித்தொகை, கபிலர், பா.எ:61:10-12

121. கலித்தொகை, நல்லந்துவனார், பா.எ:138:8-11

122. கலித்தொகை, நல்லந்துவனார், பா.எ:139:8-10

123. கலித்தொகை, நல்லந்துவனார், பா.எ:140:1-7

124. கலித்தொகை, நல்லந்துவனார், பா.எ:141:7-10

125. அகநானூறு, குடவாயிற் கீரத்தனார், பா.எ:35:3-9

126. அகநானூறு, நோய்பாடியார், பா.எ:67:8-12

127. அகநானூறு, மதுரை மருதன் இளநாகனார், பா.எ:387:13-17

128. அகநானூறு, சீத்தலைச் சாத்தனார், பா.எ:53:10-12

129. அகநானூறு, நோய்பாடியார், பா.எ: 67:8-11

130. அகநானூறு, மதுரை மருதன் இளநாகனார், பா.எ:131:7-11

131. அகநானூறு, மதுரை மருதன் இளநாகனார், பா.எ:269:3-7

132. அகநானூறு, மதுரை மருதன் இளநாகனார், பா.எ:297:6-9

133. அகநானூறு, மதுரை மருதன் இளநாகனார், பா.எ:387:13-15

134. ஐந்திணை ஐம்பது, மாறன் பொறையனார், பா.எ:35

135. ஐந்திணை எழுபது, மூவாதியார், பா.எ:29

136. ஐங்குறுநூறு, ஓதலாந்தையார், பா.எ:352

137. பட்டினப்பாலை, கடியலூர் உருத்திரங்கண்ணனார், பா.எ:78-79

138. அகநானூறு, வெறி பாடிய காமக்கண்ணியார், பா.எ:22:5-11

139. நற்றிணை, நல்வெள்ளியார், பா.எ:47:8-11

140. குறுந்தொகை, பெருஞ்சாத்தன், பா.எ:263:1-5

141. நற்றிணை, நல்வெள்ளியார், பா.எ:47:8-11

142. நற்றிணை, மதுரைப் பெருமருதிள நாகனார், பா.எ:251:4-8

143. நற்றிணை, மதுரைப் பாலாசிரியன் சேந்தன் கொற்றனார், பா.எ:322

144. அகநானூறு, வெறி பாடிய காமக்கண்ணியார், பா.எ:22:5-10

145. அகநானூறு, ஆவூர் மூலங்கிழார், பா.எ:156:11-15

146. அகநானூறு, கோடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார், பா.எ:232:11-15

147. முத்தொள்ளாயிரம், பா.எ:106

148. அகநானூறு, தொண்டியாமூர்ச் சாத்தனார், பா.எ:169:3-8

149. அகநானூறு, நெய்தற்சாய்த்துய்த்த ஆவூர் கிழார், பா.எ:112:5-8

150. திருக்குறள் 11

151. நற்றிணை, தொல்கபிலர், பா.எ:114:1-4

152. நற்றிணை, வெள்ளைக்குடி நாகனார், பா.எ:158:5-8

153. அகநானூறு, செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார், பா.எ:177:13-16

154. அகநானூறு, பாலைபாடிய பெருங்கடுங்கோ, பா.எ:261:12-15

155. அகநானூறு, வடம வண்ணக்கன் பேரிசாத்தனார், பா.எ:268:1-3

156. நற்றிணை, கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார், பா.எ:144:1-2

157. நற்றிணை, கோளியூர் கிழார் மகனார் செழியனார், பா.எ:383:1-4

158. நற்றிணை, இளநாகனார், பா.எ:205:1-5

159. அகநானூறு, நக்கண்ணையார், பா.எ:252:2-5

160. அகநானூறு, மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார், பா.எ:172:6-10

161. அகநானூறு, தொல்கபிலன், பா.எ:282:1-5

162. அகநானூறு, இடைக்காடனார், பா.எ:284:7-11

163.ஐங்குறுநூறு, ஓதலாந்தையார்,பா.எ:365

164. அகநானூறு, எயினந்தை மகன் இளங்கீரனார், பா.எ:371:1-6

165. இன்னும் பிறக்காத தலைமுறைக்காக, சு.தியயோடர் பாஸ்கரன், பா.எ:55

166. அகநானூறு, கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார், பா.எ:309:1-6

167. அகநானூறு, மாமூலனார், பா.எ:265:7-12

168. ஐங்குறுநூறு, கபிலர், பா.எ:265

169. அகநானூறு, எருமை வெளியனார் மகனார் கடலனார், பா.எ:72:12-13

170. அகநானூறு, குடவாயிற் கீரத்தனார், பா.எ:129:11-14

171. அகநானூறு, நக்கீரனார், பா.எ:249:11-13

172. நற்றிணை, மாமூலனார், பா.எ:75:6-7

173. நற்றிணை, மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், பா.எ:285:3-4

174. நற்றிணை, கபிலர், பா.எ:336:1-4

175. அகநானூறு, வெள்ளாடியனார், பா.எ:29:1-4

176. குறுந்தொகை, ஈழத்துப் பூதன் தேவன், பா.எ:343

177. அகநானூறு, கபிலர், பா.எ:332:1-5

178. கலித்தொகை, நல்லந்துவனார், கடவுள் வாழ்த்து.

179. நற்றிணை, எயினந்தையார், பா.எ:43:1-5

180. அகநானூறு, எயினந்தை மகனார் இளங்கீரனார், பா.எ:3:6-11

181. அகநானூறு, காவிரிப் பூம்பட்டினத்து காரிக்கண்ணனார், பா.எ:285:1-6

182. குறுந்தொகை, பா.எ:321:5-7

183. குறுந்தொகை, கடுந்தோட் கரவீரன், பா.எ:69:1-4

184. நற்றிணை, மோசி கண்ணத்தனார், பா.எ:124:1-3

# இயல்-மூன்று

## *புற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்*

**பு**றம் எனப்படுவது புறத்தே நிகழும் ஒழுக்கம் அது போரும் வெற்றியும் ஈகையும் புகழும் பற்றியதாகும். தமிழ்ச் செவ்விலக்கியத் தொகுதியில் புற நூல்கள் நிறைந்துள்ளன. அவ்வாறாகத் தமிழ்ச் செவ்விலக்கியங்களில்

- பதிற்றுப்பத்து
- புறநானூறு
- பரிபாடல்
- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- மதுரைக்காஞ்சி
- மலைபடுகடாம்
- நெடுநல்வாடை
- களவழிநாற்பது
- முத்தொள்ளாயிரம்

ஆகிய புறநூல்களில் உயிர்களின் இறப்புப் பதிவுகள் கிடைக்கின்றன. மேற்காணும் இலக்கியங்கள் புறம் சார்ந்தவையாதலில் போர் தொடர்பான மரணச் செய்திகள் அதிகமாகக் கிடைக்கின்றன. குறுநில மன்னர்கள் தொடங்கி பெரும்படை கொண்ட வேந்தர்கள் வரைக்கும் இறந்துபட்ட நிகழ்வுகள் இவ்விலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. போர் புரிதலின் பொருட்டு மறவர்களின் இறப்பு, அவர்களின் இல்லப் பெண்களின் வாழா நிலை, வேந்தர்களும் புலவர்களும் வடக்கிருந்து உயிர் நீத்தல் ஆகிய இறப்புச் செய்திகள் புற நூல்களில் கூறப்பட்டுள்ளன. படைக்கருவிகளாகிய விலங்குகளின் மரணங்கள், உணவிற்காக விலங்குகளைப் பலியிடுதல் போன்ற இறப்புச் செய்திகளையும் புற நூல்கள் பதிவு செய்துள்ளன.

'புற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்' எனும் இவ்வியல்

- **போரியல் நிகழ்வுகள்**
- **போரும் ஒப்புமையும்**
- **களம் பாடுதல்**
- **ஆநிரை கவர்தலும் நடுகற்களும்**
- **துணங்கைக் கூத்து**

- இறப்பும் இசையும்

வஞ்சினமும் இறப்பும்

- நலங்கிள்ளியின் வஞ்சினம்
- பூதப்பாண்டியனின் வஞ்சினம்
- நெடுஞ்செழியனின் வஞ்சினம்
- படை வீரனின் சூளுரை

வேந்தர்களின் பீடும் இறப்பும்

- சேரமான் கணைக்கால் இரும்பொறையின் தற்கொலை
- சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்
- சோழன் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி
- இரும்பொறை
- நம்பி நெடுஞ்செழியன்
- சோழன் கரிகாற் பெருவளத்தான்
- நெடுஞ்சேரலாதன், சோழன் பெருவிறற் கிள்ளி
- சோழன் சேட்சென்னி நலங்கிள்ளி
- பெருஞ்சாத்தன்
- நன்னன் சேய் நன்னனின் போர்த்திறம்
- வேந்தர்கள் மன்னர்கள்
- சோழ ஆட்சிக்குரிய ஒன்பதின்மர்
- போரில் கொல்லப்பட்ட ஆட்சியாளர்கள்
- வெளிமான்
- பாரி
- அதியமான் எழினி
- அதியமான் நெடுமான் அஞ்சி
- வல்வில் ஓரி
- வேள் ஆய் அண்டிரன்
- வேள் எவ்வி (அகுதை)
- நன்னன்

வடக்கிருந்து உயிர் நீத்தல்

- கோப்பெருஞ்சோழன்
- பிசிராந்தையார்
- பொத்தியார்
- பெருஞ்சேரலாதன்
- கபிலர்

பெண்டிர் இறப்பு

- சேரமான் கோட்டாம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை (பெருங்கோப்பெண்டு)
- பூதப்பாண்டியன், கோப்பெண்டு

- **மன்னர்களின் மனைவிகள்**
- **மறவர்கள் இறப்பும் மகளிர் நிலையும்**
- **மறவர்களின் பீடு**
- **யானைகளின் போர்த் தொழில்**
- **விருந்தோம்பலுக்குப் பலியிடல்**

**புராண இறப்புச் செய்திகள்**

- **முருகன்**
- **திருமால்**

ஆகிய பல்வேறு தலைப்புகளில் ஆய்வு செய்ய முனைகிறது.

**போரியல் நிகழ்வுகள்**

போரியல் நிகழ்வுகளில் மரணத்திற்குரிய காரணங்களாக மறப்பண்பு, மண்ணாசை, தலைமை வகித்தல், மானக்குறைவு, சிற்றரசிலிருந்து பேரரசாக மாற முயலுதல் இன்னபிறச் சூழல்களைக் கூறலாம். இவ்வாறு களம் கண்ட போர்கள் பலவற்றிலும் அதிகாரம், ஆதிக்கம், வீரம், பேராற்றல் எனும் எண்ணங்களைக் கொண்டு மரணங்கள் பலவும் நிகழ்ந்துள்ளன. பண்டைக்கால வேந்தர்களின் போரியல் மரபானது யாரைக் காக்க வேண்டும் யாரைக் கொல்ல வேண்டும் என்ற வரையறையைக் கைக்கொண்டுள்ளதை

> **“ஆவும், ஆனியல் பார்பன மாக்களும்**
> **பெண்டிரும், பிணியுடை யீரும், பேணித்**
> **தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
> **பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்,**
> **எம் அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்...**[1]

என நெட்டிமையார் முதுகுடுமிப் பெருவழுதியின் போர்த் தொழிலைப் புகழ்ந்து பாடியுள்ள பாடல் வழி அறியலாம். இதைப் போர் அறம் எனச் சுட்டுவர். பசு, பசுவை ஒத்த பார்ப்பனர்கள், பிள்ளைப் பேறு பெறாதவர்கள், பெண்கள், நோயுடையோர் ஆகியோர் பாதுகாப்பான இடம் செல்ல அறிவுறுத்திய பின்னரே போர் தொடங்கும் என்ற செய்தியைப் புலவர் குறிப்பிட்டுள்ளார். அறப் போர் புரியும் பெருவழுதியைக் குறிப்பிடும் புலவர் பார்ப்பனர்களை முக்கியப் பொருளாகக் கொண்டியங்கிய ஓர் சமூகத்தைப் பாடியுள்ளார். இலக்கியங்கள் குறிப்பிடும் பார்ப்பனர்கள் அரசப் பதவி

வகித்தல், தூது செல்லுதல், போர்களை முடிவுக்கு வரவைத்தல் ஆகியவற்றைச் செய்ததாக அறியமுடிகின்றது.

அந்தணர்கள், புலவர்கள், பொருநர்கள் ஆகியோரின் வருகைக்கு அரச வாயிற் கதவுகள் எப்போதும் அடைக்கப்படாது எனவும் பார்ப்பனர்களால் எதையும் சாதித்துக் கொள்ள முடியும் என்பதையும் சிறுபாணாற்றுப்படைப் பாடலானது குறிப்பிடுகின்றது

**...பொருநர்க்கு ஆயினும், புலவர்க்கு ஆயினும்**
**அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்**
**கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன**
**அடையா வாயில்...**[2]

என நத்தத்தனார் நல்லியக் கோடனின் புகழைப் பாடுகிறார். அரசனைச் சந்திக்க அந்தணர்களுக்கு வாயிலோனின் அனுமதி கூடத் தேவையில்லை என்பது அந்தணர்களின் செல்வாக்கை அறியச் செய்கிறது. செல்வம் எனக் கருதப்பட்ட பசுக்களை ஒத்தவர்களாகக் கருதப்படும் பார்ப்பனர்கள் அக்காலத்தில் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்துள்ளனர் எனும் செய்தி இப்போர் முன்னெடுப்பு அறிவிப்பின் வழியாக அறிய முடிகின்றது.

போர் தொடுத்தலால் பகை நாட்டவர் மட்டுமல்லாது தம்முடைய ஆட்சிப் பரப்பிலிருக்கும் மக்களும் இறக்க நேரிடும் என எண்ணிய முதுகுடுமி தம்மக்களைப் பாதுகாப்பான பகுதியில் சேர அறிவுறுத்தினாலும் போரானது நிற்றலில்லை. ஆனால் அந்தணன் ஒருவனால் ஓர் அரசன் போரை நிறுத்தியதை

**...வயலைக் கொடியின் வாடிய மருங்குல்**
**உயவல் ஊர்தி, பயலைப் பார்ப்பான்**
**எல்லிவந்து நில்லாது புக்கு,**
**சொல்லிய சொல்லோ சிலவே, அதற்கே**
**ஏணியும் சீப்பும் மாற்றி,**
**மாண்வினை யானையும் மணி களைந்தனவே...**[3]

என்பதாக மதுரை வேளாசான், அந்தணன் ஒருவனால் போர் நின்றதைக் குறிப்பிட்டுள்ளார். இளம் பருவமுடையவனும் வாடிய இடையினையும் ஊர்ந்து செல்லும் நடையினையுமுடைய அப்பார்ப்பானின் நன்சொல் கேட்ட அரசன் போர் தொடுத்தலை நிறுத்திய செய்தி இப்பாடலடிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் நடைபெற்றால் உயிர்கள் பலவும் இறந்துபட நேரிடும். ஆயினும் தமிழர்கள் போர் புரிதலில் அறத்தைக் கடைபிடித்துளனர். இதனை மற அறம் எனப் புலவர்கள் குறிப்பிடுகின்றனர். அறநூல்களில் முதன்மை நூலான திருக்குறள் அறம் எனப்படுவதை

**அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாந் தரும்[4]**

எனக் குறிப்பிட்டுள்ளது. வள்ளுவர் எந்த உயிரையும் கொல்லாமையை அறமாக வரையறுக்கின்றார். பிற உயிர்களைக் கொல்லுதல் பாவச் செயல் அது வேறுபல துன்பங்களையும் தரும் என்பது இதன் பொருளாகும்.

அக்காலத்தில் போரின் பொது விதிகளில் ஒன்றாக புறமுதுகிட்டு ஓடுபவரையும் படைக்கலனின்றி நிர்க்கதியாய் நிற்பவரையும் தாக்கக் கூடாதெனும் விதி இருந்ததனை புறநானூற்றுப் பாடலில் இடைக்குன்றூர் கிழார்

**...எள்ளி வந்த வம்ப மல்லர்**
**புல்லென கண்ணர் புறத்தில் பெயர**
**ஈண்டு அவர் அடுதலும் ஒல்லான், ஆண்டு அவர்**
**மாண் இழை மகளிர் நாணினர் கழிய,**
**தந்தை தம் ஊர் ஆங்கண்,**
**தெண் கிணை கறங்கச் சென்று, ஆண்டு அட்டனனே.[5]**

எள்ளி வந்த பகைவர்கள் புறமுதுகிட்ட போது அவர்களைத் தாக்காத அரசனைத் தம்முடைய பாடலடிகளில் குறிப்பிட்டுள்ளார். நெடுஞ்செழியனுடன் போர் புரிய வந்த பகைவர்கள் செழியனின் வீரத்தைக் கண்டு ஓடினர். புற முதுகிட்டு ஓடிய பகைவர்களைக் கொல்லாமல் விட்டுவிட்டச் செழியன் அப்பகைவர்களின் நாட்டுக்குப் படையெடுத்துச் சென்று அவர்களின் மனைவிகள் நாணும்படிக்கு போர் அறத்தை நிலைநாட்டிக் கொன்றான் என்று புலவர் கூறியுள்ளார். அறவழியில் போர் புரியும் செய்திகளைப் புற இலக்கியங்கள் குறிப்பிட்டாலும் போரினால் நிகழ்ந்த பல்வேறு மரணங்கள் குறித்தச் செய்திகளும் இங்கு சொல்லப்பட்டுள்ளன.

**போரும் ஒப்புமையும்**

புலவர்கள் பலரும் அரசனின் போர்ச் செயலை உழவுத் தொழிலோடு ஒப்பிட்டுப் பாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். மறவர்களின் வீரத்தைப் பாடும் புலவர்கள்,

மறவர்களின் இறப்பை இகழ்வதான பாடல்களை இயற்றியுள்ளனர். இளஞ்சேட் சென்னியின் போர்த் தொழிலைப் புகழ்ந்து பாடும் பசுங்குடையார்

**...படுபிணப் பல்போர்பு அழிய வாங்கி,**
**எருதுகளிறு ஆக, வாள்மடல் ஓச்சி,**
**அதரி திரித்த ஆள்உகு கடாவின்...[6]**

என இளஞ்சேட் சென்னி யானைகளை எருதாகவும் பகை மறவர்களை நெற்கதிராகவும் அவனது வாளைத் தார்க் கோலாகவும் கொண்டு போர்க்களத்தை ஏர்க்களமாக மாற்றினான். ஆதலால் மறவர்கள் பலரும் நெற்கதிர்களைப் போல மடிந்தனர் எனப் பாடியுள்ளார்.

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடியுள்ள கல்லாடனார், பாண்டியனைப் போர்க்கள உழவன் என வர்ணனை செய்துள்ளார். பாண்டியனை எதிர்த்து வந்த பகைவர்களின் தலைகளை வெட்டிக் களத்தில் வீழச் செய்ததைப் புலவர் உழவுத் தொழிலோடு இணைத்துள்ளதை

**...வில்ஏர் உழவின்நின் நல்இசை உள்ளி,**
**குறைத்தலைப் படுபிணன் எதிர, போர்புஅழித்து**
**யானை எருத்தின் வாள்மடல் ஓச்சி,**
**அதரி திரித்த ஆள்உகு கடாவின்...[7]**

என வில்லை ஏராகக் கொண்டு பகை மறவர்களைப் பாண்டியன் கொன்று குவித்ததைக் குறிப்பிட்டுள்ளார். பகைவர்களின் தலைகள் வெட்டப்பட்டு முண்டங்களாகக் கிடக்கும் பிணக்குவியலை யானைகளை எருதாகக் கொண்டு பிணையலடித்த செய்தி இங்குக் கிடைக்கின்றது. சங்ககாலப் போரியல் வாழ்வானது புகழுக்காக மட்டுமே அரங்கேறியுள்ளமை இங்கு புலப்படுகின்றது.

பதிற்றுப்பத்தில் செங்குட்டுவனைப் பாடிய பரணர், குட்டுவன் எதிரிகளின் கரிய தலைகளை வெட்டி வீழ்த்திய கொடூரத்தை

**...முரசுடைப் பெருஞ் சமத்து அரசு படக் கடந்து,**
**வெவ்வர் ஓச்சம் பெருக, தெவ்வர்,**
**மிளகு ஏறி உலக்கையின், இருந்தலை இடித்து...[8]**

என செங்குட்டுவனின் போர்த் திறத்தைத் தம்முடைய பாடலில் வியந்துள்ளார். பகை மறவர்களின் தலைகளை வெட்டி, மிளகை உரலில் இட்டு இடிப்பதைப் போலக் களத்தில் கிடந்த மறவர்களின் தலைகளை இடித்துச் சிதைத்துள்ளனர்.

மறவர்கள் பலரால் சூழப்பட்ட படைகளையும் அப்படைகளை வீறு கொண்டு வழி நடத்தும் தலைவர்களையும் பல்வேறு இலக்கியப் பாடல்கள் கொண்டாடுகின்றன. பாண்டியன் தன்னுடைய போர்க் குணத்தால் பகை மன்னர்களையும் மறவர்களையும் கொன்றழித்ததை

**"கொடித்தலைத்தார்த் தென்னவன் தேற்றான்போல் நின்றான்**
**மடித்தவராய் சுட்டிய கையாற் – பிடித்தவேற்**
**கண்ணேரா வோச்சிக் களிறணையாக் கண்படுத்த**
**மண்ணேரா மன்னரைக் கண்டு"**[9]

எனப் பெயர் அறியப்படாத புலவர் பாடியுள்ளார். குதிரை ஏறிப் போர் புரிய வந்த பகை மன்னர் மீது பாண்டியன் வேல் எறிந்தான். மார்பில் வேல் பாய்ந்த மன்னன் தான் வந்த குதிரையின் மீது சாய்ந்தான். வேல் பாய்ந்தவர்கள் உயிருடன் உள்ளார்களோ இல்லையோ எனத் தெளியாமல் நின்ற பாண்டியனை இப்பாடலடிகள் சுட்டுகின்றன.

பகை மறவர்களைக் கீழடங்கச் செய்யும் வெற்றியைப் புகழாகக் கொள்ளும் வேந்தர்களின் இயல்பை மிகைப் புனைவுடன் புலவர்கள் பாடியுள்ளனர். யானைகளைப் பாடும் முத்தொள்ளாயிரப் பாடலொன்று

**"மருப்பூசி யாக மறங்கனல் வேல் மன்னர்**
**திருத்தகு மார்போலை யாகத் – திருத்தக்க**
**வையக மெல்லா மெமதென் றெழுதுமே**
**மொய்யிலை வேல் மாறன் களிறு."**[10]

என பாண்டியனின் வீரம் அவனது யானைகளைக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. பாண்டியனின் யானைகள் பகை வேந்தர்களின் மார்பை ஓலையாக எண்ணி 'இவ்வுலகம் முழுவதும் எமதே' எனத் தன் தந்தத்தை எழுத்தாணியாகக் கொண்டு எழுதுவதாகப் புலவர் தற்குறிப்பேற்றிப் பாடியுள்ளார்.

**களம் பாடுதல்**

கீழ்க்கணக்கு நூல்களில் புறத்தை மட்டுமே பாடு பொருளாகக் கொண்டு பாடப்பெற்றுள்ள ஒரே நூல் 'களவழி நாற்பது' ஆகும். ஏர்க்களத்தை ஒப்பிட்டுப் போர்க்களத்தைப் பாடுவது களவழியாகும். இந்நூலைப் பொய்கையார் எனும் புலவர் இயற்றியுள்ளார். களவழி பாடிச் சேரனைச் சிறையிலிருந்து விடுவித்தார் எனும் செய்தியும் உண்டு. நெற்கதிர்களை அறுத்து களத்திற் சேர்ப்பதைப் போல, பகைவர்களின் தலைகளைக் கொய்து களத்திலிடுவதைப் போர்க்களமாகப் பாடுவது களவழி. இதனை

**ஏரோர் களவழி அன்றிக் களவழித்**
**தேரோர் தோற்றிய வென்றியும்**[11]

எனத் தொல்காப்பிய நூற்பா சுட்டுகின்றது.

புற இலக்கியங்கள் வழியாக பண்டைக்கால மக்களில், சிறியவர் முதல் முதியவர் வரைக்கும் போருக்குச் சென்றுள்ளனர் என அறிய முடிகின்றது. பல்வேறு போர்களில் பகைவர்களைக் கொன்று தன்னுடைய புகழை நிலைநாட்டிய முதியவன் ஒருவனின் போர்த்திறத்தை ஓரம்போகியார்

**வருகதில் வல்லே வருகதில் வல் என**
**வேந்துவிடு விழுத்தூது ஆங்கு ஆங்கு இசைப்ப**
**நூலரி மாலை சூடி, காலின்**
**தமியன் வந்த மூதிலாளன்**
**அருஞ் சமம் தாங்கி, முன் நின்று எறிந்த**
**ஒருகை இரும்பிணத்து எயிறு மிறையாகத்**
**திரிந்த வாய்வாள் திருத்தாத்,**
**தனக்கு இரிந்தானைப் பெயர்புறம் நகுமே.**[12]

எனப் புலவர் முதிய போர் வீரனொருவனைப் வியந்து களம் பாடிப் புகழ்ந்துள்ளார். மன்னன் போருக்கு அழைத்த செய்தியைக் கேட்டு மாலை சூட்டித் தனியாக நடந்து வந்த முதியவனொருவன் செருக்கு கொண்ட யானையைக் கொன்று அதன் தந்தங்களின் வழியே நோக்க, எதிரியரில் ஒருவன் புறமுதுகிட்டு ஓட அவனைக் கண்டு ஏளனமாகச் சிரித்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

**ஆநிரை கவர்தலும் நடுகற்களும்**

அகப் பாடல்களில் தலைவன் தலைவி காதல் வாழ்க்கையை, இறந்துபட்ட வீரனுக்கு நடப்பட்ட நடுகல்லோடு ஒப்பிட்டச் செய்திகள் ஏராளம். புறப் பாடல்களில் நடுகற்களைக் குறித்த செய்திகளைப் புலவர்கள் நேரிடையாகத் தந்துள்ளனர். நடுகல் இறந்தவர்களின் நினைவாக நடப்படும் வீரக் கற்கள் எனக் குறிக்கப்படுகின்றன. வீர மரணமடைந்தவர்களுக்கு மட்டுமே அக்காலத்தில் நடுகல் நடப்பட்டுள்ளது. அவ்வாறாக நடப்படும் நடுகல்லை புனித நீராட்டி, இறந்த வீரனின் பெயரும் பீடும் எழுதி, மயிற்பீலிகளும் மாலைகளும் சூட்டி அக்கல்லை மக்கள் வழிபட்டுள்ளனர்.

தன்னுடைய குடியின் கீழ் உள்ள பசுக்கூட்டங்களைக் கவர்ந்து செல்ல வரும் பகைவர்களிடமிருந்து ஆநிரைகளை மீட்டு வந்த வீரனொருவனை

**...அணி மயிற் பீலி சூட்டி, பெயர் பொறித்து**
**இனி நட்டனரே, கல்லும்; கன்றொடு**
**கறவை தந்து பகைவர் ஓட்டிய**
**நெடுந்தகை கழிந்தமை...**[13]

என இளம்பொன் வாணிகனார், தன்னை நாடிவருவோர்க்கு வரையாது வழங்கிய தலைவன் ஆநிரைகளை மீட்டு இறந்தான் எனக் குறிப்பிட்டுள்ளார். கன்றொடு கறவைப் பசுவையும் மீட்ட அவனுக்கு நடுகல் நடப்பட்டு மயிற்பீலி சூட்டி அவனது பீடும் பெயரும் எழுதி அவனது புகழைப் போற்றியுள்ளனர்.

பல்வேறு வேந்தர்களின் குறைவுபடாத வெற்றிக்குப் பாடுபட்டவர்களும் அவனை நாடி வந்து அவனது நிழலில் வாழும் வாழ்க்கையையுடைய புலவர்களும் பரிசில் பெறுவோருடைய வாழ்வும் தலைவன் இறக்க அவனுடனே போயிற்று என்பதை

**...ஊர் நனி இறந்த பார் முதிர் பறந்தலை**
**ஓங்கு நிலை வேங்கை ஒள் இணர் நறு வீப்**
**போந்தை அம் தோட்டின் புனைந்தனர் தொடுத்து,**
**பல் ஆன் கோவலர் படலை சூட்ட**
**கல் ஆயினையே...**[14]

எனக் கருந்தும்பியார் பாடியுள்ளார். பல வெற்றிகளையும் புகழையும் உடைய தலைவன் 'ஆ' மீட்டு இறந்ததைக் கையறுநிலையாக இயற்றியுள்ளார்.

கோப்பெருஞ் சோழனைப் பாடும் பொத்தியார், பெரும் புகழ் கொண்டவனும் தன்னை நாடி வருவோர்க்கு இல்லை என மொழியாதிருப்பவனுமாகிய சோழன் நடு கல்லானான் என்றதனை

**"பலர்க்கு நிழல் ஆகி, உலகம் மீக்கூறி,**
**தலைப் போகன்மையின் சிறு வழி மடங்கி**
**நிலை பெறு நடுகல் ஆகியக்கண்ணும்...**[15]

என புலவர் பாடியுள்ளார். பலருக்கும் அருளும் சோழன் அனைவருக்கும் நிழல் போல விளங்கினான். அவன் இறந்ததால் நடுகல்லானான். சோழன் நடுகல்லாகியும் பொத்தியாருக்கு வடக்கிருக்க இடம் கொடுத்துள்ளான். மேலும் ஆநிரைகள் மீட்டலின் பொருட்டு இறந்தவர்கள், போர் புரிந்து இறந்தவர்கள் ஆகியோரின் நடுகற்கள் குறித்த பதிவுகளானது புறநானூறு 3, 232, 235, 260, 261, 263, 279, 306, 314, 329, 335 ஆகிய பாடல்களிலும் கிடைக்கின்றன.

**துணங்கைக் கூத்து**

கூத்துகளில் ஒன்றான துணங்கைக் கூத்து, பலரும் ஒன்றாகக் கைகோர்த்து வெற்றிக் களிப்புடன் ஆடுவதாகும். இக்கூத்தானது சேரர்கள் விரும்பி ஆடுவது என பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது. புறமுதுகிடாத செருக்குடைய பகை மறவர்களைச் சேர வேந்தன் தன்னுடைய வலிமையால் கொன்று குவித்து துணங்கை ஆடியதை

**ஓடாப் பூட்கை மறவர் மிடல் தப,**
**இரும் பனம் புடையலொடு வான் கழல் சிவப்ப,**
**குருதி பனிற்றும் புலவுக் களத்தோனே,**
**துணங்கை ஆடிய வலம் படு கோமான்...**[16]

என நச்செள்ளையார், அறத்துடன் போர் புரிந்து பகை மறவர்களைக் கொன்று பெரு மகிழ்வுடன் சேர வேந்தன் துணங்கைக் கூத்தாடியதைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை பகை மறவர்களைக் கொன்று துணங்கை ஆடியதை பதிற்றுப்பத்து 8ஆம் பத்தில் காணலாம். உயிர்களைக் கொன்று துணங்கைக் கூத்தாடும் பெருமகிழ்வை கொடுமையின் பேரெல்லை என்றே குறிக்கலாம்.

## இறப்பும் இசையும்

இசை என்றால் புகழ், இப்புவியில் தோற்றம் பெற்றவர்களில் புகழுக்கு மயங்காதார் எவரும் இருக்கவியலாதென்பது பெரியோர் கருத்து. ஒருவர் வாழ்ந்து இம்மண்ணை விட்டுப் பிரிந்த பின் அவர்களின் உடலானது அழியும் 'புகழ்' நிலைத்து நிற்கும். புகழுக்கென்று ஓர் அதிகாரத்தை இயற்றியுள்ள வள்ளுவர் புகழற்ற உடம்பைச் சுமக்கும் நிலம் வசையற்ற வளமான பயன் இல்லாமல் குன்றுவதை

**வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா**
**யாக்கை பொறுத்த நிலம்.**[17]

என்னும் தம்முடைய குறட்பாவில் குறிப்பிட்டுள்ளார். 'தோன்றின் புகழொடு தோன்றுக' என்று பாடிய வள்ளுவரைப் போன்றே புலவர்கள் பலரும் வேந்தர்களைப் புகழோடு இருக்கவும் அதே புகழோடு இறக்கவும் அறிவுறுத்தும் பல்வேறு பாடல்களைப் புற இலக்கியங்களில் இயற்றியுள்ளனர்.

சேரமான் கணைக்கால் இரும்பொறை 'வாளால் புண்பட்டு இறப்பவர்களே வீரசுவர்க்கம் புகுவர்' ஏனையோர் இழிந்த நிலையை எய்துவர் எனப் புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளான். பிறந்த குழந்தை இறக்க அக் குழந்தை வீரத் தன்மை பொருந்தியது என பிணத்தின் உடலில் வாளால் புண் செய்வதை

**குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்**
**ஆள் அன்று என்று வாளின் தப்பார்...**[18]

என அம்மன்னன் பாடியுள்ளான். இதைப் போன்று அதியமானின் புகழைப் பாடியுள்ள அவ்வையார்

**...மறம் கந்தாக நல்அமர் வீழ்ந்த**
**நீள் கழல் மறவர் செல்வுழிச் செல்க! என**
**வாள் போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ...**[19]

அதியமானுடன் போர் புரிந்து இறக்காமல், நோய்வாய்ப்பட்டு இறந்தவர்களை வாளினால் புண்படுத்தியதால் இழிநிலை அடைந்தார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். அதியமானின் புகழைப் பாடும் ஔவையார் அவனுடன் போரிட்டு இறவாமல், யுத்தம் புரியாது இறந்தவர்களின் இறப்பை எள்ளி நகையாடியுள்ளார்.

நிலை பேறில்லாத உலகத்தில் தம்மை நிலை நிறுத்த முயன்றவர் அனைவரும் தம்முடைய புகழை நிலை நாட்டி இறந்ததை

**மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**
**தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே...**[20]

எனப் பெருந்தலைச் சாத்தனார் புறநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். புகழை விரும்புபவர்கள் தம்முடைய இறப்பைக் கூட புகழாக மாற்றுவர் எனவும் புகழைப் பெற்றவர்கள் அழிந்தாலும் அவர்களின் புகழானது அழியாது எனவும் புலவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## வஞ்சினமும் இறப்பும்

'இன்னது செய்கையில் பிழை நேர்ந்தால் இன்ன நிலை அடையக் கடவேன்' என உரைப்பது வஞ்சினக் காஞ்சி ஆகும். போர் புரிதலில் வஞ்சினம் உரைத்தல் சிறப்பிடம் பெறுகின்றது. அரசர்கள் பலர் வஞ்சினம் உரைத்ததை புறப்பாடல்கள் பதிவு செய்துள்ளன.

**நலங்கிள்ளியின் வஞ்சினம்**

பகை நாட்டவரைப் பழி தீர்ப்பதாக, கொடுங்கோல் ஆட்சி புரிந்ததாக, எனது நல்ல திருவடிகளைத் தழுவினால் நாட்டையும் வழங்குவதாக வேந்தர்களுள் பலரும் வஞ்சினம் உரைத்துள்ளனர். நலங்கிள்ளி தன்னுடைய பகைவர்களுக்கு வஞ்சினம் உரைத்துள்ளான்

**"மெல்ல வந்து, என் நல்அடி பொருந்தி,**
**ஈ என இரக்குவர் ஆயின், சீருடை**
**முரசு கெழு தாயத்து அரசோ தஞ்சம்,**
**இன் உயிர் ஆயினும் கொடுக்குவென்**
**--------------------------------------------**

**மைந்துடைக் கழைதின் யானைக்கால் அகப் பட்ட**
**வன்றிணி நீண்முளை போலச், சென்று அவண்**
**வருந்தப் போரேஎன் ஆயின், பொருந்திய**
**தீது இல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்**
**பல்லிருங் கூந்தல் மகளிர்**
**ஒல்லா முயக்கிடைக் குழைக, என் தாரே**[21]

என்ற பாடல் வழியாக அறியலாம். என் நாட்டை விரும்புபவர் மெதுவாக என்னிடம் வந்து, என் பாதங்களைப் பணிந்து, உன் நாட்டைக் கொடு என்று பிச்சையாகக் கேட்டால் முரசு முழங்கும் என் ஆட்சியையும் வேண்டுமானால் என் உயிரையும் அவருக்கு உரிமையாக்குவேன். இந்த நிலத்தில் என் ஆற்றலைப் போற்றாதவன் என்னிடமிருந்து தப்பிச் செல்ல மாட்டான். யானையின் காலடியில் பட்ட மூங்கில் முளைக்குருத்து போல அவனைப் போரிட்டு நசுக்குவேன். 'அவ்வாறு நசுக்காவிட்டால்' என் மாலை நெஞ்சில் காதல் இல்லாமல் ஒப்புக்குத் தழுவும் கூந்தல் பகட்டுக்காரியின் தழுவுதலில் குழைவதாகுக என வஞ்சினம் உரைத்துள்ளான். பகைவர்கள் இரந்து கேட்டால் தன்னுயிரை பிச்சையாகத் தரும் விருப்பத்தையுடைய கிள்ளியின் வஞ்சினம் இங்கு நோக்கத்தக்கது.

**பூதப்பாண்டியனின் வஞ்சினம்**

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனிடம், சிங்கம்போலச் சினத்தையும் உறுதியான உள்ளத்தையும் வலிமைமிக்க படையையுமுடைய வேந்தர் ஒன்று கூடி போர் புரிய முனைந்தனர். தன்னிடம் போரிட வந்த வேந்தரைப் புறங்காட்டி ஓடச் செய்வேன் எனப் பூதப்பாண்டியன்

**...அவரை**
**ஆர் அமர் அலறத் தாக்கி, தேரொடு**
**அவர் புறங்காணேன் ஆயின் – சிறந்த**
**பேர் அமர் உண்கண் இவளினும் பிரிக;**
**அறன் நிலை திரியா அன்பின் அவையத்து,**
**திறன் இல் ஒருவனை நாட்டி, முறை திரிந்து**
**மெலிகோல் செய்தேன் ஆகுக...**[22]

என வஞ்சினம் உரைத்துள்ளான். போரிட வந்த வேந்தரைப் பொருதற்கரிய போரில் அவர்கள் அலறுமாறு போரிட்டு, அவர்களை அவர்களுடைய தேருடன் 'புறமுதுகு காட்டி ஓடுமாறு செய்யேனாயின்' மையணிந்த கண்களையுடைய என் மனைவியிடமிருந்து நீங்குவேனாக. அறநிலை மாறாத என் அரசவையில் தகுதியற்ற ஒருவனை இருத்திக் கொடுங்கோல் செய்வேனாக. என் கண் போன்ற நட்பினையுடைய நண்பர்களோடு கூடிக் களிக்கும் மகிழ்ச்சியை இழந்தவனாவேனாக. மறு பிறவியில்

மக்களைப் பாதுகாக்கும் பெருமைமிக்க பாண்டியர் குடியில் பிறவாதவனாக எனப் பூதப்பாண்டியன் வஞ்சினம் உரைத்ததை அறியலாம்.

**நெடுஞ்செழியனின் வஞ்சினம்**

பாண்டிய நெடுஞ்செழியனை இளையவன் என எண்ணிய பகைவர்கள் தலையாலங்கானம் எனுமிடத்தில் ஒன்று கூடிப் போரிட வந்தனர். நெடுஞ்செழியனின் வலிமையை அறியாமல், தன்னுடன் போரிட வந்தவர்களை அழிப்பேன் என நெடுஞ்செழியன்

**நகுதக் கனரே, நாடு மீக் கூறுநர்;**
**இளையன் இவன் என உளையக் கூறிப்**
**படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்**
**நெடுநல் யானையும், தேரும், மாவும்,**
**படைஅமை மறவரும், உடையம் யாம் என்று**
**உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம் செருக்கிச்**
**சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை**
**அருஞ்சமஞ் சிதையத் தாக்கி, முரசமொடு**
**ஒருங்கு அகப் படேஎன் ஆயின்; பொருந்திய**
**என் நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது,**
**கொடியன்எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்,**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக...**[23]

என வஞ்சினம் உரைத்துள்ளான். இளையவன் என எள்ளியவர்களை புறமுதுகிட்டு ஓடச் செய்த செழியனின் வஞ்சினம் இங்குப் பாடப்பெற்றுள்ளது. நெடுஞ்செழியன் அங்ஙனம் தன்னை இகழ்வாகப் பேசிய வேந்தர்களை அழிக்காவிட்டால் 'குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக' என வஞ்சினம் கூறி, தன்னை எதிர்த்து வந்த பகைவர்களை வெற்றி கொண்டதால் தலையாலங்கானத்து செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் என இவன் அழைக்கப்படுகிறான்.

**படை வீரனின் சூளுரை**

போர்க்களத்தில் வீரனொருவன் சூளுரைத்துப் போர் புரிந்ததைப் புறநானூறு வழியாகச் சாத்தந்தையார் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**...ஓடல் செல்லாப் பீடுடையாளர்**
**நெடு நீர்ப் பொய்கைப் பிறழிய வாளை**

**நெல்லுடை நெடு நகர்க் கூட்டுமுதல் புரளும்**
**தண்ணடை பெறுதல் யாவது? படினே,**
**மாசு இல் மகளிர் மன்றல் நன்றும்,**
**உயர்நிலை உலகத்து...**[24]

என வீரனொருவன், பகைவர்களின் படை தூரத்தில் வருவதைக் கண்டு, புறமுதுகிட்டு ஓடாத வீரம் பொருந்திய மறவர்களே, நெல் கிட்டும் மருத நிலம் கிடைத்து என்ன பயன், போர்க்களத்தில் இறந்தால் விண்ணுலகு அடைந்து, மகளிரை மணந்து பேரின்பம் பெறுவர் எனச் சூளுரைத்துள்ளான்.

இதனைப் போன்றே திருக்குறளில், வீரனொருவன் தன்னுடைய அரசனின் வலிமையை

**என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை**
**முன்னின்று கல்நின் றவர்.**[25]

என வள்ளுவர், வீரனொருவன் எதிரிகளைப் பார்த்து என்னுடைய தலைவன் முன் போர்க்களத்தில் நிற்காதீர்கள் ஏனென்றால் என் தலைவனிடம் போர் புரிந்து வீர மரணம் அடைந்து கல்லாக நின்றோர் பலர் எனச் சூளுரைத்ததைக் குறிப்பிட்டுள்ளார். மேலும்,

போர்க்கள வீரர்கள் தாங்கள் உரைத்த சூள் தப்பாதபடி போர் செய்து வீர மரணம் அடைவர். அவ்வாறாகப் போர் புரியச் செல்லும் வீரர்கள் சூளுரைத்தும் வஞ்சினம் கூறியும் தங்களின் சாவை விரும்பி ஏற்பதை

**இழைத்த திகவாமைச் சாவாரை யாரே**
**பிழைத்த தொறுக்கிற் பவர்.**[26]

எனப் புலவர், சாவைத் துணிந்து ஏற்கும் வீரம் மறவர்களிடத்தில் உள்ளதாகவும் வீரர்கள் பலரும் சூளுரைத்து மரணத்தைத் தாமாக ஏற்கும் செய்தியையும் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

### வேந்தர்களின் பீடும் இறப்பும்

'வேந்தர்களின் இறப்பு புகழுக்கானது' எனப் பல்வேறு புலவர்கள் தங்களுடையப் பாடல்களின் வழியாகக் குறிப்பிடுகின்றனர். வேந்தர்கள் பலரும் புகழோடு

இறந்ததாகவும் அவர்களின் இறப்பைப் பிறர் புகழ்ந்துரைக்க வேண்டும் என்பதானச் செய்திகளையும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

வேந்தர்கள் போர் புரிந்து மரணமடைந்த செயல்களைக் கொண்டும் தங்களின் புகழைத் தக்கவைத்துக் கொள்ளத் தங்களின் உயிரை மாய்த்துக் கொண்ட நிகழ்வுகளையும் பீடாக எண்ணிய புலவர்கள் 'வேந்தர்களின் இறப்பை அடைமொழியில் புனைந்துள்ளனர்'. அரசர்களின் பெயர்களின் முன் அடைமொழியாக அவ்வரசன் இறந்த நிலை குறிப்பிடப்படுவது தமிழர் மரபாக இருந்தது எனலாம். (எ.டு) இதை கல்வெட்டுகளில் மெய்கீர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

பலரையும் ஆதரித்தப் பெரு வேந்தர்கள் இறந்ததால் அவர்களைச் சார்ந்திருந்த அந்தணர்கள், புலவர்கள், பாணர்கள், விறலிகள் யாவரும் வறுமைநிலை அடைந்தச் செய்திகளானது புற நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தலைமகன் இறப்ப அவன் பெருமை கூறி வருந்தி நின்ற ஏராளமான பாடல்கள் பலவும் புற இலக்கியங்கள் வழியாகக் கிடைக்கப் பெறுகின்றன.

**சேரமான் கணைக்கால் இரும்பொறையின் தற்கொலை**

சோழன் செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையினுடன் போர் புரிந்து இரும்பொறையைச் சிறையிலடைத்தான். நீர் வேட்கை கொண்ட இரும்பொறை தண்ணீர் கேட்ட பொழுது, பகைவர்களால் கொடுக்கப்பட்ட நீர் இழிவாகவும் தாமதமாகவும் கிடைத்ததால் அதனைக் குடிக்காது தன்னுயிரை மாய்த்துக் கொள்வதை

**...தொடர்ப் படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய**
**கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்,**
**மதுகை இன்றி, வயிற்றுத் தீத் தணிய,**
**தாம் இரந்து உண்ணும் அளவை**
**ஈன்மரோ இவ் உலகத்தானே?**[27]

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன. நாயைப் போன்று சங்கிலியால் பூட்டித் தன்னை துன்புறுத்தும் பகைவர்களிடம் தன்னுடைய தாகம் தீர்க்க வேண்டி நீர் கேட்கின்றான். பகைவர்கள் இரும்பொறையை இழிவாக எண்ணி நீரைத் தாமதித்துக் கொடுத்தனர். பகைவர் உதவியால் சிறிது நீரினை 'இரந்துண்னேன்' என்றும் நெஞ்சில் உரம் இல்லாமல் என் வயிற்றுப்பசி அடங்க நீர் கேட்டு உண்ணும் நிலைக்கு ஆளானேன்.

இந்த ஈன நிலையைப் பெற வேண்டுமா என்றுரைத்த இரும்பொறை உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தான். இதனைப் போன்றே அற நூலான இனியவை நாற்பதில், இழிந்த நிலையான இரந்து வாழாமையை

**அதர் சென்று வாழாமை ஆற்ற இனிதே,**
**குதர் சென்று கொள்ளாத கூர்மை இனிதே,**
**உயிர் சென்று தாம் படினும், உண்ணார் கைத்துஉண்ணாப்**
**பெருமைபோல் பீடு உடையது இல்.**[28]

எனப் பூதஞ்சேந்தனார் மேற்காணும் அடிகளின் வழியாகச் சுட்டுகின்றார். பல ஊர்ச் சென்று இரந்து வாழாமை இனிதென்கிறார். பசித்துன்பத்தால் உயிரை இழக்க நேர்ந்தாலும் தகாதவர் தரும் உணவை உண்ணாதிருத்தல் போன்ற சிறப்பு வேறு இல்லை எனக் குறிப்பிடுகின்றார் புலவர். மானத்திற்கு இழுக்கு ஏற்படுவதால் உயிரை மாய்த்தலும் வீரமாகக் கொள்ளப்படுகின்றது.

**சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்**

சங்க இலக்கியங்கள் வேந்தர்கள் இறந்த இடத்தின் பெயரைக் கொண்டே அவர்களைக் குறித்தச் செய்திகளைப் பதிவு செய்கின்றது. கிள்ளி வளவன் போர் புரிந்து இறந்த இடத்தின் பெயரைக் கொண்டே அவனது இறப்பின் பெருமை பாடப் பெற்றுள்ளது. கிள்ளிவளவன் இறந்ததும் அவனது இறப்பின் புகழை நப்பசலையார்,

**செற்றன்று ஆயினும், செயிர்த்தன்று ஆயினும்,**
**உற்றன்று ஆயினும், உய்வுஇன்று மாதோ;**
**பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி**
**இரந்தன்றாகல் வேண்டும் – பொலந்தார்**
**மண்டு அமர் கடக்கும் தானைத்**
**திண் தேர் வளவற் கொண்ட கூற்றே**[29]

எனக் கிள்ளியின் மரணத்தைக் குறிப்பிடுள்ளார். வளவன் மக்களுக்குப் பிடித்தமானவன். மானுட உயிரைப் பற்றிச் செல்லும் கூற்றுவன், வளவனிடம் இரந்து வேண்டி அவனது அரிய உயிரைப் பெற்றிருப்பான் எனப் புலவர் கிள்ளியின் மரணத்தைப் புகழ்ந்துரைத்துள்ளார்.

வளவன், கூற்றுவனின் பசித்தீயைப் போக்க பல போர்கள் நடத்தி பகைவர்களைக் கொன்று உண்ணத் தந்தான். வளவனை நீ கொன்றதால் இனி உன் பசியை யார் தீர்ப்பார் என்பதை ஆடுதுறை மாசாத்தனார்

**...பெரும்பூண்**
**வளவன் என்னும் வண்டு மூசு கண்ணி**
**முனையோர் கொண்டனை ஆயின்,**
**இனியார், மற்று நின் பசி தீர்ப்போரே...**[30]

எனக் கூற்றுவனைப் பாடியுள்ளார். கண்ணிற்குப் புலப்படாத கூற்றுவனின் பசியைப் போக்கும் வளவன், தன்னை நாடி வருவோரின் பசித்தீயைத் தீர்ப்பான் என்பது புலவரின் நம்பிக்கை. மேலும் வளவனின் இறப்பானது குளமுற்றம் எனும் ஊரில் நடந்ததாக கா.அப்பாதுரை

> **“இரண்டாம் காரியாற்றுப் போருக்குப் பின் கிள்ளிவளவன் பாண்டியரையும், சேரரையும் அவர்கள் நாட்டுக்குத் துரத்திச் சென்றிருக்க வேண்டும். சேர நாட்டில் குளமுற்றம் என்ற இடத்தில் நிகழ்ந்த ஒரு போரில் அவன் உயிர் இழந்தவனாகலாம். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்று பின்னாளில் அவனுக்கு வழங்கிய பெயர் இதனைக் காட்டுகிறது”**[31]

என தென்னாட்டுப் போர்க்களங்கள் எனும் தம்முடைய நூலில் குறிப்பிட்டுள்ளார். வள்ளல் தன்மை பொருந்திய வளவனை இழந்த நாடும், மக்களும் மிகுந்த துன்பம் அடைந்தனர் எனப் பல்வேறு புலவர்கள் கிள்ளிவளவனுக்காகப் பாடல்களைப் பாடியுள்ளனர். வளவன் இறக்க அவனது பெருமைகளை பாடியதாகப் புறநானூற்றில் 34ஆம் பாடல் தொடங்கி 42ஆம் பாடல்களிலும் இதனைத் தொடர்ந்து 46, 69, 70, 173, 228, 386, 393, 397 ஆகிய பாடல்களிலும் வளவனின் இறப்பு குறித்தான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

### சோழன் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி

இன்றைய தமிழகத்தின் வட பகுதியில் அமைந்துள்ள காரியாற்றுப் பகுதியில் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் போர் மூண்டது. இப்போரானது ஏழு நாட்கள் நடைபெற்றுள்ளது. இறுதியாக நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் மற்போர் புரிந்ததில்

நெடுங்கிள்ளி மரணத்தைத் தழுவினான். முன்னதாக இவர்களின் போரை நிறுத்த முயன்ற கோவூர் கிழார்

**...நின்னொடு**
**பொருவோன் கண்ணியும் ஆர் மிடைந்தன்றே**
**ஒருவீர் தோற்பினும், தோற்ப நும் குடியே;**
**இருவீர் வேறல் இயற்கையும் அன்றே...**[32]

எனக் குறிப்பிட்டுள்ளார். சோழர் குடியைச் சார்ந்த நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் போர் புரிய, ஒரே குடியைச் சார்ந்தவர்கள் போர் புரிவதால் தங்களின் குடிக்கு இழுக்கு எனக் கூறி, புலவர் அவர்களின் போரை இடை நிறுத்தியுள்ளார். இரு வேந்தர்களையும் குறித்தச் செய்திகளானது புறநானூறு 31, 32, 33, 44, 46, 47, 68, 73, 75, ஆகிய பாடல்களிலும் கிடைக்கின்றன.

இருவருக்கும் ஏற்பட்ட போரில் நெடுங்கிள்ளி இறந்த செய்தியை தென்னாட்டுப் போர்க்களங்கள் எனும் நூலில் கா.அப்பாதுரை

**“ஏழு நாட்கள் வரை இருதிறத்தாரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமலே கடும்போர் நடத்தினர். இறுதியில் நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் நேருக்கு நேராக நின்று மற்போர் புரிந்தனர். இதன் பயனாக நெடுங்கிள்ளி களத்தில் சாய்ந்தான். பின்னாளில் இப்போர் காரணமாகவே அவன் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி என்று குறிக்கப்பட்டான்”**[33]

என நெடுங்கிள்ளி துஞ்சிய இடத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வேந்தர்களின் இறப்பைக் குறிப்பிடும் போது அவர்கள் இறந்த இடத்தையும் சேர்த்துக் கூறும் மரபு அக்காலப் புலவர்களிடையே இருந்துள்ளது. வெவ்வேறு இடங்களில் மரணமடைந்த அரசர்களின் பெயர்களுக்கு முன்னாள் இடத்தின் பெயரையும் குறிப்பிட்டுள்ளமை அவர்களுக்கான பீடாக அமைந்துள்ளது. இவற்றுள் இறப்பினாலும் அவர் கொண்ட வெற்றியினாலும் வேந்தர்கள் சிலர் அடைமொழிகளால் குறிக்கப்பட்டுள்ளனர்

- **பாண்டியன் கடலுள் மாய்ந்த பெருவழுதி**
- **பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி**
- **பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்**
- **பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி**
- **சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்**

- **பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்**
- **சேரன் சிக்கிற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதன்**
- **சோழன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி**

ஆகிய வேந்தர்களின் இறப்பு வெறும் பெயரளவினில் மட்டுமே இலக்கியங்களில் உள்ளன. வெற்றியினாலும் இறப்பினாலும் பெற்ற அடைமொழிகளைக் கொண்டு இவர்கள் அழைக்கப் பெற்றுள்ளார்கள். இவர்களைக் குறித்தான பாடல்கள் எதுவும் புலவர்களால் இயற்றப்படவில்லை எனத் தெரிகின்றது. அல்லது கால வெள்ளத்தில் மறைந்தோ அழிந்தோ போயிருக்கலாம்.

### இரும்பொறை

சேரமான் யானைக் கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை இன்ன நாளில் இறப்பான் எனக் கூடலூர் கிழார் இரும்பொறையின் இறப்பு நிமித்தங்களாகச் சிலவற்றைக் குறிப்பிடுகின்றார். இரும்பொறை மரணமடையப்போவதை

**...எழு நாள் வந்தன்று, இன்றே**
**மைந்துடை யானை கைவைத்து உறங்கவும்,**
**திண் பிணி முரசம் கண் கிழிந்து உருளவும்**
**காவல் வெண்குடை கால் பரிந்து உலறவும்,**
**கால் இயற் கலி மாக் கதி இல வைகவும்,**
**மேலோர் உலகம் எய்தினன்...**[34]

எனப் புலவர் இரும்பொறை இறந்ததை இப்பாடலடிகளில் குறிப்பிடுகின்றார். பங்குனி மாதத்தில் நட்சத்திரம் வீழ்ந்தால் இராச பீடை எனவும் அந்நட்சத்திரம் ஏழாம் நாள் வீழ்ந்ததும் யானையானது தன்னுடைய முன்கை வைத்து இறந்துபட்டது. முரசம் கிழிந்து உருளுதல், வெண்கொற்றக் குடையும் கால் ஒடிந்து விழுதல், குதிரைகளின் இயக்கம் தடைபடுதல் இவையனைத்தும் தீநிமித்தங்கள் எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

இறக்கும் தருவாயில் இருந்த இரும்பொறையின் மரணத்தைப் புலவர் முன்கூட்டியே கணக்கிட்டுள்ளார். சகுனம் பார்க்கும் முறைகளும் இறைவழிபாட்டு நம்பிக்கைகளும் அக்காலத்தில் பெருகி இருந்துள்ளன. தீநிமித்தங்களைக் கூறியுள்ள புலவர், ஏழாம் நாள் வேந்தன் இறப்பான் என்ற உறுதிக்கு ஏற்ப தவறாமல் இரும்பொறை இறந்தான். அரசனின் மரணத்தை முன்னறியச் செய்யும் நிமித்தங்களும்

இங்குக் கூறப்பட்டுள்ளன. மேலும் இரும்பொறை புறநானூற்றில் 74ஆம் பாடலைப் பாடியுள்ளது கூடுதல் தகவல்.

**நம்பி நெடுஞ்செழியன்**

நம்பி நெடுஞ்செழியன் தன்னுடைய நாட்டு மக்களுக்கு நன்மைகள் பலவற்றையும் செய்த வேந்தன். அறத்தில் சிறந்தவனான நம்பி தன்னை எதிர்த்து வரும் படைகள் பலவற்றையும் வென்றான். தன்னை நாடி வந்தவர்களின் பசித்துன்பத்தைப் போக்கியவனான நம்பி நெடுஞ்செழியன் இறந்ததை

**...ஆங்குச்**
**செய்ய எல்லாம் செய்தனன் ஆகலின்**
**இடுக ஒன்றோ! சுடுக ஒன்றோ!**
**படு வழிப் படுக இப்புகழ் வெய்யோன் தலையே!**[35]

எனப் பேரெயின் முறுவலார் நம்பியின் மரணத்தைக் குறிப்பிடுள்ளார். முடிவேந்தர் சபையில் பெரும் புகழ் தோன்றச் செய்தவனும் இவ்வுலகிற்குச் செய்ய வேண்டியவனவற்றைச் சிறப்புற செய்தவனுமான நம்பி இறந்தான். உயிரற்ற நம்பியின் உடலில் உள்ள தலையை வாளால் பிளந்தாலென்ன, தீயினால் சுட்டாலென்ன எனப் புலவர், அவனில்லாத போது இங்கு புகழுக்கும் வேலையில்லை என்பதை குறிப்பிட்டுள்ளார். இருக்கும் வரை வெற்றியும் இறந்த பின் புகழும் நிற்றல் வேண்டும் என்பது இங்கு குறிப்பு.

**சோழன் கரிகாற் பெருவளத்தான்**

கல்லணை தந்தவன், 'முறைநற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த' என முதியவர் போல நரைமுடி தரித்து நீதி வழங்கியவன் கரிகாற் பெருவளத்தான். இவையனைத்தும் இன்றளவும் தமிழ்க் குடியினரால் மறக்க முடியாத நிகழ்வாகும். கரிகாற் பெருவளத்தான் இறந்ததைக் கருங்குழலாதனார் பாடியுள்ளார்

**...அறிந்தோன் மன்ற அறிவுடையாளன்**
**இறந்தோன் தானே; அளித்து இவ் உலகம்!**
**--------------------------------------------------**
**பூ வாட் கோவலன் பூவுடன் உதிரக்**
**கொய்து கட்டு அழித்த வேங்கையின்,**
**மெல் இயல் மகளிரும் இழை களைந்தனரே.**[36]

எனப் புலவர் குறிப்பிடுகின்றார். பெருவளத்தான் இயற்கையாக இறந்திருக்கலாம், இன்ன காரணத்தினால் இறந்தான் என புற இலக்கியம் குறிப்பிடவில்லை. கோவலர்கள் ஆநிரைகளின் பசித்துன்பத்தைப் போக்க வேங்கை மரத்தின் கிளைகளை முறிக்கும் போது அம்மரத்தின் பூக்கள் வீழ்வதைப் போல கரிகாலனை இழந்த உரிமை மகளிர் அணிகலன்களைக் களைந்து வருந்தியதை இப்பாடலடிகள் வெளிக் கொணர்கின்றன.

**நெடுஞ்சேரலாதன், சோழன் பெருவிறற் கிள்ளி**

குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் அறவழிப் போர் புரிந்து இருவரும் இறந்துபட்டனர்.

**வருதார் தாங்கி, அமர்மிகல் யாவது?**
**பொருதுஆண்டு ஒழிந்த மைந்தர் புண்தொட்டு,**
**குருதிச் செங்கைக் கூந்தல் தீட்டி,**
**நிறம்கிளர் உருவின் பேஎய்ப் பெண்டிர்**
**எடுத்துஏறி அனந்தற் பறைச்சீர் தூங்கப்,**
**பருந்துஅருந் துற்ற தானையொடு, செருமுனிந்து,**
**அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்**
**தாம்மாய்ந் தனரே...[37]**

என கழாத்தலையார் பாடியுள்ளார். இரு வேந்தர்களின் படையழிந்த இறுதிப் போரில் நெடுஞ்சேரலாதனும் பெருவிறற் கிள்ளியும் போர் புரிந்து தங்களின் உயிரை மாய்த்துள்ளனர். செங்கோல் ஆட்சி புரிந்த இரு பெரும் வேந்தர்களின் வெண்கொற்றக் குடைகளும் வீழ்ந்தன.

**சோழன் சேட்சென்னி நலங்கிள்ளி**

சோழன் நலங்கிள்ளி தன்னுடைய படைத்திறம் கொண்டு பகைவரை அழிக்கும் திறம் கொண்டவன். பகைவர்களின் முரசும் சங்கும் அதன் தொழிலை இழக்கும்படிக்கு அவர்களைக் கொன்று தன்னுடைய புகழை நிலை நாட்டினான்.

**...கள்ளி போகிய களரிஅம் பறந்தலை**
**முள்ளுடை வியன் காட்டதுவே- நன்றும்**

**செட்சென்னி நலங்கிள்ளி கேட்குவன் கொல்?**[38]

என நலங்கிள்ளி இறந்த செய்தியை ஆலத்தூர் கிழார் தம்முடைய பாடலில் குறிப்பிட்டுள்ளார். பேராற்றல் கொண்ட நலங்கிள்ளி போர் புரிந்து பகைவர்களின் சங்குகளை ஒலிக்காமல் செய்தான். சங்கு ஒலி கேட்டு போருக்குப் புறப்படும் நலங்கிள்ளி இறந்தான். பள்ளி எழுச்சிக்காக ஒலிக்கும் சங்கின் சத்தம் கேட்டு எழாமற் போனான் எனப் புலவர் புலம்பியுள்ளார்.

**பெருஞ்சாத்தன்**

ஒல்லையூர் நாட்டு வள்ளலான சாத்தன் இறந்ததால் அவனது மக்களும் பாணர்களும் விறலிகளும் வறுமை நிலையை அடைந்தார்கள். அவன் இறந்த பின்பு நாடு பெருந்துயரம் கொண்டதை

**இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;**
**நல்யாழ் மருப்பின்மெல்ல வாங்கிப்**
**பாணன் சூடான்; பாடினி அணியாள்;**
**ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த**
**வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்னற**
**முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே?**[39]

எனக் குடவாயிற் கீரத்தனார் குறித்துள்ளார். தன்னை நாடி வருவோருக்கு வரைவில்லாது கொடுக்கும் பண்பாளன் இறந்தான். சாத்தன் இருந்த பொழுது அனைவரும் மகிழ்ச்சியாகச் சூடிய முல்லை தலைவன் இறந்த பின்பு பூத்துள்ளது. அதனால் எவ்விதப் பயனுமில்லை என்பதைப் புலவர் குறிப்பிட்டுள்ளார். இப்பாடல் மட்டுமன்றி தொடித்தலை விழுத்தண்டினார் புறநானூறு 243ஆம் பாடலில் சாத்தனின் புகழைப் பாடியுள்ளார்.

**நன்னன் சேய் நன்னனின் போர்த்திறம்**

பகை மறவர்களின் நாடானது எத்துணைத் தொலைவிருந்தாலும் நெடும் பயணம் மேற்கொண்டு அவர்களைக் கொன்று குவித்த நன்னன் சேய் நன்னனை கௌசிகனார் புகழ்கிறார்.

**...இகந்த ஆயினும், தெவ்வர் தேஎம்**
**நுகம் படக் கடந்து, நூழிலாட்டி...**[40]

என நன்னனின் புகழைப் பாடியும் பகை மறவர்கள் இறந்துபட்டதையும் குறிப்பிட்டுள்ளார். ஆக சங்ககால ஆட்சியாளர்கள் தங்களின் போர்த்திறத்தால் பகை வீரர்களைக் கொன்றும் தங்களின் இன்னுயிரை இழந்தும் புகழை நாட்டியுள்ளனர்.

**வேந்தர்கள் மன்னர்கள்**

தலையாலங்கானத்தில் நடைபெற்ற பெரும் போரில், நெடுஞ்செழியனால் நெடுநில வேந்தர்கள் இருவரும், குறுநில மன்னர்கள் ஐவரும் இறந்ததை மாங்குடி மருதனார்

**…கால் என்னக் கடிது உராஅய்,**
**நாடுகெட எரிபரப்பி,**
**ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து,**
**அரசுபட அமர் உழக்கி**
**முரசு கொண்டு களம் வேட்ட**
**அடுதிறல் உயர்புகழ் வேந்த![41]**

எனக் குறிப்பிட்டுள்ளார். பாண்டியன் நெடுஞ்செழியனுடன் போர் புரிந்த, பெரு வேந்தர்களான சேரன், செம்பியன் ஆகியோரையும் குறுநில மன்னர்களான திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் ஆகியோரையும் போர்க்களத்தில் கொன்று வாகை சூடினான். பெயர் அறியப்பட்ட எழுவரின் இறப்பை இதன் வழியாக புற இலக்கியங்கள் பதிவு செய்துள்ளதை அறிய முடிகின்றது. தலையாலங்கானத்தில் பாண்டியன் இவ்வெழுவரையும் வென்றதால் தலையாலங்கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் எனப் பின்னாளில் அழைக்கப்பட்டான்.

**சோழ ஆட்சிக்குரிய ஒன்பதின்மர்**

சோழர் குடியில் தோன்றி அரசுக்கு உரியோராய் நின்ற ஒன்பதின்மரும் சேரன் செங்குட்டுவனின் ஆட்சிக்குத் தடையாக இருந்தனர். சேரன் தன்னுடைய திறத்தால் அவனுக்குத் தடையாக இருந்த சோழர் குடியோர் ஒன்பதின்மரைப் போர்க்களத்தில் கொன்றதை

**…வெந் திறல்**
**ஆராச் செருவின் சோழர் குடிக்கு உரியோர்**

**ஒன்பதின்மர் வீழ, வாயில்புறத்து இறுத்து,**
**நிலைச் செருவின் ஆற்றலை அறுத்துக்**
**கெடல்அரும் தானையொடு**
**கடல்பிறக்கு ஓட்டிய செங்குட்டுவனை...**[42]

எனப் பரணர் பதிற்றுப்பத்து பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். நேரிவாயில் என்ற ஊரில் தங்கிய குட்டுவன் தன்னை எதிர்த்து வந்தவர்களை அழித்து வெற்றி கொண்டான் என்பது இங்கு புலப்படுகின்றது. இந்நிகழ்வானது சேரனின் படைச் செருக்கை வெளிப்படுத்துகின்றது.

**போரில் கொல்லப்பட்ட ஆட்சியாளர்கள்**

தன்னை நாடி வரும் இரவலர்களுக்கு கைம்மாறு கருதாமல் மாரி போல் வாரி வழங்குபவர்களை வள்ளல்கள் என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வள்ளல் தன்மை பொருந்தியவர்கள் பிறருக்கு வரையறையின்றி கொடுத்தலால் உலகம் போற்றும் புகழ் பெற்றுள்ளனர். தமிழ்ச் செவ்விலக்கியங்கள், வள்ளல்களில் ஒருசிலரின் இறப்புச் செய்திகளை மட்டுமே பதிவு செய்துள்ளன. அவை வருமாறு

**வெளிமான்**

வள்ளல் தன்மை பொருந்திய வெளிமான், தன்னை நாடி வருவோருக்கு பரிசில்கள் பல வழங்கி சிறப்பிப்பதில் புகழ் மிக்கவன். அவனது இறப்பு குடி மக்களுக்கு பெரும் துன்பத்தை அளித்தது. அதை

**...ஊழின் உருப்ப எருக்கிய மகளிர்**
**வாழைப் பூவின் வளைமுறி சிதற,**
**முது வாய் ஒக்கற் பரிசிலர் இரங்க,**
**கள்ளி போகிய களரிஅம் பறந்தலை,**
**வெள்வேல் விடலை சென்று மாய்ந்தனனே.**[43]

எனப் பெருஞ்சித்திரனார் இங்கு பதிவு செய்துள்ளார். இப்பாடலில் வெளிமானை 'விடலை' எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் அவனது இளமைப் பருவத்தில் போர் புரிந்தோ நோய்வாய்பட்டோ அவன் இறந்திருக்கலாம். வரையாது கொடுக்கும் வெளிமானிடம் பரிசில் பெறச் சென்ற பெருஞ்சித்திரனாருக்கு அவனது மரணம் ஏமாற்றத்தை அளித்தது.

**பாரி**

கடையேழு வள்ளல்களில் வெகுவாகச் சிறப்பித்துக் கூறப்படுபவன் வள்ளல் பாரியாவான். முல்லைக்குத் தேர் கொடுத்தவன், தன்னை நாடி வருபவர்க்கு இல்லை எனச் சொல்லாத இரக்கமுடையவன் எனப் புலவர் கபிலரால் பெரிதாக வருணிக்கப்பட்டவன். இப்பண்புகளுடைய பாரி வள்ளல் இறந்ததை அவனுடைய பெண் மக்களே தங்கள் பாடலில் பதிவு செய்துள்ளனர்.

**அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்;**
**எந்தையும் உடையேம்; எம்குன்றும் பிறர்கொளார்;**
**இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்,**
**வென்றுஎறி முரசின் வேந்தர்எம்**
**குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே![44]**

எனப் பாரி மகளிர் தந்தை இறந்த துக்கத்தைப் பாடியுள்ளனர். பாரியை மூவேந்தர்களும் போர் புரிந்து கொன்றனர். பாரியும் அவனது வள்ளல் தன்மை கொண்ட குணமும் குறைவுபடாத வளங்களைக் கொண்ட அவனது பறம்பு மலையும் மூவேந்தர்களை உறுத்துவனவாயிற்று. பாரியின் புகழை அழிக்க முயன்ற வேந்தர்கள் அவனைக் கொன்று தங்களின் பெருமையை நிலைநாட்டியுள்ளது இங்கு புலனாகிறது. பாரி வேந்தன் இறந்ததும் அவனது மகளிர் கபிலரிடம் அடைக்கலம் பெறுகின்றனர். பாரியின் உற்ற நண்பரும் புலவருமான கபிலர், புறநானூற்றில் 112ஆம் பாடல் முதல் 118ஆம் பாடல் வரைக்கும் அவனது புகழையும் பெருமைகளையும் பிரிவையும் எடுத்துரைக்கின்றன.

**அதியமான் எழினி**

அதியமான் எழினியைத் தகடூர் பொருது வீழ்ந்த எழினி என இலக்கியங்கள் புகழ்ந்துரைக்கின்றன. தலைமகனான எழினி இறந்ததை

**...விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்**
**வையகம் புகழ்ந்த வயங்குவினை ஒள் வாள்,**
**பொய்யா, எழினி பொருதுகளம் சேர-**
**ஈன்றோள் நீத்த குழவிபோலத்,**
**தன்அமர் சுற்றம் தலைத்தலை இனையக்,**
**கடும்பசி கலக்கிய இடுப்பை கூர் நெஞ்சமொடு**

**நோய்உழந்து வைகிய உலகினும்...**[45]

என அரிசில் கிழார் குறிப்பிட்டுள்ளார். பகைவர்களை அழிக்கும் வல்லமை பொருந்திய எழினி தன்னுடைய மக்களையும் தன்னை நாடி வந்து பரிசில் பெறுவோரையும் அக மகிழ்வுடன் பாதுகாத்துள்ளான். பல்வேறு உயரிய குணங்களைக் கொண்டவனும் களம் கண்டு போர் புரிந்தவனுமான நெறி தவறாச் செங்கோலன் இறந்தான். பெற்றவளைப் பிரிந்த பிள்ளையைப் போல எழினியைப் பிரிந்த மக்களின் நிலை வருந்தத்தக்கது எனப் புலவர்களால் சுட்டப்பட்டுள்ளது.

**அதியமான் நெடுமான் அஞ்சி**

கடையேழு வள்ளல்களில் ஒருவனான அதியமான் நெடுமான் அஞ்சி செங்கோல் புரிந்த மன்னனாக இலக்கியத்தில் வலம் வருகின்றான். அவன் நெடுநாள் உயிர் வாழக்கூடிய நெல்லிக்கனியை ஔவைக்கு ஈந்தவன். பல்வேறு வள்ளல் தன்மை பொருந்திய அதியமான் இறந்தமையை ஔவை பாடியுள்ளார்

**ஏறிபுனக் குறவன் குறையல் அன்ன**
**கரிபுற விறகின் ஈம ஒள்அழல்,**
**குறுகினும் குறுகுக, குறுகாது சென்று,**
**விசும்புற நீளினும் நீள்க – பசுங்கதிர்த்**
**திங்கள் அன்ன வெண்குடை**
**ஒண்ஞாயிறு அன்னோன் புகழ்மா யலவே.**[46]

என கரிய புறத்தையுடைய ஈம விறகுகள் அதியமானின் மீது அடுக்கப்பெற்று எரியூட்டியதை இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். அதியமானின் உடலைத் தீயானது குறுகி எரித்தாலும் அல்லது வானளவு நீண்டாலும் அதியமானின் புகழ் மங்காது எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

அதியமானின் இறப்பை பதிற்றுப்பத்து எட்டாம் பத்தின் பதிகமும் குறிப்பிடுகின்றது.

**...பல்வேல் தானை அதிகமானோடு**
**இரு பெரு வேந்தரையும் உடன்நிலை வென்று,**
**முரசும் குடையும் கலனும் கொண்டு**
**உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டு**
**துகள் தீர் மகளிர் இரங்க, துப்பு அறுத்து,**

**தகடூர் எறிந்து...**[47]

என அரிசில்கிழார், சோழர்களும் பாண்டியர்களும் அதியமானுடன் சேர்ந்து பெருஞ்சேரல் இரும்பொறையை எதிர்த்தனர். இரும்பொறை தன்னை எதிர்த்து வந்த பகை வேந்தர்களை வென்று அதியமானின் தகடூரை அழித்து மீண்டான். ஒருவேளை இந்த தகடூர்ப் போரில் அதியமான் இறந்திருக்கக் கூடும் என்பதை

**சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையும், மலையமான் காரியும் சேர்ந்து அதியமான் தகடூர் மீது படையெடுத்தனர்.**
**பதிற்றுப்பத்துத் தகடூரில் போர் புரிந்த தலைவன் அதகமான் என்று மட்டுமே குறிக்கின்றது. ஔவையார் பாடல்கள் மூலம் இது நெடுமான் அஞ்சி என்று தோன்றுகின்றது.**[48]

என கா.அப்பாதுரை 'தென்னாட்டுப் போர்க்களங்கள்' எனும் தம்முடைய நூலில் தகடூரை ஆண்ட அதியமானைக் குறிப்பிட்டுள்ளார். எனவே அதியமான் தகடூர்ப் போரில் இறந்திருக்கக் கூடும். மேலும் ஔவையார் அதிகமான் இறப்பை ஏற்றுக்கொள்ள இயலாமல் தன்னுடைய துக்கத்தினை கையறுநிலையாக புறநானூறு 232, 235 ஆகிய பாடல்களைப் பாடியுள்ளார்.

**வல்வில் ஓரி**

புறப்பாடல்களில் சிறப்பிக்கப்படும் வள்ளல்களில் ஒருவனான வல்வில் ஓரி என்பான் சிறந்த பேராற்றல் உடையவனும் மக்கள் போற்றும் கொடையாளனுமாக இலக்கியங்களில் பேசப்படுகின்றான். வல்வில் ஓரி வில்லைச் செலுத்துவதில் வல்லவனாகப் புகழப் பெற்றதை

**வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி**
**பேழ்வாய் உழுவையைப் பெரும்பிரிது உறீஇ,**
**புழல் தலைப் புகர்க் கலை உருட்டி, உரல் தலைக்**
**கேழற் பன்றிவீழ, அயலாது**
**ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்...**[49]

என வன்பரணர் பாடியுள்ளார். போரில் வல்லவனான ஓரி செலுத்திய அம்பானது யானையைக் கொன்று, புலியை இறக்கச் செய்து, புள்ளிமானைக் கொன்று, பன்றியை வீழச்செய்து, புற்றில் கிடந்த உடும்பை மரணமடையச் செய்ததாக இப்பாடல் கூறுகின்றது. பேராற்றல் கொண்ட ஓரி இறந்ததை ஓர் அகப்பாடல் குறிப்பிடுகின்றது

**...செவ்வேல்**
**முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி**
**செல்லா நல்இசை நிறுத்த வல்வில்**
**ஓரிக் கொன்று...**[50]

எனக் கல்லாடனார் வள்ளல்களுக்கு இடையே நடந்த போரைத் தம்முடைய பாடலில் குறிப்பிட்டுள்ளார். மலையமான் திருமுடிக்காரிக்கும், வள்ளல் ஓரிக்கும் நடந்த போரில் காரி ஓரியைக் கொன்ற செய்தி இங்குக் கிடைக்கின்றது. ஓரியைக் குறித்த இறப்புச் செய்தியைக் கபிலர் நற்றிணை 320ஆம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

**வேள் ஆய் அண்டிரன்**

கடையேழு வள்ளல்களில் ஆய் அண்டிரனும் ஒருவன். பல்வேறு புலவர்களால் பெருமையாகப் பாடப்பெற்றவன். படைக்கருவிகளாகிய குதிரைகளும் யானைகளும் பல தேர்களையுடையவனும் வருபவர்களுக்கு குறைவின்றிக் கொடுப்பவனாகிய அண்டிரன் இறந்ததை

**...ஆஅய் அண்டிரன்**
**கோடுஏந்து அல்குல், குறுந்தொடி மகளிரொடு**
**காலன் என்னும் கண்ணிலி உய்ப்ப,**
**மேலோர் உலகம் எய்தினன்...**[51]
**---------------------------------------------**
**ஒள் எரி றைப்ப உடம்பு மாய்ந்தது...**

எனக் குட்டுவன் கீரனார் குறிப்பிட்டுள்ளார். வரையாது கொடுக்கும் புகழினையுடைய அண்டிரன் அவனது உரிமை மகளிரோடு இறந்து மேலுலகம் அடைந்தான். ஆய் அண்டிரனின் புகழ் பாடுவனவாகப் புறநானூறு 127 முதல் 136 வரையுள்ள பாடல்களும் 240, 241, 374, 375 ஆகிய பாடல்களும் கிடைக்கின்றன. அகநானூறு 15, 152, 199, 258 ஆகிய பாடல்களிலும் நற்றிணை 270ஆம் பாடலிலும் ஆய் அண்டிரன் புகழப்படுகின்றான்.

**வேள் எவ்வி (அகுதை)**

இல்லாதவர்களையும் புலவர்களையும் ஆதரித்த பெரு வள்ளல் எவ்வியாவான். எவ்வியிடம் பொன்னால் ஆன சக்கராயுதம் இருந்ததால் இவனை வெல்வது அரிது

என்ற கருத்து நாடெங்கும் நிலவியிருந்தது. ஆனால் போர்க்கள யுத்தத்தில் மார்பில் வேல் தைத்து எவ்வி இறந்ததை வெள்ளெருக்கிலையார்

**பொய்யா கியரோ! பொய்யா கியரோ!**
**பாஅடி யானை பரிசிலர்க்கு அருகாச்**
**சீர்கெழு நோன்தாள் அகுதைகண் தோன்றிய**
**பொன்புனை திகிரியின் பொய்யா கியரோ!-**
**இரும்பாண் ஒக்கற் றலைவன், பெரும்பூண்,**
**போர்அடு தானை, எவ்வி மார்பின்**
**எஃகுறு விழுப்புண் பல என**
**வைகுறு விடியல், இயம்பிய குரலே.**[52]

என பாடியுள்ளார். எவ்வியை இழந்த மக்கள் வறுமை நிலையை அடைந்தார்கள் எனவும் அவனது மனைவி

**நோகோ யானே? தேய்கமா காலை**
**பிடிஅடி அன்ன சிறுவழி மெழுகித்,**
**தம்அமர் காதலி புல்மேல் வைத்த**
**இன்சிறு பிண்டம் யாங்குஉண் டனன்கொல்-**
**உலகுபுகத் திறந்த வாயில்**
**பலரோடு உண்டல் மரீஇ யோனே?**[53]

என எவ்வியின் மனைவி யானை போன்ற சிறிய இடத்தை மெழுகி எல்லோருடனும் அன்பாய் இருந்து உண்ட அவனுக்குப் பிண்டம் வைத்தாள் எனும் செய்தி இங்குக் கிடைக்கின்றது. கணவன் இறந்த நிலையில் மனைவி இறப்பாள் எனக்குறிப்பிடும் இலக்கியங்கள் எவ்வியின் மறைவிற்குப் பின்னர் அவனது மனைவி பிண்டம் வைத்து வணங்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றது. மேலும் வேள் எவ்வியைக் குறித்தானச் செய்திகள் அகநானூறு 115, 126 ஆகிய பாடல்களிலும், புறநானூறு 234, 347 ஆகிய பாடலிலும் குறுந்தொகை 298ஆம் பாடலிலும் கிடைக்கப்பெறுகின்றன. நீழல் நாடு எவ்விக்குரியதாய் இருந்தது எனக் குறுந்தொகை 19ஆம் பாடல் குறிப்பிடுகின்றது.

**நன்னன்**

பதிற்றுப்பத்து குறிப்பிடும் நன்னனையும் சோழ பாண்டிய வேந்தர்களையும் இளஞ்சேரல் இரும்பொறை போர்க்களத்தில் கொன்று வீழ்த்தியதைப் புறநானூறு பதிவு செய்துள்ளது

**…அணங்குடைக் கடம்பின் முழுமுதல் தடிந்து;**
**பொருள் முரண் எய்திய கழுவுள் புறம் பெற்று**
**நாம மன்னர் துணிய நூறி,**
**கால் வல் புரவி அண்டர் ஓட்டி,**
**சுடர் வீ வாகை நன்னற் தேய்த்து,**
**குருதி விதிர்த்த குவவுச் சோற்றுக் குன்றொடு**
**உரு கெழு மரபின் அயிரை பரைஇ…**[54]

எனப் பெருங்குன்றூர் கிழார் இளஞ்சேரலின் பேராற்றலைப் புகழ்ந்து பாடியுள்ளார். இளஞ்சேரல் தன்னை எதிர்த்து வந்த 'கழுவுள்' என்பவனைப் புறங்காட்டி ஓடச் செய்தான். கழுவுளுக்குத் துணையாக வந்தவர்களையும் களத்தில் கொன்று குவித்துள்ளான். 'இளஞ்சேரல், வாகை மரத்தினைக் காவலாகக் கொண்ட நன்னனைக் கொன்று அவனது குருதியை வெண் சோற்றில் கலந்து கொற்றவைக்குப் பலி கொடுத்துள்ளான்'. இலக்கியங்கள் குறிப்பிடும் மனிதப் பலியில் வெண் சோற்றில் மனிதக் குருதி கலந்த முதல் நிகழ்வு இதுவே எனலாம். போர்க்களத்தில் கொல்லப்பட்டோரின் குருதியைச் சோற்றில் கலந்து படைக்கும் வழக்கத்தை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

**வடக்கிருந்து உயிர் நீத்தல்**

வடக்கிருத்தல் என்பது, வடக்கு திசையை நோக்கி அமர்ந்து உண்ணா நோன்பிருந்து உயிரை மாய்த்துக் கொள்ளும் வழக்கமாகும். இதனைச் 'சல்லேகனை' எனச் சமணம் குறிப்பிடுகின்றது. வடக்கிருத்தலைச் சமணர்கள் அவர்களுக்குரிய உயரிய பண்பாகக் கருதுகின்றனர். பேரிடையூறு, நீங்காநோய், முதுமை என வடக்கிருத்தலுக்கான காரணங்கள் நீண்டாலும் 'தமிழிலக்கியங்களில் குறிப்பிடப்படுவோர் பெரும்பாலும் மானக்குறைவு காரணமாகவே வடக்கிருந்து உயிர் துறந்துள்ளனர்'.

பண்டைத் தமிழ்ச் சமூகத்தினர் குடிப்புகழ், கொடைப்புகழ், படைப்புகழ் என அனைத்திலும் புகழையே மையமாகக் கொண்டிருந்தனர். வேந்தர்கள், புலவர்கள் தொடங்கி கடைநிலைப் போர் வீரன் வரைக்கும் புகழால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் ஆவர். அவ்வாறாக அனைத்திலும் புகழை விரும்பியவர்கள் 'இறப்பிலும்' கூடப் புகழை விரும்பியுள்ளனர். புகழை மட்டுமே மையமாகக் கொண்டு 'வடக்கிருந்து உயிர்

நீத்தலை' புற இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. மானம், நட்பு, அவமானம் காரணமாகவும் வடக்கிருந்து மாண்டுள்ளனர். இது ஒரு வகையான தற்கொலை ஆகும்.

**கோப்பெருஞ்சோழன்**

கோப்பெருஞ்சோழன் பரந்து விரிந்து கிடந்த நாட்டை அறம் பிறழாமல் ஆட்சி புரிந்தான். சோழன் தன்னாட்டு மக்களை அறவழியில் நடத்தி புலவர்களை ஆதரித்து பரிசில்கள் வழங்கியதை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. சோழனின் இரு மகன்களும் தந்தை இருக்க அரசபதவியைக் கைப்பற்றி ஆட்சி புரிய முனைந்தனர்.

அறிவின்மையுடைய தன்னுடைய மகன்கள் ஆட்சி புரிந்தால் தன்னுடைய நாடு சீரழிந்து, தன்னுடைய நாட்டு மக்களும் அவல நிலை அடைவார்கள் எனக் கருதிய கோப்பெருஞ்சோழன் தனது மைந்தரை எதிர்த்து போர் புரிய முனைந்தான். கோப்பெருஞ்சோழன் இறந்த பின் அவனுடைய மக்களே அரசராகப் போகின்றனர் ஆதலால் போர் வேண்டாமென்றார் புலவர். ஒருவேளை தம்மக்களைக் கோப்பெருஞ்சோழன் கொன்று வென்றால், இந்த ஆட்சியும் செல்வமும் யாருக்காக எஞ்சி நிற்கும், அதனால் பயன் என்னவோ என்பதாக வினவுகிறார்.

**...பரந்து படு நல் இசை எய்தி, மற்று நீ**
**உயர்ந்தோன் உலகம் எய்தி; பின்னும்**
**ஒழித்த தாயம் அவர்க்கு உரித்தன்றே**
**அதனால், அன்னது ஆதலும் அறிவோய்! நன்றும்**
**இன்னும் கேண்மதி, இசைவெய் யோயே**
**நின்ற துப்பொடு நிற்குறித்து எழுந்த**
**எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்,**
**நின்பெரும் செல்வம் யார்க்குஎஞ் சுவையே?...**[55]

எனப் புல்லாற்றூர் எயிற்றியனார் தம்முடைய பாடலடிகளில் குறிப்பிடுகின்றார்.

**'கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்**
**காண்டல் இல்லாது யாண்டு பல கழிய**
**வழ இன்று பழகிய கிழமையர் ஆயினும்**
**அரிதே, தோன்றல்! அதற்பட ஒழுகல் என்று**
**ஐயங் கொள்ளன்மின், ஆர் அறிவாளீர்!**
**------------------------------------------------------**
**காதற் கிழமையும் உடையன்; அதன்தலை**
**இன்னது ஓர் காலை நில்லலன்;**

**இன்னே வருகுவன், ஒழிக்க, அவற்கு இடமே!**[56]

எனக் கோப்பெருஞ்சோழன் தன்னுடைய மரணத்தைத் தானே புலம்பிப் பாடியுள்ளான். தன்னுடைய புகழுக்கு இழுக்கு வராத வகையில் வடக்கிருக்க முடிவு செய்தான் சோழன். சோழன் தற்கொலை செய்து கொள்வது மட்டுமல்லாமல், தன் மீது பற்றுதல் கொண்ட உற்ற நண்பன் பிசிராந்தையார் வருவார் அவரும் வடக்கிருந்து உயிர்த் துறக்க எனதருகில் இடம் ஒதுக்கி வைத்துள்ளேன் எனத் தன்னுடைய பாடலில் குறிப்பிட்டுள்ளான்.

இறுதியில் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் துறந்ததை

**...செய்வினை மருங்கின் எய்தல் உண்டுஎனின்,**
**தொய்யா உலகத்து நுகர்ச்சியும், கூடும்;**
**தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்எனின்,**
**மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்,**
**மாறிப் பிறவார் ஆயினும், இமயத்துக்**
**கோடு உயர்ந் தன்ன தம் இசை நட்டு,**
**தீது இல் யாக்கையொடு மாய்தல் தவத் தலையே.**[57]

எனக் கோப்பெருஞ்சோழன் தன்னுடைய மரணத்தைப் பாடியுள்ளான். அவரவர் செய்த வினைக்கு அதற்கான பலன் கிடைக்கும். நல்வினை செய்தவர்க்கு விண்ணுலக இன்பம் கிடைக்கும் அவ்வாறு கிடைக்கவில்லை எனில் மறுபிறவி என்னும் பிறவாமை கிடைக்கும் எனக்கூறிய சோழன், இமைய மலையின் உயர்ந்த சிகரத்தைப் போல தன்னுடைய புகழை நிலைநாட்டித் தற்கொலை செய்துள்ளான். ‘கோப்பெருஞ்சோழன் மானம் காரணமாக வடக்கிருந்து உயிர் துறந்தான் என்பது இங்குப் புலனாகிறது’.

**பிசிராந்தையார்**

கோப்பெருஞ்சோழனின் வீரத்தையும், கொடைப்பண்பையும் செவி வழிச் செய்தியாகவே கேட்டு அவன் பால் காணா நட்பு கொண்ட பிசிராந்தையார், சோழன் வடக்கிருந்து உயிர் நீத்த செய்தியை அறிந்து தாம் கொண்ட தூய நட்பால் சோழன் உயிர் நீத்த அதே இடத்தில் பிசிராந்தையாரும் உயிர்துறந்ததை

**...’வருவன்’ என்ற கோனது பெருமையும்**
**அது பழுது இன்றி வந்தவன் அறிவும்,**
**வியத்தொறும் வியத்தொறும் வியப்பு இறந்தன்றே**

**அதனால், தன்கோல் இயங்காத் தேயத்து உறையும்**
**சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்றுஇசை**
**அன்னோனை இழந்தஇவ் உலகம்**
**என் ஆவதுகொல்? அளியது தானே![58]**

எனப் பொத்தியார் சோழனின் பெருமையையும், பிசிராந்தையாரின் பற்றையும் வியந்து பாடியுள்ளார். இப்பாடலில் பிசிராந்தையாரின் இறப்பு மறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது. சோழன் வடக்கிருந்து உயிர் நீத்தலால் அவன் மீது அன்பு கொண்ட பிசிராந்தையாரும் வடக்கிருந்து உயிர் நீத்தார் என்பது உறுதிப்படுகின்றது.

**பொத்தியார்**

கோப்பெருஞ்சோழனின் மற்றொரு நண்பனான பொத்தியாரும் சோழனுடன் வடக்கிருக்கத் துணிந்தார். பொத்தியாரின் மனைவி நிறைமாதக் கர்பிணியாக இருந்ததால் சோழன் பொத்தியாரை

**அழல்அவிர் வயங்குஇழைப் பொலிந்த மேனி,**
**நிழலினும் போகா, நின் வெய்யோள் பயந்த**
**புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வா...[59]**

எனத் தன்னுடன் உயிர்த்துறக்கத் தடையில்லை என்றும், உன் மகவு பிறந்தவுடன் வருக எனக் கூறிய செய்தி கிடைக்கின்றது. தற்கொலை செய்து கொள்வது குற்றம் எனத் தற்காலச் சட்டங்கள் குறிப்பிடுகின்றன. தற்கொலை செய்து இறந்த சோழன் இறப்பிலும் தன்னுடைய நண்பர்களை உடன் அழைத்துச் சென்றுள்ளான்.

தம்முடைய கடமையை முடித்த பொத்தியாரும் வடக்கிருந்து உயிர் துறந்தது பல்வேறு உரைகளின் வழியாக அறியமுடிகின்றது. நெருக்கமான நட்பினர் வந்து எதைக் கேட்டாலும் அதைச் செய்து கொடுத்தல் அக்காலத்தில் உயரிய பண்பாகக் கருதப்பட்டுள்ளது. அவ்வாறாக சோழனுடன் வடக்கிருந்து இறந்துபடுவதற்கு அவன் இடமளிப்பான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. உற்றவர்களுக்காகத் தற்கொலை செய்யும் வழக்கம் பண்டைச் சமூகத்தில் நிலவி வந்துள்ளது. அவ்வாறாகச் சோழன் தன்னுடன் இறக்க அனுமதி அளித்ததை

**பலர்க்கு நிழல்ஆகி, உலகம்மீக் கூறித்,**
**தலைப்போ கன்மையின் சிறுவழி மடங்கி**
**நிலைபெறு நடுகல் ஆகியக் கண்ணும்,**

**இடம்கொடுத்து அளிப்ப, மன்ற- உடம்போடு**
**இன்உயிர் விரும்பும் கிழமைத்**
**தொல்நட்பு டையார் தம்முழைச் செலினே.[60]**

எனப் பொத்தியார் சோழனைப் புகழ்ந்து பாடி வடக்கிருந்துள்ளது இங்குப் புலனாகிறது. சோழன் தன்னுடைய தனிப்பட்ட சிக்கலுக்காக வடக்கிருந்தான். ஆனால் பிசிராந்தையாரும் பொத்தியாரும் தங்களுடைய இல்லத்தார்களை விட்டு மரணத்தைத் தழுவிக் கொண்டது நட்பின் ஆழத்தைக் காட்டுகின்றது.

**பெருஞ்சேரலாதன்**

பெருஞ்சேரலாதனிற்கும் சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கும் பகை மூண்டு வெண்ணிப் போர்க்களத்தில் போர் நடந்தது. போரின் போது கரிகாலன் எறிந்த வேலானது சேரலாதனின் மார்பில் தைத்துப் புறம் கண்டது இதனை

**...இருசுடர் தம்முள் நோக்கி, ஒருசுடர்**
**புன்கண் மாலை மலை மறைந்தாங்குத்**
**தன் போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த**
**புறப் புண் நாணி, மறத் தகை மன்னன்**
**வாள் வடக்கிருந்தனன்; ஈங்கு,**
**நாள்போல் கழியல, ஞாயிற்றுப் பகலே...[61]**

எனக் கழாத்தலையார் சேரலாதனின் நிலையைக் குறிப்பிட்டுள்ளார். போர் நாளில் இரு பெரும் வேந்தர்களும் வெற்றி முனைப்பில் போர் புரிந்தனர். கரிகாலன் எறிந்த வேலானது சேரலாதனின் மார் துளைத்து புறத்தில் (முதுகில்) புண்ணாக்கிற்று. புற முதுகில் புண் பட்டதை எண்ணி நாணம் கொண்ட சேரலாதன் வடக்கிருந்து உயிர் துறந்தான். கரிகாலன் எறிந்த வேலானது சேரலாதனின் மார்பைத் துளைத்ததனால் சேரலாதனுக்கு மரணம் நேரவில்லை தன்னுடைய புகழை நிலை நாட்ட அவன் வடக்கிருந்து உயிர் நீத்திருக்கிறான்.

வெண்ணிக் குயத்தியார் கரிகாலனைப் பாடும் பொழுது, களத்தில் சேரலாதனை நீ வென்றாய். புறப்புண் நாணி வடக்கிருந்தவன் உன்னிலும் நல்லன் எனப் பாடியுள்ளார்

**...கரிகால்வளவ**
**சென்று, அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற**
**வென்றோய்! நின்னிலும் நல்லன் அன்றே-**

**கலி கொள் யாணர் வெண்ணிப் பறந்தலை**
**மிகப் புகழ் உலகம் எய்தி,**
**புறப் புண் நாணி, வடக்கிருந்தோனே?**[62]

போர் புரிதலின் பொருட்டு இறப்பு என்பது போர் புரிபவர்களில் யாருக்காவது நேரும். ஆனால் கரிகாலனுடன் போர் புரிந்து, சாகும் தருவாயில் இருந்த சேரலாதன் வடக்கிருந்து அவனது புகழைத் தக்க வைத்துக் கொண்டதை இங்கு ஊகிக்க முடிகின்றது. சேரலாதன் வடக்கிருந்ததை மாமூலனார் அகநானூறு 55ஆம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**கபிலர்**

பறம்பு மலைத் தலைவனான பாரியுடன் கபிலர் நட்பு கொண்டிருந்தார். மூவேந்தர்களால் பாரி கொல்லப்பட்ட செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமுற்ற புலவர் வடக்கிருந்து உயிர் துறந்துள்ளார்

**...பெருந் தகு சிறப்பின் நட்பிற்கு ஒல்லாது,**
**ஒருங்கு வரல் விடாது 'ஒழிக' எனக் கூறி**
**இனையை ஆதலின் நினக்கு மாற்று யான்**
**மேயினேன் அன்மையானே! ஆயினும்**
**இம்மை போலக் காட்டி, உம்மை**
**இடை இல் காட்சி நின்னோடு**
**உடன் உறைவு ஆக்குக, உயர்ந்த பாலே!**[63]

எனக் கபிலர் தாமே வடக்கிருந்த நிகழ்வைத் தம்முடைய பாடலில் குறிப்பிட்டுள்ளார். பாரிக்கும் கபிலருக்கும் இருந்த மாசில்லா மணியான நட்பை இறப்பானது பிரித்து விட்டது. புலவர் இப்பிறவியில் அரசனுடன் மகிழ்ந்திருந்ததைப் போன்று மறு பிறவியிலும் வாழ்ந்து மகிழ்வதை விரும்புவதாக குறிப்பிடுகின்றார். கபிலர், பாரியின் இறப்பிற்குப் பின் அவனது மகளிரை மணம் முடித்துக் கொடுக்க பல்வேறு வேந்தர்களிடம் முறையிட அவர்கள் மறுத்த காரணத்தால், பாரி மகளிரை அந்தணரிடம் ஒப்படைத்துவிட்டுப் புலவர் வடக்கிருந்து உயிர் நீத்துள்ளார். ஆக அன்பை ஆயுதமாகக் கொண்டு தம்முடையப் புகழைத் தக்க வைப்பதற்காக வடக்கிருந்து உயிர்த்துறந்துள்ளனர் என்பதை இங்குத் தெளிவாக அறியலாம்.

## *பெண்டிர் இறப்பு*

**சேரமான் கோட்டாம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை (பெருங்கோப்பெண்டு)**

மாக்கோதையின் மனைவி இறந்த நிலையில், மாக்கோதை தன்னுடைய மனைவியை நினைந்து கையறு நிலை பாடியுள்ளான். தன்னுடைய மனைவி இறந்த துக்கத்தை

**யாங்குப் பெரிதுஆயினும், நோய்அளவு எனைத்தே,**
**உயிர்செகுக் கல்லா மதுகைத்து அன்மையின்?**
**கள்ளி போகிய களரியம் பறந்தலை**
**வெள்ளிடைப் பொத்திய விளைவிறகு ஈமத்து,**
**ஒள்அழற் பள்ளிப் பாயல் சேர்த்தி,**
**ஞாங்கர் மாய்ந்தனள், மடந்தை;**
**இன்னும் வாழ்வல்; என்இதன் பண்பே!**[64]

என மாக்கோதை அவனது துக்கத்தைப் பாடியுள்ளான். விறகுப் படுக்கை விரித்து தீமூட்டிய பின் மனைவி மறைந்து போயினாள். அவளில்லாத உலகத்தில் இன்னும் வாழ்கிறேன் என மாக்கோதை புலம்பியுள்ளான். மாக்கோதையின் மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதை இலக்கியங்கள் குறிப்பிடவில்லை. மனைவி இறந்த துக்கம் தாளாதவன் கோட்டாம்பளத்தில் இறந்திருக்கக் கூடும். அதன் காரணமாகவே கோட்டாம்பளத்துத் துஞ்சிய மாக்கோதை எனப் பின்னாளில் அறியப்பட்டிருக்கலாம். மனைவி இறந்த துயர் தாங்கா கணவன் இயற்றிய முதற் இரங்கற்பாவாக (கையறுநிலை) இதனைக் கொள்ளலாம்.

**பூதப்பாண்டியன், கோப்பெண்டு**

வஞ்சினம் உரைத்துப் பல போர்களில் வெற்றிவாகை சூடிய ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் இறந்தான். பூதப்பாண்டியனை இழந்த கோப்பெண்டு ஆற்றாதவளாகித் தற்கொலை செய்ய முயன்றதை

**...பெருங் காட்டுப் பண்ணிய கருங் கோட்டு ஈமம்**
**நுமக்கு அரிதாகுகதில்ல; என எமக்கு எம்**
**பெருந் தோட் கணவன் மாய்ந்தென, அரும்பு அற**
**வள் இதழ் அவிழ்ந்த தாமரை**
**நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே!**[65]

எனத் தன்னுடைய மரணத்திற்கு முன்னதாகப் பாடியுள்ளாள். பூதப்பாண்டியன் இறந்ததும் தேவி பெருங் கோப்பெண்டு கைம்மை நோன்பு விரும்பாதவளாய் கோயில் முற்றத்தில் சிதை வார்த்துத் தற்கொலை செய்து கொண்டாள். இதனை

**...நீர் வார் கூந்தல் இரும் புறம் தாழ**
**பேர் அஞர்க் கண்ணள், பெருங் காடு நோக்கி,**
**தெருமரும் அம்ம தானே – தன் கொழுநன்**
**முழவு கண் துயிலாக் கடியுடை வியல் நகர்ச்**
**சிறுநனி தமியள் ஆயினும்**
**இன் உயிர் நடுங்கும் தன் இளமை புறங்கொடுத்தே.**[66]

என மதுரை பேராலவாயார் தீப்புகத் தயாராக இருந்த கோப்பெண்டைப் பார்த்துப் பாடியுள்ளார். கணவனைப் பிரிந்த துக்கத்தாலும் கைம்மை நோன்பை விரும்பாததாலும் கோப்பெண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளது இங்குப் புலப்படுகின்றது. கைம்மை மகளிருக்கு பொய்கையும் தீயும் ஒன்று என்பதை 'நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்' என மணிமேகலை குறிப்பிட்டுள்ளது இத்துடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

**மன்னர்களின் மனைவிகள்**

பாண்டிய மன்னனான செம்பியன் தன்னைப் பகைத்து வந்த மன்னர்களைக் கொன்று களத்திலிட்டான். அம்மன்னர்களின் மனைவிமார்கள் களத்தில் தீவளர்த்துப் அதில் பாய்ந்து தற்கொலை செய்ததை

**"ஏனைய பெண்டி ரெரிமூழ்கக் கண்டுதன்**
**தானையார் கண்புதைத்தான் தார்வழுதி – யானையும்**
**புல்லார் பிடிபுலம்ப தன்கண் புதைத்ததே**
**பல்யானை யட்ட களத்து."**[67]

என முத்தொள்ளாயிரப் பாடல் குறிப்பிடுகின்றது. பாண்டிய வேந்தனைப் பகைத்து வந்த மன்னர்கள் பாண்டியனின் வாளிற்குப் பலியாகினர். இறந்த மன்னர்களின் மனைவிகள் போர்க்களத்தில் தீவளர்த்துத் தற்கொலை செய்து கொண்டுள்ள செய்தி இங்குக் கிடைக்கின்றது. அப்பெண்கள் சிதையில் வீழ்ந்ததைக் கண்ட பாண்டியன் அவனது மேலாடையால் கண்களை மூட, அவனது யானைகளும் பகை வேந்தரின் பெண்யானைகள் புலம்பக் கண்டு கண்களை மூடிய செய்திகளையும் இப்பாடல் குறிப்பிடுகின்றது.

**மறவர்கள் இறப்பும் மகளிர் நிலையும்**

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் குறு நில மன்னர்களும் பேரரசர்களும் பிற நாட்டவருடன் போர் புரிந்து நிலங்களையும் வளங்களையும் அயல் நிலத்தில் வசித்த மக்களையும் தங்களின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து அடிமைப்படுத்தியுள்ளனர். தம்முடைய நாட்டை மட்டுமே எண்ணிப் போர் புரிகையில் பெரும்பாலானவர்கள் வாழ்க்கையை இழந்தனர். இத்துடன் தங்களின் உயிரையும் விட்டுள்ளனர்.

அயல் நிலத்தின் வளங்களைத் தம் வயப்படுத்தவும் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தவும் எழுந்த பல போர்களில் வேந்தர்கள் முதல் படையின் கடை வீரன் வரைக்கும் இறந்துபட்டவர்கள் ஏராளம். அவ்வாறாக ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்களுடன் போர் புரியச் சென்ற மறவர்கள் பலரும் மரணத்தைத் தழுவியுள்ளனர். இறந்த மறவர்களின் மகளிர் அடைந்த துயரினை புறப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. அறத்திலும் மறத்திலும் சிறந்து விளங்கிய மறக்குடிப் பெண்களின் வீரத்தையும் புதல்வர்களைப் பெற்று போருக்கு அனுப்பி வைத்த திறத்தையும் இப்பாடல்கள் வழி காணலாம்.

சங்ககால மகளிர் வெறுமனே புதல்வர்களைப் பெற்று வளர்த்தெடுப்பதில் பெருமிதம் கொள்ளவில்லை. வெற்றி பெறவேண்டிய வெறியும் துணிவும் அக்கால மகளிரிடையே வெகுவாகக் காணப்பட்டுள்ளது. இல்லத்து மகளிர் முதல் போர் மறவன் வரை அவரவர்களுக்கான கடமைகளைச் செய்ய வேண்டும் என்பதைப் பொன்முடியார் இவ்வாறு கூறுகின்றார்

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே**
**ஒளிருவாள் அருஞ்சமம் முருக்கி**
**களிறு எரிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.**[68]

தாய்க்கு மகனைப் பெற்று வளர்த்தல் கடமை, தந்தைக்கு அவனைச் சான்றோன் ஆக்குதல் கடமை, ஆயுதங்கள் செய்து கொடுத்தல் கொல்லரின் கடமை, நல்ல ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்தல் வேந்தனின் கடமை எனக் கூறும் புலவர் போரில் ஆயுதம் கைக்கொண்டு யானையை இறக்கச் செய்வது ஆடவரின் கடமை எனக்

குறிப்பிடுகின்றார். அக்கால மக்கட் சமூகத்தில் போரானது இன்றியமையாததாக இருந்துள்ளது. கல்வி கற்பதை விடப் போர் புரிந்து தங்களைக் காத்துக் கொள்வதிலேயே அக்கால மக்களின் வாழ்க்கை முடிந்துள்ளது.

வீரனொருவன் பகைவர்க்கு அஞ்சாமல் போர் புரிந்து, புறம் காட்டாமல் மார்பில் விழுப்புண் பெற்று இறப்பதையே வீரம் என மக்கள் கருதியுள்ளனர். மகனைப் பெறும் தாயர்கள் அவர்களைப் பெற்றெடுக்கும் தருணத்தில் பெரிதான மகிழ்ச்சியடைவார்கள் அதே மகன் போர்க்களத்தில் பகைவர்களுடன் போரிட்டு இறக்கும் போது அவனைப் பெற்ற பொழுதினும் பேரின்பம் பயக்கும் என்பதை

**மீன் உண் கொக்கின் தூவி அன்ன**
**வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்**
**களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை**
**ஈன்ற ஞான்றினும் பெரிதே; கண்ணீர்**
**நோன்கழை துயல்வரும் வெதிரத்து**
**வான் பெயத் தூங்கிய சிதரினும் பலவே.**[69]

என பூங்கண் உத்திரையார் புறநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். தலை நரைத்த தள்ளாத முதியவளின் மகன் போர்க்களத்தில் யானையைக் கொன்று தானும் இறந்தான். இச்செய்தியைக் கேட்ட தாய் அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் மிகுதியாக மகிழ்ந்தாள். நீண்ட ஆயுளைத் தம்மக்கட்கு வேண்டும் தாயர்கள் இருக்க போர் புரிந்து தன் மகன் இறந்ததை எண்ணி மகிழும் மறக்குடிப் பெண்களின் வீரநிலையை இப்பாடல் உணர்த்துகின்றது.

மறவர் குடிப் பெருமையை ஆடவர்கள் மட்டுமில்லாமல், மறக்குடியில் பிறந்த பெண்களும் தங்களின் வீரத்தால் நிலை நிறுத்தியுள்ளனர். பெண்களின் அளவிட முடியாத வீரத்தைப் பல்வேறு புலவர்கள் பாடியிருந்தாலும் காக்கை பாடினியார் ஒரு படி மேற்சென்று

**...முதியோள் சிறுவன்**
**படை அழிந்து, மாறினன் என்று பலர் கூற**
**மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்ட என்**
**முலைஅருத்திடு வென் யான் எனச் சினைஇக்,**
**கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்,**
**செங்களம் துழவுவோள், சிதைந்துவே றாகிய**

**படுமகன் கிடக்கை காணூஉ,**
**ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே![70]**

எனப் போரில் புறமுதுகிட்டான் எனும் செய்தியைக் கேட்ட தாய் ஒருத்தி களம் செல்லும் முன், தனது புதல்வன் படைமாறினால் அவன் உண்ட முலையை அறுத்திடுவதாகச் சூளுரைத்ததைப் புலவர் குறிப்பிட்டுள்ளார். களம் புகுந்த அவள் அநேகப் பிணங்களைப் புரட்டிப் பார்த்ததில் பல பிணங்களுக்கு நடுவில் உடல் வேறு வேறாகக் கிடந்த தன்னுடைய மகனைக் கண்டு பெரும் மகிழ்வடைந்தாள்.

பண்டைக்கால மக்கள் தம் வாழ்வியலில் போர்களின் வழியாக இறந்துபடுவதை புகழ் எனக் கொண்டாடியுள்ளனர். போரில் இறந்துபடுபவர்கள் தங்களின் உயிரைத் துச்சமென எண்ணிப் போர் புரிந்துள்ளனர். அவ்வீரர்களைப் பெற்ற மகளிரும் உறவு மகளிரும் போரைத் துணிவுடன் எதிர் கொண்டு தம் பிள்ளையைப் போருக்கு வழியனுப்புவதை

**...மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை,**
**யானை எறிந்து களத்து ஒழிந்தனனே**
**நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்,**
**பெரு நிரை விலங்கி, ஆண்டுப் பட்டனனே**
**இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல் கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇ**
**பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒரு மகன் அல்லது இல்லாள்**
**செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே.[71]**

என ஒக்கூர் மாசாத்தியார் பாடியுள்ளார். மறக்குடி பெண்ணொருத்தியின் தந்தை முதல் நாள் போரில் யானையை வீழ்த்தி இறந்தான். மறுநாள் நடந்த போரில் பசுக் கூட்டத்தை மீட்டுத் திரும்பிய தன்னுடைய கணவனும் இறந்துபட, அடுத்த நாள் போருக்குத் தன்னுடைய ஒரே மகனின் குடுமிக்கு எண்ணெய் தடவி, வெண்பட்டுடுத்தி, வேலைக் கையில் கொடுத்து போர்க்களம் நோக்கிச் செல் என அனுப்பி வைத்தாள் என்று எடுத்துரைக்கின்றது இப்பாடல்.

போர் முடிந்த நிலையில் எஞ்சிய வீரர்கள் அவர்களின் இருப்பிடத்திற்குப் பெயர்ந்தனர். அவர்களுடன் போருக்குச் சென்ற தன்னுடைய கணவன் வீடடையவில்லை என்றறிந்த பெண்ணொருத்தி களம் புகுந்து அவனைத் தேடியுள்ளாள்

**இளையரும் முதியவரும் வேறு புலம் படர**
**எடுப்ப எழாஅய் மார்பம் மண் புல்ல**
**இடைச் சுரத்து இறுத்த மள்ள**
**--------------------------------------**
**என்மகன்**
**வளனும் செம்மலும் எமக்கு என, நாளும்**
**ஆனாது புகழும் அன்னை**
**யாங்கு ஆகுவள்கொல்? அளியள் தானே![72]**

எனக் கயமனார் மறவனொருவன் களத்தில் இறந்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். போர் முடிந்து எல்லோரும் திரும்பி வர தன்னுடைய கணவன் வாராததால் களம் சென்ற மனைவி, அங்கு அவனது உயிரற்ற உடலைக் கட்டித் தழுவிப் புலம்புகின்றாள். தன்னுடைய கணவனைப் பற்றி பெருமையாகச் சொல்லும் அவனது தாய் என்ன ஆவாளோ என்று புலம்பினாள் என்பது பாடலின் பொருளாகிறது.

அதியமானின் புகழை உலகறியச் செய்த ஔவையார் களம் பாடுவதில் சிறப்புற்று விளங்கியுள்ளார். போரில் இறந்துபடுவதற்கு வீரர்கள் ஆசை கொண்டார்களோ இல்லையோ வீர்களைப் பெற்ற தாயொருத்தி 'தன்னுடைய மகன் அரசனுக்காக இறக்க வேண்டும்' என ஆசை கொண்டதை

**வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்**
**தன் ஓர் அன்ன இளையர் இருப்பப்,**
**பலர்மீது நீட்டிய மண்டை என் சிறுவனைக்**
**கால்கழி கட்டிலில் கிடப்பி**
**தூவெள் அறுவை போர்ப்பித் திலதே![73]**

என ஔவையார், தன்னுடைய மகனின் மரணம் குறித்த முதியவளின் ஏக்கத்தைப் பதிவு செய்துள்ளார். அரசன் அனைவரினும் மேலாகத் தன் மகனுடன் நட்பு கொண்டு அவன் பருகத் தேறல் கொடுத்தான். அன்பு கொண்ட அரசனுக்கு நன்றிக் கடனாக உயிரைக் கொடுக்கும் நேரம் தன்னுடைய மகனுக்கு இன்னும் வரவில்லை எனத் தாயொருத்தி ஏக்கமுற்றாள். தூய வெண்ணிற ஆடை உடுத்தி காலில்லாத பாடையில் கிடத்தற்கு ஏற்ற நேரம் வரவில்லை எனத் அத்தாய் புலம்பியுள்ளாள். வேந்தனுக்காகவும் புகழுக்காகவும் தன் மகன் இறக்க வேண்டும் என்னும் தாயின் ஆசை இங்கு நோக்கத்தக்கது.

மறவர்களின் குடிப் பெருமைகளைக் கூறும் மாங்குடி கிழார், மறவர்கள் தங்களின் போர்த் திறம் கொண்டு இறப்பதால் கிடைக்கும் பீடும் பெருமையும் அவர்களைக் கடவுளாக்குவதைப் பாடியுள்ளார்.

**...துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று**
**இந்நான்கு அல்லது குடியும் இல்லை**
**ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறுஏந்து மருப்பின், களிறுஎறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லேபரவின் அல்லது,**
**நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே.**[74]

குரவமலர், தளவமலர், குருந்து, முல்லை என்னும் நான்கு மலர்களைத் தவிர வேறு மலர்கள் அந்நிலத்திலில்லை. வரகு, திணை, கொள், அவரை இவை தவிர வேறு உணவுப் பொருட்களைத் தவிர வேறு இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன் இந்நான்கல்லது வேறு குடியும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். போரில் மதம் கொண்ட யானைகளைக் கொன்று இறந்துபட்டவர்க்கு நடுகல் நட்டு வணங்கும் வழிபடுதலைத் தவிர நெல் தூவி வணங்கும் தெய்வம் இல்லை என்பது புலவர் வழியாகப் புலனாகிறது. வீரமரணம் அடைந்து தெய்வமானவர்கள் உயர்வாகப் போற்றப்பட்டதை புலவர் இங்குப் பதிவு செய்துள்ளார்.

மறக்குடிப் பெண்களின் வீர நிலையையும் மறவர்களின் இயல்புகளையும் பல்வேறு புலவர்களின் பாடல்கள் வழியாக அறிய முடிகின்றது. மரணத்தைத் தவமிருந்து வரவேற்கும் பண்பைப் பெற்றுள்ள மறவர்கள், அவர்களின் மார்பில் புண்படுவதையும் களத்தில் எதிரிகளின் மார்பைத் தாக்கிக் கொல்வதையும் பெருமையாக எண்ணியதை

**...முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே,**
**உன்னிலன் என்னும், புண் ஒன்று அம்பு**
**மான் உளை அன்ன குடுமித்**
**தோல்மிசைக் கிடந்த புல்அண லோனே.**[75]

எனப் பொன்முடியார் புறநானூற்றுப் பாடலில் குறித்துள்ளார். வீரனொருவன் சிறுவயதில் பாலை உண்ணக் கொடுத்தாலும் மாட்டேன் என்றவன், போரில் யானையைக் கொன்று மீள்பவனிடம் ‘மார்பைப் புண்ணாக்கி ஊன்றியிருந்த அம்பைக் குறித்துக் காட்டிய போது இதனை நான் அறியேன்’ எனக் கூறும் செயல் அக்கால

மறவர்களின் இறப்பச்சமின்மையையும் அவர்களின் வீரத்தையும் காட்டுகின்றது. மேலும் 'இப்பாடலில் குறிக்கப்படும் ஆடவன் அதியமானின் மகன் பொகுட்டு எழினி' என உரைகள் விளக்கம் தருகின்றன.

அரிசில் கிழார் பகை மறவர்களுடன் போர் புரிந்த தலைவன் ஒருவன் இறந்ததை பெருமையாகப் பாடியுள்ளார். தன்னை நாடி வரும் இரவலர்களுக்குப் பொன்னையும் பொருளையும் திகட்டாமல் தரும் வீரத்தில் மேம்பட்டவன். அவன் போர் புரிந்த பொழுது பகைவர்கள் எறிந்த வேலானது அத்தலைவனின் மார்பைத் துளைத்து வெளிச் சென்றதை

**...மாறுசெறு நெடுவேல் மார்பு உளம்போக,**
**நிணம்பொதி கழலொடு நிலம் சேர்ந்தனனே...**[76]

எனப் புலவர் தலைவனொருவனின் மறப்புகழைப் பாடியுள்ளார். இதனைப் போன்று மற்றுமொரு வீரன்

**நீலக் கச்சை, பூவார் ஆடை,**
**பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்**
**மேல்வருங் களிற்றொடு வேல்துரந்து, இனியே,**
**தன்னும் துரக்குவன் போலும் – ஒன்னலர்**
**எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்,**
**கையின் வாங்கி, தழீஇ,**
**மொய்ம்பின் ஊக்கி, மெய்க்கொண் டனனே!**[77]

என உலோச்சனார் குறிப்பிட்டுள்ளார். பகைவர்கள் யானைகளோடு போர்புரிய வந்து வீரனொருவனின் மார்பில் வேலெறிய, அவ்வேலானது அவ்வீரனின் மார்பைத் துளைத்தது. துளைத்த வேலைப் பறித்து பகைவர் கூட்டத்தை அழித்த வீரனின் வீரச் செயல் இங்குச் சுட்டப்படுகின்றது. உயிர் போகும் நிலையில் கூட வீரத்தை வெளிக்காட்டிய மறவர்களைப் பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

செங்கண் சோழனைப் புகழந்து பாடும் பொய்கையார், செங்கணான் போர் புரிந்த களத்தில் பகை வீரர்கள் பலரும் இறந்துபட்டதும் அவ்வீரர்களை இழந்த பெண்கள் அலறி ஓடியதை

**கடி காவில் காற்று உற்றுஎறிய, வெடி பட்டு**
**வீற்று வீற்று ஓடும் மயில் இனம்போல், நால்திசையும்**

**கேளீர் இழந்தார் அலமருப – செங்கண்**

**சின மால் பொருத களத்து...**[78]

எனக் குறிப்பிட்டுள்ளார். சோழன் தன்னை எதிர்த்து வந்த பகைவர்களை களத்தில் சாகும்படிக்குக் கொன்று குவித்தான். இறந்த வீரர்களின் வீட்டு மகளிர்கள் அனைவரும் பெருங்காற்று வீசுவதால் நால் திசையும் சிதறி ஓடும் மயில்களைப் போல அம்மகளிர் அனைவரும் புலம்பி ஓடியுள்ளனர். வீரம் படைத்த மகளிரைப் பாடியுள்ள பாடல்களுக்கிடையில் அக்காலப் பெண்களின் அவல நிலையும் இங்குச் சுட்டப்பட்டுள்ளது.

மேலும், மறவர்களின் பெருமைகளையும் அவர்களின் போர்த்திறத்தையும் அக்கால மகளிரின் வீர நிலைகளையும் அப்பெண்கள் அடைந்த அவலநிலைகளையும் புறநானூறு 19, 86, 248, 249, 250, 253, 255, 256, 260, 288, 370 ஆகிய பாடல்கள் பதிவு செய்துள்ளன.

**மறவர்களின் பீடு**

பண்டைச் சமூகத்தில் வீரம், நிலங்கள் அபகரிப்பு, பிற நாட்டு வளங்களைக் கொள்ளையிடுதல் போன்ற பல்வேறு காரணங்களைக் கொண்டு போர்கள் பலவும் நடந்துள்ளன. 'ஆநிரைகள் கவர்தல்' போர் தொடக்கத்தின் முக்கியக் காரணமாகவும் தூண்டு கோலாகவும் அமைந்துள்ளது. பிற நாட்டு வேந்தர்களைத் தன்னுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வருதலின் முதற் கட்டமாக ஆநிரை கவர்தலின் மூலம் பல போர்களுக்கு வித்திட்டுள்ளனர். ஆநிரைகளைக் கவர்தலின் பொருட்டும், மீட்டலின் பொருட்டும் பல வீரர்கள் இறந்துபட்டுள்ளனர்.

போர் புரிந்த இடங்கள் போர்க்களங்களாயின. தன்னுடைய பலத்தை எதிரிகளிடம் காண்பிக்கும் நோக்கில், பகைக்கு அஞ்சா மறவர்களை படை வீரர்களாக வேந்தர்கள் மாற்றியுள்ளனர். யானைகள், குதிரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி போரில் இறந்தவர்களுக்கு நடுகற்கள் எடுத்துள்ளனர். வீரம் செறிந்த மறவர்களின் இறப்பை அக்கால புலவர்களும் மக்களும் பீடாகக் கருதியுள்ளனர்.

வேந்தர்கள் பலரும் முடி சூடியதற்கும் ஆட்சியமைத்ததற்கும் பிற நாட்டின் வளங்களை அழித்ததற்கும் போர்த் தொடுத்தல் முக்கியக் காரணமாகும். அவ்வாறு

தொடுக்கப்படும் போர்களில் பங்கேற்று மடிந்த வீரர்களின் தீரத்தைப் புற இலக்கியங்கள் பெருவாரியான பாடல்களில் பதிவு செய்துள்ளன. வீரர்களின் போர்ச் செருக்கும் களத்தில் பகைவர்க்கு அஞ்சாமையும் புறமுதுகிடாமல் இறந்துபட்டதையும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

வேந்தர்களுக்காக போர் புரியச் சென்ற வீரனொருவன், களத்தில் குளம் போல் பரவிக்கிடந்த குருதி வெள்ளத்தில் உருவம் மாறித் துண்டாகி இறந்து கிடந்த நிலையை

**...வெருவரு குருதியொடு மயங்கி, உருவு கரந்து**
**ஒறுவாய் பட்ட தெரியல் ஊன் செத்து,**
**பருந்து கொண்டு உகப்ப யாம் கண்டனம்-**
**மறம் புகல் மைந்தன் மலைந்தமாறே!**[79]

என வெறிபாடிய காமக் கண்ணியார் பாடியுள்ளார். பகைவர்களால் போர்க்களத்தில் கொல்லப்பட்ட வீரனொருவனின் நொச்சி மாலையை ஊன் என எண்ணிய பருந்து அதைத் தூக்கிக் கொண்டு போயிற்று. வீரத்தை விரும்பிய இளையவன் அம்மாலையை அணிந்ததால் இந்நிகழ்வு நடந்துள்ளது.

பகைவர்கள் எறிந்த வேலானது வீரன் ஒருவன் மார்பில் பாய்ந்து அவனுடைய உடலும் கண்களுக்குப் புலப்படாத உயிரும் கெட்டழிந்ததை

**...வருபடை தாங்கிய கிளர்தார் அகலம்**
**அருங் கடன் இறுமார் வயவர் ஏறிய**
**உடம்பும் தோன்றா உயிர் கெட்டன்றே...**[80]

எனப் பெருங்கடுங்கோ மானத்தை இழக்காத வீரனொருவனின் புகழைப் பாடியுள்ளார். புற முதுகிடாத வீரனொருவன் பகைவருக்கு அஞ்சாமல் தனக்கு நேர் வந்த வேலினைத் தன்னுடைய மார்பில் வாங்கி இறந்துள்ளான். அவ்வாறு தன்னுடைய மறத்தன்மையை அவ்வீரன் நிலை நாட்டியுள்ளான் என்றால் மிகையாகாது.

போர் புரியும் மறவர்கள் பலரும் தங்களின் மார்பில் புண்படுவதை வீரமாகக் கருதியுள்ளனர். மேலும் அதை அறமாகக் கொண்டிருந்தனர்

**கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும்.**[81]

என வள்ளுவர் வீரனது பண்பைக் குறிப்பிட்டுள்ளார். களத்தில் எதிரே வந்த யானையைத் தன் கையிலிருந்த வேலால் வீரனொருவன் எறிந்து கொன்றான். அடுத்தும் யானை வர அதனைக் கொல்வதற்கு வேல் இல்லாததால் கலக்கமுற்றவன், தன்னுடைய மார்மீது பகைவர் எறிந்த வேல் இருந்ததைக் கண்டு அதைப் பிடுங்கி எறிய முனைந்த போது அவன் பெரிதும் மகிழ்ந்ததை இக்குறளானது விளக்குகின்றது.

குமட்டூர் கண்ணனார் நெடுஞ்சேரலாதனின் புகழைப் பாடுகையில், அவனைப் பகைத்து வந்த பகைவர்களின் இறப்பை அவனது வீரத்துடன் தொடர்புபடுத்தியுள்ளதை

**...செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப**
**அரு நிறம் திறந்த புண்உமிழ் குருதியின்**
**மணிநிற இருங்கழி நீர் நிறம் பெயர்ந்து,**
**மணாலக் கலவை போல...**[82]

எனப் புலவர் பாடியுள்ளார். நெடுஞ்சேரலாதனின் வேலானது பகைவர்களின் உடல்களைத் துளைப்பதால் களமானது குங்குமக் குழம்பு போலச் சிவப்புற்றது. செந்நிறமாகக் காட்சியளிக்கும் களத்தில் மறவர்களின் பிணங்கள் மிதக்க அவர்களின் இறப்பை வேந்தனின் புகழாகப் புலவர் பாடியுள்ளார்.

**யானைகளின் போர்த் தொழில்**

வேந்தர்களின் வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வதில் படைகளும் படைக்கருவிகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. போர் புரிதலின் போது புறமுதுகிடாத படைச் செருக்கு கொண்ட மறவர்களைப் போன்றே, பெரும்பலமும் பேராற்றலும் கொண்ட ‘யானைப் படை’ அக்கால கட்டங்களில் சிறப்பான படைக்கருவியாகப் பயன்படுத்தப்படுள்ளது. புறப்பாடல்களில், வீரர்கள் யானைகளைக் கொன்று தங்களின் வீரத்தை நிலை நாட்டிய செய்திகளும் யானைகளால் கொல்லப்பட்ட வீரர்களின் இறப்புச் செய்திகளும் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. செங்கண் சோழன் தன்னைப் பகைத்து வந்த மறவர்களைக் கொன்றதையும் அவனது யானைகள் களம் கலக்கியதையும்

**“நாள் ஞாயிறு உற்ற செருவிற்கு வீழ்ந்தவர்**
**வாள் மாய் குருதி உழக்க, தாள் மாய்ந்து**
**முற்பகல் எல்லாம் குழம்பு ஆகி, பிற்பகல்**

**துப்புத் துகளின் கெழூஉம் – புனல்நாடன்**

**தப்பியார் அட்ட களத்து.**[83]

எனப் பொய்கையார் பாடியுள்ளார். சோழன் தன்னைப் பகைத்த மறவர்களைக் காலைப் பொழுதில் கொன்றான். இறந்தவர்களின் குருதியானது களம் முழுவதும் பரவிக்கிடக்க அதனைக் களத்தில் நின்ற யானைகள் கலக்கிய கொடுமை இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீண்ட கடலினூடே தோணிகள் பலவும் அலைவதைப் போன்று செங்கண் சோழன் கொன்று குவித்த மறவர்களின் பிணங்கள் குருதியொழுகிய நிலத்தில் மிதந்ததை

**“நளிந்த கடலுள் திமில் திரைபோல், எங்கும்**
**விளிந்தார் பிணம் குருதி ஈர்க்கும் – தெளிந்து**
**தடற்று இலங்கு ஒள்வாள், தளை அவிழ் தார், சேஎய்**
**உடற்றியார் அட்ட களத்து”**[84]

என்னும் பாடலின் வழியாக அறியமுடிகின்றது.

செங்கண் சோழன், சேர அரசர்களையும் அவர்களது படைகளையும் அழித்ததைக் கொண்டு ‘களவழி நாற்பது’ எனும் புற நூலானது இயற்றப்பட்டுள்ளது. சேர அரசர்கள் யானைகளோடு வீழ்ந்ததை

**“அரசர் பிணம் கான்ற நெய்த்தோர், முரசொடு**
**முத்துடைக்கோட்ட களிறு ஈரப்ப, எத் திசையும்**
**பௌவம் புணர் அம்பி போன்ற – புனல்நாடன்**
**தெவ்வரை அட்ட களத்து”**[85]

என குறிப்பிட்டுள்ளார். சேரன் இறந்த களமானது குருதிக் குளமானதால் இறந்த யானைகள் அவற்றில் புரண்ட செய்தி இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. மறவர்களும் யானைகளும் இறந்துபட்ட செய்திகள் களவழி நாற்பதில் 2, 3, 4, 5, 7, 8, 9, 11, 13, 15 ஆகிய பாடல்களிலும், முத்தொள்ளாயிரம் 18, 22, 27 ஆகிய பாடல்களிலும் கிடைக்கின்றன.

மாங்குடி மருதனார், பாண்டியன் நெடுஞ்செழியனின் போர்த்திறத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார். தலையாலங்கானத்தில் போர் புரிந்த பாண்டியனின் யானைகள் பகை மறவர்களைக் கொன்றதை

**…பிணக் கோட்ட களிற்றுக் குழும்பின்**
**நிணம் வாய்ப் பெய்த பேய்மகளிர்**
**இணைஒலி இமிழ் துனங்கைச் சீர்ப்**
**பினையூபம் எழுந்து ஆட…**[86]

எனப் புலவர், பகைத்து வந்த மறவர்களை பாண்டியனின் யானைகளானது தந்தங்களால் குத்திக் கொன்றதை குறிப்பிட்டுள்ளார். பாண்டியன் போர் புரிந்த களத்தில் பேய்மகளிர் துணங்கையாடி மறவர்களின் தலைகளில் உணவு சமைத்த செய்திகளும் கிடைக்கின்றன. மேலும் மறவர்கள் பலர் யானைப்படையால் களத்தில் இறந்துபட்ட செய்திகளானது பதிற்றுப்பத்து 3:1, 4:1, 4:5, 4:9 ஆகியப் பாடலடிகளிலும் கிடைக்கப் பெறுகின்றன.

**விருந்தோம்பலுக்குப் பலியிடல்**

தமிழர்ப் பண்பாட்டினுள் 'விருந்தோம்பல்' இன்றியமையாத பண்பாடாகக் கொள்ளப்படுகின்றது. தங்களை நாடி வருபவர்களுக்கு இன்முகத்துடன் விருந்தோம்பி பரிசுப் பொருட்கள் வழங்கி உபசரிப்பதை பண்டைத் தமிழ்ச் சமுகத்தினர் மரபாகக் கொண்டிருந்தனர். பெரு வேந்தர்கள் தொடங்கி சிறுகுடி மக்கள் வரைக்கும் விருந்தோம்பலை உயர்வாகக் கருதியுள்ளனர். தங்களின் இல்லத்தை நாடி வருபவர்களுக்கு மட்டுமல்லாமல் வழிப் போக்கர்களுக்கும் விருந்தோம்பி பரிசளித்த நிகழ்வுகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. விருந்தோம்பலின் பொருட்டு விலங்குகளைக் கொன்று விருந்தோம்பியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

விருந்தோம்பலைக் குறித்து தொல்காப்பியர் பொருளதிகாரத்தில்

**விருந்தே தானும்**
**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே**[87]

என உரைக்கின்றார். புதியதாக வரும் எல்லா இலக்கியங்களையும் விருந்தில் அடக்கலாம். விருந்தோம்பலில் புதியவராய் வருவோர்க்குப் பல்வகைப் பொருட்களையும் தந்து விருந்தோம்பலை சிறப்பிக்கலாம். புதிய இலக்கியத்தைப்

போன்று விருந்தோம்பலால் புதியவர்களுடன் நட்பு கொள்ள முடியும் என்ற கருத்தை இங்குப் புலப்படச் செய்கின்றார்.

வள்ளுவர் விருந்தினரை முக மலர்ச்சியுடன் இன்புறச் செய்து விருந்தோம்ப வேண்டுவதை

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.**[88]

என வள்ளுவர் விளக்கியுள்ளார். விருந்தினர்களை எவ்வாறு உபசரிக்க வேண்டும் எனச் சுட்டியுள்ள புலவர் விருந்தோம்பலிற்கு உயிர்களைக் கொன்று உண்பதை வலியுறுத்தவில்லை.

கோப்பெரு நள்ளியின் விருந்தோம்பற் புகழை வன்பரணர் புகழ்ந்துள்ளார். நெடுங்காட்டு வழியில் பயணப்பட்டு ஓய்ந்திருந்த பரணரின் வருத்தத்தை, நள்ளி தான் வேட்டையாடிக் கொன்ற மானிறைச்சியைக் கொடுத்து விருந்தோம்பியதை

**...மான் கணம் தொலைச்சிய குருதி அம் கழர் கால்,**
**------------------------------------ ஒய்யெனத்**
**தான் ஞெலிதீயின் விரைவனன் சுட்டு, 'நின்**
**இரும் பேர் ஒக்கலொடு தின்ம்' எனத் தருதலின்**
**அமிழ்தின் மிசைந்து, காய்பசி நீங்கி...**[89]

எனப் புறநானூறு சுட்டுகின்றது. பசித்திருந்த புலவருக்குத் தான் இன்னாரெனக் கூறாத நள்ளி, மானின் இறைச்சியைச் தீயில் சுட்டுக் கொடுத்தும் தன்னுடைய மார்பில் அணிந்திருந்த முத்துவட ஆரத்தைப் பரிசளித்தும் விருந்தோம்பி உபசரித்துள்ளான். இங்கு மானை வேட்டையாடிக் கொன்ற குறிப்பு கிடைக்கின்றது.

சோழன் நலங்கிள்ளியைப் பாடிய கோவூர் கிழார், போர் மேற்கொண்டு பாடி வீட்டில் தங்கியிருக்கும் மறவர்களுக்கு செம்மறி ஆட்டைக் கொன்று ஊன் சமைத்து உருண்டையாகக் கொடுத்ததை

**...தனி மகன் வழங்காப் பனி மலர்க் காவின்,**
**ஒதுக்குஇன் திணி மணற் புதுப் பூம் பள்ளி**
**வாயில் மாடந்தோறும் மைவிடை வீழ்ப்ப**
**நீ ஆங்குக் கொண்ட விழவினும் பலவே**[90]

எனப் புலவர் பதிவிட்டுள்ளார். பகைவரை வென்று தம்முடைய இலச்சினையைப் பொறிக்கும் பெருமையையுடைய நலங்கிள்ளி தான் போர் புரிந்த இடத்திலும், மாளிகை தோறும் செம்மறிக் கிடாவை வெட்டிப் பலியிட்டு விருந்தோம்பிய செய்தி கிடைக்கின்றது.

பாரியின் இறப்பிற்குப் பின் அவனது உரிமையாட்களும் அவனை நாடி வருபவர்களும் மிக்க துன்பத்தை அடைந்தார்கள். பாரியின் விருந்தோம்பற் பண்பை கபிலர் கையறுநிலையாகப் பாடியுள்ளார்

**மட்டு வாய் திறப்பவும், மை விடை வீழ்ப்பவும்**
**அட்டு ஆன்று ஆனாக் கொழுந் துவை ஊரன் சோறும்**
**பெட்டாங்கு ஈயும் பெரு வளம் பழுனி,**
**நட்டனை மண்ணோ, முன்னே; இனியே**
**பாரி மாய்ந்தென...**[91]

எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார். திகட்டக் கொடுத்த மதுவும் ஆட்டுக் கிடாய் கலந்த ஊன் சோற்றையும் கொடுத்த பாரி மக்களுடன் நட்பு கொண்டான். பாரி இல்லாத விருந்தோம்பலானது பாழ்பட்டது எனப் புலவர் புலம்பியுள்ள செய்தி இங்குக் கிடைக்கின்றது. விருந்தோம்பலுக்கு ஆட்டுக் கிடாய்கள் பலியிடப்பட்டதும் இங்கு நோக்கத்தக்கது.

ஆய் அண்டிரனின் விருந்தோம்பற் புகழைப் பாடியுள்ள முடமோசியார், அண்டிரனை நாடி வரும் விருந்தினருக்கு மிளா மானைக் கொன்று அவன் விருந்தோம்பியதை

**...கான்தேர் அகன்றுஉவா**
**சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை,**
**விடர்முகை அடுக்கத்துத் சினைமுதிர் சாந்தம்,**
**புகர்முக வேழத்து மருப்பொடு, மூன்றும்**
**இருங்கேழ் வயப்புலி வரிஅதட் குவைஇ**
**விருந்துஇறை நல்கும் நாடன், எம்கோன்**
**கழல்தொடி ஆஅய் அண்டிரன்...**[92]

எனப் புறப்பாடல் குறிப்பிடுகின்றது. அண்டிரனும் அவனது குடியினரும் விருந்தினர்களை முகம் மலர்ந்து உபசரித்துள்ளனர். தன்னிடமும் தன்னுடைய நாட்டை நாடி வரும் விருந்தினர்களுக்கும் மிளா மானின் தசைகளையும் சந்தனத்தையும்

யானைத் தந்தங்களையும் புலித் தோலில் குவித்துத் தரும் பண்பை அண்டிரன் கொண்டுள்ளான்.

இமய வரம்பனைப் பாடும் கண்ணனார், அவனைக் காண வந்த சுற்றத்தார்கள் நீண்ட நாள் பசித்துன்பத்துடன் காணப்படட்டதால் அவர்களின் கொடியப் பசியைத் தீர்க்க வெள்ளாட்டினைக் கொன்று வெண் சோற்றுடன் கலந்து, தெளிந்த கள்ளோடு விருந்தோம்பிய செய்தியைப் பாடியுள்ளார்.

**...தொல்பசி உழந்த பழங்கண் வீழ,**
**எஃகு போழ்ந்து அறுத்த வாழ் நிணக் கொழுங்குறை,**
**மைஊன் பெய்த வெண்ணெய் வெண் சோறு**
**நனை அமை கள்ளின் தேறலொடு மானது...**[93]

பரிபாடலில் திருமாலைப் பாடும் கீரந்தையார், திருமாலுக்கு வேள்வி நடத்தியதாகவும் வேள்விக்காகப் பலியிடப்படும் ஆடானது திருமாலுக்கு உணவானதை

**...படிநிலை வேள்வியுள் பற்றி ஆடு கொளலும்**
**புகழ் இயைந்து இசை மறை உறுகனல் முறை மூட்டித்**
**திகழ் ஒளி ஒண் சுடர் வளப்பாடு கொளலும்...**[94]

எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார். திருமாலுக்கு வேள்வி செய்வதற்காகப் ஆட்டைக் வெட்டிக் கொன்றனர். பலியிட்ட ஆட்டை கண்களுக்குப் புலப்படாத திருமால் உணவாக உண்கிறான் என மீச்செயலாகக் கூறியுள்ளார். பதிற்றுப் பத்தில் 7:4ல் வேள்விக்காகப் புள்ளி மானைக் கொன்ற செய்தியும் கிடைக்கின்றது.

கரிகால் வளவனைப் பாடியுள்ள முடத்தாமக் கண்ணியார், கரிகாலனின் விருந்தோம்பலை மெச்சிப் பாடியுள்ளார்.

**...துராஅய் துற்றிய துருவைஅம் புழுக்கின்**
**பராஅரை வேவை ‘ப்ருகு’ எனத் தண்டி,**
**காழின் சுட்ட கோழ்ஊன் கொழுங்குறை**
**ஊழின் ஊழின் வாய்வெய்து ஏற்றி**
**-------------------------------------------------**
**பல்லே**
**எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி**
**உயிப்பிடம் பெறாஅது, ஊண்முனிந்து...**[95]

கரிகாலனை நாடி வரும் இரவலர்க்குச் செம்மறி ஆட்டைக் கொன்று அதன் தசைகளை நெருப்பில் சுட்டு உண்ணக் கொடுத்ததைக் குறிப்பிட்டுள்ளார். கரிகாலன் கொன்று உண்ணக் கொடுத்த இறைச்சியினால் விருந்தினர்களின் பற்கள் மழுங்கிப் போயின எனும் வரி கரிகாலன் விருந்தோம்பலில் சிறப்புற்றவன் எனக் காட்டுகின்றது. தசைத் துண்டங்களைத் தின்று வெறுத்த உறவினர்களுக்கு இனிப்புப் பண்டங்களைக் கொடுத்து உண்க உண்க எனக் கூறும் கரிகாலனின் அன்பை இப்பாடலடிகள் விளக்குகின்றன.

மாங்குடி மருதனார் பாண்டியன் நெடுஞ்செழியனின் விருந்தோம்பல் பண்பை அவனது நாட்டு வளத்துடன் ஒப்பிட்டுள்ளார்

**...களம் தோறும் கள் அரிப்ப**
**மரம் தோறும் மை வீழ்ப்ப**
**நிண ஊன் சுட்டு உருக்கு அமைய**
**நெய் கனிந்து வரை ஆர்ப்ப...**[96]

என்பதை மதுரைக் காஞ்சியில் காணலாம். செழியனின் நாடானது விருந்தோம்பலில் சிறப்புற்று விளங்கியதை புலவர் இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். களங்கள் தோறும் கள் அரித்த செய்தியும் மரங்கள் தோறும் எண்ணிலடங்கா ஆடுகளைக் கொன்று உணவிற்குப் பயன்படுத்திய செய்தியும் இங்குக் கிடைக்கின்றது.

நன்னன் சேய் நன்னனின் மலைநாட்டு வளத்தைப் பாடும் பெரும் கௌசிகனார், அவனது விருந்தோம்பற் பண்பையும் பாடியுள்ளார். சங்ககால மக்கள் ஊன் உணவிலும் கள்ளுண்பதிலும் அதிக நாட்டம் கொண்டிருந்ததை இப்பாடல் வழி அறியலாம்

**...வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை**
**முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை,**
**பிணவுநாய் முடிக்கிய தடியொடு விரைஇ**
**வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனின்**
**இன் புளிக் கலந்து மா மோர் ஆக,**
**கழை வளர் நெல்லின் அரி**[97]

என நன்னனின் நாட்டு வளத்தை விருந்தோம்பலோடு விவரிகின்றார் புலவர். பெண் நாயானது உடும்பின் தலையைக் கவ்விக் கொண்டு வரவும் குறவர்கள் கடமானைக் கொன்று அதனுடைய இறைச்சியையும் முள்ளம்பன்றியின் ஊனும் தேனால்

சமைக்கப்பட்ட கள்ளையும் நெல்லால் சமைக்கப்பட்ட கள்ளையும் ஒருங்கே உண்டுள்ளனர்.

பெரும்பாணாற்றுப் படையில் உருத்திரங்கண்ணனார் பட்டினத்து மக்களின் விருந்தோம்பலை

**...நெல்மா வல்சி தீற்றி, பல்நாள்**
**குழிநிறுத்து, ஓம்பிய குறுந்தாள் எற்றைக்**
**கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவீர்...**[98]

எனப் புலவர் தம்முடைய பாடலில் குறிப்பிட்டுள்ளார். பட்டினத்து மக்களின் விருந்து உபசரிப்பில் குழியிலிட்டு வளர்த்திய பன்றியைக் கொன்று விருந்தோம்பியுள்ளனர். மேலும் உயிர்க் கொலை புரிந்து உணவு உண்ட செய்திகளை புறநானூறு 177, 366ஆம் பாடல்களிலும், பதிற்றுப்பத்து, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படையிலும் காணமுடிகின்றது.

**புராண இறப்புச் செய்திகள்**

கடவுள்களாகக் குறிக்கப்படுவோர் உலகத்தைக் காக்க அசுரர்களை அழித்ததான புராணக் கதைகளை புற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**முருகன்**

புற இலக்கியங்களில், வேந்தர்கள் முதல் விலங்குகள் வரைக்குமான பாடல்களைத் தொடுத்த புலவர்கள், நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தை இயற்றியுள்ளனர். அவ்வாறு பாடப்பெற்ற கடவுள் வாழ்த்துகளில் கடவுள்களாக எண்ணப்பட்டோரின் கொலைத் தொழிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப் படையைப் பாடிய நக்கீரர், முருகன் அசுரர்களைக் கொன்றதைப் பாடியுள்ளார்

**...பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புகு**
**சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்...**[99]

அந்தணர்களின் வேள்வியைக் கெடுக்கும் அசுரர்களையும் சூரபதுமனையும் முருகன் தன்னுடைய வேலால் கொன்று அழித்தான் என குறிப்பிட்டுள்ளார்.

முருகனுக்கு நிகழ்த்தப்படும் அனைத்து விழாக்களிலும் குற மகளிர் வலிமை மிக்க பெரிய ஆட்டினை வெட்டிக் கொன்று அதன் குருதியுடன் வெள்ளரிசியைக் கலந்து

பலியிடும் வழக்கத்தை கொண்டிருந்ததாகவும் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது. மேலும் கல்லாடனார் பாண்டியன் நெடுஞ்செழியனின் வீரர்கள் கொலைத் தொழில் செய்த முருகனைப் போன்றிருந்ததை

**...சூர்நவை, முருகன் சுற்றத்து அன்ன, நின்**
**கூர் நல் அம்பின் கொடுவில் கூளியர்**
**கொள்வது கொண்டு**[100]

என புலவர் ஒப்பிட்டுள்ளார். பாண்டியனின் படை வீரர்களின் திறத்தை முருகனின் கொலைத் தொழிலோடு தொடர்புபடுத்தி புலவர் பாடியுள்ளார். அசுரர்களைக் கொன்ற முருகனைக் குறித்த செய்திகள் பரிபாடல் 14இல் கேசவனாரும், குறுந்தொகை 1இல் திப்புத் தோளாறும், அகநானூறு 59இல் மதுரை மருதன் இளநாகனாரும் பாடியுள்ளனர்.

**திருமால்**

திருமாலைக் கடவுளாகக் கொண்டு பரிபாடல் இயற்றியுள்ள இளவெயினனார் அவனது கொலைத் தொழிலை

**...கூந்தல் என்னும் பெயரோடு கூந்தல்**
**எரி சினம் கொன்றோய்.**[101]

எனப் புலவர் பாடியுள்ளார். கேசி என்னும் பெயருடைய அரக்கனைக் கொன்று, திருமால் கேசவன் எனும் பெயர் பெற்றான். திருமாலிடம் போர் புரிய வந்த அசுரர்களைத் தன்னுடைய சக்கரப் படையால் அழித்ததை பரிபாடல் 2:47,49 ஆகிய அடிகளில் கீரந்தையார் குறிப்பிட்டுள்ளார்.

இதைப் போன்றே, நரசிம்ம அவதாரம் எடுத்த திருமால், இரணியனைக் கொன்றதை இளவெயினனார் பாடியுள்ளார்

**...இன்னல் இன்னரொடு இடிமுரசு இயம்ப,**
**வெடி படா ஒடிதூண் தடியொடு,**
**தடி தடி பல பட-வகிர்வாய்த்த உகிரினை**[102]

எனத் திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்து, தூணைப் பிளந்து கொண்டு வெளிவந்து இரணியனைக் கொன்றான் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மருதன் இளநாகனார், தலைமக்களின் களவு வாழ்க்கையை ஊரார் அறிந்து கொண்டதை, பரசுராமனின் கொலைத் தொழிலோடு ஒப்பிட்டுப் பாடியுள்ளார். பரசுராமன் போர்க்களத்தில் மன்னர் தலைமுறையினரைக் கொன்றதை

**...கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்**
**கடாஅ யானைக் குழூஉச்சமம் ததைய,**
**மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்**
**முன்முயன்று அரிதினின் முடித்த வேள்வி**
**கயிறுஅரை யாத்த காண்தகு வனப்பின்,**
**அருங்கடி நெடுந்தூண் போல...**[103]

என தோழி பாடுவதாக இப்பாடலடிகளை அமைத்துள்ளார். பரசுராமன் களத்தில் மன்னர் வழியினர் இருபத்தியொரு தலைமுறைகளைக் கொன்று வேள்வி நடத்தியுள்ளான் எனப் பாடியுள்ளார். பரசுராமன் வேள்வியில் தூண் நடப்பட்டு யாரும் நெருங்காதவாறு அதனைப் பாதுகாப்பர். இதைப் போன்று தலைவியின் களவு வாழ்க்கையை ஊரார் அறிந்த பின்பு, வேள்வியைப் பாதுகாக்கும் தூணைப் போன்று தலைவியைப் பாதுகாப்பாக வீட்டுக் காவலில் வைக்கப்படுவதை இறப்புடன் ஒப்பிட்டுள்ளார் புலவர்.

இதைப் போன்று சிலப்பதிகார வேட்டுவ வரியில், தீய நிமித்தங்களைக் கனவாகக் கண்டதால் திருமாலை வணங்க குரவை ஆடியதைப் பதிவு செய்துள்ளார் இளங்கோவடிகள்

**திரண்டு அமரர் தொழுது ஏத்தும் திருமால்! நின் செங்கமல**
**இரண்டு அடியான் மூவுலகும் இருள்தீர நடந்தனையே**
**நடந்த அடிபஞ்சவர்க்குத் தூதாக நடந்தஅடி**
**மடங்கலாய்! மாறுஅட்டாய்! மாயமோ?**[104]

இப் பாடலடிகளில் திருமாலைத் தொழுது ஏத்தும் பெண்கள், பகைவனாய் மாறுபட்ட இரணியனைக் கொன்றவனே என திருமாலைப் புகழ்ந்து பாடியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

**தொகுப்புரை**

- புற இலக்கியங்களில் மறப்பண்பு, மண்ணாசை, மானக்குறைவு, ஆட்சி விரிவாக்கம், தலைமை வகித்தல் போன்ற காரணங்களால் போர் நிகழ்ந்த வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளன.
- வேந்தர்கள் இருக்கும் போதும் இறக்கும் போதும் புகழை நிலைநாட்டுவதற்காக தங்களின் உயிரைத் துச்சமென எண்ணியுள்ளனர்.
- முடி வேந்தர்கள் தொடங்கி, கடைமட்டப் போர் வீரன் வரை பகை வீரர்களை சூளுரைத்துக் கொன்றுள்ளனர்.
- வேந்தர்கள் போர் புரிந்து இறந்த இடத்தின் பெயரை தங்களின் அடைமொழியாகக் கொண்டுள்ளனர் என்பதனை சங்கப் பாடல்கள் சான்று பகர்கின்றன.
- வேந்தர்கள் முதல் வள்ளல் தன்மை கொண்ட குறு நில மன்னர்கள் வரை அறம் செய்து இறந்துள்ளனர்.
- ஆட்சிப் பிரச்சினை, மானக்குறைவு, நட்பு போன்ற காரணங்களுக்காக வேந்தர்களும் புலவர்களும் வடக்கிருந்து உயிர் நீத்துள்ளனர்.
- அரசியை இழந்த அரசர் துயருற்றமையும் அரசனை இழந்த அரசி சிதையிலேறித் தற்கொலை செய்துள்ளமையும் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- விலங்குகளைக் கொன்று பலி கொடுப்பதைப் போன்று நன்னனைக் கொன்று கொற்றவைக்குப் பலி கொடுத்துள்ளனர்.
- போர் வீரர்களை இழந்த மகளிர் நிலை, மறக்குடிப் பெண்டிரின் வீர நிலை, இறந்துபட்ட வீரர்களின் மகளிர் தற்கொலை ஆகியவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- வேந்தர்களின் வெற்றிக்காக மறவர்கள் போர் புரிந்து இறந்துபட்டுள்ளனர்.
- போர் புரிந்து இறந்த வீரர்களின் நினைவாக அவர்களின் பீடெழுதி நடுகல் நடப்பட்டு வணங்கப்பட்டுள்ளன.

- பண்டைக்கால வேந்தர்களும் மக்களும் தங்களுக்காகவும் தங்களை நாடி வருவோரை உபசரிக்கவும், ஆடு, மிளா, பன்றி ஆகிய பல்வேறு விலங்குகளை உணவிற்காகப் பலியிட்டுள்ளனர்.
- புகழை மட்டுமே மையமாகக் கொண்டு பல்வேறு கொலைகளும் தற்கொலைகளும் அரங்கேறியுள்ளன.

## *அடிக்குறிப்புகள்*

1. புறநானூறு, நெட்டிமையார், பா.எ:9:1-5
2. சிறுபாணாற்றுப்படை, நத்தத்தனார், பா.அ:203-206
3. புறநானூறு, மதுரை வேளாசான், பா.எ.305:1-6
4. திருக்குறள் 321
5. புறநானூறு, இடைக்குன்றூர் கிழார், பா.எ:78:7-12
6. புறநானூறு,பசுங்குடையார், பா.எ:370:15-17
7. புறநானூறு,கல்லாடனார், பா.எ:371:13-16
8. பதிற்றுப்பத்து,பரணர், பா.எ:5:1:19-21
9. முத்தொள்ளாயிரம், பா.எ:32
10. முத்தொள்ளாயிரம், பா.எ:21
11. தொல்காப்பியம்,தொல்காப்பியர், புறம்:1022
12. புறநானூறு,ஓரம்போகியார், ப.எ:284
13. புறநானூறு, இளம்பொன் வாணிகனார், பா.எ:264:3-6
14. புறநானூறு, கருந்தும்பியார், பா.எ:265:1-5
15. புறநானூறு, போத்தியார், பா.எ:223:1-3
16. பதிற்றுப்பத்து, நச்செள்ளையார், பா.எ:6:7:1-4
17. திருக்குறள் 239
18. புறநானூறு, கணைக்கால் இரும்பொறை, பா.எ:74:1-2
19. புறநானூறு, ஔவையார், பா.எ:93:9-11
20. புறநானூறு, பெருந்தலைச் சாத்தனார், பா.எ:165:1-2
21. புறநானூறு, சோழன் நலங்கிள்ளி, பா.எ:73:1-4
22. புறநானூறு, பூதப்பாண்டியன், பா.எ:71:3-9
23. புறநானூறு, நெடுஞ்செழியன், பா.எ:72:1,12
24. புறநானூறு, சாத்தந்தையார், பா.எ:287:7-12
25. திருக்குறள் 771
26. திருக்குறள் 779
27. புறநானூறு, சேரமான் கணைக்கால் இரும்பொறை, பா.எ:74:3-7
28. இனியவை நாற்பது, பூதஞ்சேந்தனார், பா.எ:11
29. புறநானூறு, மாறோக்கத்து நப்பசலையார், பா.எ:226

30. புறநானூறு, ஆடுதுறை மாசாத்தனார், பா.எ:227:8-11
31. தென்னாட்டுப் போர்க்களங்கள், கா.அப்பாதுரை, பக்.130
32. புறநானூறு, கோவூர்கிழார், பா.எ:45:3-6
33. தென்னாட்டுப் போர்க்களங்கள், கா.அப்பாதுரை, பக்.117
34. புறநானூறு, கூடலூர் கிழார், பா.எ:229:17-22
35. புறநானூறு, பேரெயின் முறுவலார், பா.எ:239:18-21
36. புறநானூறு, கருங்குழலாதனார், பா.எ:224:10-17
37. புறநானூறு, கழாத்தலையார், பா.எ:62:1-8
38. புறநானூறு, ஆலத்தூர் கிழார், பா.எ:225:7-9
39. புறநானூறு, குடவாயிற் கீரத்தனார், பா.எ:242
40. மலைபடுகடாம், கௌசிகனார், பா.அ:86-86
41. மதுரைக்காஞ்சி, மாங்குடி மருதனார், பா.எ:6:125-130
42. பதிற்றுப்பத்து, பரணர், 5ஆம் பத்தின் பதிகம்:17-22
43. புறநானூறு, பெருஞ்சித்திரனார், பா.எ:237:10-14
44. புறநானூறு, கபிலர், பா.எ:112
45. புறநானூறு, அரிசில் கிழார், பா.எ:230:4-10
46. புறநானூறு, ஔவையார், பா.எ:231
47. பதிற்றுப்பத்து, அரிசில்கிழார், 8ஆம் பத்து பதிகம்:5-10
48. தென்னாட்டுப் போர்க்களங்கள், கா.அப்பாதுரை, பக்.132
49. புறநானூறு, வன்பரணர், பா.எ:152:1-5
50. அகநானூறு, கல்லாடனார், பா.எ:209:11-14
51. புறநானூறு, குட்டுவன் கீரனார், பா.எ:240:3-6
52. புறநானூறு, வெள்ளெருக்கிலையார், பா.எ:233
53. புறநானூறு, வெள்ளெருக்கிலையார், பா.எ:234
54. பதிற்றுப்பத்து, பெருங்குன்றூர் கிழார், 9ஆம் பத்து:6-12
55. புறநானூறு, புல்லாற்றூர் எயிற்றியனார், பா.எ:213:10-16
56. புறநானூறு, கோப்பெருஞ்சோழன், பா.எ:216
57. புறநானூறு, கோப்பெருஞ்சோழன், பா.எ:214:7-14
58. புறநானூறு, பொத்தியார், பா.எ:217:7-13
59. புறநானூறு, கோப்பெருஞ்சோழன், பா.எ:222:1-3
60. புறநானூறு, பொத்தியார், பா.எ: 223

61. புறநானூறு, கழாத்தலையார், பா.எ:65:7-12
62. புறநானூறு, வெண்ணிக் குயத்தியார், பா.எ:66:3-8
63. புறநானூறு, கபிலர், பா.எ:236:6-12
64. புறநானூறு, சேரமான் கோட்டாம்பளத்துத் துஞ்சிய மாக்கோதை, பா.எ:245
65. புறநானூறு, பெருங்கோப்பெண்டு, பா.எ:246:11-15
66. புறநானூறு, மதுரை பேராலவாயார், பா.எ:247:5-10
67. முத்தொள்ளாயிரம், பா.எ:31
68. புறநானூறு, பொன்முடியார், பா.எ:312
69. புறநானூறு, பூங்கண் உத்திரையார், பா.எ:277
70. புறநானூறு, காக்கை பாடினியார், பா.எ:278:2-9
71. புறநானூறு, ஒக்கூர் மாசாத்தியார், பா.எ:279:3-11
72. புறநானூறு, கயமனார், பா.எ:254
73. புறநானூறு, ஔவையார், பா.எ:286
74. புறநானூறு, மாங்குடி கிழார், பா.எ:335:7-12
75. புறநானூறு, பொன்முடியார், பா.எ:310:5-8
76. புறநானூறு, அரிசில் கிழார், பா.எ:285:11-12
77. புறநானூறு, உலோச்சனார், பா.எ:274
78. களவழி நாற்பது, பொய்கையார், பா.எ:29
79. புறநானூறு, வெறிபாடிய காமக் கண்ணியார், பா.எ:271:5-8
80. புறநானூறு, பெருங்கடுங்கோ, பா.எ:282:5-7
81. திருக்குறள் 774
82. பதிற்றுப்பத்து, குமட்டூர் கண்ணனார், 2:1(7,10)
83. களவழி நாற்பது, பொய்கையார், பா.எ:1
84. களவழி நாற்பது, பொய்கையார், பா.எ:18
85. களவழி நாற்பது, பொய்கையார், பா.எ:37
86. மதுரைக் காஞ்சி, மாங்குடி மருதனார், பா.அ:24-27
87. தொல்காப்பியம், தொல்காப்பியர், பொருளதிகாரம்-1499
88. திருக்குறள் 90
89. புறநானூறு, வன்பரணர், பா.எ:150:5-14
90. புறநானூறு, கோவூர்கிழார், பா.எ:33:19-22
91. புறநானூறு, கபிலர், பா.எ:113:1-5

92. புறநானூறு, முடமோசியார், பா.எ:374:10-16
93. பதிற்றுப்பத்து, கண்ணனார், பா:2:2:15-18
94. பரிபாடல், கீரந்தையார், பா.எ:2:62-64
95. பொருநராற்றுப்படை, உருத்திரங்கண்ணனார், பா.அ:103-109
96. மதுரைக் காஞ்சி, மாங்குடி மருதனார், பா.அ:753-756
97. மலைபடுகடாம், கௌசிகனார், பா.அ:175-180
98. பெரும்பாணாற்றுப்படை, உருத்திரங்கண்ணனார், பா.அ:343-345
99. திருமுருகாற்றுப்படை, நக்கீரர், பா.அ:45-46
100. புறநானூறு, கல்லாடனார், பா.எ:23:4-6
101. பரிபாடல், இளவெயினனார், பா.எ:31-32
102. பரிபாடல், இளவெயினனார், பா.எ:4:19-21
103. அகநானூறு, மருதன் இளநாகனார், பா.எ:220:3-8
104. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்,வேட்டுவ வரி, பா.அ:34

## இயல்-நான்கு

# *அற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்*

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சங்க மருவிய காலகட்டத்தில் தோற்றம் பெற்றன என்பர். கீழ்க்கணக்கு நூல்களுள் புறத்தை மட்டும் பாடியுள்ள நூல் களவழி நாற்பது ஆகும். கீழ்க்கணக்கு நூல்களில் அகத்தை மட்டும் பாடியுள்ள நூல்கள் திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை, கார் நாற்பது ஆகியவையாகும். இவற்றுள் அறத்தை மட்டுமே பேசுவன மீதமுள்ள பதினொரு நூல்கள். அவை

- இன்னா நாற்பது
- இனியவை நாற்பது
- ஆசாரக்கோவை
- ஏலாதி
- சிறுபஞ்சமூலம்
- திரிகடுகம்
- திருக்குறள்
- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- பழமொழி
- முதுமொழிக்காஞ்சி

என்பவை ஆகும். சங்க இலக்கியங்கள் காதல், போர், வீரம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. சுயநலம், ஆதிக்கம், மறப்பண்பு, மண்ணாசைப் போட்டி, நில வளம், பொருள் வளம் போன்ற பல்வேறு காரணங்களைக் கொண்டு போர்கள் அரங்கேறியுள்ளன. நிலம் சார்ந்ததும் நிலம் கடந்ததுமான போர்கள் மக்களின் வாழ்க்கைச் சூழலை குருதியொழுகும் களர் நிலமாக்கியுள்ளன. போரைத் தவிர்க்கும் வழிகளை அரசர்களுக்கு அறிவுறுத்தல், வற்புறுத்தல், அதன் காரணமாக நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்படும் துன்பம், நட்டம், உயிர்ச் சேதம் ஆகியவற்றைத் தவிர்க்க அறநூல்கள் வலியுறுத்துகின்றன.

அறநூல்கள் மனிதர்களின் மரணம் அறவழியில் நிகழத் துணைபுரிந்துள்ளன. மரணத்தைக் குறித்த மனிதர்களின் நிலைபாட்டையும் எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் அறநூல்கள் இயம்பியுள்ளன. அறம், அன்பு, மானம், வீரம், பகை, உயிர்க்கொலை செய்யாமை, மானுடம் போற்றுதல், பிற உயிர்களை மதித்தல், மரணத்திற்கு அஞ்சாமை, ஒழுங்கமைவுடன் வாழ்க்கை நடத்துதல், நிலையாமை, பிறவிப்பலன் அடைதல் இவை போன்ற இன்னபிற காரணங்களை மரணத்துடன் ஒப்பிட்டு அறநூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

‘அற இலக்கியங்களில் இறப்புச் செய்திகள்’ எனும் இவ்வியலானது,

- **அறமும் அறிவும்**
- **அறமும் இறப்பும்**
- **நிலையாமை**
- **மானம்**
- **உயிர்க்கொலை**
- **வாழ்க்கைச்சூழல்**
- **இறப்பிர்கானச் சூழல்கள்**
- **உயிரிருந்தும் உயிரற்றார்**
- **இறப்பும் உறக்கமும்**
- **இளமை**
- **அன்பு**
- **தற்கொலைத் தூண்டல்கள்**
- **கொடையறச் செயல்**
- **வேள்விக் கொலைகளுக்கு எதிர்ப்பு**
- **உயிர் பறிக்கும் கூற்றம்**
- **புறம் கூறுதல்**
- **யாக்கை நிலையாமை**
- **சினம்**
- **கொல்லாமை**

- **தலைமக்களின் இறப்பு**
- **ஊழ்வினை**

ஆகிய பல்வேறு தலைப்புகளின் கீழ் அறநூல்களில் இடம்பெற்றுள்ள இறப்பு தொடர்பான செய்திகள் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

**அறமும் அறிவும்**

வேட்டைச் சமூகமாய்த் திரிந்த மக்களின் வாழ்க்கைச் சூழல், நாகரிகம், பண்பாடு ஆகிய படிநிலைகளின் வழியாகப் பலவிதமான வளர்ச்சிகளை அடைந்துள்ளது. இப்படிநிலை வளர்ச்சியின் மூலம் உணவு, உடை, உறையுள் ஆகியவை மக்களின் வாழ்க்கை முறைமைகளை மாற்றியமைத்துள்ளன. வேட்டைச் சமூகமாய் வாழ்ந்த மக்கள், விலங்குகளைப் பசித் தேவை கருதியும், உடைத்தேவை கருதியும், ஆயுதங்கள் மற்றும் அலங்காரப் பொருட்கள் செய்வதற்காகவும் கொன்றுள்ளனர். மற்றொரு வகையினர் தம்மையும் தம்முடைய நாட்டு மக்களையும் காத்தலின் பொருட்டு பிற நாட்டவரைக் கொன்றுள்ளனர். இப்போர்களில் பெருவேந்தர்கள் முதல் வீரர்கள் வரைக்கும் மரணத்தைத் தழுவினர்.

உயிர்க்கொலைகள் புரியும் மனித இனத்திற்கு மட்டுமன்றி இப்புவியில் பிறக்கும் அனைத்து உயிர்களுக்கும் வாழ்வதற்கு உரிமையுண்டு என்பதைப் போதிக்க அறம் ஓர் அறிவுத் திறவுகோலாக அமைந்துள்ளது எனில் மிகையாகாது. விலங்குகளைப் போன்றே வேட்டையாடி உண்ணும் நிலையிலிருந்த மனித இனம் தனக்கான உணவைத் தானே உருவாக்கி உண்டு விலங்குகளிடமிருந்து வேறுபட்டு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டது. அறமானது, மனித இனம் உயிர்க்கொலை புரியாமல், பிறப்பு முதல் இறப்பு வரை தீமை செய்தலை விடுத்து நன்மை செய்தலை வலியுறுத்துகின்றது. சிறந்த மரபினரின் அறத்தைக் கோவூர் கிழார் புறநானூற்றுப் பாடலொன்றில்

**சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்**
**அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல**[1]

எனக் குறிப்பிடுகின்றார். சிறந்த மரபினையுடையவர்கள் பொருளையும் இன்பத்தையும் அறவழியில் பயணித்து அடைவர் என்பது இதன் பொருள். இதைப் போன்றே வள்ளுவரும் மனிதர்களின் குறைந்தபட்ச அறமாக

.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற**[2]

எனக் குறிப்பிடுகின்றார். ஒருவன் தன்னுடைய மனத்தில் குற்றமில்லாதவனாக இருக்க வேண்டும். அதுவே அறம் என்பது இங்கு விளங்குகின்றது.

அறம் எனும் பொருண்மையை எளிமையாகவும் நேர்த்தியாகவும் விளக்கும் ராஜ் கௌதமன் 'தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும்' எனும் தமது நூலில்

**கண், காது, நா, மூக்கு, உடல் ஆகிய பொறியிடங்களிலிருந்து உந்துகிற புலன் உணர்வுகளை ஒழுங்குபடுத்தியதால் அதாவது கட்டுப்படுத்தியதால் உருவானவையே அறங்கள்.**[3]

என விளக்கம் தந்துள்ளார். அதாவது மனித இனத்தின் வாழ்க்கை ஒழுங்கமைவின் நோக்கமே அறம் என அற நூல்கள் விளக்கம் தருகின்றன என்கிறார்.

**அறமும் இறப்பும்**

அறம் செய்தலை வலியுறுத்தும் வள்ளுவர், நிலை பெறாத இந்த உலகத்தில் மனிதர்களின் பூத உடலானது அழிவது திண்ணம் ஆதலால் இறக்கும் முன்பு அறம் செய்தல் வேண்டும். அறம் செய்தால் அவ்வறம் இறக்கும் போது துணை நிற்கும் என்பதை

**அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை.**[4]

எனக் குறிப்பிடுகின்றார். ஒருவர் நல்லதைச் செய்ய நினைத்தால் அதைக் காலம் தாழ்த்தாமல் இளமையிலிருந்தே செய்தல் வேண்டும் என்று வலியுறுத்துகின்றார் வள்ளுவர்.

திருக்குறளைப் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களை உணர்த்தும் நாலடியார் அறம் செய்தலை இறப்புடன் தொடர்புபடுத்திப் பேசுகின்றது

**அரும் பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்**
**பெரும் பயனும் ஆற்றவே கொள்க-கரும்பு ஊர்ந்த**
**சாறுபோல் சாலவும் பின் உதவி, மற்று அதன்**
**கோதுபோல் போகும் உடம்பு.[5]**

என நாலடியாரில் மேற்கண்ட பாடலைப் போன்றே ஒத்த கருத்தையுடைய மற்றுமொரு நாலடியார் பாடலானது

**கரும்பு ஆட்டி, கட்டி சிறுகாலைக் கொண்டார்**
**துரும்பு எழுந்து வேங்கால் துயர் ஆண்டு உழவார் –**
**வருந்தி உடம்பின் பயன் கொண்டார், கூற்றம்**
**வருங்கால் பரிவது இலர்.[6]**

எனவும் அறத்தை வலியுறுத்துகின்றன. உடலில் உறைந்திருக்கும் உயிரை எப்போது வேண்டுமானாலும் கூற்றுவன் கவர்ந்து செல்வான். ஆகவே யாக்கையைப் பெற்ற பயனால் அறம் செய்து இறப்பது நலம் பயக்கும் என நாலடியார் குறிப்பிடுகின்றது. ஆலையில் கரும்பை ஆட்டி, வெல்லக்கட்டி தயார் செய்த பின்னர் அக்கரும்பின் சக்கை தீப்பற்றி எரிவதால் வருத்தம் இருக்காது. அதைப்போன்றே மனிதர்களும் உடலில் உயிருள்ள போதே அறம் செய்க என இறப்பைத் தொடர்புபடுத்தி இப்பாடல்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

ஒருவருக்கு இளமையும் செல்வமும் இருக்கும் பொழுதே அறம் செய்தல் வேண்டும் எனவும் காலம் தாழ்ந்து இறக்கும் தருணத்தில் அறம் செய்ய எண்ணினாலும் அது இயலாமற் போவதை

**மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை**
**ஆய்வின்றிச் செய்யாதார், பின்னை வழிநினைந்து**
**நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க் காணாமை,**
**நாய்காணின் கற்காணா வாறு.[7]**

எனப் பழமொழி நானூறில் முன்றுறை அரையனார் குறிப்பிட்டுள்ளார். ஒருவன் நோய் வாய்ப்பட்டு இறக்கும் தருணத்தில் (நாலடியார் இறப்பை நோய் எனக் குறிப்பிடுகின்றது) நன்மை செய்ய செல்வமும் பொருளும் அனைத்தும் இருக்க இளமை இல்லாமற் போகுமிடத்து எவ்வித பயனும் இல்லை. இதனை நாயைக் கண்டவிடத்துக் கல் தெரிவதில்லை எனும் கருத்தை ஒத்தது எனப் புலவர் குறிப்பிடுகின்றார். ஆதலால்

உடல் நலத்தோடு வாழும் போதே அறம் செய்ய வேண்டும் என்று பழமொழி வலியுறுத்துகின்றது.

இதைப் போன்றே வள்ளுவர்

**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்.**[8]

எனக் குறிப்பிட்டுள்ளார். நா தளர்ந்து பேச இயலாத நிலையில் மரணமானது நெருங்கும் எனவும் அம்மரணம் நெருங்கும் வேளையில் அறம் செய்ய நினைத்தாலும் உடலும் உள்ளமும் அதை ஏற்காமற் போகும். இளமையும், உடல் வலிமையும் உள்ள போதே அறம் செய்ய வேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

மானுடப்பிறவி துன்பத்தையுடையது. மனிதர்களின் ஊனுடல் சிறுக்குமுன் அறம் செய்யும் வாய்ப்பை வாழ்க்கை அளிக்கின்றது. ஆகையால் துன்பமான பிறப்பை நல்லவர்கள் வெறுக்க மாட்டார் என்பதை

**இறப்ப நினையுங்கால், இன்னாது எனினும்**
**பிறப்பினை யாரும் முனியார்-பிறப்பினுள்**
**பண்பு ஆற்றும் நெஞ்சத்தவர்களொடு எஞ்ஞான்றும்**
**நண்பு ஆற்றி நட்கப் பெறின்.**[9]

என நாலடியார் குறிப்பிடுகின்றது. மனிதர்கள் நல்லோருடன் சேர்ந்து அவர் பால் ஒழுகி நன்மைகளை மட்டுமே செய்து அற வழியில் நடப்பதால், பிறப்பு எனும் துன்பத்தை வெறுக்கமாட்டார் எனும் கருத்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வாறாக அறம் செய்து வாழும் மக்கள் தங்களின் இறப்பை துணிவுடன் எற்பர் என்பது ஆசிரியர் தம் துணிபு.

மனிதர்களின் இறப்பு எங்கே, எப்போது, எப்படி நிகழும் என்பதை அறுதியிட்டுக் கூறவியலாது. இமைக்கும் நேரத்தில் உயிர் உடலை விட்டுப் பிரிந்து போகும் அதற்கு முன்பே அறம் செய்ய வேண்டுமென்பதை

**இமைக்கும் அளவில் தம்இன் உயிர் போம் ஆற்றை**
**என்னைத்தானும் தாம்கண்டு இருந்தும் தினைத்துணையும்**
**நன்றி புரிகல்லா, நாண் இல் மட மாக்கள்**
**பொன்றில் என்? பொன்றாக்கால் என்?**[10]

என நாலடியார் அறிவுறுத்துகின்றது. மனிதர்கள் எப்போது வேண்டுமானாலும் இறந்துபட நேரிடும். தினையளவேனும் அறநெறி கேட்பதும் அந்த அறவழியில் நடப்பதும் ஆகிய நற்செயலைச் செய்யாதார் இருந்தால் என்ன இறந்தால் என்ன என்று அறத்தை வலியுறுத்தி இப்பாடல் பேசுகின்றது. அறம் செய்யாத மக்களின் இறப்பை ஏளனமாகப் பேசியுள்ளமை இங்குச் சிந்திக்கத்தக்கது.

மனிதர்கள் தங்களுக்கு வரப்போகும் இறப்பை எண்ணி துன்பப்படுகிறார்கள். ஆதலால் தங்களுடைய வாழ்க்கையில் அறம் செய்தலை மறந்துவிடுகிறார்கள். அற இலக்கியங்கள் மனிதர்களை நெறிப்படுத்தி அறவழியில் நடத்துவதற்காக இறப்பைக் கூட அறமாக மாற்றும் வழியை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. மக்களின் இறப்பிற்கு அஞ்சத் தகும் முதுமைப் பருவமும் உயிரைப் பறிக்க முனையும் கொடிய கூற்றமும் வருமுன் அறம் செய்க என்பதனை

**தோற்றம் அரிதாய மக்கட் பிறப்பினால்**
**ஆற்றுந் துணையும் அறஞ்செய்க-மாற்றின்றி**
**அஞ்சும் பிணிமூப் பருங்கூற் றுடனியைந்து**
**துஞ்ச வருமே துயக்கு.**[11]

எனப் பழமொழி குறிப்பிடுகின்றது. நோயும் மூப்பும் அஞ்சத்தக்க எமனொடு வந்து உயிரைக் கொள்ளும். ஆகவே பெறுதற்கரிய மக்கட்பிறப்பை பெற்றதனால் நல்லறத்தை இடைவிடாமற் செய்யுமாறு அறிவுறுத்துகிறது.

மனிதர்களுக்கு ஆயுள் உண்டெனக் கூறும் நாலடியார் பாடல்கள், கருவுற்றப் பெண்ணின் வயிற்றிலிருந்த பிள்ளையைக் வெளிப்பெறச் செய்து எமன் கவர்ந்து கொண்டு போவதை

**ஆள் பார்த்து உழலும் அருள் இல் கூற்றுஉண்மையால்**
**தோட்கோப்புக் காலத்தால் கொண்டு உயம்மின், பீள்பிதுங்கிப்**
**பிள்ளையைத் தாய் அலறக் கோடலால், மற்று அதன்**
**கள்ளம் கடைப்பிடித்தல் நன்று.**[12]

என நாலடியார் குறிப்பிடுகின்றது. ஆயுள் முடியப் போகும் ஆளைத்தேடிக் கொன்று விடும் எமன், பிறந்த பிள்ளையைக் கூட இறக்கச் செய்து கொண்டு செல்வான் எனவே

உயிரானது உடலில் தங்கியிருக்கும் பொழுதே அறமெனும் புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வேண்டுமென அறம் வலியுறுத்துகின்றது.

**நிலையாமை**

இப்புவிதனில் தோற்றம் உடையன யாவும் நிலைபெறாத் தன்மையைக் கொண்டுள்ளன. அவ்வாறாக மனித இனமும் நிலையாமை எனும் வரத்தைப் பெற்றுள்ளது. செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என மனிதர்களிடம் பல்வகை நிலையாமை இருப்பதை அற இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. குறிப்பாக மனித இனத்தில், எளிய மக்கள் முதல் முடி சூடிய வேந்தர் வரைக்கும் இறந்தனர். ஆகவே இவ்வுலகினில் எஞ்சியவர் எவருமில்லை என்பதை

**மலைமிசைத் தோன்றும் மதியம் போல், யானைத்**
**தலைமிசைக் கொண்ட குடையர், நிலமிசைத்**
**துஞ்சினார் என்று எடுத்துத் தூற்றப்பட்டார் அல்லால்,**
**எஞ்சினார் இவ் உலகத்து இல்.**[13]

என நாலடியார் குறிப்பிடுகின்றது. மலையின் மீது காணப்பெறும் சந்திரனைப் போல, யானைத் தலையின் மீது வெண்கொற்றக் குடையைப் பிடித்த அரசரும் இறந்தனர் என இகழப் பெற்றார்கள். எனவே இப்புவிதனில் மீதமாக எஞ்சி இருந்தவர்கள் யாரும் இல்லை என்பதை இப்பாடலடிகள் உணர்த்துகின்றன.

இதனை ஒத்த கருத்தை வள்ளுவர்,

**நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை யுடைத்திவ் வுலகு.**[14]

என, ஒருவன் நேற்று இருந்தான் இன்று அவன் இல்லை என்று சொல்லும் பெருமையுடையது இவ்வுலகம் என வரையறுக்கின்றார். நிலையாமையே இவ்வுலகின் (உயிர்களின்) சிறப்பு என்பது இதன் பொருளாகும்.

அறத்தைக் கூறும் புலவர்கள் பலரும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு நிலையாமையை அணுகியுள்ளனர். கதிரவன், சந்திரன், மழை, நாள் என அனைத்தும் மனிதர்களின் மரணத்தை உறுதிப்படுத்துவதை

**வாழ்நாட்கு அலகா, வயங்கு ஒளி மண்டிலம்**

**வீழ் நாள் படாஅது எழுதலால், வாழ்நாள்**
**உலவாமுன் ஒப்புரவு ஆற்றுமின், யாரும்**
**நிலவார், நிலமிசை மேல்[15]**

என நாலடியார், மனிதர்கள் உயிரோடு வாழும் காலத்தை அளக்கும் கருவியாக கதிரவன் உள்ளது எனவே வாழ்நாட்கள் கெடுவதற்கு முன்பாக பிறர்க்கு அறம் செய்து உதவ வேண்டும் என மொழிவதைக் காணலாம்.

இதனை வள்ளுவர்,

**நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்**
**வாள துணர்வார்ப் பெறின்.[16]**

எனக் குறிப்பிடுகின்றார். உடலின் வாழ்க்கையானது ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே வரும், நாளானது உயிரை அறுக்கும் வாளாக அமைந்துள்ளது எனும் கருத்தை உணர்த்துகின்றது இக்குறள்.

மனிதர்கள் அழியக் கூடியவைகளை நிலையானவை எனக் கருதாது அறம் செய்ய வேண்டும். கூற்றுவன் உயிரைக் கொண்டு செல்லும் போது நிலையானவை எனக் கருதும் சிறப்புகள் உடன் வாராது என்பதை

**வளமையும், தேசும், வழியும், வனப்பும்**
**இளமையும், இற்பிறப்பும், எல்லாம் உளவா**
**மதித்து அஞ்சி மாறும் அஃது இன்மையால்-கூற்றம்**
**குதித்து உய்ந்து அறிவாரோ இல்.[17]**

என, செல்வம், இளமை, வலிமை, அழகு, நற்குடிப்பிறப்பு ஆகிய சிறப்புக்களை எமனிடமிருந்து காத்துக் கொண்டவர் எவருமில்லை என்பதை இப்பழமொழி எடுத்துரைக்கின்றது. இவ்வுலகினில் உள்ள அனைத்திற்கும் நிலையாமை உண்டென்பதை இப்பழமொழி மெய்ப்பிக்கின்றது. அற இலக்கியங்கள், போரால் நிகழும் மரணங்களைக் குறிப்பதை விட பிற மரணங்களையே அதிகம் பேசுகின்றன.

**மானம்**

பண்டைக்காலச் சமுதாயம் முதல் தற்காலம் வரை மானத்தை உடலிலிருந்து பிரியும் உயிரைப் போன்றது என மனித இனம் குறிப்பாகத் தமிழினம் கருதுகின்றது.

செல்வம், பெயர், புகழ் ஆகியவை இல்லாவிடினும் மானம் வேண்டும் என்ற எண்ணம் தமிழ் மக்களிடையே மேலோங்கிக் காணப்படுகின்றது.

சங்க காலத்தில் மானத்திற்காகப் பிறரைக் கொன்றவர்கள், கொலையுண்டவர்கள் குறித்தான செய்திகள் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மானத்திற்காகப் பொன்னையும் பொருளையும் இழப்பதை விட 'மானத்திற்காக உயிரை இழக்கலாம்' எனும் அறத் தத்துவத்தை அற இலக்கியங்கள் போதிக்கின்றன. குடிப் பண்பை மானமாகக் கருதியவர்களுக்கு குடிப் பண்பாகிய பெருமை அழிய நேர்ந்தவிடத்து உயிரோடு இருத்தல் நலம் பயக்காதென்பதை

**மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடழிய வந்த இடத்து**[18]

என வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். குடிப் பெருமையை உடைய மக்கள் தங்களின் பெருமைக்கு இழுக்கு வரும் பட்சத்தில் ஊனுடலை வளர்ப்பது பெருமையில்லை. மானம் அழியும் தருணத்தில் உயிர் வாழ்தல் நலமாகாது என்ற கருத்து இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஒருவரின் மானம் அழிந்த பின்பும் வாழ்தல் இனிமை பயக்காதென்பதை இனியவை நாற்பதில் பூதஞ்சேந்தனார்

**மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே**
**தானம் அழியாமைத் தான் அடங்கி வாழ்வு இனிதே**
**ஊனம் ஒன்று இன்றி, உயர்ந்த பொருள் உடைமை**
**மானிடவர்க்கு எல்லாம் இனிது.**[19]

எனக் குறிப்பிடுகின்றார். ஒருவர் மானம் இழந்த பின் உயிர் வாழாதிருத்தல் இனிமை. மீறிய செல்வம் இருந்தும் தான் வாழும் இருப்புச் சிதையாதபடிக்கு அடங்கி வாழ்தல் நலம். குற்றமில்லாத மிகுந்த செல்வம் உடைய ஒருவர் வாழ்தலால் உலக மக்கள் அனைவரும் வாழ்வதற்கு வழிவகை செய்யும். எனும் செய்திகளை இப்பாடலின் வழியாக அறியமுடிகின்றது.

நாலடியார் மானத்தின் பெருமையை ஒருபடி மேற்சென்று குறிப்பிடுகின்றது. பரத்தைத் தொழில் இழிவானதென்றும் மானமில்லாது வாழ்தல் புகழைத் தராது என்றும் சுட்டிக் காட்டுகின்ற பாடல் பின்வருமாறு

**இம்மையும் நன்று ஆம், இயல் நெறியும் கைவிடாது**
**உம்மையம் நல்ல பயத்தலால்-செம்மையின்**
**நானம் கமழும் கதுப்பினாய் நன்றேகாண்**
**மானம் உடையார் நட்பு.**[20]

மானம் உடையவர்களின் பெருமித வாழ்க்கை புகழைத் தரும் என மேற்காணும் அடிகள் விளக்கம் தருகின்றன. மானம் உடையவரின் புகழானது அவர் இறந்த பின்பும் நிலைத்திருக்கும் ஆதலால் மானத்தின் மேன்மையை உணர்தல் வேண்டும். ஒருவரின் குடிப்பிறப்பும் செய்யும் தொழிலும் மானத்தால் சிறப்பு பெறுகின்றது. மானத்தை இழந்து வாழ்தலால் எவ்விதப் பயனுமில்லை என்பதை இப்பாடலின் கருத்து உணர்த்துகின்றது.

அற இலக்கியங்கள் அஃறிணைகளை மனிதர்களின் மரணத்துடன் ஒப்பிடுகின்றன. அற இலக்கியங்கள் அஃறிணைகளின் இறப்பை மக்களின் மானத்துடன் தொடர்புபடுத்தியுள்ளன. மானத்தை உயிர்ப் பொருளாகக் கொண்ட மனிதர்கள் மானத்தை இழந்த பின்பு உயிர் வாழ்ந்து பயனில்லையென்பதை

**மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்.**[21]

என்கிறார் வள்ளுவர். கவரிமா என வள்ளுவர் குறிப்பிடுவது இமாலயப் பகுதிகளில் வாழும் ஒரு வகை எருமையினமாகும். இவ்வகை எருமையினம் கடும் குளிரிலிருந்து தற்காத்துக் கொள்ள, அடர்த்தியானதும் நீளமானதுமான அவற்றின் மயிர்களே உயிர்ப் பாதுகாப்பு அரணாக விளங்குகின்றது.

மயிர்கள் நீங்கினால் உயிர் வாழா எருமையைப் போல மானம் இழந்தால் வாழாத கதியை மானமிழந்தார் அடைவார்கள் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இக்குறளுக்கு உரை கண்டவர்கள் பிழை செய்துள்ளனர் என்பதை கவரி கருமை காளமேகம் எனும் கட்டுரைத் தொகுப்பில் கவரி எனும் கட்டுரையில்

**மயிர்ப் பொதுமையை "ஒரு மயிர்" என ஒருமையாக்கியது முதற்பிழை.**
**"நீப்பின்" எனப் பிறவினையாய் இருப்பதை "நீக்கினும்" எனப் பிறவினையாகவே பொருளுரையாது "நீங்கினும்" எனத் தன்வினையாக்கிப் பொருளுரைத்தது இரண்டாவது பிழை.**
**கவரி மாவை கவரிமான் என மாற்றியது மூன்றாவது பிழை.[22]**

எனக் கதிரவன் தம்முடைய கட்டுரையின் வழியாக விளக்கம் தந்துள்ளார். ஆனால் திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர், மணக்குடவர் முதல் தற்கால உரையாசிரியர்கள் வரைக்கும் "ஒரு மயிர் நீங்கின் உயிர் வாழாத கவரி மானைப் போன்ற, மானமுடையார் மானம் அழியவரின் உயிர் விடுவர்" என்றே குறிப்பிட்டுள்ளமை இங்கு கதிரவன் அவர்களின் கருத்து ஏற்கத்தக்கதாக இருக்கின்றது.

அசுணமா பறவைகள் பறையிசையின் ஒலி கேட்டால் இறந்து விடும். அவற்றைப் போன்றே அறிவுடையார் தம்முடைய நிலை தாழ்ந்தால் உயிர் விடுவர் என்பதை நான்மணிக்கடிகையில்

**பறைபட வாழா அசுணமா உள்ளம்**
**குறைபட வாழார் உரவோர் நிறைவனத்து**
**நெல்பட்ட கண்ணே வெதிர்சாம் தனக்குஒவ்வாச்**
**சொல்பட்டால் சாவதாம் சால்பு[23]**

என, விளம்பி நாகனார் குறிப்பிடுகின்றார். அதிர்ச்சியூட்டும் ஓசையைக் கேட்டால் இறந்துபடும் பறவையைப் போல, மேலோர் தங்களுக்கு நாணம் தரும் பழிச்சொல் உண்டானால் உயிர் வாழ மாட்டார்கள் என்ற கருத்து இங்குக் கிடைக்கின்றது. இதனைப் போன்றே சிறுபஞ்ச மூலத்தில் 'மானத்தான் ஆயின் அழிதல் அறிவு' எனக் காரியாசானும் இனியவை நாற்பதில் 'மானம் பட வரின் வாழாமை முன் இனிதே' எனப் பூதஞ் சேந்தனாரும் குறிப்பிட்டுள்ளமை மேற்காணும் கருத்திற்கு வலு சேர்க்கின்றன.

வள்ளுவர் 'நாண் உடைமை' எனும் அதிகாரத்தில் நாணுதல் இல்லாத மக்கள் நடைபிணங்கள் எனக் குறிப்பிடுகின்றார். இழிவு வருங்கால் நாணத்தையுடையோர் உயிர் துறப்பர் என்பது அவர் கருத்து.

**நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்**
**நாண்துறவார் நாணாள் பவர்.[24]**

என வள்ளுவர், நன்மக்கள் நாணம் காரணமாக உயிர் விடுவார்களே தவிர, உயிர் காரணமாக நாணத்தை விடமாட்டார்கள் எனக் குறிப்பிடுகின்றார். இதே அதிகாரத்தில் பத்தாவது குறளும் இதே கருத்தை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியில் புற இலக்கியங்கள் மானம் காரணமாகவும் வீரம் காரணமாகவும் பிற உயிர்களை வதைக்கும் செயல்களைப் பேசியுள்ளன. ஆனால் அற இலக்கியங்கள் மானம் காரணமாகத் தற்கொலை செய்வதை ஆதரிப்பதாக உள்ளதை

**இளிவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழு தேத்தும் உலகு.**[25]

என வள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார். மனிதர்களின் பூத உடலிற்கு அழிவுண்டு. மானம் காரணமாக உயிர் விடுபவர்களின் புகழை இவ்வுலகு ஏற்றி நிற்கும் என்பதை அறிவுறுத்துகின்றது இக்குறள்.

**உயிர்க் கொலை**

உணவுத் தேவையின் பொருட்டு, பசியைப் போக்குவதற்காக விலங்கினம் பிற விலங்குகளை வேட்டையாடிக் கொன்று உண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளது. வேட்டைச் சமூகமாகத் திகழ்ந்த மனித இனம் பல்வேறு தேவை கருதி மனிதர்களையும் உணவுத் தேவை கருதி விலங்குகளையும் கொன்ற செய்திகள் இலக்கியங்கள் வழியாகக் கிடைக்கின்றன. பிற உயிர்களைத் துன்புறுத்துதலும் உயிர்க்கொலை புரிதலும் கருணை இல்லாத் தன்மையை உருவாக்கி அறத்தை சீர்குலைக்கும் என்பதை அற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

மனிதர்கள் தங்களுடைய ஊன் உடம்பை வளர்ப்பதற்கு பிற உயிர்களைக் கொல்லுதல் அறமாகாதென்பதை

**தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்.**[26]

என்கிறார் வள்ளுவர். உணவுத் தேவையைக் கொண்ட உயிர்க் கொலையானது ஊன் உடம்பைப் பெருக்குவதற்கு வழி செய்யுமேயன்றி அதனால் ஒரு பயனும் இல்லை. பிற உயிர்களைக் கொன்று உண்பவரிடம் அருளிருக்காது என்பதைப் புலவர் குறிப்பிடுகின்றார்.

தெளிந்த அறிவினையுடைய சான்றோர்கள் ஓர் உயிரிலிருந்து வந்த இறைச்சியை உண்ண மாட்டார் என்பதை

**செயிரின் தலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்**
**உயிரின் தலைப்பிரிந்த ஊன்.**[27]

எனும் குறள், ஒரு உயிரைக் கொன்ற பின்பு அவ்வுடல் உயிரற்றப் பிணமாகும். அப்பிணத்தை அறிவிற் சிறந்தோர் உண்ணமாட்டார். உயிர்க் கொலை புரியவும் மாட்டார் என்று அறம் போதிக்கின்றது.

உயிர்க்கொலையானது அறம், அன்பு, கருணை ஆகியவற்றை ஒருங்கிணைத்துக் கொலை செய்கின்றது. மேலும் அருளில்லாத உயிர்க் கொலையை

**அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்**
**பொருளல்ல தவ்வூன் தினல்.**[28]

என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். உயிர்க் கொலை புரிதல் அருளற்ற செயலாகும். கொலை புரிந்த ஊனை உண்பது பாவச் செயல் என புலவர் குறிப்பிடுகின்றார்.

அறம் செய்தலை வலியுறுத்தும் அற இலக்கியங்கள் குற்றம் புரிந்தோருக்கான கொலைத் தண்டனைகளைக் குறிப்பிட்டுள்ளன. தவறுதலாகக் கறவைக் கன்றின் மீது தேரேற்றிக் கொன்ற தன் மகனின் செயலைக் குற்றமாகக் கருதிய மனுநீதிச் சோழன், தன்னுடைய ஒரே மகனைத் தேரேற்றிக் கொன்றதை

**சால மறைத்து ஓம்பிச் சான்றவர் கைகரப்ப**
**காலை கழிந்ததன் பின்றையும், மேலைக்**
**கறவைக் கன்று ஊர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்,**
**முறைமைக்கு மூப்பு இளமை இல்.**[29]

என முன்றுறை அரையனார் பழமொழியாக உரைத்துள்ளார். கன்றின் மீது தேரேற்றிக் கொன்ற தன்னுடைய மகனின் செயலை அமைச்சர்கள் குற்றமன்று எனச் சோழனிடம் அறிவுறுத்தினர். இதை ஏற்காத சோழன், உயிர் பிரிவதால் ஏற்படும் இழப்பும் வலியும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஒன்றுதான் என எண்ணித் தன்னுடைய மகனைக் கொன்றதாக இலக்கியம் இயம்புகின்றது.

அவ்வாறாகக் கொலைக் குற்றம் செய்தவரைக் கொலை செய்தல் தவறு இல்லை என்பதை வள்ளுவர்

**கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனொடு நேர்.**[30]

எனக் குறிப்பிடுகின்றார். பிறன் இல் விழைவார், கள்வர்கள், கருவியிற் கொல்வார் என உயிர்களைக் கொல்பவர்களை கொலை செய்தல் பயிர்களுக்கிடையே விளையும் களைகளை வெட்டி எறிவதைப் போன்றதாகும். இச்செய்தி மகனைக் கொன்ற சோழனின் கொலைச் செயலுக்கு வலு சேர்க்கின்றது.

அறவினையையும் அதனால் உண்டாகும் புகழினையும் கொண்டாடும் வள்ளுவர், உயிர்களைக் கொல்வதற்கும் கொல்லாமைக்கும் குறட்பாக்களை இயற்றியுள்ளமை வியப்பளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

**வாழ்க்கைச் சூழல்**

அற நூல்கள் மக்களின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்த பல்வேறு வழிமுறைகளை வெளிக்கொணர்கின்றன. அறவழியில் ஈட்டிய பொருளை அறவழியில் கொடுத்து உதவுதல், பிறரைப் பழி பேசாமல் வாழ் நாட்களில் அறவழியில் பயணித்தல். உலக இன்பத்தைத் துறந்து அறம் செய்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொள்ளுதல், ஆகிய கருத்துக்களைக் குறித்து மக்களுக்குப் போதிக்க அற இலக்கியங்கள் முனைப்பு காட்டுகின்றன.

காதல், களவு, கற்பு என வாழ்க்கையின் அனைத்து அங்கங்களையும் இறப்புடன் தொடர்புபடுத்தி அற இலக்கியங்கள் அறத்தைப் போதிக்கின்றன. உலக இன்பத்தில் திருமணமானது முக்கியப்பங்கு வகிக்கின்றது. மங்கலம் நடைபெறும் போதே அமங்கலமும் நடைபெறலாம் என்பதை

**மன்றம் கறங்க மணப் பறை ஆயின,**
**அன்று அவர்க்கு ஆங்கே, பிணப் பறை ஆய், பின்றை**
**ஒலித்தலும் உண்டாம் என்று உய்ந்துபோம் ஆறே**
**வலிக்குமாம்-மாண்டார் மனம்.**[31]

என நாலடியார் குறிப்பிடுகின்றது. திருமணம் செய்து கொள்பவர்களுக்கு மண வாத்தியம் முழங்கும் அன்றைக்கே அவர்க்குப் பிணப்பறை ஒலித்தலும் உண்டென்பதை அறிந்தவர், அறம் செய்தலை தவிர்த்து உலக இன்பத்தில் நாட்டம் கொள்ளமாட்டார். ஆதலால் காலம் கருதாது அறம் செய்து வாழ்தல் நலம் பயக்கும் என்பது நாலடியார் உணர்த்தும் உலகியல் உண்மையாகும்.

திருமணம் செய்து கொண்டு இவ்வுலகினில் இன்பம் உண்டு, இன்பம் மட்டுமே உண்டு என எண்ணுபவர்களுக்கும் சாப்பறை ஒலிக்கும் என்பதை

**கணம் கொண்டு சுற்றத்தார் கல்லென்று அலற**
**பிணம் கொண்டு காட்டு உய்ப்பார்க் கண்டும் மணம் கொண்டு ஈண்டு,**
**உண்டு உண்டு உண்டு என்னும் உணர்வினான்-சாற்றுமே**
**டொன் டொன் டொன் என்னும் பறை.**[32]

என நாலடியார் செவியறிவுறுத்துகின்றது. உலக இன்பம் பொய்த்துப் போவதும் நிலையற்றதும் ஆகும் என்பதை உணர்ந்து மனிதர்கள் செயல்படுதல் வேண்டும் என்பது இப்பாடல் உணர்த்தும் அறிவுரையாகும்.

உலக இன்பமே நிரந்தரம் எனும் எண்ணம் கொண்ட மக்கள் அறிவிலிகள் எனவும் மரணத்தைக் கண்டு அச்சம் கொள்பவர்கள் மூடர்கள் எனவும் குறிப்பிடும் அறநூல்கள் இறந்தவர்களை இறக்கப் போகின்றவர்கள் சுடுகாட்டிற்குத் தூக்கிச் செல்வதை

**சென்றே ஏறிப ஒருகால், சிறுவரை**
**நின்றே ஏறிப பறையினை நன்றேகாண்**
**முக் காலைக் கொட்டினுள், தீக்கொண்டுஎழுவர்**
**செத்தாரைச் சாவார் சுமந்து.**[33]

என நாலடியார் சுட்டுகின்றது. இறந்தவரின் வீட்டிற்குச் சென்று இருமுறை பறையடித்த பின் காத்திருந்து மூன்றாவது முறை பறையடிக்கும் முன் இறந்தவரை இறக்கப் போகிறவர்கள் சுடுகாட்டிற்குத் தூக்கிச் செல்வர் எனக் குறிப்பிடுகின்றது. இவ்வுலகினில் நிலையாக எவரும் வாழ முடியாது அனைவருக்கும் இறப்பு நிச்சயம் உண்டு எனும் உண்மை இங்குப் புலப்படுகின்றது.

செல்வத்தை வாழ்க்கைச் சூழலோடு ஒப்பிடும் வள்ளுவர் இறப்பை அறத்துடன் இணைத்துக் கூறியுள்ளார்

**இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்**
***சீரல் லவர்கண் படின்.***[34]

என செல்வமானது தனக்கு நிகரில்லாதவரிடத்து இருக்குமாயின் அச்செல்வம் இறந்தவர்களிடத்து கொடுத்ததைப் போல யாருக்கும் உதவாமற் போகும் என்பதை புலவர் குறிப்பிடுகின்றார்.

ஊனுடம்பானாது முடைநாற்றம் வீசி அழிந்து போகும். அவ்வாறு அழியும் உடலில் சந்தனத்தைப் பூசி மாலை அணிவித்து அழகு எனப் பாராட்டுகின்ற அறிவிற் குறைந்த மக்களை

**பண்டம் அறியார் படு சாந்தும் கோதையும்**
**கண்டு பாராட்டுவர் கண்டிலர்கொல்-மண்டிப்**
**பெடைச்சேவல் வன் கழுகுபோ்த்து இட்டுக் குத்தல்**
**முடைச் சாகாடு அச்சு இற்றுழி?**[35]

என நாலடியார் குறிப்பிடுகின்றது. அறிவில்லாத மக்கள் தங்களின் உடல், உடலில் அணியப்பெறும் ஆபரணங்கள் என்பனவற்றை அழகு என எண்ணுவார்கள். உடம்பை மட்டும் கருத்தில் கொண்டு செயலாற்றும் மக்கள், உடம்பாகிய வண்டியை அதன் அச்சாகிய உயிர் பிரிந்த பின்பு நலன் கெட்டு கழுகுகள் கொத்தித் தின்பதைப் பார்க்காதவர்கள் என நாலடியார் உடலின் அழிவைக் குறிப்பிடுகின்றது.

**இறப்பிற்கானச் சூழல்கள்**

இறப்பிற்கான சூழல்கள் பலவாறும் மனிதர்கள் முதுமைப் பருவம் அடைதல், உடலுறுப்புகளின் செயல்பாடுகள் குறைதல், உடலியக்கநிலை நின்று போதல், நோய்கள், உடலுபாதைகள், விபத்துகள், உயிரை மாய்த்துக் கொள்ளல், மக்களையும் பிற உயிரினங்களையும் கொல்லுதல் என உயிர்களின் மரணத்திற்குப் பல்வேறு சூழல்கள் உள்ளன. உயிர்களின் பிறப்பிற்கு ‘இனப்பெருக்கம்’ முக்கியக் காரணமாகும். மரணத்தை அறமாகப் பேசும் அற இலக்கியங்கள் உயிர்களின் இறப்பிற்கான சூழலையும் தற்கொலைத் தூண்டல்களையும் குறிப்பிட்டுள்ளன. மனிதர்கள் இறப்பதற்கு ஏதுவான சூழல்களைத் திரிகடுகத்தில்

**பகை முன்னர் வாழ்க்கை செயலும் தொகைநின்று**
**பெற்றத்துள் கோல்இன்றிச் சேரலும், முன்தன்னைக்**
**காய்வானைக் கைவாங்கிக் கோடலும்-இம் மூன்றும்**
**சாவ உறுவான் தொழில்.[36]**

என நல்லாதானார் குறிப்பிடுகின்றார். தன்னுடைய பகைவர் முன் பெருஞ் செல்வத்துடன் வாழ்தல், பசுக்கூட்டத்தின் நடுவே கோலின்றிச் செல்லுதல், தன்னைத் துன்புறுத்துபவனை உறவாகக் கொள்ளுதல் ஆகிய செயல்களால் இறக்க வேண்டிய நிலை ஏற்படும். மரணம் ஏற்பட பல்வேறு காரணங்கள் வழிகள் உண்டென்றாலும் புலவர், மனிதர்கள் மரணத்தைத் தாமே அழைக்கும் சூழல்களாக இவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

**உயிரிருந்தும் உயிரற்றார்**

உயிர்களிடத்து இரக்கமில்லாதவர்கள், செல்வத்தைப் பிறர்க்குப் பகிர்ந்து கொடாதவர்கள், பிறருக்குத் துன்பம் தரும் சொற்களைப் பேசுபவர்கள் ஆகியோர் உயிரிருந்தும் உயிரற்றவர்களாகக் கருதப்படுவதை

**அருளினை நெஞ்சத்து அடைகொடாதானும்**
**பொருளினைத் துவ்வான் புதைத்து வைப்பானும்**
**இறந்து இன்னா சொல்லகிற்பானும்-இம்மூவர்**
**பிறந்தும் பிறந்திலாதார்.[37]**

எனப் புலவர் குறிப்பிடுகின்றார். மக்கள் அனைவரும் உள்ளத்தில் அன்பு கொண்டு அனைவரையும் ஆதரித்து அறம் செய்ய வேண்டும் என்ற கருத்து இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

இசையை வேண்டி விரும்பும் பல்வேறு அரசர்களையும் பாடல்கள் பாடி பரிசில்கள் பெற்றுச் சென்ற பாணர்களையும் புலவர்கள் தங்களுடைய பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இசை மண்டபத்தை அணுகினால் இறப்பு ஏற்படும் என்பதை

**பாடுஅகம் சாராமை, பாத்திலார் தாம்விழையும்**
**நாடகம் சாராமை நாடுங்கால் நாடகம்**
**சேர்ந்தால், பகைபழி, தீச்சொல்லே, சாக்காடே**
**தீர்ந்தார் போல் தீரா வரும்.[38]**

எனக் கணிமேதாவியார் குறிப்பிடுகின்றார். இயல், இசை, நாடகம் நடைபெறும் மண்டபத்தை நாடுவதால் பல்வேறு பிரச்சனைகள் வரக் கூடும் அதனால் இறப்பும் எற்படலாம். இசை மண்டபத்தை அணுகல், பொது மகளிரை விரும்பல், அவர்கள் ஆடும் நடனத்தைக் காணுதல் போன்ற செயல்களை ஆராய்ந்தால், பகை, பழி, கடுஞ்சொல், இறப்பு ஆகியவை நேரிடும் எனப் புலவர் குறிப்பிடுகின்றார். அக்கால கட்டத்தில் மேற்காணும் நிகழ்வுகளால் மரணம் நிகழ்ந்திருக்கலாம். அறமற்ற செயல்களைச் செய்யும் போது இறப்பானது அகன்று செல்லாமல் கவர்ந்து செல்லும் என்பதை இங்கு உய்த்துணரமுடிகின்றது.

**இறப்பும் உறக்கமும்**

மனிதர்களின் அன்றாட வாழ்க்கைச் சூழலில் உறக்கம் பாதி ஆயுளை எடுத்துக் கொள்கின்றது. நம்முடைய முன்னோர்கள் பெரும்பாலும் பகற்பொழுதை உழைக்கவும் இரவுப் பொழுதை உறங்கிக் கழிக்கவும் பயன்படுத்தியுள்ளனர். அவ்வாறாக மக்களின் உறக்க நிலையை வள்ளுவர் இறப்புடன் தொடர்புபடுத்தியுள்ளார்

**உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு.**[39]

என்கிறது குறள். உறங்குவதைப் போன்றது இறப்பு என்றும் உறங்கி விழிப்பதைப் போன்றது பிறப்பு என்றும் கூறுகிறார். உறக்கமும் இறப்பும் இரண்டறக்கலந்ததைப் போன்றது என புலவர் விளக்குகிறார். உயிர்கள் இறந்த பின்பு உடலானது அசைவின்றி இருப்பதைப் போல உறக்கத்திலும் உடல் (மனத்தையும் சேர்த்து) அசையாமல் இருப்பதை இறப்புடன் ஒப்பிட்டுள்ளார் புலவர்.

ஒருவரைப் பற்றி பழிச்சொல் கூறிப் புறம் பேசுபவர்கள் குறித்து வள்ளுவர், ஒருவரைக் கண்டவிடத்துப் புகழ்ந்தும் காணாவிடத்து இகழ்ந்தும் பேசுபவர்கள் சாதல் நலம் என்பதை

**புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்**
**அறங்கூறும் ஆக்கம் தரும்.**[40]

எனச் சுட்டுகின்றார். ஒருவரைப் பற்றி புறம் பேசுதலைத் தொழிலாகக் கொண்டவர் வாழ்தலை விடச் சாதலே அவர்களுக்குச் சிறந்த பயனைத் தரும் என்பது வள்ளுவர் கண்ட உண்மை. அதுவே தமிழர்களின் வாழ்வியல் அறம்.

எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம். அதில் செவிக்கும் முக்கியப் பங்குண்டு. அல்லவைகளைப் புறந்தள்ளி நல்லவைகளை மட்டுமே செவிகள் கேட்டல் வேண்டும். அவ்வாறு நற் செவிகளைப் பெற்று நல்லவற்றைக் கேட்காதவர்கள்

**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினு மென்.**[41]

என வள்ளுவர், நல்லவைகளைக் கேட்டு செவியின் பயனை உணராதவர்கள், வாய்ச்சுவையை மட்டும் பெரிதாக எண்ணுபவர்கள், அவர்கள் இருந்தாலும் இறந்தாலும் பயனில்லை எனக் குறிப்பிடுகின்றார். ஆகவே தான் ‘செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்’ என்று செவியின் முக்கியத்துவத்தை உணர்த்தினார் வள்ளுவர்.

மக்கள் தமக்கு வருகின்ற குற்றங்களை முன்னதாக அறிந்து அதைக் களைதல் வேண்டும். அவ்வாறு அக்குற்றங்களைக் களையாவிடில் அவர்களுக்கு இறப்பு நேரும் என்பதை

**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.**[42]

என வள்ளுவர் குற்றம் கடிதல் எனும் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். ஒருவனுக்கு வருகின்ற குற்றங்களை வருமுன்னரே அறிந்து வராமல் காத்துக்கொள்ளாதவனின் வாழ்க்கை, நெருப்பின் முன் இருக்கும் வைக்கோல் விரைந்து தீப்பற்றி அழிவதைப் போன்றது என்கிறார்.

ஒருவன் தான் கற்றவற்றை அவையோர்க்கு மனதில் புரியும்படி சொல்ல இயலாதவன் உயிருடன் இருந்தும் பயனில்லை இதனை

**உளரெனினும் இல்லாரொ டொப்பர் களனஞ்சிக்**
**கற்ற செலச்சொல்லா தார்.**[43]

என வள்ளுவர் கற்ற கல்வியை அச்சமின்றி அவையோர்க்கு எடுத்துரைக்காதவன் இறந்தவற்குச் சமம் என்று அவை அஞ்சாமை எனும் அதிகாரத்தில் குறிப்பிடுகின்றார்.

பாவமும் பழியும் தோன்றக் கூடிய செயல்களை அறிவிற் சிறந்த சான்றோர்கள் தாம் சாவதாயினும் செய்யார். பாவங்களைச் செய்வதால் தங்களின் மரண காலம் வரைக்கும் பழி தொடரும், அது தொடர்ந்து துன்பத்தையும் தரும் என்பதை

**பாவமும் ஏனைப் பழியும் பட வருவ**
**சாயினும், சான்றவர் செய்கலார்-சாதல்**
**ஒருநாள் ஒருபொழுதைத் துன்பம், அவைபோல்**
**அரு நவை ஆற்றுதல் இன்று.**[44]

என நாலடியார் சுட்டுகின்றது. உயிர்களின் மரணம் கணப்பொழுதில் அனுபவிக்கக் கூடியது. சாவு துன்பத்தைத் தருவது ஆயினும் அது பாவமும் பழியும் போல உயிர் உள்ளவரை நிலைத்து நின்று துன்பம் தருவதில்லை எனக் குறிப்பிடுகின்றது.

மனிதர்கள் இறந்த பின்பும் அவர்களுக்கான அறவழிப் புகழ் எஞ்சி நிற்கும். சங்குகளில் வலம்புரிச் சங்கு பெருமையடைவதைப் போல மக்களுள் புகழுடையார் மட்டும் பெருமையடைவர். இத்தகைய தன்மையுடையார்க்கு இறப்பு இல்லை என்பதை

**நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும்**
**வித்தகர்க் கல்லால் அரிது.**[45]

என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அறமற்ற செயல்களைச் செய்யும் மனிதர்கள் பிறந்தாலும் இறந்தவர் போலாவார். புகழ் கொண்ட பெருமையுடையார்க்கு இறப்பு இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர்.

**இளமை**

நிலையாமையால் சூழ்ந்த மனிதர்களின் வாழ்க்கை உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளது. தாய்மை உறவையுடைவர்களுக்கும் இறப்பு பெருந்துன்பத்தைத் அளிக்கின்றது. அவ்வாறாக தாய்மை உறவு இறந்து துன்பம் தருவதை

**எனக்குத் தாய் ஆகியாள் என்னை ஈங்கு இட்டு**
**தனக்குத் தாய் நாடியே சென்றாள், தனக்குத் தாய்**
**ஆகியவளும் அது ஆனால், தாய்த் தாய்க்கொண்டு**

**ஏகும் அளித்து, இவ் உலகு**[46]

என்கிறது நாலடியார். ஒரு பெண்ணிற்குத் தாயாக இருந்தவள் அவளை விட்டு இறந்தாள். மரணமடைந்தவளின் தாயும் இறந்து போனாள். அவ்வாறாக இவ்வுலகில் நிரந்தரமாக எவரும் இருக்கவியலாது என்பதை இங்கு உணரமுடிகின்றது. ஆக பூமியில் உயிராய்த் தோற்றம் உடையவர்களுக்கு இறப்பு உறுதியாக வரும்.

மனிதர்கள், தாங்கள் செய்ய முனையும் நற்செயல்களைப் பின்னாளில் செய்யலாம் என்று எண்ணாமல் இளமைப் பருவமும் அற வழியில் ஈட்டிய பொருளும் இருக்கும் பொழுதில் அறம் செய்ய வேண்டும் அவ்வாறு செய்யாவிடில்

**மற்று அறிவாம் நல்வினை, யாம் இளையம், என்னாது**
**கைத்து உண்டாம் போழ்தே, கரவாது அறம்செய்ம்மின்**
**முற்றி இருந்த கனி ஒழிய, தீ வளியால்**
**நல் காய் உதிர்தலும் உண்டு.**[47]

என நாலடியார் எடுத்துரைக்கின்றது. இளமை இருக்கும் பொழுதே மனிதர்கள் அனைவரும் நன்மையான அறங்களைப் பிறருக்குச் செய்தல் வேண்டும். பல்வேறு சூழல்களில் 'முது கனியாகிய முதியவர்கள் இருக்கப் பல நல்ல காய்களாகிய இளையோரும் இறத்தல் உண்டு' எனும் செய்தி இங்குக் கிடைக்கின்றது. இதனைக் கொடுங்காற்றால் நன்கு பழுத்த பழங்கள் விழாமலிருக்க நல்ல காய்கள் உதிர்தலும் உண்டு என மனிதர்களின் நிலையாமையை மரணத்துடன் ஒப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

**அன்பு**

உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பைப் போன்று உயிர்களின் வாழ்க்கைக்கும் அன்பிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. பொன், பொருள், புகழ் இருந்தாலும் உயிர்களிடத்து அன்பிலாதவர் வெகுவாக இகழப்படுவார். ஒருவருக்கு நன்மை செய்வதற்கு அன்பு பயன்படுவதைப் போல தீமை செய்பவர்களையும் தீமையால் ஆட்கொள்ளப்படுபவர்களையும் அன்பெனும் கருவியால் அரவணைக்க முடியும். அதிகாரத்தால் செய்ய இயலாதவற்றைக் கூட அன்பால் சாதித்துக் கொள்ள முடியும். அத்தகைய தூயன்பில்லாதவர்களை

**அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.**[48]

என வள்ளுவர் அன்புடைமை எனும் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். ஒருவரின் உள்ளத்தில் அன்பு இருந்தால் அவ்வுடலில் உயிர் இருப்பதாகவும் ஒருவரின் உள்ளத்தில் அன்பு இல்லை என்றால் அவ்வுடலானது வெறும் எலும்பும் தோலும் போர்த்திய உயிரற்ற குறை உடல் என்பது இங்கு புலனாகிறது.

ஒருவனுக்கு நன்கு அறிந்தவரிடம் அன்பு கொண்டு அவர்பால் ஒழுகி நன்மை செய்வதை விடுத்து, அவரின் மனைவியின் மீது காம அன்பு கொள்பவரை பிறன்இல் விழையாமை அதிகாரத்தில் வள்ளுவர்

**விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்**
**தீமை புரிந்தொழுகு வார்.**[49]

எனக் குறிப்பிடுகின்றார். ஒருவன் பிறர் மனைவியின் மீது அன்பு கொள்ளுதல் தவறு எனவும், எளிது எனக்கருதி பிறர் மனைவியை விரும்பித் தீமை செய்பவன் இறந்தவருக்கு ஒப்பாவான் என்ற உண்மை இங்குப் புலப்படுகின்றது. இவ்வகைத் தீமைபுரிபவர்களால் பலருக்கும் துன்பம் விளைவதன்றி எவ்வித பயனுமில்லை என்பது இங்கு அறமாகச் சொல்லப்பட்டுள்ளது.

நண்பர்கள் வறுமையுற்ற காலத்தில் பொருள் கொடுத்து உதவுதலும் இன்சொல் கூறுதலும் கூடியிருத்தலும் நண்பர்கள் வருந்தும் போது தானும் வருந்தலும் அவர்கள் பிரிதலின் பொருட்டு உள்ளம் கலங்குதலும் தூய் அன்பு எனக் கணிமேதாவியார் குறிப்பிடுகின்றார். அதுபோல நண்பர்கள் இறந்த இடத்தில்

**சாதல், பொருள் கொடுத்தல், இன்சொல் புணர்வுஉவத்தல்**
**நோதல், பிரிவில் கவறலே-ஓதலின்**
**அன்புடையார்க்கு உள்ளன ஆறு குணம் ஆக,**
**மென்புடையார் வைத்தார் விரித்து.**[50]

என ஏலாதியில் புலவர் குறிப்பிட்டுள்ளார். நண்பர்களுக்கான ஆறு சிறந்த உண்மைகளைக் கூறிய புலவர், உயிர் நண்பர் இறந்தவிடத்து பிரிவாற்றாமல் இறப்போரை ‘மெய்யன்பு கொண்ட சான்றோர்’ என்கிறார் புலவர். அன்புடையவருக்காக உயிரையும் கொடுத்தல் சிறந்தது என்கிறார் புலவர்.

பணம், பொருள், அதிகாரம் ஆகியவற்றை நோக்கி ஒருவரின் நட்பைப் பெறுதலும் கொடுத்தலும் துன்பத்தைத் தரும். அது சில வேளைகளில் இறப்பினையும் தரும். இதனை

**யானை அனையவர் நண்பு ஒரீஇ, நாய் அனையார்**
**கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்-யானை**
**அறிந்து அறிந்தும், பாகனையே கொல்லும், எறிந்த வேல்**
**மெய்யதா, வால் குழைக்கும் நாய்.**[51]

என நாலடியார் குறிப்பிடுகின்றது. ஒருவரின் நட்பு நாயைப் போன்று இழிவுத் தன்மை கொண்டாலும் தன்னை வளர்த்தவன் சினம் கொண்டு வேல் எறிந்தாலும் அவனைக் கண்டதும் வாலை ஆட்டிக் கொண்டு வரும். ஆனால் யானையைப் போன்ற பெருமையுடையவரின் நட்பானது பல நாள் பழகி இருந்தாலும் சமயம் வாய்க்கும் பொழுது பாகனையே கொல்லும். ஆகையால் ஆராய்ந்த பின் நட்பு கொள்ளல் வேண்டும் இல்லையேல் மரணத்தைத் தழுவ வேண்டியிருக்கும் என்கிறார் புலவர்.

அறிவுத் தெளிவில்லாதாரின் நட்பை விட அவரது பகை நல்லது. ஒருவரிடம் இல்லாத சிறப்புகளைக் கூறிப் புகழ்தலை விட அவரைப் பழித்தல் நல்லது எனக் குறிப்பிடும் நாலடியார் பாடல் பின்வருமாறு

**தெளிவு இலார் நட்பின் பகை நன்று, சாதல்**
**விளியா அரு நோயின் றன்றால், அளிய**
**இகழ்தலின் கோறல் இனிதே, மற்று இல்ல**
**புகழ்தலின் வைதலே நன்று.**[52]

மருந்தினால் தீராத கொடிய நோயுடன் வாழ்வதை விட உயிரை மாய்த்துக் கொண்டு சாதல் நல்லது. ஒருவர் மனம் மிகவும் வருந்தும்படிக்கு இகழ்வதை விட அவரைக் கொலை செய்தல் நல்லது என்பது நாலடியார் கருத்தாகும். மேற்காட்டிய பாடல்கள் அன்பிற்கும் இறப்பிற்குமான தொடர்பினை விளக்குகின்றன. நோய் முற்றியவர்கள் வாழ்வதைவிட இறத்தலே சிறப்பு என, தற்கொலைக்கு அவர்களைத் தூண்டுகிறது என்ற கருத்தும் தொனிப்பதைஇங்குக் காணலாம்.

**தற்கொலைத் தூண்டல்கள்**

அற இலக்கியங்கள், பிறருக்குத் துன்பம் விளைவிப்போர், கொலைத் தொழில் புரிவோர், அற வழியில் செல்லாதோர் ஆகியோர் தம்முடைய அரிய உயிரை மாய்த்துத் கொள்ளுதல் (தற்கொலை செய்தல்) சிறந்தது எனக் குறிப்பிடுகின்றன. ஒருவருக்கு உறவுகளாக உடனிருப்போர் அவர் தம் மனதிலிருக்கும் துன்பத்தைக் கூற, அத்துன்பத்தைப் போக்காத கல் மனம் படைத்தவர்கள் இருத்தலை விட இறத்தல் நன்றென்பதை

**இனியார் தம் நெஞ்சத்து நோய் உரைப்ப, அந்நோய்**
**தனியாத உள்ளம் உடையார்-மணி வரன்றி**
**வீழும் அருவி விறல் மலை நல் நாட!**
**வாழ்வின் வரை பாய்தல் நன்று.**[53]

நாலடியார் அறிவுறுத்துகின்றது. ஒருவர் தனக்கு நேர்ந்த துன்பத்தைப் போக்கிக் கொள்ள இனிமையான உள்ளம் கொண்டவர்களிடம் உதவியை நாடி வரும் போது, அத்துன்பத்தைப் போக்காதவர்கள் மலைமீதேறி கீழே குதித்துத் தற்கொலை செய்தல் நலம் என்கிறது. உடனிருப்பவர்களின் துன்பத்தைப் போக்க இயலாதவர்கள் இறந்துவிட வேண்டும் (தற்கொலை) என நாலடியார் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

விரும்பியவர்களைப் பிரிந்து வாழும் வாழ்க்கையானது சிறப்புற்று அமையாது. அவ்வாறு துயருற்று வாழ்வதைவிட மேலானது தற்கொலை செய்வது என்பதை

**பறைநன்று, பண் அமையா யாழின், நிறை நின்ற**
**பெண்நன்று, பீடுஇலா மாந்தரின் பண் அழிந்து**
**ஆர்தலின் நன்று, பசித்தல், பசைந்தாரின்**
**தீர்தலின் தீப்புகுதல் நன்று.**[54]

என விளம்பிநாகனார் விளம்புகின்றார். பண் இசை அமையாத யாழினை விட பறை மேலானது. நெஞ்சை ஒரு வழியில் நிறுத்தும் கற்பிற் சிறந்த பெண் மேலானவள். கெட்ட பண்டங்களைத் தின்பதை விட பசித்திருத்தல் மேலானது. அவற்றைப் போல உறவுகளின் மேன்மையைச் சொல்லும் போது, 'விரும்பியவர்களை நீங்கி வாழ்வதை விட தீப்புகுந்து சாதல் மேலானது' எனும் கருத்துரைக்கும் இப்பாடல் தற்கொலைத் தூண்டலாகக் கருத இடமுண்டு.

**கொடையறச் செயல்**

கொடையறம் செய்து மக்களிடையே பெரும் வள்ளல்களாக வாழ்ந்தவர்களை இலக்கியங்கள் புகழ்ந்து பாடியுள்ளன. பண்டைக்கால வேந்தர்களும், மக்களும் தங்களை நாடி வரும் விருந்தினர்களுக்கு இன்முகத்துடன் விருந்தோம்பி கொடையாக ஆக்களையும் பொருட்களையும் நிலங்களையும் பரிசாகக் கொடுத்துள்ளனர். கொடைப் பண்பை உடையவர்களே அறத்தை நிலை நாட்டுவர் எனும் சிந்தை மக்களுக்குண்டு. அவ்வாறு கொடைத் தன்மை இல்லாதவர் யாராயினும் இறப்பர் அல்லது இறக்க வேண்டும் என அற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பொருட்களைச் சேர்த்து வைப்பதில் முனைப்புக் காட்டியவர்கள் அப் பொருட்களை ஏழை எளியோருக்கு கொடுக்காமல் இறப்பதை

**இன்றி யமையா இருமுது மக்களைப்**
**பொன்றினமை கண்டும், பொருள் பொருளாகக் கொள்பவோ?**
**ஒன்றும் வகையான் அறம் செய்க! ஊர்ந்து உருளின்**
**குன்று வழி அடுப்பது இல்.**[55]

என முன்றுறை அரையனார் பழமொழியில் குறிப்பிட்டுள்ளார். தாயும் தந்தையுமானவர்கள் ஈட்டிய பொருளையும் ஈன்ற மக்களையும் விடுத்து இறந்தனர். அவர்கள் இறந்ததைக் கண்டவர்கள் பொருட்களை ஒரு பொருட்டாகக் கருத மாட்டார். பொருட்களை ஈட்டிப் பாதுகாத்து வைத்தால் அதனால் பயன் ஒன்றுமில்லை. ஆதலால் இறந்துபடுமுன் ஈட்டிய பொருட்களைக் கொண்டு அறம் செய்ய வேண்டுமாய் இப்பழமொழி கூறுகின்றது.

மேற்குறிப்பிட்ட கருத்தை ஒத்ததாக வள்ளுவரும்

**சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈத லியையாக் கடை.**[56]

எனக் குறிப்பிடுகின்றார். ஒருவருக்குச் சாவை விடக் கொடுமையானது வேறொன்றுமில்லை. பெருஞ் செல்வம் படைத்துப்பிறருக்குக் கொடுத்து உதவ முடியாத நிலையில் சாதல் இனிமையானதாகும். உதவ முடியாத காரணத்தால் இறந்துபடுவதால் அம்மரணமும் மகிமையுடையதாகிறது. இப்படி மரணத்தைக் கூட இனிதாகக் கண்ட பண்பாடு தமிழருடையது.

இதைத் தொடர்புபடுத்தும் விதமாக வள்ளுவர் கீழ்வரும் குறளில்

**ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்**[57]

ஒருவரின் தேவையை அறிந்து ஒப்புரவைச் செய்யாதவரையும் பிறருக்கு கொடுத்துதவ வேண்டும் என்பதை உணராதவரையும் இறந்தவராக கருதும் மனோபாவம் அன்றைய தமிழரிடம் இருந்ததாக இப்பாக்கள் எடுத்துரைக்கின்றன.

மேற்சொன்ன கருத்தை மேலும் சில குறள்களின் வழி எடுத்துரைக்கின்றார் வள்ளுவர். சான்றாக

**வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்**
**செத்தான் செயக்கிடந்த தில்.**[58]

எனவும்

**எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்**
**நச்சப் படாஅ தவன்.**[59]

ஆகிய குறட்பாக்களைச் சுட்டிக் காட்டலாம். பொருளை ஈட்டியவன் தன்னை நாடி வருவோருக்கு இரங்கி கொடுக்காவிடில் மக்கள் யாரும் அவனை விரும்பமாட்டார்கள். அவ்வாறு பொருளைச் சேர்த்துக் கொடாதவன் இறந்த பின் எச்சமாகிய புகழை பெறமாட்டான்.

அற வழியில் ஈதலும் பிறருக்கு நன்மை செய்வதும் உயர்வான பண்பாடாகத் தமிழினம் போற்றியுள்ளமை இங்குத் தெளிவாக விளங்குகின்றது. உயிர்களிடத்து திணை வேறுபாடு கருதாமல் மழையைப் போல உதவிய பெரியோர்களை இன்றும் தமிழ்ச் சமூகம் போற்றுகின்றது. ஏனென்றால் பெறுவதை விட கொடுப்பதில் மனநிறைவும் மகிழ்வும் உண்டு, புண்ணியமும் உண்டு என்பது பெரியோர் கண்ட உண்மையாகும்.

**வேள்விக் கொலைகளுக்கு எதிர்ப்பு**

வேந்தர்கள் போரில் வெற்றி பெற்று வர வேண்டி மக்கள் உயிர்களைப் பலி கொடுத்து யாகம் செய்ததையும் தலைவிகளின் காதல் நோய் தீர வேள்வி செய்து ஆடுகளைப் பலி கொடுத்து யாகம் நடத்தியதையும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

உணவுத் தேவைகளுக்காக உயிர்கள் பலவும் கொல்லப்பட்டுள்ளன. போர், விருந்து, அச்சம் ஆகிய பல காரணங்களைக் கொண்டும் வேள்விகள் நடத்தப்பெற்றுள்ளன. அவ்வாறிருக்க, இரக்கமில்லாமல் வேள்விகளுக்காக உயிர்களை பலியிடுவது அறமற்ற செயல் என்பதை

**நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்**
**கொன்றாகும் ஆக்கங்கடை.**[60]

என வள்ளுவர் கொல்லாமை எனும் அதிகாரத்தில் குறிப்பிடுகின்றார். அறிவிற் சிறந்த சான்றோர் பிற உயிர்களைப் பலி கொடுத்து அதனால் வரும் நன்மையை விரும்பமாட்டார். உயிர்களைக் கொல்வதை விட கொல்லாமலிருத்தல் அறத்துடன் சேர்ந்த நன்மை பயக்கும் என்கிறார் புலவர்.

மறுமை இன்பத்திற்காக வேள்வி செய்து உயிர்களைக் கொன்று அதன் ஊனை உண்ணுதல் ஒழுக்கமின்மையாகும் இதனை

**செறலிர் கொலைப்புரிந்து செணுவப்பா ராகி**
**அறிவின் அருள்புரிந்து சொல்லார்-பிறிதின்**
**உயிர்செகுத் தூன்றுய்த் தொழுகுத லோம்பார்**
**தயிர்சிதைத்து மற்றொன் றடல்.**[61]

எனப் பழமொழி குறிப்பிடுகின்றது. அறிவுடனும் அருளுடனும் மறுமையை நாடாமல் வேள்வி செய்து உயிர்களைக் கொன்று அதன் ஊனை உண்பது, தயிரினை அழித்து வேறு உணவாகச் சமைத்தலைப் போலாகும் என்பது இதன் பொருள்.

வேள்வி எனும் பெயரில் உயிர்களைக் கொல்வதால் பல நன்மைகள் கிடைக்கப்பெறினும் அதனால் பயனில்லை. பிற உயிர்களைக் கொல்லும் செயலைச் செய்வதினால்

**தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி**
**தின்னுயிர் நீக்கும் வினை.**[62]

எனத் திருவள்ளுவர் உரைக்கின்றார். ஒருவன் தன்னுயிரை இழக்க நேர்ந்தாலும், பிற உயிரைக் கொல்லும் செயலைச் செய்யக்கூடாது என்கிறார்.

**உயிர் பறிக்கும் கூற்றம்**

உயிர் மனிதர்களின் உடலியக்கத்தின் தூணாகத் திகழ்கின்றது. உயிர் பிரிந்த பின்பு உடலியக்கம் நின்று உடல் அழியும் என அற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கண்களுக்குப் புலப்படாத உயிரைக் கூற்றுவன் (எமன்) கொண்டு செல்வான். மக்கள் பல்வேறு வகையான எண்ணங்களை கைக்கொண்டு வாழ்கின்றனர். ஆனால் கூற்றுவன் உயிர்களின் இறப்பை மட்டுமே நோக்கி மகிழ்வான் இதனை

**கோல்நோக்கி வாழும் குடிஎல்லாம், தாய்முலையின்**
**பால்நோக்கி வாழும் குழவிகள், வானத்**
**துளிநோக்கி வாழும் உலகம், உலகின்**
**விளிநோக்கி இன்புறூஉம் கூற்று**[63]

என விளம்பிநாகனார் நான்மணிக்கடிகையில் குறிப்பிடுகின்றார். அரசனின் செங்கோலை நோக்கி மக்களும் தாய்ப்பாலை நோக்கி குழவியும் வான் மழையை நோக்கி உலகமும் மகிழ்வதைப் போல உயிர்களின் மரணத்தை நோக்கி கூற்றுவன் மகிழ்வான் என்பது இங்கு விளங்குகின்றது.

கூற்றுவன் அனைவரையும் கொல்வதில்லை. மேன்மை பெற்ற பல்வகை நூல் கேள்விகளின் பயனை அறிந்த அறிவில் சிறந்தோர் விரைவாக மரணமடைவதை

**பல் ஆன்ற கேள்விப் பயன் உணர்வார் வீயவும்**
**கல்லாதார் வாழ்வது அறிதிரேல்-கல்லாதார்**
**சேதனம் என்னும் அச் சேறு அகத்து இன்மையால்**
**கோது என்று கொள்ளாதாம் கூற்று.**[64]

என நாலடியார் குறிப்பிடுகின்றது. அற வழியில் நடந்து பிறருக்கு நன்மை பயக்கும் செயல்களைச் செய்யும் கல்வி கற்ற அறிவுடையோர் விரைவில் இறக்க எமன் துணைபுரிவான். ஆனால் அறிவு எனும் சாறு இல்லாதவர்களை வெறும் சக்கை என நினைத்து எமன் கொல்வதில்லை. அறிவுள்ளவர்களை கரும்பின் சாறு எனவும் அறிவில்லாதவர்களை வெறும் சக்கை (வீண் பொருள்) எனவும் நாலடியார் கூறுகின்றது.

நாலடியார் ‘செல்வம் நிலையாமை’ எனும் அதிகாரத்தில் கூற்றம் குறித்தான பதிவுகள் கிடைக்கின்றன. மக்கள் தாம் பெற்ற பொருட்கள் பிற்காலத்தில் உதவும் எனக்

கருதாது அதைக்கொண்டு அறம் செய்ய வேண்டும் என்பதை அற இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. உடலியக்க நாட்கள் முடிந்த பின் கூற்றுவன் உயிர்களை அழிப்பதை

**தோற்றம் சால் ஞாயிறு நாழியா, வைகலும்**
**கூற்றம் அளத்து, நும் நாள் உண்ணும், ஆற்ற**
**அறம் செய்து அருளுடையீர் ஆகுமின், யாரும்**
**பிறந்தும் பிறவாதாரில்[65]**

எனவும்

**.........................கோடு இல் தீக்கூற்றம்**
**தொடுத்து ஆறு செல்லும் சுரம்.[66]**

எனவும்

**இழைத்த நாள் எல்லை இகவா, பிழைத்து ஒரீஇ**
**கூற்றம் குதித்து உய்ந்தார் ஈங்கு இல்லை[67]**
**......................................................**

எனவும் கூற்றம் குறித்த பதிவுகளை நாலடியார் குறிப்பிடுகின்றது. கூற்றுவன் கதிரவனைக் கால அளவாகக் கொண்டு மக்களின் வாழ்நாளை நாள் தோறும் அளந்து உண்ணுவான். உயிர்களின் வரையறுக்கப்பட்ட நாள் கடவாது உயிர்களைக் கூற்றுவன் அழிப்பான். தனது தொழிலில் தப்பாத கூற்றுவன் தனது பாசக்கயிற்றால் இறப்பு என்னும் பாலை நிலவெளியில் இழுத்துச் செல்வான் எனக் கூற்றம் குறித்த பதிவுகள் கிடைக்கின்றன.

பிற உயிர்களுக்கு உதவாதவர், பொருட்களைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்காதவர், அற வழியில் நடக்காதவர் ஆகியவர்களை கூற்றம் கொள்ளும் எனக் குறிப்பிடும் புலவர்கள், பிற உயிர்களைக் கொல்லாது வாழ்கின்றவர்களை

**கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்**
**செல்லா துயிருண்ணுங் கூற்று.[68]**

என மேற்காணும் குறள் விளக்கமளிக்கின்றது. பிற உயிர்களுக்கு நன்மை செய்யாதவர்கள் இறந்துபடுவர் எனக் குறிப்பிடும் புலவர், பிற உயிர்களைக் கொல்லாது வாழ்கின்றவரின் உயிரை எமன் விரும்ப மாட்டான் என உரைக்கின்றார்.

பூமியில் பிறந்த உயிர்களனைத்தும் அறம் செய்தாலும் செய்யாவிடிலும் நிச்சயம் இறந்துபடும். ஒருவர் பிறரைத் தூற்றுவதை விட வாழ்த்துதல் புகழைத் தரும் என்பது இங்கு உரைக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி, தாயன்பு, மழையருள், ஆகியன போன்று இறப்பும் இன்றியமையாததாகும்.

**புறம் கூறுதல்**

தீமையற்ற நல்லொழுக்கம் செல்வத்தைப் போன்றது. முறையான இல்லறத்தை நடத்துதல் துறவறத்தைப் போன்றது. இவற்றுள் மதியாதார் மனைக்குச் செல்லுதல் இழிவைத் தரும் எனக் கூறுகின்றது நான்மணிக்கடிகை.

**திருஒக்கும் தீது இல் ஒழுக்கம், பெரிய**
**அறன் ஒக்கும் ஆற்றின் ஒழுகல் பிறனைக்**
**கொலை ஒக்கும், கொண்டுகண்மாறல், புலை ஒக்கும்**
**போற்றாதார் முன்னர்ச் செலவு.**[69]

எனப் பிறரைப் பற்றி புறம் கூறுவது அவர்களைக் கொலை செய்வதற்குச் சமம் என்பதை அறிவுறுத்துகின்றது.

தவம் புரிந்து அற வாழ்க்கையை மேற் கொண்டவர்களையும், தவத்தால் முதுநிலை அடைந்தவர்களையும் கூற்றம் கொல்வதில்லை என்பதை

**கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.**[70]

என வள்ளுவர், முதுநிலை அடைந்த பெரியோர்களைக் கொல்ல கூற்றுவன் அஞ்சுவான் எனவும் அதனால் அவர்கள் இறந்தாலும் இறவாமை உள்ளோராகக் கருதப்படுவர்.

**யாக்கை நிலையாமை**

இவ்வுலகினில் தோற்றம் பெற்ற உயிர்கள் அனைத்திற்கும் இறப்பு என்பது நிச்சயம் உண்டு. அப்போது உயிர் பிரியும் உடல் அழியும் என அற நூல்கள் குறிப்பிடுகின்றன.

**நார்த் தொடுத்து ஈர்க்கில் என்? நன்று ஆய்ந்து அடக்கில்என்?**
**பார்த்துழிப் பெய்யில் என்? பல்லோர் பழிக்கில் என்?**
**தோற்பையுள் நின்று, தொழில் அறச்செய்து ஊட்டும்**

**கூத்தன் புறப்பட்டக்கால்.**[71]

என நாலடியார், தோல் பையாகிய உடம்பிலிருந்து கூத்தாடியாகிய உயிரானது சென்ற பின்பு உடலால் எவ்விதப் பயனும் இல்லை. உயிரற்ற உடலை கயிற்றில் கட்டி இழுத்தாலென்ன, கண்ட இடத்தில் போட்டாலென்ன, சுத்தம் செய்து அடக்கம் செய்தாலென்ன, அல்லது பலரும் பழித்தாலென்ன என உயிரற்ற உடலால் எந்தப் புண்ணியமுமில்லை என்பதைப் புலவர் குறிப்பிடுகின்றார். ஆதலால் உயிரானது உடலில் இருக்கும் பொழுதே அறம் செய்ய வேண்டும்.

மனிதர்கள் தாங்கள் பெற்றுள்ள நல்லுடல் கொண்டு அறம் செய்தல் வேண்டும். அறம் செய்தலால் அனைத்து பயன்களும் அவர்களை வந்தடையும். அவ்வாறு தாம்பெற்ற யாக்கையால் அறம் செய்யாதவர்கள்

**யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற**
**யாக்கையால் ஆய பயன் கொள்க-யாக்கை**
**மலை ஆடும் மஞ்சுபோல் தோன்றி, மற்று ஆங்கே**
**நிலையாது நீத்துவிடும்.**[72]

என நாலடியார் மனிதர்களின் பிறவிப்பயனைக் குறிப்பிடுகின்றது. பிறவிப் பயனால் பெற்ற உடலைக் கொண்டு அறம் செய்ய வேண்டும். மலைமீது காணப்பெற்று பின்பு காணாமற் போகும் மேகத்தைப் போல உயிர் பிரிந்த பின்பு உடல் அழியும் ஆதலால் அனைத்தும் உள்ள போதே அறம் செய்க என நாலடியார் வலியுறுத்துகின்றது.

இதனைப் போன்றே நாலடியாரில் மற்றொரு பாடல்

**படுமழை மொக்குளின் பல் காலும் தோன்றி**
**கெடும், இது ஓர் யாக்கை என்று எண்ணி, தடுமாற்றம்**
**தீர்ப்பேம் யாம், என்று உணரும் திண் அறிவாளரை**
**நேர்ப்பார் யார், நீர் நிலத்தின் மேல்?**[73]

என, பெய்கின்ற மழைநீரில் தோன்றக் கூடிய குமிழிகளைப் போல உடலானது தோற்றம் பெற்று அழியும் எனக் குறிப்பிடுகின்றது. உயிர் பிரியும் உடல் அழியும் என்பதை உணர்ந்து அறம் செய்யும் அறிவுடையோரை ஒத்திருப்பவர் எவரும் இல்லை.

ஒருவரின் இறப்பு புல்லின் நுனி மேல் இருக்கும் நீர் போன்று நிலையில்லாத தன்மையுடையது இதனை

**புல் நுனிமேல் நீர்போல் நிலையாமை என்று எண்ணி,**
**இன்னினியே செய்க அறவினை-இன்னினியே**
**நின்றான், இருந்தான், கிடந்தான் தன் கேள் அலறச்**
**சென்றான் எனப்படுதலால்![74]**

என நாலடியார், ஒருவன் நின்று கொண்டிருந்தான், சிறிது நேரம் கழித்து உட்கார்ந்தான், அடுத்து படுத்தான் உறவினர் கதறி அழ இறந்தான் எனக் குறிப்பிடுகின்றது. மனிதர்கள் உறவினர்களைப் போல உடலான வீட்டிற்கு வந்து தங்கி இருந்து, உறவுகள் பிரிந்து செல்வதைப் போல உடலானது கிடக்க உயிர் பிரிந்து மரணமடைவர் என்பது இங்குப் புலப்படுகின்றது.

மனிதர்களின் அறச் செயல்கள் மட்டுமே அவர்களின் உயிருக்குத் துணையாக வந்து புகழைத் தரும். உயிர் கொண்டு இயக்கம் பெறும் உடற்கூடும் அழியும் என்பதை

**தாம் செய்வினை அல்லால், தம்மொடு செல்வதுமற்று**
**யாங்கணும் தேரின், பிறிது இல்லை, ஆங்குத் தாம்**
**போற்றிப் புனைந்த உடம்பும் பயன் இன்றே**
**கூற்றம் கொண்டு ஓடும் பொழுது.[75]**

என நாலடியார் எடுத்துரைக்கின்றது. மக்கள் தங்கள் உடலானது அழகு பெற்றது எனவும் அவ்வுடலை அலங்கரித்து, ஆடம்பரமான ஆடைகள் அணிந்து, அணிகலன்கள் பூட்டி இன்புருதலால் எவ்விதப் பயனும் இல்லை. மனிதர்கள் தங்களின் உடலை நிரந்தரம் என்று எண்ணும் போது உயிரைக் கவர்ந்து செல்லும் கூற்றுவன், முடைநாற்றம் வீசி வீணாய்ப் போகும் உடலைக் கவர்ந்து கொண்டு செல்ல மாட்டான் என்பதை நாலடியார் கூறுகின்றது.

**சினம்**

ஒருவரின் மரணம் இயற்கையாக மட்டுமின்றி பல்வேறு வழிகளில் செயற்கையாகவும் அமைந்துவிடும். வாய்ச்சொல் தொடங்கி அநேகக் காரணங்களால் பல்வேறு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. மனிதர்களின் குணநலன்களில் அச்சம், வஞ்சகம், மட்டுமல்லாமல் கடும் சினம் கூட ஒருவரின் மரணத்திற்கு வித்திடும். ஒருவரின் சினமானது அவரை மட்டுமல்லாமல் அவரைச் சார்ந்தவர்களையும் அழித்துவிடும் என அற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பிறர் மீது அன்பு செலுத்துவதால் அவரைத்

தீமையினின்றும் விலக்க முடியும். ஆனால் மிகுதியான சினமுடையவர்கள் இறந்தவர்க்குச் சமம் என்பதை

**இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை.**[76]

என்பதாக வள்ளுவர் சுட்டுகின்றார். ஒருவர் தனக்கு உண்டான கோபத்தை விடுவாரானால் அவர் தவம் புரிந்த துறவியர்களுக்குச் சமம். மிகுதியான கோபத்தைக் கைக்கொண்டு நடப்பவர்கள் இறந்தவர்களுக்குச் சமம் என்கிறார் புலவர்.

சினம் என்ற கடுந்தீயானது தன்னை மட்டுமல்லாமல் தன்னுடைய சுற்றத்தையும் மரணத்திற்கு இரையாக்கும். ஒருவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள சினமில்லாமல் இருத்தல் வேண்டும்.

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்.**[77]

என்கிறார் வள்ளுவர். ஒருவன் தன்னையும் பிறரையும் பாதுகாத்துக்கொள்ள சினமில்லாமல் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அவனுக்கு வருகின்ற சினத்தால் அவனுக்கே மரணம் நிகழ வாய்ப்புள்ளமை இங்கு புலனாகிறது.

இதைப் போன்றே வள்ளுவர், வெகுளாமை எனும் அதிகாரத்தில்

**சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமம் புணையைச் சுடும்.**[78]

என, ஒருவர் தமக்கு தீமை செய்தாலும் அவரிடம் சினம் கொள்ளாமல் இருக்க வேண்டும். ஒருவன் வலியாரைச் சினப்பதால் அவ்வலியாரின் சினத்தால் அழிந்துபடுவான் எனப் புலவர் விளக்கம் தருகின்றார். ஆக மனிதர்கள் தங்களின் குணாதிசயங்களால் வாழ்வதும் வீழ்வதும் சாத்தியமாகிறது.

**கொல்லாமை**

மனிதர்களுக்கு இயற்கையைப் பாதுகாத்தல், உயிர்களிடத்து அன்பு செலுத்துதல், பிற உயிர்களைக் கொல்லாமை, பிறரது பழிக்கும் பாவத்திற்கும் இடம் கொடாமை ஆகியவை முக்கிய அறமாகக் கொள்ளப்படுகின்றன. மனிதர்களுக்கான ஆகச் சிறந்த அறவினை என்பது கொல்லாமை ஆகும்.

**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று.**[79]

என மனித இனத்தின் முதல் அறமானது கொல்லாமை எனக் குறிப்பிடும் புலவர் இரண்டாவது அறமாகப் பொய் கூறாமையை முன்வைக்கிறார். தனிமனிதன் ஒழுகவேண்டிய குறைந்தபட்ச அறமாக இதனைக் கொள்ளலாம்.

உயிர்கள் வாழும் இவ்வுலகில் நீண்ட காலம் புகழொடு வாழ்வதற்கு அறம் செய்தல் வேண்டும். அவ்வறமானது கொல்லாமை என்பதை

**நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்**
**கொல்லாமை சூழும் நெறி.**[80]

எனவும்

**நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்**
**கொல்லாமை சூழ்வான் தலை.**[81]

எனவும் புலவர் குறிப்பிடுகின்றார். ஒருவருக்கு அழியாப் புகழையும் மறுமை இன்பத்தையும் தருவது உயிர்களைக் கொல்லாமை ஆகும். பிற உயிர்களைக் கொல்லாமல் வாழ்பவனின் உயிரை எமனும் கொண்டு போக அஞ்சுவான் என்கிறார் புலவர். அனைத்து உயிர்களுக்கும் நிச்சயமாக மரணம் உண்டு என்பதை நாம் அறிந்ததே, அறம் செய்ய வலியுறுத்தும் வள்ளுவர் ஒருவருக்குக் கிடைக்கும் புகழை மரணத்துடன் ஒப்பிட்டுள்ளார். கொலைத் தொழில் செய்யாத ஒருவரின் மரணம் புகழைச் சாரும் என்பதில் ஐயமில்லை.

**தலைமக்களின் இறப்பு**

தலைமக்களின் காதல், களவு வாழ்க்கையைக் குறித்த பதிவுகளைச் சங்க இலக்கியங்கள் பெரும்பான்மையாகப் பதிவு செய்துள்ளன. காதல் புரிந்த தலை மக்களின் களவு வாழ்க்கை, தலைவனின் பிரிவு, தலைவியின் துயர் நிலை ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன. இதைப்போன்று அறநூல்களாகிய திருக்குறளிலும் நாலடியாரிலும் தலைமக்களைக் குறித்த இறப்பு தொடர்பான செய்திகள் கிடைக்கின்றன. அறம், பொருளை இயற்றியுள்ள வள்ளுவர் தலைமக்களின் வாழ்க்கைச் சூழலை ‘இன்பத்துப்பால்’ எனத் தனி அதிகாரமாக இயற்றியுள்ளார்.

மேலும் திருக்குறளை ஒத்த நாலடியாரிலும் இன்ப இயல் பகுதி இடம் பெற்றுள்ளது. நாலடியார் இன்பத்துப் பாலில் தலைமக்களின் காதல் வாழ்க்கை கூறப் பெற்றிருந்தாலும் தலைமக்களின் இறப்பு குறித்துக் கூறப்பெறவில்லை.

சங்க இலக்கியங்கள் தலைமக்களின் துயர் நிலையை மரணத்துடன் தொடர்புபடுத்தியுள்ளது. அதைப்போன்றே திருக்குறளில் வள்ளுவர், தலைமக்கள் பிரிவாற்றாமையால் காம நோயுற்று தங்களுடைய மரணத்தை எண்ணியதை

**வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்**
**அதற்கன்னள் நீங்கும் இடத்து.**[82]

எனப் புலவர் குறிப்பிடுகின்றார். தலைமக்கள் இணையும் இடத்து, அவர்களின் உயிரானது உடலைச் சேர்வதாகவும் தலைமக்கள் பிரியும் இடத்து உயிரானது உடலை விட்டுப் பிரிந்து செல்கிறதாகவும் உள்ளது என்கிறார் புலவர்.

இல்வாழ்க்கை நடத்த வேண்டிப் பொருள்வயிற் பிரியும் தலைவனிடம் தலைவி, பிரிவாற்றாமையை வருத்தத்துடன் வெளிப்படுத்துகின்றாள். அவ்வாறு வருந்துகிறவள் மரணத்தைத் தழுவ நேரும் என்பதை வள்ளுவர்

**செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை.**[83]

எனத் தலைவியின் துன்பத்தைப் புலவர் எடுத்துரைத்துள்ளார். தலைவன் தலைவியைப் பிரியும் இடத்துத் தலைவி கூறுகின்றாள், தலைவன் தன்னைப் பிரியாமல் இருந்தால் தன்னிடம் ஆறுதல் மொழி பேச வேண்டும். தலைவன் தன்னைப் பிரிந்தால் தலைவி இறக்க நேரிடும். ஆதலால் பொருளீட்டச் செல்லும் தலைவன் திரும்பி வரும் பட்சத்தில் தலைவியின் உடனிருப்பவர்களிடம் தலைவியின் நிலையைக் (அதாவது தலைவியின் மரணத்தை) கேட்டறியும்படிக்கு தலைவி கூறுவதாக இக்குறள் அமைந்துள்ளது. தலைவன் வேறொருத்தியை நாடிச் செல்வானோ என்ற அச்சத்தில் இச்செய்தியானது தலைவியின் தற்கொலை முயற்சியாக உள்ளதாகக் கருதலாம்.

தலைவியைப் பாதுகாத்து அவள் மீது அன்பு செய்து பிரியாது இருந்த தலைவன், பிரிய நேர்ந்தால் தலைவி மரணத்தைத் தழுவுவாள் என்பதை

**ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்**

**நீங்கின் அரிதால் புணர்வு.**[84]

என வள்ளுவர், தலைவன் பிரிந்து சென்றால் மீண்டும் வந்து அவளைச் சேர்வது அரிதாகும். தலைவன் இல்லாத ஊரில் வாழ்வது சாவைவிடக் கொடிதாகும் எனத் தலைவி எண்ணுகிறாள். தலைவன் பிரிந்தவுடன் தலைவியின் உயிர் உடலை விட்டுப் பிரிந்து போகும் எனப் புலவர் உரைக்கின்றார்.

நனவுக் காலத்தில் தலைவனைத் தேடிச் செல்ல இயலாத தலைவி, நித்திரையில் வரும் கனவு தலைவனைக் கொண்டு வந்து சேர்ப்பதால் மட்டுமே உயிருடன் இருக்கிறாள் என்பதை

**கனவினான் உண்டாகும் காமம் நனவினான்**
**நல்காரை நாடித் தரற்கு.**[85]

என வள்ளுவர், தலைவி நனவுக்காலத்தில் தலைவனுடன் வாழ்ந்த நிகழ்வானது, கனவிலும் தலைவியை ஆற்றுப்படுத்தி தொடர்வதால் அவள் உயிருடன் இருக்கின்றாள். இல்லையேல் அவள் தலைவன் பிரிவால் இறந்துபடும் சூழலுண்டு எனக் குறிப்பிடுகின்றார் புலவர். இலக்கியங்கள் குறிப்பிடும் தலைவன், தலைவியை நனவில் தேடிக் கண்டு உறவாடியுள்ளான். ஆனால் எந்த தலைவியும் தலைவனைத் தேடிக் கண்டு உறவாடவில்லை. இவ்வாறிருக்க, புலவர் ‘தலைவி தலைவனைக் கனவில் தேடிச் செல்கிறாள்’ எனக் குறிப்பிட்டுள்ளார்’.

பகற் பொழுதில் கூடிக் களித்த தலைமக்கள் இரவுக்காலத்தில் பிரிவுத்துயர் அடைகின்றனர். அத்துன்பமானது தலைவியை இறக்கச் செய்கின்றது. இதனை

**மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்**
**வேலைநீ வாழி பொழுது.**[86]

எனப் புலவர், தலைவியின் நிலையைக் குறிப்பிடுகின்றார். தலைவனைப் பிரிந்த இரவுக் காலமானது தலைவிக்கு இறுதிக்காலமாக இருக்கின்றது. பகல் காலம் தலைவனுடன் பொழுதைக் கழித்த தலைவிக்கு அவனில்லாத இரவுக் காலமானது உயிரை உண்ணும் வேலாக அமைந்துள்ளது எனும் குறிப்புக் கிடைக்கின்றது.

காதல் புரிந்து இல்லறத்தை அமைப்பதற்கான சூழலில், தலைவன் பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்துள்ளான். இப்பிரிவு தலைவியின் உயிரைப் பறிக்கும் என்பதை

**பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை**
**மாயுமென் மாயா உயிர்.**[87]

என பொருள்வயிற் பிரிந்த தலைவனை எண்ணி மாலைக்காலத்தில் தனித்திருக்கின்றாள் தலைவி. தலைவன் பொருளையே நோக்கமாகக் கொண்டுள்ளான். அவன் எப்போது தன்னை வந்து சேர்வான் எனும் அச்சம் கொண்ட 'தலைவியின் உயிர் பிரிவதைப் போல் உள்ளது' எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

தலைவன், போரில் வெற்றி பெறுதலை நோக்கமாகக் கொண்டு பிரிந்து சென்றுள்ளான். போருக்குச் சென்ற தலைவன் உயிருடன் திரும்பி வருதல் வேண்டும். தலைவன் வருவான் என்ற எண்ணம் 'வருவானோ' எனும் அச்சத்தைத் தந்து தலைவியைக் கொல்லும் என்பதை

**உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்**
**வரல்நசைஇ இன்னும் உளேன்.**[88]

எனப் புலவர், தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனின் வரவை எண்ணித் தலைவி உயிருடன் இருக்கின்றாள். தன்னைப் பிரிந்து சென்ற தலைவன் வரவில்லை எனில் 'இறப்பேன்' எனத் தலைவி கூறுவதானச் செய்தி இக்குறளில் பொதிந்துள்ளது. ஆக 'சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் தலைவிகளும் அற இலக்கியங்கள் குறிப்பிடும் தலைவிகளும் தற்கொலையை ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளமை இங்குப் புலனாகிறது.

மேலும், இன்பத்துப் பாலை இயற்றியுள்ள வள்ளுவர், சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டதைப்போல தலைவிகளின் இறவாத நிலையை இங்கும் குறிப்பிட்டுள்ளார். அற இலக்கியங்கள் எந்த ஒரு தலைவியும் இறந்ததாக குறிப்பிடவில்லை. 'உயிரோடு இருக்கின்றேன்' 'உயிர் போகும்' 'உயிர் பிரியும்' என்று தலைவியர் கூறியதைப் போலவே இங்குப் புலவரும் குறிப்பிட்டுள்ளார். ஆக இலக்கியங்கள் குறிப்பிடும் எந்தத் தலைமக்களும் இறந்துபடவில்லை என்பது புலனாகிறது. சங்க இலக்கியங்களும் அற இலக்கியங்களும் தலைமக்களின் காதல் வாழ்க்கையை மரணத்துடன் தொடர்புபடுத்திய செய்திகளே பதிவு செய்யப்பட்டுள்ளன. மனிதர்களின் வாழ்க்கைச் சூழலோடு மரணத்தை ஒப்பிடுவது ஒரு வகையான உத்தி எனலாம்.

**ஊழ்வினை**

காலம் மூவகைப்படும் அவை இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்பனவாகும். இதனைப் போன்றே முற்பிறவி, இப்பிறவி, மறுபிறவி எனப் பிறவியை மூன்றாகப் பகுப்பர். தமிழிலக்கியங்கள் உயிர்களின் முற்பிறவியை 'ஊழ்' எனக் குறிப்பிடுகின்றன. இவ்வுலகினில் பிறப்பெய்திய அனைத்து உயிர்களும் வாழ்நாள் எல்லை கடந்ததும் உயிர் நீங்கும் என்றத் தத்துவத்தை அற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. 'தம் தம் தகுதி இருவாய்த்து உயிர்' என ஊழின் பெருமையை நான்மணிக்கடிகை சுட்டுகின்றது.

இறப்பு என்பது அனைத்து உயிர்களுக்கும் உறுதியானது எனக் குறிப்பிடும் அற இலக்கியங்கள் 'இம்மை' போலவே 'மறுமையும்' உண்டென்பதை

**அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்**
**திங்களும் தீங்குறுதலும் காண்டுமால்-பொங்கி**
**அறைப்பாய் அருவி அணிமலை நாட!**
**உறற்பால யார்க்கும்முறும்**[89]

என முன்றுறை அரையனார் பழமொழியில் குறிப்பிட்டுள்ளார். அகன்ற வானத்தில் ஒளி வீசும் நிலவைப் பாம்பானது விழுங்குவதைப் போல அனைத்து உயிர்களுக்கான இன்பங்களும் துன்பங்களும் அவரவர் வினைப் பயனால் வரும் என்கிறார் புலவர்.

ஒருவன் பொருளைச் சம்பாதித்து தானும் அனுபவிக்காமல், பிறருக்கும் கொடுக்காமல் இறந்தவனை, அப்பொருளானது தன்னை பயன்படுத்திக் கொள்ளாமல் இறந்தானே என ஏளனமாய்ச் சிரிக்கும் என்கிறது நாலடியார்

**துய்த்துக் கழியான், துறவோர்க்கு ஒன்று ஈகலான்**
**வைத்துக் கழியும் மடவோனை-வைத்த**
**பொருளும் அவனை நகுமோ, உலகத்து**
**அருளும் அவனை நகும்.**[90]

என மறுமையையும் குறிப்பிடுகின்றது. பொருளைச் சேர்த்த ஒருவன் இரவலர்களுக்குக் கொடாமலும் தான் ஈட்டியப் பொருளால் அறம் செய்யாமலும் இறந்தமையால் மறுமைக்கான பேறு பெற்றிலன் என்று அருளும் அவனைப் பார்த்துச் சிரிக்கும் என நாலடியார் குறிப்பிடுகின்றது.

ஊழைக் குறிப்பிடும் வள்ளுவர், ஒருவர் என்ன முயற்சி செய்தாலும் அவனது ஊழ் வினை நிச்சயம் அவனை வந்து சாரும். இதனை

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினுந் தான்முந் துறும்.**[91]

எனப் புலவர் குறிப்பிடுகின்றார். ஒருவர் அறச் செயல்கள் செய்தாலும் தீமையான செயல்களைச் செய்தாலும் அவர்களுக்கான ஊழ்வினையானது மறுமையிலும் தொடரும் என்கிறார் புலவர்.

ஒருவருக்கு இறப்பைத் தரும் ஊழானது அம்பைப்போல அவரது உடம்பில் பாய்ந்து தாக்காமல் நிலத்தில் விழாது என்பதை

**நாணியஞ்சத் தக்க அவைவந்தால் தங்கண்**
**துணியஞ்சார் செய்வ துணர்வார்-பனியஞ்சி**
**வேழம் பிடிதழூஉம் வேய்சூழ் மலைநாட!**
**ஊழம்பு வீழா நிலத்து.**[92]

என முன்றுறை அரையனார் பழமொழியில் குறிப்பிட்டுள்ளார். ஒருவனுக்கு ஊழினால் வரும் நிகழ்வானது, அவன் எங்கு ஒளிந்து கொண்டாலும் அவனைப் பின் தொடர்ந்து வரும். ஊழ்வினை எல்லாப் பிறப்பிற்கும் தொடரும் எனப் புலவர் குறிப்பிடுகின்றார்.

பேரறிவு பெற்ற சான்றோர்களிடத்திலும் பல்வகையான குற்றங்கள் இருப்பதற்கான காரணம் ஊழ்வினை தான் என்பதை

**சுட்டிச் சொல்லப்படும் பேர் அறிவினார் கண்ணும்**
**பட்ட இழுக்கம் பலவானால், பட்ட**
**பொறியின் வகைய, கருமன், அதனால்**
**அறவினை ஊழே அடும்.**[93]

எனப் பழமொழியில் முன்றுறை அரையனார் கூறியுள்ளார். சான்றோர்கள் முதல் சாமானியர்கள் அனைவருக்கும் பிறவியால் நிகழ்ந்த அறவினையும் தீவினையும் அவர்களின் மறுபிறவியிலும் தொடர்ந்து வரும். மனிதர்கள் இப்பிறவியில் பெற்றுள்ள அறிவு நலத்தை, முற்பிறவியில் தொடர்புடைய தீமையான ஊழே அதனைத் தவறாது வெற்றி கொள்ளும் எனும் செய்தியும் இங்குக் கிடைக்கின்றது.

அமைச்சர் முதலாய இருபத்து நான்கு பேரும், திருவடித் தொண்டு செய்யப்பெறும் நால்வரும், நான்மறை ஒழுக்கத்தை விரும்பி நடப்பாராயின்

**அறுநால்வர் ஆய்புகழ்ச் சேவடி ஆற்றப்**
**பெறு நால்வர் பேணி வழங்கிப் பெறும்நான்**
**மறைபுரிந்து வாழுமேல், மண் ஒழிந்து, விண்ணோர்க்கு**
**இறைபுரிந்து வாழ்தல் இயல்பு.**[94]

எனக் கணிமேதாவியார் குறிப்பிடுகின்றார். நான்மறை ஒழுக்கத்தைப் பின்பற்றி நடந்தவர்கள் அவர்களின் மறுமையின் பயனால் விண்ணோர்க்குத் தலைமை புரிந்து இன்பத்துடன் வாழ்வார்கள் என்ற செய்தி கிடைக்கின்றது. மேலும் அற இலக்கியங்கள் இம்மை மட்டும் அல்லாமல் மனிதர்களுக்கான மறுமை உலகும் ஊழ்வினையும் நிச்சயமாக உண்டு என்பதை வலியுறுத்துகின்றது.

## தொகுப்புரை

- அற இலக்கியங்கள் மனித இனத்தின் பிறப்பு மட்டுமல்லாமல் இறப்பும் அற வழியில் அமைய வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன.
- அற இலக்கியங்கள் அறிவால் பெறப்படும் அறத்தையும் அறத்தால் வரும் இறப்பையும் மக்களுக்குப் போதிக்கின்றன.
- இவ்வுலகத்தில் தோன்றிய அனைத்து உயிர்களுக்கும் இறப்பென்னும் நிலையாமை நிச்சயம் உண்டென்பதை அற நூல்கள் குறிப்பிடுகின்றன.
- அறிவிற் சிறந்தோர் மானம் அழிவதின் காரணமாக உயிர் துறப்பர் என அற நூல்கள் கூறுகின்றன.
- அற நூல்கள் உயிர்க் கொலை புரிதல் அறமற்ற செயல் என்றும் உயிர்க் கொலை பாவத்தையும் பழியையும் மனிதர்களின் மறுமைக்கு இட்டுச்செல்லும் காரணம் என்று குறிப்பிடுகின்றன.
- மனிதர்களின் வாழ்க்கைச் சூழலில், அற வழியில் பொருளைத் தேடி, இன்பத்தைத் துறந்து இறப்பதே உண்மையான இறப்பென அற நூல்கள் குறிப்பிடுகின்றன.
- அற நூல்கள் மனிதர்களின் இறப்பிற்கான காரணங்களாக உடலுறுப்புகள் செயற்படாமை, உடல் உபாதைகள், விபத்துகள் முதலிய நிலைகளைச் சுட்டிக் காட்டியுள்ளன.
- மனிதர்களின் இளமைப் பருவம் நிலையாமை கொண்டது. இளமைக் காலத்தில் மரணம் நிகழும் எனக் குறிப்பிடும் அற நூல்கள், அறம் செய்து வாழ மனிதர்களைத் தூண்டுகின்றன.
- அன்பு, இரக்கம் ஆகிய கருணையில்லாதவர்கள் இறந்தவர்க்கு ஒப்பாவர் என அற நூல்கள் குறிப்பிடுகின்றன.

- அற இலக்கியங்கள், அறம் செய்யாதவர்கள், பிறரைப் பழி பேசுபவர்கள், கொலைக் குற்றம் புரிவோர்... இருப்பதை விட தற்கொலை செய்து சாதல் மேலானது என்கின்றன.
- கொடையறம் செய்து உயிர்களைக் காவாதவர்கள், பொருளை ஈட்டித் தானும் பயன் கொள்ளாமல் பிறருக்கும் கொடாதவர்கள் உயிருள்ள பிணம் என அற நூல்கள் கூறுகின்றன.
- அற நூல்கள் வேள்வி செய்யும் பொருட்டு உயிர்களைப் பலி கொடுத்து அதன் ஊனை உண்பவர்களுக்கு மரணம் உண்டு என்கின்றன.
- மனிதர்களின் மரணத்திற்கு கூற்றுவன் எனும் கண்களுக்குப் புலப்படாத மீமானுடம் இங்கு கூறப்பட்டுள்ளது. மனிதர்களின் இறப்பிற்கு கூற்றுவனைக் குறிப்பிடும் புலவர்கள் பிற உயிரினங்களின் இறப்பிற்கு கூற்றுவனைக் குறிப்பிடவில்லை.
- ஒருவரைப் பற்றி புறம் கூறுதல், சினம் கொள்ளுதல், தீமையான இடங்களைச் சேருதல் ஆகியவை மரணத்தைத் தருவன எனும் கருத்துக்கள் கிடைக்கின்றன.
- தலைமக்களின் பிரிவுத் துன்பத்தை மரணத்துடன் புலவர்கள் ஒப்பிட்டுள்ளனர். தலைவனின் பிரிவுத் துயர் தலைவிகளைத் தற்கொலைக்குத் தூண்டிய செய்திகள் கிடைக்கப் பெற்றுள்ளன.
- மனிதர்களின் வாழ்க்கையில், ஊழ்வினை, முற்பிறவி, மறுபிறவி எனும் நம்பிக்கையை அற நூல்கள் விதைத்துள்ளன.
- மனிதர்கள் இறந்த பின்பு, அவர்களின் அறச்செயல்கள், பழி பாவச் செயல்களை அடிப்படையாகக் கொண்டு மறுபிறவி அடைவார்கள் என ஓர் நம்பிக்கையையும் அற இலக்கியங்கள் கட்டியுள்ளன.

## *அடிக்குறிப்புகள்*

1. புறநானூறு, கோவூர்கிழார், பா.எ:31:1-2
2. திருக்குறள் 34
3. தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ராஜ்கௌதமன்,பக்.40
4. திருக்குறள் 36
5. நாலடியார், அரன் வலியுறுத்தல், பா.எ:4
6. நாலடியார், அரன் வலியுறுத்தல், பா.எ:5
7. பழமொழி, முன்றுறை அரையனார் பா.எ:261
8. திருக்குறள் 335
9. நாலடியார், நல் இனம் சேர்த்தல், பா.எ:4
10. நாலடியார், புல்லறிவாண்மை, பா.எ:3
11. பழமொழி, முன்றுறை அரையனார், பா.எ:137
12. நாலடியார், இளமை நிலையாமை, பா.எ:10
13. நாலடியார், யாக்கை நிலையாமை, பா.எ:1
14. திருக்குறள் 336
15. நாலடியார், யாக்கை நிலையாமை, பா.எ:2
16. திருக்குறள் 334
17. பழமொழி, முன்றுறை அரையனார், பா.எ:183
18. திருக்குறள் 968
19. இனியவை நாற்பது, பூதஞ்சேந்தனார், பா.எ:13
20. நாலடியார், மானம், பா.எ:4
21. திருக்குறள் 969
22. கவரி கருமை காளமேகம், கதிரவன், பக்.30

23. நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார், பா.எ:2

24. திருக்குறள் 1017

25. திருக்குறள் 970

26. திருக்குறள் 251

27. திருக்குறள் 258

28. திருக்குறள் 254

29. பழமொழி, முன்றுறை அரையனார், பா.எ:93

30. திருக்குறள் 550

31. நாலடியார், யாக்கை நிலையாமை, பா.எ:3

32. நாலடியார், யாக்கை நிலையாமை, பா.எ:5

33. நாலடியார், யாக்கை நிலையாமை, பா.எ:4

34. திருக்குறள் 977

35. நாலடியார், தூய்தன்மை, பா.எ:8

36. திரிகடுகம், நல்லாதானார், பா.எ:4

37. திரிகடுகம், நல்லாதானார், பா.எ:89

38. ஏலாதி, கணிமேதாவியார், பா.எ:25

39. திருக்குறள் 339

40. திருக்குறள் 183

41. திருக்குறள் 420

42. திருக்குறள் 435

43. திருக்குறள் 730

44. நாலடியார், மானம், பா.எ:295

45. திருக்குறள் 235

46. நாலடியார், இளமை நிலையாமை, பா.எ:5

47. நாலடியார், இளமை நிலையாமை, பா.எ:9

48. திருக்குறள் 80

49. திருக்குறள் 143

50. ஏலாதி, கணிமேதாவியார், பா.எ:68

51. நாலடியார், நட்பு ஆராய்தல், பா.எ:213

52. நாலடியார், நட்பு ஆராய்தல், பா.எ:9

53. நாலடியார், பல்நெறிஇயல், பா.எ:9

54. நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார், பா.எ:13

55. பழமொழி, முன்றுறை அரையனார், பா.எ:303

56. திருக்குறள் 230

57. திருக்குறள் 214

58. திருக்குறள் 1001

59. திருக்குறள் 1004

60. திருக்குறள் 328

61. பழமொழி, முன்றுறை அரையனார், பா.எ:164

62. திருக்குறள் 327

63. நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார், பா.எ:26

64. நாலடியார், பழவினை, பா.எ:6

65. நாலடியார், செல்வம் நிலையாமை, பா.எ:7

66. நாலடியார், செல்வம் நிலையாமை, பா.எ:5

67. நாலடியார், செல்வம் நிலையாமை, பா.எ:6

68. திருக்குறள் 326

69. நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார், பா.எ:6

70. திருக்குறள் 269

71. நாலடியார், யாக்கை நிலையாமை, பா.எ:6

72. நாலடியார், யாக்கை நிலையாமை, பா.எ:8

73. நாலடியார், யாக்கை நிலையாமை, பா.எ:7

74. நாலடியார், யாக்கை நிலையாமை, பா.எ:9

75. நாலடியார், மெய்மை, பா.எ:10

76. திருக்குறள் 310

77. திருக்குறள் 305

78. திருக்குறள் 306

79. திருக்குறள் 323

80. திருக்குறள் 324

81. திருக்குறள் 325

82. திருக்குறள் 1124

83. திருக்குறள் 1151

84. திருக்குறள் 1155

85. திருக்குறள் 1214

86. திருக்குறள் 1121

87. திருக்குறள் 1230

88. திருக்குறள் 1263

89. பழமொழி, முன்றுறை அரையனார், பா.எ:15

90. நாலடியார், துன்ப இயல், பா.எ:3

91. திருக்குறள் 380

92. பழமொழி, முன்றுறை அரையனார், பா.எ: 265

93. பழமொழி, முன்றுறை அரையனார், பா.எ:203

94. ஏலாதி, கணிமேதாவியார், கடவுள் வாழ்த்து

# இயல்-ஐந்து

## *இரட்டைக் காப்பியங்களில் இறப்புச் செய்திகள்*

### *சிலப்பதிகாரத்தில் இறப்புச் செய்திகள்*

தமிழ்ச் செவ்விலக்கிய வரிசையில் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும் மதுரை கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய பௌத்த காப்பியமான மணிமேகலையும் இடம் பெற்றுள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களின் காலகட்டத்தை பெரும்பாலான அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் கிபி 2-ஆம் நூற்றாண்டு என குறிப்பிடுகின்றனர். இக்காப்பியங்களின் கால கட்டத்தின் கணிப்பில் பல்வேறு முரண்பாடுகளும் உள்ளன. ஆயின் பெண்ணின் பெருமைகளைப் பேச எழுந்த முதல் நூல் சிலப்பதிகாரம் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இருக்கவியலாது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியை கதைத் தலைவியாக இளங்கோவடிகள் படைத்துள்ளார். சிலப்பதிகாரத்தின் கதை முடிவினைத் தொடர்ச்சியாகக் கொண்டு மணிமேகலை படைக்கப்பட்டுள்ளதால் சிலம்பும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என வழங்கப்படுகின்றன. இக்காப்பியங்களில் இறப்பு குறித்த பல்வேறு பதிவுகள் உள்ளன.

இவ்வியல் இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. முதல் பகுதி ‘சிலப்பதிகாரத்தில் இறப்புச் செய்திகள்’ இரண்டாவது பகுதி ‘மணிமேகலையில் இறப்புச் செய்திகள்’.

‘இரட்டைக் காப்பியங்களில் இறப்புச் செய்திகள்’ எனும் இவ்வியலில் முதல் பகுதியான சிலப்பதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இறப்புகளை

- **சிலப்பதிகாரம்**
- **கோவலன், கண்ணகி ஆகியோரது ஊழ்வினை**

**போலிக் குற்றச்சாட்டால் நிகழ்ந்த இறப்புகள்**

- **சங்கமன்**
- **கோவலன் இறப்பு நிமித்தங்கள்**
- **கொல்லன் சூழ்ச்சி**
- **கோவலன்**

**சிலம்பில் தற்கொலைகள்**

- **நீலியின் சாபமும் தற்கொலையும்**
- **மாதரி**
- **கவுந்தியடிகள்**

**எண்ணிய கணம் இறத்தல்**

- **பாண்டிமா தேவியின் தீக்கனவு**
- **பாண்டிய நெடுஞ்செழியன்**
- **கோப்பெருந் தேவி**

**மனம் துயருற்று இறத்தல்**

- **கோவலன், கண்ணகி தாயர்கள்**
- **ஆயிரம் பொற்கொல்லர்கள் கொலை**
- **கண்ணகி முலை திருகி எறிதல், வானுலகம் புகுதல்**
- **இளங்கோவடிகளின் ஊழ்வினை கருத்தாக்கம்**
- **கண்ணகிக்கு நடுகல்**
- **குழந்தை இறப்பு**

**குற்றத்தால் நிகழும் கொலைகள்**

- **மனிதர்களைக் கொன்றுண்ணும் பூதம்**
- **வீரர்கள் தம்மைப் பலி கொடுத்தல்**
- **கொற்றவைக்கு மனிதப் பலி**
- **கொற்றவையின் கூற்றம்**
- **செங்குட்டுவனின் கொலைக் களம்**

ஆகிய பல்வேறு தலைப்புகளில் ஆய்கின்றது.

**சிலப்பதிகாரம்**

சோழ தேசத்தின் புகார் நகரைப் பூர்வீகமாகக் கொண்ட மாசாத்துவான் எனும் வணிகனின் மகனான பதினாறு வயதுடைய கோவலனுக்கும் செல்வத்தில் குறைவில்லாத மாநாய்கன் மகள் பன்னிரண்டு வயதுடைய கண்ணகிக்கும் தங்களின் பெற்றோர்கள் திருமணம் முடித்து வைக்கின்றனர். திருமணத்திற்குப் பிறகு பல இன்னல்களைக் கடந்து மீண்டும் தொடங்கப்பட்ட புது வாழ்க்கை மரணத்தில் முடிந்ததை ஆசிரியர் சிலம்பின் கதையாக வடித்துள்ளார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் கதையின் குறிக்கோளை

**...அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்**
**உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்**
**சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்**
**சிலப்பதி காரம் என்னும் பெயரான்**

**நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென...**[1]

என ஆசிரியர் சிலம்பின் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். அரசியலில் குற்றம் செய்தவர்களை அறமானது எமனாக வந்து கொல்லும். புகழ் பொருந்திய பத்தினியை உயர்ந்தோர் புகழ்வர். ஊழ்வினை காலம் வரும் போது தன் பயனைத் தரும் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு சிலப்பதிகாரம் பாடப்பெற்றுள்ளது.

திருமணம் முடிந்த பின் கோவலன் கண்ணகியிடமிருந்து பிரிந்து கணிகையர் குலத்தைச் சார்ந்த ஆடல் மகளான மாதவியின் மீது ஆசை கொண்டு தன்னுடைய செல்வத்தையெல்லாம் இழந்தான். அனைத்தையும் இழந்து நிர்கதியாக வந்த கோவலன் மீண்டும் கண்ணகியிடம் தஞ்சம் புகுகின்றான். கோவலனின் மறுவரவை ஏற்றுக் கொண்ட கண்ணகி கோவலனின் சொல் கேட்டு பாண்டிய தேசமான மதுரைக்கு அவனுடன் செல்கின்றாள். கண்ணகியின் காற்சிலம்பை விற்று அதனால் கிடைக்கப்பெறும் பணத்தை முதலாகக் கொண்டு வணிகம் செய்து, கோவலன் தான் இழந்த செல்வத்தைத் மீண்டும் ஈட்டுவேன் என்ற நம்பிக்கையைக் கண்ணகிக்கு ஊட்டினான்.

**கோவலன், கண்ணகி ஆகியோரது ஊழ்வினை**

சங்க இலக்கியங்களும் சங்கம் மருவிய இலக்கியங்களும் ஊழ்வினை, முற்பிறவி, இப்பிறவி, மறுபிறவி ஆகியவற்றில் அக்கால மக்கள் அதீத நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை வெளிக்கொணர்கின்றன. இவ்வகையான மீநம்பிக்கைகளைக் காப்பிய ஆசிரியர்களிடமும் காண முடிகின்றது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் கதையை எழுதும் முன்பே 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' எனக் குறிப்பிட்டுள்ளது இங்கு நோக்கத்தக்கது. கோவலனும் கண்ணகியும் தம்முடைய முற்பிறவியின் பலனை அடைவார்கள் என்பது இதன் வழியாகப் புலப்படுகின்றது. ஒருவர் என்ன முயற்சி செய்தாலும் ஊழ்வினை அவரின் முன் வந்து நிற்கும், இதனை விட சக்தி வாய்ந்தது பிரிதொன்றில்லை என்பதை

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்.**[2]

என வள்ளுவர் ஊழியலில் குறிப்பிட்டுள்ளார். ஊழ்வினையை விலக்கி வைக்க எவ்விதமான வழியைத் தேடினாலும் ஊழானது எல்லாவற்றையும் புறந்தள்ளி

முன்னின்று தன்னுடைய செயலாற்றும் என்பது புலவரின் நம்பிக்கை. இது தமிழர் நம்பிக்கை என்றும் கூறலாம்.

## *போலிக் குற்றச்சாட்டால் நிகழ்ந்த இறப்புகள்*

**சங்கமன்**

மதுரையைக் காக்கும் ஊர்த்தெய்வம் கண்ணகியிடம் கண்ணகி கோவலனின் முற்பிறவியைக் குறித்துக் கூறுவதாக ஆசிரியர் சிலம்பில் குறிப்பிட்டுள்ளார். அதனிடையில் கலிங்க நாட்டில் சிங்கபுரத்தை ஆண்ட வசுவும் கபிலபுரத்தை ஆண்ட குமரன் ஆகிய இருவருக்கும் போர் மூண்டதால் இரண்டு ஊர்களும் செயலற்றுக் கிடக்க நேர்ந்தது. சங்கமன் எனும் வணிகன் தன்னுடைய மனைவி நீலியுடன் வணிகம் செய்ய சிங்கபுரம் சென்று பொருட்களை விற்பனை செய்கின்றான். சிங்கபுர அரசனிடம் தொழில் செய்யும் பரதன், சங்கபுர ஒற்றன் எனப் பழி சுமத்தி சங்கமனைக் கொலை செய்வித்ததை

**…சங்கமன் என்னும் வாணிகன் தன்னை,**
**முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவன்**
**வெந்திறல் வேந்தர்க்குக் கோத்தொழில் செய்வோன்**
**பரதன் என்னும் பெயரனக் கோவலன்**
**விரதம் நீங்கிய வெறுப்பின் னாதலின்**
**ஒற்றன் இவனெனப் பற்றினன் கொண்டு**
**வெற்றிவேல் மன்னர்க்குக் காட்டிக் கொல்வுழிக்**
**கொலைக்களப் பட்ட சங்கமன்…**[3]

எனப் புலவர் கட்டுரை காதையில் கொலை செய்யப்பட்ட சங்கமனின் மரணத்தைப் பதிவு செய்துள்ளார். முற்பிறவியில் பரதனாக வாழ்ந்த கோவலன் தன்னுடைய சூழ்ச்சியால் சங்கமனைக் கொலை செய்யத் துணை புரிந்தான்.

**கோவலன் இறப்பு நிமித்தங்கள்**

உயிர்களின் இறப்பு இப்படித்தான் நிகழும் என்பதை இவ்வுலகில் அறிந்தவர் எவரும் இல்லை என அற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இளங்கோவடிகள் கோவலனின் இறப்பின் சில நிமித்தங்களாக முன் கூட்டியே ஆய்ச்சியர் குரவையில் குறிப்பிட்டுள்ளார். கோவலனும் கண்ணகியும் மாதரியிடம் அடைக்கலப் பொருளாக ஒப்படைக்கப்படுகின்றனர். கோவலன் வணிகம் செய்ய முனைந்து கண்ணகியை மாதரியிடம் ஒப்படைக்கின்றான். கண்ணகியின் காற்சிலம்பைப் பெற்ற கோவலன்

அதனை விற்க மதுரைக் கடை வீதிக்குள் நுழைகின்றான். கண்ணகியையும் கோவலனையும் அடைக்கலமாகப் பெற்ற மாதரி தமக்கு ஏதோ துன்பம் வரவிருப்பதைச் சில தீநிமித்தங்கள் வழியாக அறிகிறாள் இதனை

**...குடப்பால் உறையா குவியிமில் ஏற்றின்**
**மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு;**
**உறிநறு வெண்ணெய் உருகா உருகும்**
**மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு;**
**நான்முலை யாயம் நடுங்குபு நின்றிரங்கும்**
**மான்மணி வீழும் வருவதொன் றுண்டு.**[4]

என ஆசிரியர் கோவலனின் இறப்பிற்கு முன்னதான நிகழ்வுகளை மாதரி வழியாகச் சுட்டுகின்றார். அத்தீநிமித்தங்களாவன, குடத்தில் உரை ஊற்றி வைத்திருந்த பால் உறையாமை, திரண்ட திமில்களையுடைய காளையின் கண்ணில் நீர்வழிந்தமை, உறையில் வைத்திருந்த வெண்ணெய் உருகாமை, ஆட்டுக்குட்டிகள் துள்ளிக் குதித்து விளையாடாமை, காம்புகளுடைய பசுக்கள் நடுங்கிக் கதறியமை அவற்றின் கழுத்தில் கட்டப் பெற்றிருந்த மணிகள் அறுந்து நிலத்தில் வீழ்ந்தமை என்பனவாகும். அக்கணத்தில் இவையெல்லாம் தீநிமித்தங்களாகக் கருதப்பட்டன.

இவ்வகைத் தீநிமித்தங்களால் கோவலனின் மரணத்தை முன் கூட்டியே மாதரி வழியாக ஆசிரியர் அறிவித்துள்ளார். பண்டைக் காலம் தொடங்கி தற்போது வரைக்கும் நன்னிமித்தங்களும் தீநிமித்தங்களும் மனித வாழ்க்கையில் பின்னிப் பிணைந்துள்ளதை மேற்காணும் அடிகளின் வழியாக அறிய முடிகின்றது.

**கொல்லன் சூழ்ச்சி**

மதுரைக் கடைவீதியில் கண்ணகியின் காற்சிலம்பை விற்கச் செல்லும் கோவலன், தன் எதிரே வந்த பாண்டிய வேந்தனின் தலைமைக் கொல்லனைக் கண்டு வணங்கி கண்ணகியின் சிலம்பைக் காட்டி விலையை மதிப்பிடக் கொடுக்கின்றான். கண்ணகியின் சிலம்பைக் கண்ட கொல்லன் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கோவலனைத் திருடனாகச் சூழ்ச்சி செய்கின்றான். தலைமைக் கொல்லன் பாண்டிமாதேவியின் காற்சிலம்பை திருடியதைச் சமன் செய்யக் கோவலனைக் கள்வனாக்கியதை

**...கோப்பெருந் தேவிக் கல்லதை இச்சிலம்பு**
**யாப்புற வில்லை யெனமுன் போந்து**

**விறல்மிகு வேந்தற்கு விளம்பியான் வரவென்**
**சிறுகுடில் அங்கண் இருமின் நீரெனக்**
**கோவலன் சென்றக் குறுமகன் இருக்கையோர்**
**தேவ கோட்டச் சிறையகம் புக்கபின்,**
**கரந்தியான் கொண்ட காலணி ஈங்குப்**
**பரந்து வெளிப்படா முன்னம் மன்னற்குப்**
**புலம்பெயர் புதுவனிற் போக்குவன் யானெனக்**
**கலங்கா வுள்ளம் கரந்தனன் செல்வோன்...**[5]

எனப் புலவர் கொல்லனின் சூழ்ச்சியை இவ்வடிகளில் பதிவு செய்துள்ளார். கோவலன் முற்பிறவியில் சங்கமனைச் சூழ்ச்சி செய்து கொலை செய்வித்ததைப் போன்று, பாண்டியனின் தலைமைக் கொல்லன் கோவலனைச் சூழ்ச்சி வலையில் வீழ்த்தியது ஊழ் வினை தொடர்ந்து வந்து உருத்துவதாகின்றது.

**கோவலன்**

கொல்லனின் சூழ்ச்சியால் பாண்டியனின் காவலர்கள் கோவலனைச் சிறைப்பிடிக்கச் செல்கின்றனர். சிறைப்பிடிக்கச் சென்ற காவலர்களில் படிப்பறிவில்லாதவனும் கொலைக்கஞ்சாதவனுமான ஒருவன், தன்னுடைய கூர்மையான வாளை எடுத்து கோவலனைக் கொலை செய்யும் விதமாக வெட்டியதை

**...கல்லாக் களிமக னொருவன் கையில்**
**வெள்வாள் எறிந்தனன் விலங்கூ டறுத்தது**
**புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப**
**மண்ணக மடந்தை வான்துயர் கூரக்**
**காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்.**
**கோவலன் பண்டை ஊழ்வினை யுருந்தென்...**[6]

என இளங்கோவடிகள், காவலனால் வெட்டப்பட்ட புண்ணிலிருந்து வந்த குருதி இடமெங்கும் பரவி குருதி வெள்ளம் பாயக் கோவலன் இறந்துபட்ட செய்தியைக் கொலைக்களக் காதையில் குறிப்பிட்டுள்ளார். கோவலன் இறந்ததன் காரணம் ‘கோவலனது பண்டை ஊழ்வினை’ என்பது புலவர் கருத்தாகிறது. ஊழ்வினையைப் போன்றே பழவினையானது நிச்சயமாக மனிதர்களை ஆளும் என்பதை

**திணைத் துணையர் ஆகி, தம் தேசு உள்அடக்கி,**
**பனைத் துணையார் வைகலும் பாடு அழிந்து வாழ்வர்**
**நினைப்பக் கிடந்தது எவன் உண்டாம், மேலை**
**வினைப்பயன் அல்லால், பிற?**[7]

என நாலடியார் குறிப்பிடுகின்றது. பனையளவாக உயர்ந்த பெருமை மிக்கவரும் தினையளவாகச் சிறுத்துச் சிறுமையுற்று வருந்தி வாழ்வர். இதற்குக் காரணம் முற்பிறவியில் செய்த தீவினையின் பயனேயன்றி வேறில்லை என நாலடியார் விளக்கம் தருகிறது, இது கோவலனின் மரணத்திற்கு வலுசேர்க்கின்றது.

இளங்கோவடிகள் கோவலன் கொலையுண்டதற்கு பாண்டிய வேந்தனைக் காரணம் காட்டியுள்ளார். பாண்டிமா தேவி பாண்டியனுடன் ஊடல் கொண்டிருந்த பொழுது, மனைவியின் ஊடலைத் தீர்க்க முற்பட்டுக் கொண்டிருந்த வேந்தனிடம் தலைமைக் கொல்லன்

**...வினைவிளை காலம் ஆதலின் யாவதும்**
**சினையலர் வேம்பன் தேரா னாகி**
**ஊர்காப் பாளரைக் கூவி ஈங்கென்**
**தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு**
**கன்றிய கள்வன் கைய தாகில்**
**கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கெனக்...**[8]

என ஆசிரியர், கோவலனைக் கொன்ற பாண்டிய மன்னனின் ஆணையை இங்குக் குறிப்பிட்டுள்ளார். தலைமைக் காவலன் அரசியின் காற்சிலம்பைத் திருடிய குற்றத்தை மறைக்க, வேந்தனிடம் கோவலனைக் கள்வனாக்குகின்றான். அரசியின் ஊடலைத் தீர்க்க முற்பட்ட பாண்டியன் மெய் விசாரிப்பின்றி கோவலனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வர உத்தரவிடுகிறான். கொல்லன் கோவலனை மட்டுமின்றி பாண்டியனையும் சூழ்ச்சியில் வீழ்த்தியுள்ளமை இங்குப் புலப்படுகின்றது. ஒருவனது சூழ்நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் மனிதனின் தீய குணமும் இதன் வழி சுட்டிக்காட்டப்படுகின்றது.

கோவலன் கொலையுண்டதை அறிந்த கண்ணகி நீலியைப் போலவே, மதுரையின் தெருக்கள் தோறும் புலம்பித் திரிந்து, இறுதியில் இறந்து கிடந்த கோவலனை அடைகின்றாள். கண்ணகி, கோவலனின் உயிரற்ற உடலினை தன்னுடைய மார்போடு கட்டித் தழுவ அவன் எழுந்து நின்று ‘நீ இங்கு இருப்பாயாக’ எனச் சொல்லி அமரர் கூட்டத்துள் சென்றதை

**...என்றிவை சொல்லி அழுவாள் கணவன்தன்**
**பொன்றுஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக் கொள்ள**
**நின்றான் எழுந்து நிறைமதி வாண்முகம்**

**கன்றிய தென்றவள் கண்ணீர்கை யான்மாற்ற**
**அழுதேங்கி நிலத்தின்வீழ்ந் தாயிழையால் தன்கணவன்**
**தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை யார்பற்றப்**
**பழுதொழிந்த் தெழுந்திருந்தான் பல்லமரர் குழாத் துளான்**
**எழுதெழில் மலருண்கண் இருந்தைக்க எனப்போனான்...**[9]

என இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். முட்டாள் காவலனொருவன் வெட்டியதால் கோவலன் இறந்தான் எனக் கொலைக்களக் காதையில் குறிப்பிடும் ஆசிரியர், ஊர்சூழ் வரியில், இறந்த கோவலன் எழுந்து நின்றான் என மீமானுடச் செயலாகக் குறிப்பிடுகின்றார். இறந்த கோவலன் எழுந்து கண்ணகிக்கு ஆறுதல் மொழி கூறிச் சென்றான் என ஆசிரியர் குறிப்பிடுவது மிகைப் புனைவாக அமைந்துள்ளது.

## *சிலம்பில் தற்கொலைகள்*

### நீலியின் சாபமும் தற்கொலையும்

பரதனின் சூழ்ச்சியால் சங்கமன் இறக்க நேரிட்டது. கணவன் இறந்த துக்கம் தாளாத சங்கமன் மனைவி நீலி சிங்கபுரம் தெருக்களில் ஓலமிட்டுப் புலம்பிச் சங்கமன் மரணத்திற்கு நீதி கேட்கின்றாள். கணவனை இழந்த நீலி ஆற்றாதவளாகி நிர்கதியாய் நின்று நீதி கேட்டதை

**...கொலைக்களப் பட்ட சங்கமன் மனைவி**
**நிலைக்களம் காணாள் நீலி என்போள்**
**அரசர் முறையோ பரதர் முறையோ**
**ஊரீர் முறையோ செரீர் முறையோவென**
**மன்றினும் மறுகினும் சென்றனள் பூசலிட்டு...**[10]

என இளங்கோவடிகள், சங்கமன் இறந்ததை ஆற்றாத நீலியின் துயரை இங்கு குறிப்பிட்டுள்ளார்.

கணவனை இழந்த நீலி தன்னுடைய துயரத்தை மக்களிடம் கூறி நீதி வேண்டுகிறாள். சிங்கபுர அரசனின் மதிப்பைப் பெற பரதன், சங்கமனைச் சூழ்ச்சி செய்து கொன்றதனால் நீலி பரதனுக்கு சாபம் விடுத்து தானும் தற்கொலை செய்து கொண்டாள் இதனை

**...எழுநாள் இரட்டி எல்லை சென்ற பின்**
**'தொழுநாள் இது' எனத் தோன்ற வாழ்த்தி,**
**மலைத் தலை ஏறி, ஓர் மால் விசும்பு ஏணியில்**
**கொலைத் தலைமகனைக் கூடுபு நின்றோள்**

**எம்உறு துயரம் செய்தோர் யாவதும்**
**தம்உறு துயரம் இற்று ஆகுக என்றே**
**விழுவோள் இட்ட வழுஇல் சாபம்...**[11]

என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். சங்கமன் கொலையுண்ட பதினான்காம் நாள், தனக்கு நேர்ந்த இக்கொடுந்துயரானது தனக்கு இழைத்தவர்களுக்கும் நேர வேண்டுமென நீலி சாபமிடுகின்றாள். ஊரறியச் சாபமிட்ட நீலி அக்கணம் நில்லாமல் மலைமீதேறி கீழே வீழ்ந்து (தற்கொலை செய்து) இறந்துபடுகின்றாள். நீலியின் சாபத்தை இளங்கோவடிகள் 'வழுஇல் சாபம்' (குற்றமற்ற சாபம்) எனக் குறிப்பிட்டுள்ளது இங்குச் சிந்திக்கத்தக்கது.

**மாதரி**

கவுந்தியடிகள் கோவலனையும் கண்ணகியையும் இடைக்குலப் பெண்ணான மாதரியிடம் அடைக்கலப் பொருளாக ஒப்படைக்கின்றார். மாதரியும் அவர்களுக்கான அனுகூலங்களைச் செய்து கொடுத்துப் பாதுகாக்கின்றாள். மாதரியைச் சந்தித்த மாடல மறையோன் கோவலன் கொலையுண்டதையும் கண்ணகி வானுலகம் பூண்டதையும் எடுத்துக் கூறுகின்றான். அடைக்கலமாகத் தனக்கு கிடைத்த கோவலன் இறந்ததும் கண்ணகி வானுலகம் பூண்டதையும் எண்ணி துயருற்ற மாதரி, தன்னுடைய உயிரைத் துச்சமாக எண்ணி தீயுள் பாய்ந்து தன்னுயிர் மாய்த்துக் கொண்டாள்

**...தாதுஎரு மன்றத்து, மாதரி எழுந்து,**
**கோவலன் தீதுஇலன்; கோமகன் பிழைத்தான்;**
**அடைக்கலம் இழந்தேன்; இடைக்குல மாக்காள்**
**குடையும் கோலும் பிழைத்தவோ? என**
**இடை இருள் யாமத்து எரியகம் புக்கதும்...**[12]

எனும் அடிகளில் இளங்கோவடிகள், மாதரி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டதை விளக்குகின்றார். கோவலன் கலங்கமற்றவன், அரசன் தவறிழைத்தான், அடைக்கலமாகப் பெற்ற பொருளை இழந்தேன் எனப் புலம்பிய மாதரி நடுச் சாமத்தில் எருமன்றம் புகுந்து அழுது அரற்றி தீப்புகுந்து தற்கொலை செய்து கொண்டாள். அடைக்கலப் பொருளைப் பாதுகாக்க முடியாமல் போனதைப் பெருங்குற்றமாகவும் மரணதண்டனை விதிக்கும் அளவிற்கான குற்றமாகவும் மாதரி கருதுகிறாள். அடைக்கலப் பொருளின் அருமை, அதைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம், அடைக்கலம் பெறுவதற்குரியோரின் தகுதிகள் ஆகியவைச் சான்றோர்களுக்கான சமூக

மதிப்புகளாக எடுத்துரைக்கப்படுகின்றன. உயிர்ப்பாதுகாப்பு உயர்வான பாதுகாப்பு எனும் கருத்தை சமூகத்திற்குச் சொல்லும் வாய்ப்பைப் புலவர் இச்சூழலில் பயன்படுத்தியுள்ளார்.

**கவுந்தியடிகள்**

மீண்டுமொரு புதிய வாழ்வைத் துவங்க இருக்கும் கோவலனையும் கண்ணகியையும் மதுரை நகருக்கு அழைத்து வந்த கவுந்தியடிகள் மாதரியிடம் அடைக்கலமாகக் ஒப்படைக்கின்றார். கோவலன் கொலையுண்டதையும் கண்ணகி மதுரையை எரித்து வானுலகம் பூண்டதையும் மாடலன் கவுந்தியடிகளிடம் உரைக்கின்றான். அறம் செய்ய மறந்த பாண்டியனின் உயிர் பிரிந்த பின்பு, அவனது வளைந்த செங்கோலானது நிமிர்ந்து நின்றது எனப் பொறுமை கொண்ட கவுந்தியடிகள் வடக்கிருந்து உயிர் துறந்ததை

> **...தவம் தரு சிறப்பின் கவுந்தி சீற்றம்**
> **நிவந்து ஓங்கு செங்கோல் நீள்நில வேந்தன்**
> **போக்கு உயிர் தாங்கப், பொறைசால் ஆட்டி,**
> **என்னோடு இவர்வினை உருத்ததோ என**
> **உண்ணா நோன்பொடு உயிர்பதிப் பெயர்த்ததும்...**[13]

என இளங்கோவடிகள் நீர்ப்படைக் காதையில் குறிப்பிட்டுள்ளார். கோவலன் கண்ணகியின் நிலையை மாடலன் வழியாக அறிந்த கவுந்தியடிகள் சீற்றம் கொண்டார். வெகுண்டெழுந்த கவுந்தியடிகள், பாண்டியன் இறந்ததால் பொறுமையுடையவராகினார் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். கோவலனின் இறப்பிற்கான நீதி பாண்டியன் மரணத்தால் கிடைத்துள்ளது. கோவலன், கண்ணகியைத் தான் மதுரைக்கு அழைத்து வந்ததால்தான் அவர்கள் வினை இவ்வாறாயிற்றோ என வருந்திய அடிகள் உண்ணா நோன்பிருந்து தன்னுடைய உயிரைப் போக்கிக் (தற்கொலை) கொண்டார். ஒரு தவறுக்கு ஒருவர் மரணமடையக் காரணமாதல் பெருங்குற்றமாகக் கருதும் மாண்பு அன்றிருந்ததை அறிய முடிகிறது. அதிலும் குறிப்பாக முக்காலத்தையும் உணர்த்தும் அடியார்களால் அவர்களது செயலின் மதிப்பு சாதாரண மக்களின் செயலை விட உயர்ந்ததாகக் கருதப்படும் என்பதையும் கவுந்தியடிகளின் (தற்கொலைச்) செயல் பறைசாற்றுகின்றது.

## *எண்ணிய கணம் இறத்தல்*

### பாண்டிமாதேவியின் தீக்கனவு

கோவலன் இறப்பதற்கு முன்பே துன்பத்தைத் தருவதான தீய நிமித்தங்களை மாதரி வழியாகக் கூறிய இளங்கோவடிகள், பாண்டியனுக்கும் தேவிக்கும் வரவிருக்கும் இறப்பை முன்னறிவிப்பதாக பாண்டிமாதேவி கனவாகக் கண்டதை

**ஆங்கு**
**குடையொடு கோல் விழ நின்று நடுங்கும்**
**கடைமணியின் குரல் காண்பென் காண் எல்லா!**
**திசை இரு நான்கும் அதிர்ந்திடும்; அன்றிக்**
**கதிரை இருள் விழுங்கக் காண்பென் காண் எல்லா!**
**இடும்கொடி வில் இர; வெம் பகல் வீழும்**
**கடும் கதிர் மீன்; இவை காண்பென் காண் எல்லா!**[14]

எனக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். பாண்டிமாதேவி, பாண்டியனின் வெண்கொற்றக் குடையுடன் செங்கோல் வீழவும் வாயிலிலுள்ள மணி அசைந்து நடுங்கவும் எட்டுத்திசையும் அதிரவும் சூரியனை இருள் விழுங்கவும் பகலில் விண்மீன்கள் விழுவதுமான தீக்கனவு கண்டாள். இயற்கைக்கு மாறான நிகழ்வுகளைக் கனவில் கண்டால் நனவில் துன்பங்கள் நேரும் என்பது அக்காலத்திலிருந்து தொடர்ந்து வரும் நம்பிக்கைகளாகும். இயற்கைக்கு மாறான நிகழ்வுகளை, கதை புனையும் உத்திகளாக்கிய புலவரின் திறன் சுட்டத்தக்கது.

### பாண்டிய நெடுஞ்செழியன்

கோவலன் இறந்த துக்கம் தாளாத கண்ணகி, பாண்டியனின் அவையேறி தன்னுடைய கணவன் குற்றமில்லாதவன் என வழக்குரைக்கின்றாள். கோவலன் கள்வன் எனக் கேட்ட பாண்டியன், வழக்கை ஆராயாமல் கோவலனைக் கொல்வதற்கு ஆணையிட, கோவலன் கொலையுண்டான். நீதி வழங்குதலில் தவறிய பாண்டியன் தன்னுயிர் துறந்ததை

**மணிகண்டு**
**தாழ்ந்த குடியன்; தளர்ந்த செங்கோலன்**
**பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட**
**யானோ அரசன்? யானே கள்வன்**
**மன்பதை காக்கும் தென்புலம் காவல்**
**என்முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள் என**

**மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே...**[15]

எனச் சிலம்படிகள் சுட்டுகின்றன. அரசியின் ஊடலைத் தீர்க்கும் மன நிலையைக் கொண்டிருந்த பாண்டியன் கொல்லனின் சொல்லை ஆராயாமல் போனது பெருங்குற்றம் என்பதைப் புரிந்து கொண்டான். அரசியின் காற்சிலம்பு முத்துப் பரல்களையும் கண்ணகியின் காற்சிலம்பு மாணிக்கப் பரல்களையும் கொண்டதென கண்ணகியின் வழக்குரையால் நிரூபணமானது. தனது அரச பாரம்பரியத்தில் இதுவரை எந்த அரசரும் நீதி தவறியதில்லை. பாண்டியனின் ஆராயாத சொல்லால் செங்கோல் வளைந்தது. ஆட்சியின் நட்பெயர் கெட்டது என்பதை உணர்ந்து வருந்துகிறான் பாண்டியன். அரசர் செய்யும் சிறு பிழை கூட பெருங்குற்றம் என்பதை உலகிற்கு எடுத்துரைக்கும் விதமாக அமைகிறது பாண்டிய வேந்தனின் கணநேர இறப்பு.

**கோப்பெருந் தேவி**

பாண்டிய வேந்தனின் எதிர்பாராத மரணம் தேவியை நிலைகுலையச் செய்தது. கணவனை இழந்த மகளிர்க்கு இழப்பதற்கு வேறொன்றுமில்லை. கணவனை இழந்தவர்களுக்குப் புகலிடமாகக் காட்டுவது ஒன்றுமில்லை எனக் கூறி இறந்த பாண்டியனின் திருவடிகளைத் தொழுது பாண்டிமாதேவியும் இறந்ததை

**தென்னவன்**
**கோப்பெரும் தேவி குலைந்தனள் நடுங்கி**
**கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்என்று**
**இணைஅடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி.**[16]

என இளங்கோவடிகள், கணவன் இறந்த துக்கம் தாளாத பாண்டிமாதேவி பாண்டியன் இறந்த அக்கணமே உயிர் விட்டதைக் குறிப்பிட்டுள்ளார். கணவன் இறந்தவுடன் தங்களின் உயிரைத் துறக்கும் பெண்கள் முதல் வகைப் பத்தினிகள் என மணிமேகலையில் சாத்தனார் குறிப்பிட்டுள்ளது இங்கு நோக்கத்தக்கது. சாத்தனார் குறிப்பிடும் பத்தினிகளின் இறப்புக் குறித்த வரையறையானது பாண்டிமாதேவிக்கும் சங்கமன் மனைவி நீலிக்கும் பொருந்துகின்றது.

## *மனம் துயருற்று இறத்தல்*

**கோவலன், கண்ணகி தாயர்கள்**

மாடலமறையோன், கோவலன் கண்ணகியின் பெற்றோரைச் சந்தித்து பாண்டிய நாட்டில் கோவலன் கண்ணகி இருவருக்கும் நேர்ந்த துயரினை உரைக்கின்றான். மாடலனின் சொற்களைக் கேட்ட கோவலன், கண்ணகியின் பெற்றோர்கள்

**...மைந்தர்க்கு உற்றதும், மடந்தைக்கு உற்றதும்,**
**செங்கோல் வேந்தற்கு உற்றதும் கேட்டுக்**
**கோவலன் தாதை கொடும்துயர் எய்தி**
**மாபெரும் தானமா வான்பொருள் ஈத்து ஆங்கு**

**இந்திரவிகாரம் ஏழுடன்புக்கு, ஆங்கு**
**அந்தர சாரிகள் ஆறு ஐம்பதின்மர்**
**பிறந்த யாக்கைப் பிறப்புஅற முயன்று**
**துறந்தோர் தம்முன் துறவி எய்தவும்**

**துறந்தோன் மனைவி, மகன் துயர் பொறாஅள்**
**இறந்த துயர்எய்தி, இரங்கி மெய்விடவும்,**
**கண்ணகி தாதை கடவுளர் கோலத்து**
**அண்ணலம் பெரும் தவத்து ஆசீவகர் முன்**

**புண்ணியத் தானம் புரிந்து, அறம் கொள்ளவும்**
**தானம் புரிந்தோன் தன்மனைக் கிழத்தி**
**நாள் விடூஉ நல்உயிர் நீத்து மெய் விடவும்...**[17]

என இளங்கோவடிகள் கோவலனின் பெற்றோர் அடைந்த துயரை இவ்வடிகள் வழியாக வெளிக்காட்டியுள்ளார். மாடலன் வழியாகக் கோவலன் கண்ணகியின் நிலையை அறிந்த இருவரின் தந்தையர்களும் தங்களிடமிருந்த செல்வத்தை புண்ணியத்திற்குத் தானமாகக் கொடுத்து துறவு பூண்டார்கள். கோவலனின் தாய் மகனிறந்த துக்கம் தாளாமல் மிகுதியாக வருந்தி, இரங்கி, ஏங்கி உயிர் நீத்த செய்தியும் கண்ணகியின் தாய் வயது முதிர்ந்து விடுகின்ற நல் உயிரை அக்கணமே விட்டாள். கோவலனின் தாய் வருத்தமுற்று உயிர் நீத்தாள் எனக் குறிப்பிடும் இளங்கோவடிகள், கண்ணகியின் தாய் 'நாள் விடூஉ நல்உயிர் நீத்து' எனக் குறிப்பிடுகையில் கண்ணகியின் தாய் தற்கொலை செய்து கொண்டுள்ளது இங்கு உறுதியாகின்றது. சோகத்தில் பெருஞ்சோகம் புத்திர சோகம். குழந்தைக்கு எத்தனை வயதானாலும் பெற்றோருக்குப்

பிள்ளைகள் தான், அதனால் பிள்ளைகளின் இறப்பை அதீத பாசம் கொண்ட பெற்றோர்களால் தாங்க இயலாது.

**ஆயிரம் பொற்கொல்லர்கள் கொலை**

சேரன் செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்த பின்பு பாண்டிய நாடு என்னவாயிற்று என மாடலமறையோனிடம் கேட்டு உரையாடுகின்றான். மாடலன் மதுரையில் நடந்த நிகழ்வுகளை விளக்கிக் கூறுகின்றான். நெடுஞ்செழியன் இறந்தவுடன் கொற்கையிலிருந்த வெற்றிவேல் செழியன் மதுரை விரைகின்றான். ஒரு முலை குறைத்த பத்தினியாகிய கண்ணகிக்கு ஆயிரம் பொற்கொல்லர்களை நரபலி கொடுக்கிறான்

**...போந்தைக் கண்ணிப் பொறைய! கேட்டு அருள்**
**கொற்கையில் இருந்த வெற்றிவேல் செழியன்**
**பொன்தொழில் கொல்லர் ஈர் ஐஞ்னூற்றுவர்**
**ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு**
**ஒருபகல் எல்லை, உயிர்ப் பலி ஊட்டி...**[18]

என இளங்கோவடிகள், பொற்கொல்லர்கள் ஆயிரவரை இரக்கமின்றிக் கொன்று குவித்த செய்தியை இவ்வடிகளில் குறிப்பிட்டுள்ளார். பொற்கொல்லன் ஒருவன் திருட்டால் எழுந்த சூழ்ச்சி பாண்டியன் நெடுஞ்செழியனையும் கோப்பெருந்தேவியையும் இறக்கச் செய்தது. கோவலனின் கொலைக்கும் கண்ணகியின் துன்பத்திற்கும் பொற்கொல்லனே காரணம் என்றுணர்ந்த வெற்றிவேல் செழியன் பொற்கொல்லர் ஆயிரவரை கண்ணகிக்குப் பலி கொடுத்துள்ளான்.

இப்பலியானது அரச குடும்பத்தின் பெருமையை நிலை நிறுத்த வெற்றிவேல் செழியனின் தந்திரமாகவும் இருக்கலாம். பொற்கொல்லனால் பாண்டியனின் வெண்கொற்றக் குடைக்கும் ஆட்சி புரிந்த நாட்டிற்கும் ஏற்பட்ட இழுகைத் துடைத்தெறியக் கொல்லர்களைக் கொன்றுள்ளதாகக் கருதலாம். பாண்டிய ஆட்சியின் குன்றாப்புகழை நிலை நாட்டவும் கண்ணகிக்கு அறம் செய்தல் வேண்டியும் பலி கொடுத்துள்ளான் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

கோவலன் தன்னுடைய முற்பிறவியில் ஒற்றன் எனச் சூழ்ச்சி செய்து சங்கமனை பலி கொடுத்து உயிர்ப் பிழைத்தான். தலைமைக் கொல்லன் களவு புரிந்தும் சூழ்ச்சி செய்தும் கோவலனைப் பலி கொடுத்தான். இதன் காரணமாக பாண்டியனும் தேவியும்

இறந்தனர். இதற்குக் காரணமான ‘தலைமைப் பொற்கொல்லன் உயிர் பிழைத்ததையோ, உயிர் துறந்ததையோ சிலம்பில் இளங்கோவடிகள் குறிப்பிடவில்லை’ என்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

வெற்றிவேல் செழியன் ஆயிரம் பொற்கொல்லர்களைக் கொன்றான் எனக் குறிப்பிடும் ஆசிரியர், கொல்லப்பட்ட கொல்லர்களில், கோவலன், பாண்டியன், பாண்டிமா தேவி ஆகியோரின் இறப்பிற்கு காரணமாக இருந்த தலைமைக் கொல்லனும் இருந்தானா என்பதனைப் பற்றி சிலம்பிலெங்கும் குறிப்பிடவில்லை. தமிழிலக்கிய வரலாற்றில் முதன் முறையாக மாபெரும் எண்ணிக்கையிலான மனிதப் பலிக் கொலைகள் குறித்தான பதிவு இதுவே எனலாம்.

முற்பிறவி பலன் குறித்த இளங்கோவின் கருத்து ஒருவித தப்பித்தல் உத்தி எனக் கருதலாம். இப்பிறவியில் நல்லவனான கோவலனும் பத்தினியான கண்ணகியும் அகால மரணமடைவதை சமூகம் ஏற்றுக் கொள்ளத் தயங்கும். அதனால் தமக்கு அவப்பெயர் நேரலாம் என எண்ணி முற்பிறவி உத்தியை இளங்கோவடிகள் கையாண்டிருக்கலாம்.

**கண்ணகி முலை திருகி எறிதல், வானுலகம் புகுதல்**

கண்ணகி, கோவலன் கொலைக்கு நீதி வேண்டி பாண்டியனிடம் வழக்குரைத்தாள். நீதியை நிலை நாட்ட மறந்த பாண்டிய வேந்தன் இறக்கின்றான். மதுரைத் தெருக்களில் அழுது புலம்பியவாறே செல்லும் கண்ணகியை, ஊரார் பார்க்க அவள் தன்னுடைய இடமுலையைத் திருகி எறிந்ததாகச் சிலம்பு கூறுகின்றது

**...நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்**
**வானக் கடவுளரும் மாதவரும் கேட்டீமின்;**
**யான் அமர் காதலன் – தன்னைத் தவறு இழைத்த**
**கோநகர் சீறினேன்; குற்றமிலேன் யான், என்று**

**இடமுலை கையால் திருகி, மதுரை**
**வலமுறை மும்முறை வாரா, அலமந்து**
**மட்டுஆர் மறுகின் மணிமுலையை வட்டித்து,**
**விட்டாள் எறிந்தாள் விளங்கு இழையாள்...**[19]

என இளங்கோவடிகள், வஞ்சினமாலையில் குறிப்பிட்டுள்ளார். மதுரையுட் புகுந்த கண்ணகி, ‘மகளிரே, ஆடவரே, வானக் கடவுளே, முனிவர்களே’ என அனைவரையும் விளித்து தானும் தன்னுடைய கணவனும் குற்றமற்றவர்கள் எனக் கூறி, மதுரை நகரை

மும்முறை வலம் வந்து தன்னுடைய இடப்பக்க முலையைத் திருகி எறிந்தாள் அதனால் மதுரை எரிந்தது.

கண்ணகி சூளுரைத்து தன் இட முலையைத் திருகி மதுரையின் மீது எறிய அக்கினிதேவன் அவள் முன் தோன்றி மதுரையை எரிக்கத் துணைபுரிகின்றார். மதுரை மாநகர் எரிந்ததில் பாண்டியனைச் சார்ந்த பெண்டிர்கள், வில் வீரர்கள், குதிரை மற்றும் யானை வீரர்கள் யாவரும் தீக்கிரையாகினர். குற்றம் புரிந்தவனன்றிப் பலரும் கண்ணகியால் உயிர் துறந்தது நோக்கத்தக்கது. கண்ணகியின் ஒவ்வொரு செயலையும் மிகைப்படுத்திக் கூறும் வழக்கம் ஆசிரியரிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது. அவ்வாறாகக் கண்ணகி முலை திருகி எறிந்ததை இளங்கோவடிகள் இங்கு மிகைப்படுத்திக் காட்டியுள்ளார்.

18ஆம் நூற்றாண்டில் திருவாங்கூர் அரசாங்கத்தில் முலை வரி வசூலிக்கும் வழக்கம் நிலவியது. உயர் குடியாகக் கருதப்பட்ட பெண்களைத் தவிர, தாழ்த்தப்பட்டவராகக் கருதப்பட்ட பெண்கள் அனைவரும் தங்களின் முலைகளின் அளவிற்கேற்ப வரி செலுத்த வேண்டும் எனும் ஒடுக்குமுறைச் சட்டம் நடைமுறையிலிருந்தது. முலைவரி செலுத்த மறுத்து ஆங்காங்கு எதிர்க்குரல்கள் எழுந்தன. தலித்தினப் பெண்ணான நங்கேலி முலை வரிச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வரிச் செலுத்த மறுத்து போராடினாள். திருவாங்கூர் அதிகாரிகளின் ஒடுக்குமுறையைக் கண்டித்து நங்கேலி தன்னுடைய இரண்டு மார்பகங்களையும் வெட்டித் துண்டித்து தன்னுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தினாள்.

> **“மேல் துணி சர்ச்சை தொடர்ந்தது. நாடார் பெண்களின் எதிர்ப்பை மீறி, உயர் சாதி ஆண்களின் அழுத்தத்தின் கீழ், மகாராஜா 1829 இல் ஒரு அரச பிரகடனத்தை வெளியிட்டார், நாடார் அல்லது ஈழவர் அல்லது வேறு எந்த தாழ்த்தப்பட்ட பெண்களும் பொது இடத்தில் தனது உடலை மறைக்கக்கூடாது, அதைச் செய்யத் துணிந்த எவரும் அதற்கான வரியைச் செலுத்த வேண்டும். முன்னதாக கிறிஸ்தவ மதம் மாறிய பெண்கள் குப்பாயம், சிரிய கிறிஸ்தவ வகை ஜாக்கெட் அணிய அனுமதிக்கப்பட்டாலும் நாடார் பெண்கள் திருப்தி அடையவில்லை.**
>
> **1829 ஆம் ஆண்டின் அரச பிரகடனத்தின்படி, கிறிஸ்தவ மதம் மாறிய பெண்கள் உட்பட அனைத்து பெண்களும் மேல் துணியை அணிய**

**அனுமதிக்கப்படவில்லை. இது மேலும் கிளர்ச்சி வெடிக்க வழிவகுத்தது. நாடார் பெண்கள், அரச அதிகாரிகளுக்கு பணிவதற்கு பதிலாக எதிர்ப்பு தெரிவித்தனர். நங்கேலி என்ற தலித் பெண், மார்பக வரியை எதிர்த்து, தன் மார்பகங்களை அறுத்து, அதையே வரி வசூலிப்பவர் மீது எறிந்து, 'எனக்கு இது தேவையில்லை, உங்கள் மகாராஜாவிடம் கொடுங்கள்' என்று கூறினார். அதிக ரத்தப்போக்கு காரணமாக நங்கேலி உயிரிழந்தார். அவரது கணவர், தனது மனைவி நங்கேலியின் இறுதிச் சடங்கில் சிதையில் குதித்து தனது வாழ்க்கையை முடித்துக்கொண்டார். நங்கேலியின் தியாகம் பரபரப்பை தீவிரப்படுத்தியது, இறுதியாக எதிர்ப்புகளாலும் பொது அமைதியின்மையின் அழுத்தத்தினாலும் அடுத்த நாளே, திருவிதாங்கூர் மகாராஜா 1859ஆம் ஆண்டில் அனைத்து பெண்களும் தங்கள் மேல் உடலை மறைக்க அனுமதிக்கும் அரச பிரகடனத்தை செய்ய வேண்டியிருந்தது. மார்பக வரியின் ஆட்சி முடிவுக்கு வந்தது, நீண்ட போராட்டத்திற்கும் தியாகத்திற்கும் பிறகு பெண்கள் கண்ணியத்துடன் ஆடை அணியும் உரிமையை வென்றனர். தன் உயிரைத் தியாகம் செய்து பெண்களின் சுதந்திரக் கதவுகளைத் திறந்தாள் நங்கேலி".[20]**

என விசித்திர குப்தா, மார்பக வரி தலித் பெண்களின் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரானது Breast Tax: Social Oppression of Dalit Women எனும் தம்முடைய கட்டுரையில் நங்கேலி குறித்த செய்திகளைச் சுட்டியுள்ளார். மார்பக வரி செலுத்த மறுத்த நங்கேலி 'மார்பகம் இருந்தால் தான் வரிக் கேட்பார்கள்' எனத் தன்னுடைய இரண்டு மார்பகங்களையும் கத்தியால் அறுத்திட்ட போது குருதி இழப்பின் காரணமாக இறந்த செய்தி மேற்காணும் கட்டுரையின் வழியாகக் கிடைக்கின்றது. ஆக சிலப்பதிகாரத்தில் தன் இடமுலையைப் பறித்தெறிந்த கண்ணகி மதுரையில் இறக்கவில்லை.

மனைவி இறந்த துக்கம் தாளாத நங்கேலியின் கணவன் நங்கேலியின் சிதையில் வீழ்ந்து இறந்த செய்தி இங்குக் கிடைக்கின்றது. கணவன் இறந்தால், மனைவி சதி எனும் உடன்கட்டை ஏறுகின்ற வழக்கத்தை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அண்மைக்கால வரலாற்று ஆவணங்களும் அதைப் பதிவு செய்துள்ளன. சதி தடைச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது இங்குச் சுட்டத்தக்கது. வரலாற்றில் 'ஆணொருவன் சதியில் வீழ்ந்து தன்னுடைய உயிரைத் துறந்த நிகழ்வுகளில் இதுவே முதன் முறையாகும்'.

மேலும் நங்கேலியைக் குறித்து 'மகாத்மா அய்யன்காளி' எனும் நூலில்

**'முலைவிலை' என்பது தாழ்த்தப்பட்ட பெண்களின் முலைகளுக்கான வரியாகும். முலையின் பருமனுக்கேற்ப முலைவரியை அலுவலர்கள் வசூலித்தார்கள். வரியை வசூலிப்பததற்கு ஆதிக்கச்சாதியைச் சேர்ந்த அலுவலர்கள் செல்லமாட்டார்கள். கீழ்சாதியைச் சேர்ந்த அலுவலர்களே செல்லவேண்டும் என்பது அரசாங்க உத்தரவு. இத்தகைய கீழ்சாதியினரிடம் வரி வசூலிப்பவர்களை தண்டான், பணியன், பட்டறக்காரன் என்றெல்லாம் அழைத்தார்கள். தலைவரி, முலைவரி, தலை குலுக்கிப்பணம், முலைகுலுக்கிப்பணம், கப்பணம், சாப்பணம் போன்ற வரிகளே திருவிதாங்கூர் அரசின் முக்கியமான பொருளாதார ஆதாரம்.**

**முலைவரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து சேர்த்தலா தாலுக்காவை சேர்ந்த முலச்சிப்பறம்பு நாணி என்னும் ஈழவப்பெண் தனது இரண்டு முலைகளையும் அறுத்தெடுத்து வரி வசூலிக்க வந்த அலுவலரின் எதிரில் வைத்து வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாக வரலாறு கூறுகிறது. இப்படி எண்ணிக்கையற்ற வரிகளை அரசர்கள் கீழ்சாதிக்காரர்களிடமிருந்து வசூலித்தார்கள்.**[21]

இங்கு 'நங்கேலி நாணி எனும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளாள்'.

கண்ணகி மதுரையை எரித்த பின் நெடுவேள் குன்றம் அடைகின்றாள். நெடுவேள் குன்றத்தின் குறவர்கள் வேங்கை மரத்தடியில் ஒற்றை முலையை இழந்த கண்ணகியைக் கண்டு அவள் குறித்து வினவுகின்றனர். கண்ணகி மதுரை நகரில் தான் அடைந்த துன்பத்தைக் கூறி வான ஊர்தி ஏறினாள்

**...பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ் ஓர்**
**தீத் தொழில் ஆட்டியேன் யான் என்று ஏங்கி,**
**எழு நாள் இரட்டி எல்லை சென்ற பின்**
**தொழுநாள் இது எனத் தோன்ற வாழ்த்தி,**
**பீடுகெழு நங்கை பெரும் பெயர் ஏத்தி**

**வாடா மாமலர் மாரி பெய்து, ஆங்கு**
**அமரர்க்கு அரசன் தமர்வந்து ஏத்த**
**கோநகர் பிழைத்த கோவலன் தன்னோடு**
**வானஊர்தி ஏறினள் மாதோ**
**கான்அமர் புரிகுழல் கண்ணகி தான்...**[22]

என இளங்கோவடிகள் கட்டுரைகாதையில் குறிப்பிட்டுள்ளார். கண்ணகி, தன்னுடையப் பொன் வளையல்களை உடைத்து மதுரையின் கீழ்த்திசைவாயில் வழியாகக் கணவனொடு புகுந்து, அவனை இழந்த பின் மேல் திசை வாயில் வழியாக மதுரையை விட்டு வெளியேறுகிறாள். கண்ணகி நெடுவேள் இருக்கும் குன்றத்தில் அடி வைத்து

ஏறுகிறாள். நீலியைப் போல கண்ணகியும் ‘பதினான்கு நாள் கழித்து கணவனைத் தொழும் நாள் இதுவென வாழ்த்தி நின்றவள் ‘வானோர் துதிக்க கோவலனுடன் தேவ விமானத்தில் ஏறினாள்’ என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். மேலும் இளங்கோவடிகள் குன்றக் குரவையில்

**...என்றலும் இறைஞ்சி அஞ்சி இணை வளைக்கை எதிர்கூப்பி**
**நின்ற எல்லையுள், வானவரும் நெடுமாரி மலர் பொழிந்து**
**குன்றவரும் கண்டு நிற்பக்கொழுநனொடு கொண்டு போயினார்...**[23]

என ஆசிரியர், கண்ணகி தனக்கு நடந்த துயரத்தைக் குன்றக் குறவர்களிடம் கூறியதையும் குறவர்கள் அவளுக்கு அஞ்சி வணக்கிய போது, வானவர்கள் பூக்களை மழை போல் சொரிந்து கோவலனுடன் கண்ணகியையும் அழைத்துச் சென்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார். கண்ணகியின் இறப்பை இளங்கோவடிகள் மறைமுகமாக இங்கு வெளிப்படுத்தியுள்ளார். இளங்கோவடிகள் காட்சிக் காதையில்,

**...ஆங்கு**
**ஏழ்பிறப்பு அடியேம்; வாழ்க நின் கொற்றம்!**
**கானவேங்கைக் கீழ் ஓர் காரிகை**
**தான் முலை இழந்து, தனித்துயர் எய்தி,**
**வானவர் போற்ற மன்னொடும் கூடி,**
**வானவர் போற்ற வானகம் பெற்றனள்...**[24]

கண்ணகி வானுலகம் புகுந்தாள் எனக் குறிப்பிட்டுள்ளார். வேங்கை மரத்தடியில் ஒரு முலை இழந்த கண்ணகி மிகுந்த துயரடைந்து நின்றாள். தேவர்கள் துதிக்க கோவலனுடன் வானுலகம் புகுந்தாள் எனும் செய்தி இங்குக் கிடைக்கின்றது. இளங்கோவடிகள் கண்ணகி வானுலகம் பூண்டதை மூவேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளது எண்ணத்தக்கது.

முற்பிறவியில் நீலி, சங்கமன் கொலைக்கு நீதி கிடைக்காமல் அவனிறந்த பதினான்காம் நாள் மலைமீதேறித் தற்கொலை செய்து கொண்டாள். நீலியின் சாபத்தால் இப்பிறவியில் கண்ணகி கோவலனின் கொலைக்கு, பாண்டியனின் உயிரையும் தேவியின் உயிரையும் மாய்க்கச் செய்து மதுரையையும் எரித்து நீதி பெற்றாள். கோவலனின் கொலைக்கு நீதி பெற்று அவனிறந்த பதினான்காம் நாள் உலகத்தில் நிலைக்காமல் வானுலகம் புகுந்தாள் என்பது ஆசிரியரின் வழியாகப் புலப்படுகின்றது. எப்பிறவி எடுப்பினும் ‘ஊழ்வினைப் பயன்’ தொடரும் எனக்

குறிப்பிடும் ஆசிரியர், 'நீலி தற்கொலை செய்து கொண்டாள் எனவும் கண்ணகி வானுலகம் பூண்டாள்' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கண்ணகி இயற்கையான மரணம் அடையவில்லை என்பதை கவரி கருமை காளமேகம் எனும் நூலில்

> **"கண்ணகியின் மரணம் இயற்கை மரணமோ எனில் இல்லை எனலாம். மரணத்தின் தருவாயில் 'ஏனிவ்வாறு உள்ளீர்' எனக் குறவர்கள் கேட்க, தன் கதையுரைக்கிறாள் கண்ணகி. எனவே அவள் மரணமடையப் போவது குறவர்க்கு முன்னரே தெரிந்துள்ளது."[25]**

எனக் கதிரவன் 'கண்ணகியின் மரணம் இயற்கைக்கு மாறானது' என நிறுவியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

**இளங்கோவடிகளின் ஊழ்வினை கருத்தாக்கம்**

ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் எனக் குறிப்பிடும் ஆசிரியர், கோவலன் கண்ணகியின் முற்பிறவியில் நடந்த நிகழ்வுகளைப் போல இப்பிறவியிலும் அவர்களுக்கான பழவினை தொடரும் என்பதைச் சிலம்பில் நிறுவியுள்ளார்.

- கோவலன் தன் முற்பிறவியில், சங்கமனை ஒற்றன் எனக் குற்றம் சாட்டிக் கொலைக்குக் கொடுத்த பரதனாவான். முற்பிறவியில் கொலைக்குக் காரணமான பரதனை இப்பிறவியில் கோவலனாக ஆசிரியர் படைத்துள்ளார்.
- முற்பிறவியில் நீலிக்கு நீதி கிடைக்காமல், சங்கமன் கொலையுண்ட பதினான்காம் நாள் சாபம் விளித்து மலைமீதேறி நீலி தற்கொலை செய்து தன்னுடைய உயிரை மாய்த்தாள். இப்பிறவியில் கண்ணகி கோவலன் இறந்த பதினான்காம் நாள் வானுலகம் புகுந்தாள்.
- முற்பிறவியில் சங்கமனின் கொலைக்கான நீதி, நீலிக்குக் கிடைக்கவில்லை. இப்பிறவியில் கோவலனின் கொலைக்கான நீதி கண்ணகிக்குக் கிடைக்கின்றது.
- முற்பிறவியில் சங்கமனைக் காட்டிக் கொடுத்துக் கொன்ற பரதனான கோவலன் கொல்லப்படாமல் தப்பித்தான். மறுபிறவியில் கோவலனாகப் பிறந்த பரதன் தலைமைக் கொல்லனால் கள்வன் எனப் பழி சாற்றப்பட்டு கொல்லப்பட்டான்.
- கண்ணகி மதுரையை எரித்தாள். பாண்டியனும் தேவியும் உடனிருந்தவர்களும் மரணத்தைத் தழுவினர். பாண்டிய ஆட்சியின் களங்கத்தைப் போக்கவும்

கண்ணகிக்கு நீதி வழங்கவும் ஆயிரம் பொற் கொல்லர்களைக் கொன்ற வெற்றிவேல் செழியனாலும் தலைமைக் கொல்லன் கொல்லப்படவில்லை. முற்பிறவியில் சங்கமன் கொலைக்குக் காரணமான பரதனைப் போலவே இப்பிறவியில் கோவலனின் கொலைக்குக் காரணமான தலைமைக் கொல்லன் எவராலும் கொல்லப்படாமல் தப்பித்தான்.

கோவலன், கண்ணகியரது ஊழ்வினையைக் குறிப்பிடும் இளங்கோவடிகள் இவர்களின் முற்பிறவியையும் மறுபிறவியையும் ஒரே மாதிரியான நிகழ்வுகளை வைத்துக் கட்டமைத்துள்ளார் என்பது சிந்திக்கத்தக்கது.

**கண்ணகிக்கு நடுகல்**

கண்ணகியின் நிலையை அறிந்த சேரன் செங்குட்டுவன், இமைய மலையிலிருந்து கல்லெடுத்துக் கண்ணகிக்கு சிலை வடித்துச் சேர மண்டலத்தில் நடுகல் நட்டதை

**...மதுரை மூதூர் மாநகர் கேடுஉற**
**கொதிஅழல் சீற்றம் கொங்கையின் விளைத்து,**
**நல்நாடு அணைந்து நளிர்சினை வேங்கை**
**------------------------------------------------------**
**பூப்பலி செய்து, காப்புக் கடை நிறுத்தி**
**வேள்வியும் விழாவும் நாள்தொறும் வகுத்து**
**கடவுள் மங்கலம் செய்க என ஏவினன்...**[26]

என இளங்கோவடிகள் நடுகல் காதையில் குறிப்பிட்டுள்ளார். வீரத்துடன் மரணமடைந்தவர்களின் நினைவாக நடுகல் நடும் வழக்கம் தமிழ்ச் சமூகத்தில் இன்றளவும் இருந்து வருகின்றது. இறந்துபட்ட ஆண்களுக்கு மட்டுமே நடுகல் நடப்பட்ட செய்திகளை தமிழிலக்கியங்கள் பதிவிடுகின்றன. 'தமிழ்ச் சமூகத்தில் முதன் முறையாக பெண்ணுக்கு நடுகல்' நட்ட செய்தியை இளங்கோவடிகள் சிலம்பில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு முலை திருகி எறிந்த கண்ணகியைப் பற்றிய செய்தியை மதுரை இளநாகனார் நற்றிணையில் குறிப்பிட்டுள்ளார்.

**...எரி மருள் வேங்கைக் கடவுள் காக்கும்**
**குருகு ஆர் துழனியின் இதணத்து ஆங்கண்,**
**ஏதிலாளன் கவலை கவற்ற,**

**ஒரு முலை அறுத்த திருமாவுண்ணி...**[27]

என்ற அடிகள் வழியாக அறிய முடிகின்றது. பரத்தையொருத்தி தலைவனை எண்ணிப் புலம்பியதை கண்ணகியின் நிலையொடு ஒப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

**குழந்தை இறப்பு**

சிலம்பில் கண்ணகி கோவலன் கதையைத் தொடர்ந்து, கிளைக்கதைகள் பலவற்றையும் இளங்கோவடிகள் படைத்துள்ளார். கண்ணகியின் தோழியான தேவந்தியைக் கதையில் அறிமுகம் செய்வதற்கு மாற்றாள் பாலகனொருவன் இறந்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். சிலம்பில் பல்வேறு கிளைக்கதைகள் இடம் பெற்றிருந்தாலும் குழந்தை இறப்பின் மூலம் தேவந்தியின் கதாப்பாத்திரத்தை ஆசிரியர் இங்கு விதைத்துள்ளார். மாலதி எனும் பெண்ணொருத்தி மாற்றாள் குழந்தைக்குப் பாலூட்ட அக்குழந்தை தொண்டையில் பால்விக்கி இறந்ததை

**...மேலோர் நாள்**
**மாலதி மாற்றாள் மகவுக்குப் பால் அளிக்க**
**பால்விக்கிப் பாலகன் தான் சோர...**[28]

என கனாத்திறம் உரைத்த காதையில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். மாலதி தன் மீது கொலைப்பழி விழும் என அஞ்சி இறந்த குழந்தையைத் தூக்கிக்கொண்டு, கற்பகத் தரு நிற்கும் கோயில், ஐராவதம் நிற்கும் கோயில், வேல் நிற்கும் முருகன் கோயில், வச்சிராயுதம் இருக்கும் கோயில், சாதவாகனன் கோயில், அருகன் கோயில், சந்திரன் கோயில் ஆகிய கோயில்களுக்கெல்லாம் சென்று குழந்தைக்கு உயிரளித்து தன்னுடைய துன்பம் தீர்க்க வேண்டி நிற்கின்றாள்.

பாசண்டச் சாத்தன் கோயிலுக்குச் சென்று குழந்தையின் உயிரைப் பெற வேண்டி தவம் கிடந்தவளுக்கு அவள் முன் தோன்றிய ‘இடாகினி’ பேயானது, அக்குழந்தையைச் சக்கரவாளக் கோட்டத்திற்குப் (சுடுகாடு) பறித்துக் கொண்டு போக அக்கோட்டத்திலிருந்த மற்றொரு இடாகினிப் பேயானது

**...கையில்**
**படுபிணம் தா என்று பறித்து, அவள் கைக் கொண்டு**
**சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்குஇருளில் சென்று ஆங்கு**
**இடுபிணம் தின்னும் இடாகினிப் பேய் வாங்கி**
**மடி அகத்து இட்டாள் மகவை...** [29]

என இளங்கோவடிகள் ஆண் மகவின் பிணத்தை இடாகினிப் பேயானது தின்றுவிட்டதை குறிப்பிட்டுள்ளார்.

பால் விக்கி இறந்த மகவை இடாகினிப் பேயானது தின்றது. இதனைச் சற்றும் எதிர் பாராத மாலதி ஏங்கி அழ, பாசண்டச் சாத்தன் அவளிடம் 'நீ அழாதே' என ஆறுதல் மொழி கூறி, இறந்த குழந்தைக்குப் பதிலாக அச்சாத்தன் குழந்தையாக மாறி மாலதியின் துன்பத்தைப் போக்கியதை

**...இடியுண்ட மஞ்ஞைபோல் ஏங்கி அழுதாளுக்கு, அச்சாத்தன்**
**'அஞ்ஞை நீ ஏங்கி அழல்' என்று முன்னை**
**உயிர்க் குழவி காணாய் என்று, அக் குழவியாய் ஓர்**
**குயில் பொதும்பர் நீழல் குறுக, அயிர்ப்பு இன்றி**
**மாயக் குழவி எடுத்து, மடித் திரைத்துத்**
**தாய்கைக் கொடுத்தாள்...**[30]

என்ற அடிகளில் குறிப்பிட்டுள்ளார். குழந்தையாகப் பிறந்த பாசண்டச் சாத்தன் தூய மறையோனாய் வளர்ந்து தேவந்தியை மணம் முடிக்கின்றான். அத்தேவந்தியே கண்ணகியின் தோழியாவாள்.

தமிழலக்கிய நூல்கள் பலவும் இப்புவியில் பிறந்த உயிர்கள் அனைத்தும் நிச்சயம் இறந்துபடும் எனக் குறிப்பிடுகையில், இளங்கோவடிகள் ஆண் மகவு இறந்ததென்றும் அக்குழவியின் பிணம் இடாகினிப் பேயால் உண்ணப்பட்டது எனவும் உண்ணப்பட்ட குழந்தைக்குப் பதிலாய் மாயக் குழந்தை பிறந்தது எனவும் குறிப்பிடுவது ஆசிரியரின் கற்பனை உத்தி எனலாம்.

## *குற்றத்தால் நிகழும் கொலைகள்*

### மனிதர்களைக் கொன்றுண்ணும் பூதம்

இந்திரவிழவு ஊர் எடுத்த காதையில் வெள்ளிடை மன்றம், இலஞ்சிமன்றம், நெடுங்கல் நின்ற மன்றம், பூதம் நிற்கும் பூத சதுக்கம், பாவை மன்றம் என ஐவகை மன்றங்களை இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். தம்முடைய தவ வேடத்தை மறைத்து தீச்செயல் புரியும் பொய் வேடத்தார், அலவல் பெண்டிர், அரசனுக்கு கேடு செய்யும் அமைச்சர், பிறர் மனைவியை விரும்புவோர், பொய் சாட்சி உரைப்போர், புறம் கூறுவோர் ஆகியோரை பூதசதுக்கத்துப் பூதமானது கொன்று உண்ணும் என்பதை

**...தவம் மறைந்து ஒழுகும் தன்மையிலாளர்**
**அவம் மறைந்து ஒழுகும் அலவல்பெண்டிர்**
**அறைபோகு அமைச்சர், பிறர்மனை நயப்போர்**
**பொய்க்கரியாளர் புறங்கூற்றாளர், என்**
**கைக்கொள் பாசத்துக் கைப்படுவோர் எனக்**
**காதம் நான்கும் கடும்குரல் எடுப்பிப்**
**பூதம் புடைத்து உணும் பூத சதுக்கமும்...**[31]

என்றும் அடிகளில் குறிப்பிட்டுள்ளார். இவற்றின் வழி புலவரின் கற்பனை மட்டுமன்றி ஆசையும், நாட்டின் நலமும் மேம்பாடும், தவறுகளைத் தடுத்தல் என்னும் நல்லெண்ணங்களும் வெளிப்படுவதைக் காணலாம். அற இலக்கியங்கள் அறமற்ற செயல்களைச் செய்யக் கூடாதென வலியுறுத்துகையில், தவறிழைப்பவர்களை நாற்காத எல்லை ஒலி எழுப்பிக் கொன்று உண்ணும் பூதத்தை ஆசிரியர் படைத்துள்ளார். இதைப் போன்றே அடைக்கலக் காதையிலும் பூதத்தைக் குறித்த செய்தி கிடைக்கப்பெற்றுள்ளது.

கொலைக்களக் காதையை எதிர் நோக்கியுள்ள அடைக்கலக் காதையை, கோவலனின் இறப்பிற்கு முன்பே அவனது நற்குணங்களைக் கூறுவதற்காக இளங்கோவடிகள் அமைத்துள்ளார். பல்வேறு இலக்கியங்களைப் படைக்கும் நூலாளர்கள் முன்னோக்கு உத்தி, பின்னோக்கு உத்தி, நனவோடை உத்தி எனப் பல்வேறு உத்திகளைக் கையாள்கின்றனர்.

இதனைப் போன்றே இளங்கோவடிகளும் கோவலனின் இறப்பிற்கு முன்னே அவனது நற்செயல்களைக் கூறும் விதமாக 'Praising Of The Tragic Hero' எனும் உத்தியை, கதைத் தலைவன் இறக்கும் முன்பே அவனது புகழைப் பாடுவதாக அமைத்துள்ளார். கோவலனை முற்பிறவியில் வஞ்சகனாகப் படைத்த ஆசிரியர் இப்பிறவியில், கருணை மறவன், செல்லாச் செல்வன், இல்லோர் செம்மல் என கோவலனின் சாவிற்கு முன்பே அவனைப் புகழ்ந்துரைத்து புகழுக்குரியவனாகப் படைத்துள்ளார்.

புகார் நகரிலுள்ள பூத சதுக்கத்துப் பூதமானது பொய் சாட்சி உரைப்பவர்களை அடித்துக் கொன்று உண்ணும். அவ்வாறாக ஒருவன், பத்தினி ஒருத்தியைப் பற்றி பொய் சாட்சி உரைத்ததனால் பூதமானது அவனைக் கொன்று உண்டது இதனை

**…பத்தினி ஒருத்தி படிற்று உரை எய்த**
**மற்று அவள் கணவற்க்கு வறியோன் ஒருவன்**
**அறியாக் கரிபொய்த்து, அறைந்துஉணும் பூதத்துக்**
**-----------------------------------------------------------------**
**'நரகன் உயிர்க்கு நல்உயிர் கொண்டு**
**பரகதி இழக்கும் பண்பு ஈங்கு இல்லை;**
**ஒழிக நின் கருத்து' எனஉயிர் முன்புடைப்ப…**[32]

என இவ்வடிகளில் விளக்குகின்றார். பூதமானது பொய் கூறியவனைக் கொல்ல முற்படுகையில் 'என்னுயிர் கொண்டு அவனை விடுக்க' என்ற கோவலனின் கருத்தைப் புறந்தள்ளி அவனைத் தின்றுவிடுகின்றது.

**வீரர்கள் தம்மைப் பலி கொடுத்தல்**

தமிழிலக்கியங்கள் பல்வேறு வகையான தெய்வங்களைக் குறிப்பிடுகின்றன. இறை நம்பிக்கை கொண்டுள்ள மனித இனம் அத்தெய்வங்களுக்கு பலி பொருட்கள் வழங்குதல் உண்டு. வெறியாட்டு நடத்துதல், விலங்குகளைப் பலியாகக் கொடுத்தல், பொருட்களைப் பலியாகக் கொடுத்தல் ஆகிய பலி கொடுத்தல்களை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மனிதர்கள் சக மனிதர்களிடம் போர் புரிந்து அவர்களைக் கொன்று பலி கொடுத்து அவர்களின் குருதியைத் தெய்வங்களுக்கு வெண் சோற்றுத் திரளோடு கலந்து பலியிட்டுள்ளனர். இளங்கோவடிகள் ஒருபடி மேற்சென்று, கரிகால் பெருவளத்தானின் வீரர்கள், வளவனின் வெற்றிக்காகத் தம்மையே பலியாகத் தந்ததை

**மருவூர் மருங்கின் மறம்கொள் வீரரும்**
**பட்டின மருங்கின் படைகெழு மாக்களும்**
**முந்தச் சென்று முழுப்பலி பீடிகை**
**வெம்திறல் மன்னற்கு உற்றதை ஒழிக்க எனப்**
**பலிக்கொடை புரிந்தோர் வலிக்கு வரம்பு ஆக எனக்**
**-----------------------------------------------------------------**
**சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கரும்தலை,**
**நல்பலி பீடிகை நலம் கொளவைத்து, ஆங்கு**
**உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து**
**மயிர்க்கண் முரசொடு வான்பலி ஊட்டி…**[33]

என அடிகளார் சுட்டுகின்றார். இது ஒரு வகையான தற்கொலையாகும். பொருட்களைப் பலி கொடுப்பது சாதாரண நிலை, ஆனால் மனிதர்கள் தம்மையே நரபலி கொடுத்தல் பேரெல்லையாக அமைவதைச் சிலம்பு குறிப்பிடுகின்றது. கரிகால் வளத்தானின் படை வீரர்கள் 'வெற்றியை உடைய என் வேந்தன் இன்னும் வெற்றியைப் பெறுக' எனச்

சூளுரைத்து தம்முடைய கரிய தலைகளை அரிந்து பூதப் பீடிகையில் தற்கொலை செய்து கொண்ட செய்திகள் சிலம்பு வழியாகக் கிடைக்கின்றன.

**கொற்றவைக்கு மனிதப் பலி**

மனிதர்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பல்வேறு தெய்வங்களுக்குப் பலி கொடுக்கும் வழக்கம் தற்காலம் வரை தொடர்ந்து வருகின்றது. பண்டைக்கால வேந்தர்கள், மறவர்கள், சாதாரண மக்கள் பொருட்களையும் உயிரையும் பலியாக கொடுத்துள்ள செய்திகள் பலவற்றையும் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. ஒரு செயலைச் செய்யும் முன் அச்செயலானது முழுமையாக வெற்றியடைய ஏதுவாக பலிப் பொருள் தடைகளை நீக்கி வெற்றியை வழிவகுத்துத் தரும் என்ற நம்பிக்கையை அக்கால மறவர்கள் கொண்டிருந்தனர் என்பதை

**...இட்டுத் தலை எண்ணும் எயினர் அல்லது**
**சுட்டுத் தலை போகாத் தொல்குடிக் குமரியைச்**
**சிறுவெள் அரவின் குருளை நாண்சுற்றிக்**
**குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி**
**இளை சூழ் படப்பை இழுக்கிய ஏனத்து**
**வளை வேண்கோடு பறித்து...**[34]

என இளங்கோவடிகள், மறவர்கள் வேந்தனுக்குத் தங்களின் தலைகளைப் பலி கொடுப்பதைப் போல, வீரர்கள் தங்களின் கரிய தலைகளைக் கொய்து கொற்றவைக்குப் பலி கொடுத்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். எயினர்கள் கொற்றவைக்குத் தம்முடைய தலைகளை வெட்டிப் பலியிட, துண்டுபட்டுக் கிடக்கும் அத்தலைகளைப் பிறர் எண்ணுவார்களே தவிர பலியிடப்பட்ட தலைகளைச் சுடுகாட்டிற்கு வெறும் பிணமாகக் கொண்டு செல்ல மாட்டார்கள் என்ற செய்தி இவ்வடிகளின் கிடைக்கின்றது. பழங்குடிப் பெண்ணொருத்திக்குக் கொற்றவை கோலம் புனைந்து, பகைவர்களின் தலைகளை அறுத்து கொற்றவையின் பலி பீடத்தில் இட்டு எண்ணுவார்கள் எனவும் பொருள் கொள்ளலாம் என உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

**கொற்றவையின் கூற்றம்**

தமிழிலக்கியங்கள் கொற்றவையைப் பாலை நிலக் கடவுளாகக் குறிப்பிடுகின்றன. வேட்டுவர்களும் எயினர்களும் கொற்றவையைக் கடவுளாகக் கொண்டுள்ளனர். கொற்றவை அசுரர்களை வதம் செய்ததை

**…வலம்படு கொற்றத்து வாய்வாள் கொற்றவை**
**இரண்டுவேறு உருவின் திரண்டதோள் அவுணன்**
**தலைமிசை நின்ற தையல்…**[35]

என இளங்கோவடிகள், கூற்றம் கொண்ட கொற்றவை திரண்ட தோளையுடைய அவுணன் விக்கிரமசூரனை தலைவேறு உடல் வேறாகக் கொன்று அவனது தலைமீதேறி நின்றாள் எனும் செய்தியைச் சிலம்பில் குறிப்பிட்டுள்ளார்.

அசுரர்களுக்கும் அமரர்களுக்கும் ஏற்பட்ட போரில், அசுரர்கள் பாம்புகளாகவும் தேள்களாகவும் உருவெடுத்து தேவர்களைத் துன்புறுத்தியதால், அமரர்கள் தங்களின் துன்பத்தைக் கொற்றவையிடம் முறையிட்டனர்

**…ஆய்பொன் அரிச் சிலம்பும் சூடகமும் மேகலையும் ஆர்ப்ப ஆர்ப்பு**
**மாயம்செய் வாள்அவுணர் வீழ, நங்கை மரக்கால் மேல் வாள்அமலை ஆடும் போலும்**
**மாயம்செய் வாள்அவுணர் வீழ, நங்கை மரக்கால் மேல்வாள் அமலை ஆடும் ஆயின்…**
**காயா மலர்மேனி ஏத்தி, வானோர் கைபெய்மலர் மாரி காட்டும் போலும்…**[36]

எனக் கொற்றவை அசுரர்களைக் கொன்ற செய்தியை இளங்கோவடிகள் இவ்வடிகளில் குறிப்பிட்டுள்ளார். தேளும், பாம்புகளுமாக உருமாறிய அசுரர்களை, மரக்கால் அணிந்து மிதித்துக் கொன்ற கொற்றவையின் கொலைத் தொழில் இங்கு விளக்கப்படுகின்றது.

**செங்குட்டுவனின் கொலைக் களம்**

உத்தரன், உருத்திரன், சிங்கன், சித்திரன், சிவேதன், தனுத்தரன், விசித்திரன் ஆகிய வடநாட்டு அரசரெல்லாம் தென் தமிழ் ஆற்றலைக் காண்பதற்காகக் கனக விசயருடன் நட்பு கொண்டனர். தமிழ் மொழியை இகழ்ந்து பேசிய கனகன், விசயன் ஆகியவர்களைப் பழி தீர்ப்பதற்கும், சேர நாட்டில் தெய்வமாக உறைந்த கண்ணகிக்கு சிலை எழுப்பி நடுகல் நடுவதற்கும் சேரன் செங்குட்டுவன் வட நாடு சென்று போர் புரிந்தான். செங்குட்டுவன் போர்த் தொடுத்தலால் பல்வேறு வீரர்கள் மரணமடைந்ததை

**...தாரும் தாரும் தாம் இடை மயங்க,**
**தோளும் தோளும் துணிந்து வேறாகிய**
**சிலைத்தோள் மறவர் உடல் பொறை அடுக்கத்து**
**எறிபிணம் இடறிய குறை உடல் கவந்தம்**

**பறைக்கண் பேய்மகள் பாணிக்கு ஆட;**
**பிணம் சுமந்து ஒழுகிய நிணம்படு குருதியில்**
**கணம் கொள் பேய்மகள் கதுப்பு இகுத்து ஆட,**
**அரும் தேர்த் தானை ஆரிய அரசர்**

**கடும் படை மாக்களைக் கொன்று, களம்குவித்து,**
**நெடும் தேர்க் கொடுஞ்சியும், கடும் களிற்று எருத்தமும்**
**விடும்பரிக் குதிரையின் வெரிநும் பாழ்பட;**[37]

என இளங்கோவடிகள் பாடியுள்ளார். கண்ணகிக்குச் சிலை எடுத்த செங்குட்டுவனின் போர்த் தொழிலைப் புகழ்ந்து உரைத்துள்ளார். வில்லைத் தாங்கிய வீரர்களின் பிணக்குவியல்கள் குருதி கலந்து களம் முழுவதும் பரவிக் கிடந்ததாகப் போர்க்களம் வர்ணிக்கப்பட்டுள்ளது.

## *மணிமேகலையில் இறப்புச் செய்திகள்*

சிலப்பதிகாரத்தை வழி நூலாகக் கொண்டு சாத்தனார் மணிமேகலைக் காப்பியம் இயற்றியுள்ளார். கண்ணகியின் கணவனான கோவலனுக்கும் ஆடல் மகளான மாதவிக்கும் பிறந்த மகள் மணிமேகலை. சாத்தனார் மணிமேகலையைக் கதைத் தலைவியாகக் கொண்டு மணிமேகலை இயற்றியுள்ளார். மணிமேகலையில் பதிவு செய்யப்பட்டுள்ள இறப்புப் பதிவுகளை இப்பகுதி ஆய்கின்றது. இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் உயிர்களின் இறப்பைக் குறித்த பதிவுகள் பெருமளவில் கிடைக்கப் பெறுகின்றன. இளங்கோவடிகளைப் போன்றே சாத்தனாரும் ஊழ்வினைச் செயல், மீமானுடச் செயல், பழி பாவச் செயல் ஆகியவற்றாலும் உயிர்கள் இறந்துபடுகின்றன எனப் பதிவு செய்துள்ளார்.

'இரட்டைக் காப்பியங்களில் இறப்புச் செய்திகள்' எனும் இவ்வியலில் இரண்டாம் பகுதியான மணிமேகலையில் பதிவு செய்யப்பட்டுள்ள இறப்புகளை

- **உதயகுமாரன் இலக்குமி**
- **மடையன் (சமையலாளி)**
- **ககந்தன் புதல்வர்கள்**
- **சார்ங்கலன்**
- **வீரை தாரை**
- **நெடுமுடியின் மகன்**
- **ஆபுத்திரன்**
- **வேள்விப் பசுவின் கொலைத் தொழில்**
- **பத்தினிகள்**
- **சக்கரவாளக் கோட்டம் (சுடுகாடு)**
- **பல்வேறு கோட்டங்கள்**
- **இன்னா ஒலிகள்**
- **துர்க்கைக்குப் பலி**
- **பிணந்தின்னி மக்கள்**
- **மனிதர்களைக் கொன்றுண்ணும் பூதங்கள்**

ஆகிய பல்வேறு தலைப்புகளில் ஆராயவுள்ளது.

**உதயகுமாரன் இலக்குமியின்**

சோழன் தொடித்தோட் செம்பியன், சோழ மண்டலத்தின் தலை நகரான காவிரிப் பூம்பட்டினத்தில் இருபத்தெட்டு நாள் இந்திரனுக்கு 'இந்திர விழா' கொண்டாடினான். மணிமேகலை மீது அரசிளங் குமாரனான உதயகுமாரன் மோகம் கொண்டு அவ்விழாவினிடையில் அவளைப் பின் தொடர்ந்தான். உதயகுமாரனைக் கண்ட மணிமேகலை காயசண்டிகையாக உருமாற்றம் கொள்கின்றாள். உருமாற்றம் அடைந்த மணிமேகலையைப் பின் தொடர்ந்த உதய குமாரனை

**...காயசண் டிகையென விஞ்சைக் காஞ்சனன்**
**ஆயிழை தன்னை அகலா தணுகலும்**
**வஞ்ச விஞ்சையன் மன்னவன் சிறுவனை**
**மைந்துடை வாளில் தப்பிய வண்ணமும்...**[38]

எனச் சாத்தனார் மணிமேகலைப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். மணிமேகலை காயசண்டிகையாக உருமாறியதால், காயசண்டிகையின் கணவனான காஞ்சனன் மணிமேகலையைத் தன்னுடைய மனைவி என எண்ணினான். உருமாறிய மணிமேகலையைப் பின் தொடர்ந்த உதயனைக் காஞ்சனன் வாளால் வெட்டிக் கொன்றான். முற்பிறவியில் மணிமேகலையின் கணவனாக இருந்த உதயகுமாரன், தற்போது தன்னுடைய உரு மாற்றத்தினால் இறந்துபட்டத்தை எண்ணி மணிமேகலை வருந்தினாள்.

மணிமேகலை துறவு பூண வேண்டும் என்ற நோக்கம் சாத்தனாருக்கு இருந்துள்ளது. ஆதலால் இப்பிறவியில் உதயனின் மரணத்தை ஆசிரியர் உறுதிப்படுத்தியுள்ளார். மணிமேகலையின் உரு மாற்றம், உதயனின் கொலை ஆகியவை மீமானுடச் செயலாகவும் விந்தையாகவும் ஆசிரியர் படைத்துள்ளது இங்கு நோக்கத்தக்கது. கதைச் சுவை குன்றா அளவில் வாசகர்களுக்குத் தர முனைந்த சாத்தனார் வியப்பைத் தரும் செயல்களைக் கொண்டு இக்காப்பித்தை இயற்றியுள்ளார்.

முற்பிறவியில் இராகுலனாகப் பிறந்த உதய குமாரனும் இலக்குமியான மணிமேகலையும் கணவன் மனைவியாக வாழ்ந்துள்ளனர். சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி ஆகியோரின் முற்பிறவியைக் கூறும் இளங்கோவடிகளைப்

போன்று சாத்தனாரும் முற்பிறவியில் மணிமேகலை, உதயகுமாரன் ஆகியோரின் மரணத்தை

> **...விட்ட பிறப்பில்யான் விரும்பிய காதலன்**
> **திட்டி விடமுணச் செல்லுயிர் போவுழி**
> **உயிரோடு வேவேன் உணர்வொழி...[39]**

எனச் சாத்தனார், பாத்திரம் பெற்ற காதையில் குறிப்பிட்டுள்ளார். மணிமேகலை தன்னுடைய முற்பிறவியில் நடந்த துயரினை நினைந்தாள். இலக்குமியின் கணவனான இராகுலன் 'திட்டிவிடம்' எனும் பாம்பு தீண்டியதால் உயிரிழந்தான் இதனை அறிந்த இலக்குமி சிதையில் மூழ்கித் தற்கொலை செய்து கொண்டாள். ஆசிரியர் இலக்குமியின் இறப்பை இரண்டாம் வகைப் பத்தினி என்ற கருத்தாக்கத்தில் உட்படுத்தியுள்ளது நோக்கத்தக்கது. உதய குமாரனாக மறுபிறவி எடுத்த இராகுலன் மறுபிறவியிலும் கொலையுண்டது ஆசிரியரின் மற்றுமொரு உத்தியாகப் புலப்படுகின்றது.

**மடையன் (சமையலாளி)**

கந்திற்பாவை எனும் தெய்வம், மணிமேகலை உதயகுமாரனின் முற்பிறவியை உரைத்தது. முனிவன் பிரம தருமனுக்கு விருந்தோம்புகையில் மடையன் (சமையலாளி) சோற்றுப் பாத்திரங்களோடு வழுக்கி விழுந்ததை குற்றமெனக் கருதிய இராகுலன் (உதயகுமாரன்) அம்மடையனைத் தோளும் தலையும் தனியாகுமாறு துணித்துக் கொன்றான். இதனால் மறுபிறவியில் அதேபோல் காஞ்சனனால் உதயகுமாரன் கொல்லப்பட்டான் இதனை

> **...பிரம தருமனைப் பேணினி ராகி,**
> **'அடிசிற் சிறப்புயாம் அடிகளுக் காக்குதல்**
> **விடியல் வேலை வேண்டினம்' என்றலும்-**
> **--------------------------------------------------**
> **வேலையின் வரூஉம்**
> **நடைத்திறத் திழ்னுக்கி, நல்லடி தளர்ந்து,**
> **மடைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனைச்,**
> **சீலம் நீங்காச் செய்தவத் தோர்க்கு**
> **வேலை பிழைத்த வெகுளி தோன்றத்,**
> **தோளும் தலையும் துணிந்துவே றாக,**
> **வாளிற் றப்பிய வல்வினை யன்றே...[40]**

என மணிமேகலை குறிப்பிடுகிறது. இராகுலனின் இரக்கமற்ற செயலால் மறுபிறவியில் (ஊழ்வினைப்பயன்) உதயகுமாரனாகப் பிறந்து கொலையுண்டது இங்கு

நோக்கத்தக்கது. இளங்கோவடிகள் குறிப்பிடும் மூன்று உண்மைகளில் ஒன்றான ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதை அடியொற்றி சாத்தனார் இம்மரணங்களைப் பதிவு செய்துள்ளார்.

**ககந்தன் புதல்வர்கள்**

உதய குமாரன் வெட்டுண்டு இறந்ததை சக்கரவாளத்து மாதவர் அறிந்து அரசனிடம் தெரிவிக்கின்றனர். மணிமேகலையைப் பின் தொடர்ந்து சென்றதால் உதயகுமாரன் வெட்டுண்டு இறந்தான் என்பதை அறிந்த மன்னன், பெண்களை இன்பத்திற்காக அழைத்த ககந்த மன்னனின் புதல்வர்கள் கொலையுண்டதை எண்ணிப் பார்க்கிறான்

**...தெள்ளுநீர்க் காவிரி யாடினள் வரூஉம்**
**பார்ப்பணி மருதியை, பாங்கோர் இன்மையின்**
**யாப்பறை யென்றே யெண்ணின் னாகிக்**
**காவிரி வாயிலில் ககந்தன் சிறுவன்**
**‘நீ வா’ என்ன நேரிழை கலங்கி**
**------------------------------------------**
**இகந்த பூதம் எடுத்துரை செய்ததும்**
**பூத முரைத்த நாளால் ஆங்கவன்**
**தாதை வாளால் தடியவும் பட்டனன்...**[41]

என்ற பாடலடிகள் வாயிலாகக் ககந்தனின் புதல்வர்கள் இறந்ததை அறிய முடிகின்றது. இங்கு மருதி எனும் பார்ப்பினி ஒருத்தி காவிரியில் நீராடி வருகையில், ககந்தனின் சிறுவன் ‘நீ என்னுடன் வருக’ என அழைத்துக் காமுற முயற்சிக்கின்றான். மருதி சதுக்க பூதத்திடம் தனக்கு நேர்ந்த துயரை முறையிடுகின்றாள். சதுக்கபூதம் ககந்தனின் சிறுவன் ஏழு நாளில் இறப்பான் எனக் கூறுகின்றது. சதுக்க பூதம் கூறியதைப் போன்றே ககந்தனின் வாளுக்கு ஆட்பட்டு அவனது சிறுவன் இறக்கிறான். இவ்விடம்

**...மண்திணி ஞாலத்து மழைவளம் தரூஉம்**
**பெண்டிர் ஆயின், பிறர்வளம் தரூஉம்**
**புக்கேன், பிறன்உளம்...**[42]

கற்பெனப்படுவது பிறர் நெஞ்சு புகாமை என கற்பை சாத்தனார் வரையறுத்துள்ளமை சுட்டத்தக்கது.

இதைப் போன்று, தருமதத்தனை மணக்க முடியாத விசாகை தன்னுடைய வாழ்நாள் முழுவதும் மணம் புரியாமல் கன்னிப் பெண்ணாக வாழ உறுதி பூண்டாள்.

ககந்தனின் மூத்த மகன், தரும தத்தனின் மாமன் மகளான விசாகையைக் ஒரு தலை பட்சமாகக் காமுறுகின்றான். ‘முன்னோர் கூறும் மணவினை இதுவே’ எனக்கூறி தன்னுடைய குடுமியிலிருந்து பூவை எடுக்க முனைந்தவனின் கையானது கீழிறங்காமல் நின்றது. இதனை

**...காமம் காழ்கொளச்**
**சுரிஇரும் பித்தை சூழ்ந்துபுறந் தாழ்ந்த**
**விரிபூ மாலை விரும்பினன் வாங்கித்**
**‘தொல்லோர் கூறிய மணம்ஈது ஆம்’ என**

**எல்அவிழ் தாரோன் இடுவான் வேண்டி**
**மாலை வாங்க ஏறிய செங்கை**
**நீலக் குஞ்சி நீங்காது ஆகலின்**
**ஏறிய செங்கை இழிந்திலது, இந்தக்**

**காரிகை பொருட்டு என, ககந்தன் கேட்டு**
**கடுஞ்சினம் திருகி, மகன்துயர் நோக்கான்**
**மைந்தன் தன்னை வாளால் எறிந்தனன்...**[43]

ஆக ககந்தனின் மகன்கள் இருவரும் பெண்களைக் காமுற்றதால் இறந்துபட்டனர். ககந்தனின் மகன் தந்தையின் வாளினால் கொல்லப்பட்ட செய்தியைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். மணிமேகலையைக் காமுற்ற உதயன் இறந்தான் என்பதைக் குறிப்பிட வந்த ஆசிரியர், பெண்களைக் காமுற்று இறந்த ககந்தனின் மகன்களின் இறப்பையும் இங்குச் சுட்டிக்காண்பித்துள்ளார்.

**சார்ங்கலன்**

சார்ங்கலன் எனும் சிறுவன், சுடுகாட்டை அரிய காவல் அமைந்த நகரம் என்று நினைத்து உள்ளே பிரவேசித்தான். பெண்ணின் பிணத்தைக் கைக்கொண்ட பேயானது அப்பினத்தின் கண்களைத் தோண்டி உண்டதனைக் கண்ட சார்ங்கலன்

**...கண்டனன் வெரீஇ, கடுனவை எய்தி.**
**விண்டு, ஓர் திசையின் விளித்தனன் பெயர்ந்து, ஈங்கு,**
**எம்அன்னை! காணாய்; ஈமச் சுடலையின்**
**வெம்முது பேய்க்குஎன் உயிர்கொடுத் தேன் என**
**தம்அனை – தன்முன் வீழ்ந்து, மெய் வைத்தலும்...**[44]

எனச் சார்ங்கலன் கூக்குரலிட்டு, அச்சம் கொண்டு ஓடித் தன்னுடைய தாயின் முன்னே வீழ்ந்து அக்கணமே உயிர் துறந்தான். ஆசிரியர் மீமானுடச் செயலாகத் துன்பம்

தரவல்ல பேயைப் படைத்து, அதனால் அச்சம் கொண்டு இறந்த சிறுவனின் கதாப்பாத்திரத்தையும் தம்முடைய கற்பனைத் திறத்தால் படைத்துள்ளார். மேலும் சிறுவன் அதீத அதிர்ச்சியின் காரணமாக நெஞ்சடைத்து மரணமடைந்திருக்கலாம்.

சார்ங்கலனின் தாயாகிய கோதமை, சம்பாபதி எனும் தெய்வத்திடம் தன்னுடைய மகனை உயிர்ப்பிக்க வேண்டி நின்றாள். சம்பாபதி ஒருவரின் உடலிலிருந்து பிரிந்த உயிரைத் திருப்பி பெற இயலாது எனக் கூறியதும், கோதமை உயிர் துறந்தாள்

**...சம்பாபதி – தான் உரைத்தஅம் முறையே,**
**எங்குவாழ் தேவரும் உரைப்பக் கேட்டே,**
**கோதமை உற்ற கொடுந்துயர் நீங்கி**
**ஈமச் சுடலையின் மகனைஇட்டு இறந்தபின்...**[45]

எனக் கோதமையின் இறப்பானது இவ்வடிகளின் வழியாகக் கிடைக்கின்றது. கோதமையை ஆற்றுப்படுத்த நினைந்த சம்பாபதி, தேவர்களுக்கு உன்னுடைய மகனை உயிர்ப்பிக்கும் ஆற்றல் இருந்தால் நானும் உன் மகனை உயிர்ப்பிக்கிறேன் எனக் கூறியது. இதனை ஆற்றாத கோதமை மகனை இட்ட ஈமத்தீயில் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டாள். கோதமையின் கணவன் கண்பார்வை அற்றவன், தன்னுடைய உயிரைப் பெற்றுக் கொண்டு மகனின் உயிர் தந்தால் தன்னுடைய கணவன் நலம் பெறுவார்கள் எனும் கோதமையின் எண்ணமும் இத்துடன் இறந்ததை அறியமுடிகின்றது. கணவன் இறக்க மனைவியும் மனைவி இறக்க கணவனும் சிதையிலேரியதை முன்னர் கண்டோம். மகன் இறந்த துக்கம் தாளாத தாய் சிதையில் ஏறியது நினைவில் கொள்ளத்தக்கது.

**வீரை தாரை**

மணிமேகலையின் தாய் மாதவி, மாதவியின் தோழி சுதமதி ஆகியோரின் முற்பிறவி இறப்பை அறவணடிகள் மணிமேகலையிடம் கூறுகின்றார். இருவரும் முற்பிறவியில் முறையே வீரையாகவும் தாரையாகவும் பிறந்த செய்தியை அடிகள் குறிப்பிடுகின்றார். வீரையும் தாரையும் துச்சயனை மணந்து கொள்கின்றனர். மதுவருந்தி போதை தலைக்கேறிய வீரை யானையின் முன்பு களியாட்டம் ஆட, யானை அவளைத் தாக்கிக் கொன்றது

**...புதுக்கோள் யானைமுன் போற்றாது சென்று**
**மதுக்களி மயக்கத்து வீரை மாய்ந்ததூஉம்**

**ஆங்கது கேட்டோ ரரமியம் ஏறித்**
**தாங்காது வீழ்ந்து தாரைசா உற்றதூஉம்..**[46]

என ஆசிரியர் வீரையும் தாரையும் தங்களின் முற்பிறவியில் இறந்ததை இவ்வடிகளில் விளக்கியுள்ளார். புதிதாகப் பிடித்துக் கொண்டு வரப்பட்ட மனிதப் பழக்கமில்லாத யானையினால், மதுவெறி முற்றிய வீரை மரணத்தைத் தழுவினாள். வீரை இறந்த துக்கம் தாழாத தாரை, நிலா முற்றத்திலேறி தற்கொலை செய்து தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டாள். கணவன் இறந்த பின் மனைவி இறந்துபடும் நிகழ்வைப் பல்வேறு இலக்கியங்கள் குறிப்பிடுகையில், தங்கை இறந்த துக்கம் தாளாத அக்கா தன்னுடைய தங்கைக்காக தற்கொலை செய்து கொண்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

**நெடுமுடியின் மகன்**

ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதையில் தீவதிலகை நெடுமுடி பீலிவளையின் குழவி இறந்ததைக் கூறுகிறாள். தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையில், அறவணடிகள் மணிமேகலையிடம் காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப் பட்டதற்கான காரணங்களைக் கூறுகின்றார். சோழ வேந்தன் நெடுமுடிக் கிள்ளிக்கும் நாகநாட்டரசன் வளைவணன் மகள் பீலிவளை என்பாளுக்கும் மகன் பிறந்தான். மணிபல்லவத் தீவிற்கு வந்த கம்பளிச் செட்டியிடம் பீலிவளை தன்னுடைய அரசனிடம் குழந்தையை ஒப்படைக்கும்படி கொடுக்கின்றாள். கடல்கோள் காரணமாக ஏற்பட்ட விபத்தில் அக்குழந்தை இறந்துவிடுகிறது இதனை

**...நாக நன்னா டாள்வோன் தன்மகள்**
**பீலிவளை என்பாள் பெண்டிரின் மிக்கோள்**
**பனிப்பகை வானவன் வழியில் தோன்றிய**
**புனிற்றிளங் குழவியொடு பூங்கொடி பொருந்தியித்**
**தீவகம் வலஞ்செய்து தேவர்கோன் இட்ட**
**மாபெரும் பீடிகை வலங்கொண் டேத்துழிக்**
**கம்பளச் செட்டி கலம்வந் திறுப்ப**
**அங்கவன் பாற்சென் றவன்திறம் அறிந்து**

**கொற்றவன் மகனிவன் கொள்கெனக் கொடுத்தலும்,**
**பெற்ற வுவகையன் பெருமகிழ் வெய்திப்**
**-------------------------------------------------------------**
**கலங்கொண்டு பெயர்ந்த வன்றே காரிருள்**

**இலங்குநீர் அடைகரை அக்கலங் கெட்டது**
**கெடுகல மாக்கள் புதல்வனைக் கெடுத்தது...**[47]

என நெடுமுடிக் கிள்ளிக்கும் பீலிவளைக்கும் பிறந்த ஆண்குழந்தை காரிருள் சூழந்த நடுச் சாமத்தில் மரக்கலம் கவிழ்ந்து இறந்தது. மகன் இறந்த துக்கம் ஆறாத நெடுமுடிக் கிள்ளி காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திர விழாவெடுத்தலை மறந்தான். கிள்ளியின் மகன் இறந்ததினால் இந்திர விழா நடைபெறாமற் போயிற்று எனத் தீவ திலகையும் அறவணடிகளும் குறிப்பிடுகின்றனர்.

**ஆபுத்திரன்**

சிந்தா தேவியின் மூலம் அமுத சுரபியைக் கைக்கொண்ட ஆபுத்திரன் பாமர மக்களின் வயிற்றுப் பசித்தீயைப் போக்கினான். சாவக நாட்டில் மக்கள் பசித்துன்பத்தால் வாடுகின்ற செய்தியைக் கேட்ட ஆபுத்திரன் அந்நாட்டாருடன் கடல்வழிப் பயணத்தை மேற்கொள்கின்றான். நடுக்கடலில் புயல் வீசியதால் மரக்கலத்தைச் செலுத்திய மீகாமன் மணிபல்லவத் தீவில் ஒரு நாள் தங்கிப் புறப்படுகின்றான். அத்தீவிலிறங்கிய ஆபுத்திரன் சாவக நாடு செல்லும் கலத்தில் ஏறவில்லை அவன் மணிபல்லவத் தீவிலேயே இருக்க நேர்ந்தது. மணிபல்லவத் தீவிலிருந்து தப்ப முடியாத ஆபுத்திரன் தற்கொலை செய்து இறந்தான். இது மணிமேகலையில் கீழ்வரும் அடிகளில் காணப்படுகிறது.

**...அருளறம் பூண்டாங் காருயி ரோம்புநர்**
**உளரெனில் அவர்கைப் புகுவாய் என்றாங்கு**
**உண்ணா நோன்போ டுயிர்பதிப் பெயர்ப்புழி**
**அந்நாள் ஆங்கவன் தன்பாற் சென்றே**

**என்னுற் றனையோ என்றியான் கேட்பத்**
**தன்னுற் றனபல தானெடுத் துறைத்தனன்**
**-------------------------------------------------------**
**மணிபல லவத்திடை மன்னுடம் பிட்டுத்**
**தணியா மன்னுயிர் தாங்குங் கருத்தொடு**
**சாவகம் ஆளுந் தலைத்தாள் வேந்தன்**
**ஆவயிற் றுதித்தனன் ஆங்கவன் தானென்...**[48]

உயிர்களின் பசித்துன்பத்தைப் போக்கும் அமுதசுரபியை கோமுகிப் பொய்கையில் விடுத்த ஆபுத்திரன் உண்ணா நோன்பிருந்து தற்கொலை செய்து கொண்டுள்ளான். மணிபல்லவத் தீவில் உயிரை மாய்த்துக் கொண்ட ஆபுத்திரன் சாவக நாட்டை ஆளும்

அரசனுடைய பசுவின் வயிற்றில் மீண்டும் பிறந்து மறுபிறவி எடுத்தான் என ஆசிரியர் (மீமானுடச் செயலாகக்) குறிப்பிட்டுள்ளார்.

மணிபல்லவத்துக் காவல் தெய்வமான தீவதிலகை புண்ணியராசனாகப் பிறவி எடுத்த ஆபுத்திரனிடம் அவனது முற்பிறவியை விளக்குகின்றது. மணிபல்லவத் தீவில் ஆபுத்திரனை அறியாமற் விட்டுச் சென்ற ஒன்பது செட்டிகள் ஆபுத்திரனின் எலும்புகளைப் பார்த்து துக்கம் அடைந்தனர். அவ்வணிகச் செட்டிகளும் அவர்களுடன் வந்தவர்களும் உண்ணா நோன்பிருந்து உயிர்த் துறந்தனர்

**...அந்நாள் நின்னை அயர்த்துப் போயினர்**
**பின்னாள் வந்துநின் பெற்றிமை நோக்கி**
**நின்குறி யிருந்து தம்முயிர் நீத்தோர்**
**ஒன்பது செட்டிகள் உடலென் பிவைகாண்;**
**ஆங்கவர் இடவுண் டவருடன் வந்தோர்**
**ஏங்கிமெய் வைத்தோர் என்பும் இவைகாண்...**[49]

என மறுபிறவி எடுத்த ஆபுத்திரன் மணிமேகலையுடன் மணிபல்லவத் தீவிற்கு வந்து கண்ட செய்தியை ஆசிரியர் இவ்வடிகளில் கூறியுள்ளார். செட்டிகளுடன் வந்தவர்களும் தங்களுக்கு உணவளித்தவர்களும் இறந்தார்கள் எனக் கூறி தங்களின் அறிய உயிரைப் போக்கிக் (தற்கொலை) கொண்ட செய்திகள் இதன் வழியாகக் கிடைக்கின்றது. ஒருவர் செய்த உதவியை மறக்காமல் அவர்க்கு நடந்த துயருக்கு கைம்மாறாகத் தன்னுடைய உயிரைத் துறப்பதென்பது அரிதினும் அரிதான செயலாகும்.

**வேள்விப் பசுவின் கொலைத் தொழில்**

வயணங்கோடு எனும் ஊரிலுள்ள அந்தணர்கள், வேள்வி செய்து ஊன் உண்பதற்காகப் பசுவொன்றைக் கட்டி வைத்தனர். அப்பசு பலியாதல் நலம் பயக்காது என்றுணர்ந்த ஆபுத்திரன் பசுவைக் காக்க வேண்டி அப்பசுவை களவாடிச் சென்றான். ஆபுத்திரனோடு, பசுவையும் பிடித்த அந்தணர்களில் ஒருவனை வேள்விப் பசு குத்திக் கொன்றது

**...ஆட்டிநின் றலைக்கும் அந்தணர் உவாத்தியைக்**
**கோட்டினில் குத்திக் குடர்புய்த் துறுத்துக்**
**காட்டிடை நல்லாக் கதழ்ந்து கிளர்ந்தோட...**[50]

என, பசுவின் உயிரைப் பாதுகாத்த ஆபுத்திரனை, 'ஆ' கவர் கள்வன் எனக் கூறி மூர்க்கச் சினம் கொண்ட அந்தணனான உவாத்தி அடித்துத் துன்புறுத்தினான்.

இதனைக் கண்ட வேள்விப்பசு அவ்வந்தணனின் குடற் வெளியில் விழும்படிக்குக் குத்தியிட்டுக் காட்டினுட் தப்பிச் சென்றது. குடற் சரிந்த உவாத்தி குருதிப் போக்கினால் இறந்திருக்கக் கூடும் என்பது இங்குப் புலப்படுகின்றது.

**பத்தினிகள்**

கோவலனின் மரணத்திற்குப் பின் ஆடல் மகளிரான மாதவியும் மணிமேகலையும் துறவு பூண்டனர். மாதவி, இந்திரனுக்கு எடுக்கப்பட்ட தீவகச் சாந்தி இந்திரவிழாவிற்கு ஆடல் பாடல் நிகழ்த்த வரவில்லை. இதனால் மாதவியின் தாயாகிய சித்ராபதியும் நகர மக்களும் மிகுந்த துயருற்றனர். சித்ராபதி, மாதவியின் தோழியாகிய வயந்தமாலையிடம் மாதவியை அழைத்து வர வேண்டுகின்றாள். மாதவி மற்றும் வயந்தமாலையின் உரையாடலின் வழியாகப் ‘பத்தினிகளின் இறப்பு’ குறித்த பதிவுகள் கிடைக்கின்றன. இங்கு

**…காதலர் இறப்பின் கனையெரி பொத்தி**
**ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது**
**இன்னுயிர் ஈவர், ஈயா ராயின்**
**நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்**
**நளியெரி புகாஅ ராயின் அன்பரோடு**
**உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்…**[51]

எனப் பத்தினிகளின் இறப்பானது எவ்வாறு அமைய வேண்டும் என்பதை மாதவி வயந்தமாலையிடம் கூறுகிறாள்.

- கணவன் இறந்தவுடன் அக்கணமே இறப்பவர் முதல் வகைப் பத்தினிகள்.
- கணவன் இறந்தவுடன் நல்ல நீரையுடைய பொய்கையில் நீராடுவதைப் போல, சிதையில் வீழ்ந்து தற்கொலை செய்பவர்கள் இரண்டாம் நிலைப் பத்தினிகள்.
- இவ்விரண்டு வகைமையில் இறவாதோர், அவரவர் கணவன்மாரை எண்ணி கைம்மை நோன்பு நோற்பவர்கள் மூன்றாம் நிலைப் பத்தினிகள்.

எனக் கணவனை இழந்த அக்கால மகளிரின் நிலையை இதன் வழியாக அறிய முடிகின்றது. சங்கமனை இழந்த நீலி, இறந்தவரை நினைந்து வழிபடும் பதினான்காம் நாள் தற்கொலை செய்து பத்தினித் தன்மையை அடைகின்றாள். இதே போன்று கோவலன் இறந்த பதினான்காம் நாள் கண்ணகியும் வானுலகம் பூண்டாள். கோவலன்

இறப்பிற்குப் பின் மாதவி தன்னை மூன்றாம் நிலைப் பத்தினியாக நிலை நிறுத்திக் கொண்டுள்ளாள்.

மணிமேகலையை இயற்றிய சாத்தனார் 'பத்தினி' எனும் கருத்தாக்கம் பெண்களுக்கு மட்டுமானது எனக் குறிப்பிடுகின்றார். பெண்களுக்கான பத்தினித் தன்மையைக் குறிப்பிட்ட சாத்தனார் ஆண்களுக்கான எவ்வகைத் தன்மையையும் குறிப்பிடவில்லை.

இதே போன்று உதயகுமாரன் அம்பலம் புக்க காதையில், மாதவியும் மணிமேகலையும் துறவு பூண்டனர் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மாதவியின் தாயாகிய சித்ராபதி, துறவானது ஆடல் மகளிருக்கில்லை எனத் தடுக்க முனைகிறாள். இதை

**...காதலன் வீயக் கடுந்துய ரெய்திப்**
**போதல் செய்யா உயிரொடு புலந்து**
**நளியிரும் பொய்கை யாடுனர் போல**
**முளியெரி புகூஉம் முதுகுடிப் பிறந்த**
**பத்தினிப் பெண்டிர் அல்லேம் பலர்தம்**
**கைத்தூண் வாழக்கை கடவிய மன்றே...**[52]

என ஆசிரியர் சுட்டுகின்றார். கணவன் இறக்க மனைவி இறத்தலும் துறவு மேற்கொள்ளுதலும் உயர்குடியில் பிறந்த பெண்களுக்குரியது. பலரையும் எதிர்நோக்கி வாழ்பவர்களுக்கு இவை பொருந்தாது எனவும் சித்ராபதி அறிவுறுத்துகின்றாள். செல்வம் உள்ள ஒருவரை நாடி வாழும் மகளிர்க்கு அச்செல்வம் இல்லாது போகுமளவில் அவரை நீங்குவது ஆடல் குலத்தின் குணம் என்பது சித்ராபதியின் வார்த்தைகளில் மிளிர்கின்றது. மாதவி, கோவலனை மட்டுமே கணவனாகக் கொண்டு மணிமேகலையைப் பெற்றமையால் மாதவியும் மணிமேகலையும் துறவு பூண்டது இங்கு நோக்கத்தக்கது.

**சக்கரவாளக் கோட்டம் (சுடுகாடு)**

மணிமேகலை தன்னைப் பின் தொடர்ந்து வந்த உதயகுமாரனிடமிருந்து தப்புவதற்கு மணிமேகலா தெய்வமானது, மணிமேகலையையும் சுதமதியையும் உவவனம் விடுத்துச் சக்கரவாளக் கோட்டம் செல்லும்படிக்குக் கூறுகின்றது. சுடுகாட்டின் அமைப்பையும் இன்னா ஒலிகளையும் மணிமேகலா தெய்வம் உரைக்கும்

செய்திகளைச் சாத்தனார் குறிப்பிடுகின்றார். சுடுகாட்டுக் கோட்டத்திற்கு நான்கு வாயில்கள் அமைந்துள்ளன. மணிமேகலை இதனை

**...ஊரா றற்றோர் ஓவியப் படுத்துத்**
**தேவர் புகுதரூஉம் செழுங்கொடி வாயிலும்**
**நெல்லும் கரும்பும் நீரும் சோலையும்**
**நல்வழி எழுதிய நலங்கிளர் வாயிலும்**

**வெள்ளி வெண்சுதை இழுகிய மாடத்து**
**உள்ளுரு வெழுதா வெள்ளிடை வாயிலும்**
**மடித்த செவ்வாய்க் கடுத்த நோக்கின்**
**தொடுத்த பாசத்துப் பிடித்த சூலத்து**

**நெடுநிலை மண்ணீடு நின்ற வாயிலும்**
**நாற்பெரு வாயிலும் பாற்பட் டோங்கிய**
**காப்புடை யிஞ்சிக் கடிவழங் காரிடை...**[53]

எனக் குறிப்பிடுகிறது. வானவர் நுழைந்து செல்லும் செழுங்கொடி வாயில், நெல்லும் கரும்பும் பூஞ்சோலையும் உடைய வாயில், சுண்ணச் சாந்தினால் பூசப்பட்ட வாயிலும் மடித்த செவ்வாயும் கருத்த பார்வையும் பாசக்கயிற்றையும் தன் கையில் கொண்டுள்ள பூதம் நிற்கும் வாயில் ஆகிய நான்கு வாயில்கள் இருந்ததை அறியமுடிகின்றது.

**பல்வேறு கோட்டங்கள்**

அருந்தவ முனிவர்கள், அரசர்கள், கணவனுடன் உயிர் நீத்த கற்புடை மகளிர், ஆகியோருக்கு நால் வருணப் பாகுபாட்டிற்கேற்ப சிறிதும் பெரிதுமாக சமாதிக் கோயில்கள் அக்காலத்தில் கட்டப்பட்டுள்ளன. இதனை

**...அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்**
**ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்**
**நால்வேறு வருணப் பால்வேறு காட்டி**
**இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த**
**குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன**
**சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்...**[54]

எனச் சாத்தனார் பல்வேறு வகைமையிலான இடுகாடுகள் இருந்தமையைக் குறிப்பிட்டுள்ளார். மனிதர்கள் இறந்த பின் பிணங்களாகச் சுடுகாடு சென்றாலும் அங்கும் வருணப் பாகுபாடு பார்க்கப்பட்டுள்ளது. கோலும் உண்ணும் கலமும் கையிற்

கொண்டு சுடுகாட்டைக் காவல் புரிந்துள்ளனர். இறந்தவர்களுக்காகக் கல்லறை எழுப்பும் வழக்கம் அக்கால மக்களிடையே இருந்துள்ளது.

**இன்னா ஒலிகள்**

இறந்தவர்களின் பிணங்களை அடக்கம் செய்யும் வழக்கமும் எரிக்கும் வழக்கமும் அக்கால மக்களிடையே இருந்துள்ளன. இறந்த பிணங்களை அடக்கம் செய்ய வருவோர் அழுதரற்றி ஆரவரித்து ஒப்பாரி வைப்பதை இன்னா ஒலிகள் என மணிமேகலை வழியாகச் சாத்தனார் குறிப்பிடுவதை

**...சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்**
**தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்**
**இரவும் பகலும் இளிவுடன் தரியாது**
**வருவோர் பெயர்வோர் மாறாச் சும்மையும்**
**-------------------------------------------------------**
**நன்னீர்ப் புணரி நளிகட லோதையின்**
**இன்னா இசையொலி என்றுநின் றறாது...**[55]

எனக் குறிப்பிட்டுள்ளார். இறந்த பிணங்களைச் சுட்டெரிப்பதையும் பிணங்களை நாய் நரிகட்கு இரையாகக் கொடுப்பதையும் குழிகளிலும் தாழிகளிலும் இட்டுப் புதைப்பதையும் மேற்காணும் அடிக்கள் வெளிக்கொணர்கின்றன. பிணங்களை அழிக்கும் பல்வேறு வழிமுறைகளை அக்கால மக்கள் பின்பற்றியுள்ளனர். மணிமேகலை குறிப்பிடும் சுடுகாட்டுக் கோட்டமானது இறந்தவர்களை எண்ணிக்கதறும் மக்களின் அலறலை இன்னா ஒலிகளாகப் பதிவு செய்துள்ளது.

**துர்க்கைக்குப் பலி**

மணிமேகலையில் துர்க்கைக்குப் பலி கொடுக்கும் நிகழ்வுகளைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். சக்கரவாளக் கோட்டத்தின் முன்பு பேய்கள் நடமாடும் காட்டுவழியில் துர்க்கையின் கோயில் அமைத்துள்ளது. அக்கோயிலின் முன்பு பெரிய அளவிலான பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது. போர்க்காரணங்கள், வேண்டுதல்கள் போன்ற இன்னபிற காரணங்களைக் கொண்டும் மனிதர்கள் தங்களின் அரிய உயிரை மாய்த்துக் கொள்வதை

**...உலையா உள்ளமோ குயிர்க்கடன் இறுத்தோர்**
**தலைதூங்கு நெடுமரம் தாழ்ந்துபுறஞ் சுற்றிப்**
**பீடிகை யோங்கிய பெரும்பலி முன்றில்**

**காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்...**[56]

என ஆசிரியர் குறிப்பிடுகிறார். உயிர்க் கடனிருந்தோர் தம்முடைய தலையைத் தாமே மரத்தினில் முடித்து கழுத்தோடு துணித்துத் தற்கொலை செய்து கொள்ளும் செய்தியை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அரசனின் வெற்றிக்காகவும் நாட்டைக் காக்கும் பொருட்டும் வீரர்கள் தங்களின் தலையைத் தாமே அரிந்து கொள்ளுதலால், வெட்டப்பட்ட தலைகளைக் கட்டும் மரமானது பாரம் தாங்காமல் நிலம்படும் என்பது இங்கு புலப்படுகின்றது. அக்கால வீரர்கள் தங்களைப் பலி (தற்கொலை) கொடுத்து அவர்களின் வீரத்தை நிலை நிறுத்தியதைக் காப்பியங்களின் வழியாக அறிய முடிகின்றது.

**பிணந்தின்னி மக்கள்**

மணிமேகலா தெய்வத்தின் சுடுகாட்டுக் கோட்டம், வானக மன்றம், வெள்ளில் மன்றம், வன்னி மன்றம், இரத்தி மன்றம், வெள்ளிடை மன்றம் ஆகிய ஐவகை மன்றங்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் வெள்ளிடை மன்றத்தில்

**...பிணந்தின் மாக்கள் நிணம்படு குழிசியில்**
**விருந்தாட் பயரும் வெள்ளிடை மன்றம்...**[57]

என பிணந்தின்னி மக்களை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இறந்த பிணங்களைத் தின்னும் வழக்கமுடைய மக்கள் சிலர், நிணம் பொருந்திய பானைகளில் விருந்துணவு சமைப்பதைக் குறிப்பிட்டுள்ளார். இயற்கை கொடையளித்த உணவுகளையும் விலங்குகளை வேட்டையாடி அதன் ஊனை உண்ணும் செய்திகளையும் தமிழிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. 'பைரவர்கள் எனப்படுவோர் பிணம் தின்னும் மாக்கள்' என மணிமேகலை இங்குக் குறிப்பிடுகின்றது.

**மனிதர்களைக் கொன்றுண்ணும் பூதங்கள்**

சிலம்பை இயற்றிய இளங்கோவடிகளும் மணிமேகலையை இயற்றிய சாத்தனாரும் மீமானுடச் செயல்களை, மனிதர்களின் சிந்தைக்கு எட்டாத நிகழ்வுகளை காப்பியங்களில் புனைந்துள்ளனர். அதீத கற்பனையால் படைக்கப்பட்ட கதாப்பாத்திரங்களின் குணாதிசயங்களும் தெய்வம் சார்ந்த நம்பிக்கைகளும், பேய்கள், பூதங்கள் சார்ந்த கருத்தாக்கங்களையும் காப்பியங்களில் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளார்கள். அறம் செய்யாதோரையும், அறமற்ற வழியில் நடப்போரையும்

தலைமைப் பண்பைக் கொண்டவர்கள் தண்டிப்பதைப் போன்று தவறிழைத்துப் பிழைப்போரைப் பூதங்கள் அறைந்துண்ணுவதான பூதத்தைச் சாத்தனார் படைத்துள்ளார். இதனை

**...வான்பதி தன்னுள்**
**கொடித்தேர்த் தானைக் கொற்றவன் துயரம்**
**விடுத்த பூதம் விழாக்கோள் மறப்பின்**
**மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க**

**இடிக்குரல் முழங்கத் திடும்பை செய்திடும்**
**தொடுத்தபா சத்துத் தொல்பதி நகரைப்**
**புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடும்...**[58]

எனும் இவ்வடிகளில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். பூம்புகாரில் பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் ஆகிய ஊர்களுக்கிடையில் நாளங்காடி உள்ளது. அங்கு வாழும் பூதமானது இந்திரவிழா கொண்டாடவில்லை எனில் சீற்றம் கொண்டு மக்களைத் துன்புறுத்தும் எனச் சாத்தனார் குறிப்பிடுகின்றார். தவ வேடம் பூண்ட வஞ்சகர், கணவனை வஞ்சித்து நடக்கும் மகளிர், அரசனை வஞ்சிக்கும் அமைச்சர், பிறர் மனைவியை விழைவோர் எனத் தவறு செய்யும் பாவிகளைப் பூதமானது தன்னுடைய பாசக்கயிற்றில் பிணித்துப் புடைத்துண்ணும் செய்திகள் இவ்வடிகளில் கிடைக்கின்றது. பாவம் செய்பவர்களை உண்ணும் சதுக்க பூதம் இந்திரவிழா நடைபெறாமல் போனால் ஊரைக் காக்காது விலகிவிடும் எனும் நம்பிக்கை இங்கு நோக்கத்தக்கது.

## தொகுப்புரை

- சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளும் மணிமேகலையை இயற்றிய சாத்தனாரும் ஊழ்வினை என்ற கருத்தாக்கத்தைத் தமிழிலக்கியச் சூழலில் உருவாக்கியுள்ளனர்.
- இரு காப்பியங்களிலும் 'மீமானுடச் செயல்களைக்' கதையின் போக்கிற்காக ஆசிரியர்கள் அமைத்துள்ளனர்.
- கற்பனை, ஊகம், மாயாஜால வித்தைளை உள்ளடக்கியே காப்பியங்கள் இயற்றப்பட்டுள்ளன.
- நிரூபணம் ஆகாத அல்லது நிரூபிக்க முடியாத நம்பகத் தன்மையற்ற முற்பிறவியையும் மறுபிறவியையும் ஆசிரியர்கள் கட்டமைத்துள்ளனர்.
- சிலம்பில், கண்ணகி கோவலனையும், மணிமேகலையில், மணிமேகலை உதயகுமாரனையும் கதை மாந்தர்களாகப் படைத்த ஆசிரியர்கள், அவர்களின் இறப்பு ஊழ்வினையால் நிகழ்ந்தது என வாசகர்களை நம்பச் செய்துள்ளனர்.
- கோவலன் முற்பிறவில் வஞ்சகனாக இருந்தான். இப்பிறவில் கொல்லனின் வஞ்சகமும், சுயநலமும் கோவலன் மரணத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன.
- கோவலனின் வழக்கை விசாரிக்காத பாண்டியன் தவறான நீதியை வழங்கியதால், ஆத்திரம் கொண்ட கண்ணகி நீதியை ஆயுதமாகவும் தன்னுடைய காற்சிலம்பைப் பக்கபலமாகவும் கொண்டு பாண்டியனும், அவன் தேவியும் இறந்துபட பழி தீர்த்துக் கொண்டாள். முலையைத் திருகி எறிந்து மதுரையை எரித்தாள்.
- நிமித்தங்கள், கனவுகள் ஆகியவற்றைக் கொண்டு கதை மாந்தர்களின் இறப்பை முன்னோக்கு உத்தியாக ஆசிரியர்கள் உணர்த்தியுள்ளனர்.
- கோவலன், கண்ணகியின் இறப்பை அறிவித்த மாடலமறையோனின் சொல்லைக் கேட்டு கோவலன் கண்ணகியரது தாயர்கள், கவுந்தியடிகள், மாதரி ஆகியோர் தற்கொலை செய்து கொண்டனர். இவர்களின் இறப்பிற்கு மாடல மறையோனை இளங்கோவடிகள் ஒரு கொலைக் கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்.

- ஊழ்வினையைக் குறிப்பிடும் இளங்கோவடிகள், சங்கமனின் கொலைக்குக் காரணமான பரதனையும் கோவலனின் கொலைக்குக் காரணமான பொற்கொல்லனையும் வெறுமனே விட்டுவிட்டார்.
- வெற்றிவேல் செழியன், பாண்டிய மன்னன் மீதும், ஆட்சியின் மீதும் ஏற்பட்ட களங்கத்தைப் போக்க எவ்விதத் தவறும் இழைக்காத ஆயிரம் பொற்கொல்லர்களைப் பலி கொடுத்து பாண்டிய நாட்டுப் புகழைத் தக்கவைத்துக் கொண்டான்.
- காப்பியங்களில் கிளைக்கதைகளைப் படைத்துள்ள ஆசிரியர்கள், இறந்த உயிர்களை மீண்டும் பிறப்பிக்கும் வரம் தரும் தெய்வங்கள், தவறிழைப்பவர்களை புடைத்துண்ணும் பூதங்கள் ஆகியவற்றையும் படைத்துள்ளனர்.
- வேள்வி நடத்திப் பசுவின் ஊன் உண்ணும் அந்தணப் பாத்திரங்களைப் படைத்துள்ளார் ஆசிரியர்.
- வெற்றியால் கிடைக்கும் புகழுக்காகவும் தம்முடைய பெருஞ்சோற்றுக் கடன் கழித்தலுக்காகவும் மறவர் குடிகள் தங்களின் தலைகளை அறுத்து (தற்கொலை செய்து) தங்களை பலி கொடுத்துள்ளனர்.
- தெய்வங்களைப் படைத்துள்ள காப்பிய ஆசிரியர்கள் பேயையும் படைத்துள்ளனர். மணிமேகலையில் பேயாலொருவன் அச்சப்பட்டு இறந்தான் எனும் மீமானுடச் செயலைக் குறிப்பிட்டுள்ளார் சாத்தனார்.
- இரு காப்பிய ஆசிரியர்களும் பெண்களுக்கு கற்புண்டு எனவும் பெண்களைப் பத்தினிகள் எனவும் குறிப்பிட்டுள்ளனர். கணவன் இறந்தால் மனைவி பத்தினித் தன்மையுடன் இறக்கும் வழிமுறைகளையும் தற்கொலைத் தூண்டல்களையும் பதிவு செய்துள்ளனர்.
- பிணங்களை உண்ணும் மக்களைக் குறித்த செய்திகளும் காப்பியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

---

## அடிக்குறிப்புகள்

1. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், பதிகம்: 55-60
2. திருக்குறள் 380
3. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கட்டுரை காதை:160-168
4. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், ஆய்ச்சியர் குரவை:11-16
5. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், ஆய்ச்சியர் குரவை:121-130
6. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கொலைக்களக் காதை:212-217
7. நாலடியார், சமண முனிவர்கள், பாடல்:105
8. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கொலைக்களக் காதை:148-153
9. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், ஊர்சூழ் வரி:60-67
10. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கட்டுரை காதை:158-162
11. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கட்டுரை காதை:163-169
12. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், நீர்ப்படைக் காதை:74-78
13. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், நீர்ப்படைக் காதை:79-83
14. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், வழக்குரை காதை:1-7
15. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், வழக்குரை காதை:73-78
16. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், வழக்குரை காதை:78-81
17. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், நீர்ப்படைக் காதை:88-102
18. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், நீர்ப்படைக் காதை:126-130
19. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், வஞ்சின மாலை:39-46
20. மார்பக வரி: தலித் பெண்களின் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரானது விசித்திர குப்தா (Breast Tax: Social Oppression of Dalit Women), ப.எ:23-24
21. மகாத்மா அய்யன் காளி, நிர்மால்யா, ப.எ:53
22. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கட்டுரைகாதை:191-200
23. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், குன்றக் குரவை:7-9

24. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், காட்சிக் காதை:55-60
25. இரட்டைக் காப்பியங்கள் போற்றும் பத்தினி எனும் கருத்தாக்கம், பக்: 93
26. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், நடுகல் காதை:219-233
27. நற்றிணை, மதுரை மருதன் இளநாகனார், பா.எ:216:6-9
28. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கனாத்திறம் உரைத்த காதை:4-6
29. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கனாத்திறம் உரைத்த காதை:18-22
30. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கனாத்திறம் உரைத்த காதை:22-28
31. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், இந்திரவிழவு ஊர் எடுத்த காதை:128-134
32. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கனாத்திறம் உரைத்த காதை:76-86
33. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், இந்திரவிழவு ஊர் எடுத்த காதை:76-88
34. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், வேட்டுவ வரி:20-25
35. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், வேட்டுவ வரி:64-66
36. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், வேட்டுவ வரி:12
37. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கால்கோள் காதை:204-214
38. மணிமேகலை, சீத்தலை சாத்தனார், பதிகம்:73-76
39. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:11:99-101
40. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:21:99-101
41. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:22:40-79
42. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:22:45-47
43. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:22:146-158
44. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:6:127-131
45. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:6:186-189
46. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:12:45-48
47. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:25:178-192
48. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:14:93-104

49. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:25:162-167

50. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:13:46-48

51. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:2:42-47

52. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:18:11-16

53. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:6:39-47

54. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:6:54-59

55. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:6:66-80

56. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:6:50-54

57. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:6:90-91

58. மணிமேகலை, சீத்தலை சாத்தனார்:1:18-24

## *முடிவுரை*

- பல்வேறு அறிஞர் பெருமக்கள் கூறிய இறப்பு குறித்தத் தத்துவப் பதிவுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- உயிர்களின் இறப்பு எங்கு, எப்படி, எவ்வாறு நிகழ்கின்றன என்பதை மானுட அறிவியல் வரையறுத்துள்ளது.
- சமயங்கள் உயிர்களின் இறப்பிற்கு காரணமாக இம்மை மறுமை குறித்த நம்பிக்கைகளைத் தாங்கியுள்ளன.
- தமிழ்ப் பேரகராதிகள், நிகண்டுகள், இலக்கியங்கள் ஆகியவற்றில் இறப்பு குறித்த சொற்கள் கண்டறிந்து தொகுக்கப்பட்டுள்ளன.
- இறப்பைக் குறிக்கும் மங்கல மற்றும் அமங்கலச் சொல்லாடல்களும் எள்ளல் சொற்களும் தொகுக்கப்பெற்றுள்ளன.
- சாதி மத ஏற்றத் தாழ்வு காரணமாக மரணத்தை இழிவான வழக்கால் குறிப்பிடும் வழக்காறுகள் காணப்படுகின்றன.
- மனிதர்களின் குற்றச் செயல்களுக்கு அரசே மரணதண்டனை விதிக்கின்றது. இந்த மரண தண்டனைகள் பல்வேறு விதமாகச் செயல்படுத்தப்படுகின்றது.
- மனிதர்களின் மரணம் இயல்பு, உயர்வு, இழிவு என மூன்று நிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழ்ச் சமூகம் பண்டைக் காலம் தொடங்கி இன்றளவும் மரணத்தை வீரமாக கருதுகின்றது.
- அக இலக்கியங்களின் வழியாக மன்னர்கள், சாதாரண மனிதர்கள் ஆகியோரின் இறப்புச் செய்திகளும் விலங்குகள், பறவைகள் போன்றவற்றின் இறப்புச் செய்திகளும் கிடைத்துள்ளன.
- பசிய மாங்கனியைத் தவறுதலாக உண்டதைக் குற்றமெனக் கூறிய நன்னன், அக்கனியை உண்ட பெண்ணை இரக்கமின்றி கொலை செய்தமை அறியமுடிகின்றது.
- கோசர்களின் வயல்வெளியில் பசுவை மேய்ச்சலுக்கு விட்டதை குற்றமெனக் கருதிய கோசர்கள், அன்னி மிஞிலி என்பவளின் தந்தையின் கண்களைப்

பிடுங்கியதையும் அன்னி மிஞிலி அதற்குப் பழிக்குபழியாக குறும்பியனிடமும் திதியனிடமும் முறையிட்டு கோசர்களைக் கொன்றதையும் பாடல்கள் பதிவு செய்துள்ளன.

❖ காவிரிப் புதுவெள்ள நீராடலின் பொருட்டு கரிகால் வளவனின் மகள் ஆதி மந்தியும் ஆட்டன் அத்தியும் ஆற்று நீரில் களிக்க, அத்தி வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு இறந்தான்.

❖ புறம் சார்ந்த செய்திகளையும் புற இறப்புகளையும் தலைமக்களின் காதல் வாழ்க்கையோடு ஒப்பிட்ட பாடல்களில் பெரும்பான்மையான இறப்புக் குறிப்புகள் கண்டடையப்படுள்ளன.

❖ பாண்டிய மன்னனுக்காகப் போர் புரிந்த அதிகன் போர்க்களத்தில் பகைவர்களால் கொல்லப்பட்ட நிகழ்வு அகப்பாடல் வழி கிடைக்கின்றது.

❖ போர் களத்தில் சோழன் இளம் பெருஞ் சென்னி வடுகர்களைக் கொன்று குவித்ததை அக இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

❖ கடையேழு வள்ளல்களில் இருவரான காரிக்கும் ஓரிக்கும் மூண்ட பகையில் காரி ஓரியைக் கொன்று வெற்றி கண்டதை அக இலக்கியங்களால் அறிய முடிகின்றது.

❖ சோழனின் படைத்தலைவனான பழையனை, நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புந்துறை ஆகிய அறுவரும் சேர்ந்து கூட்டுக் கொலை புரிந்ததை அக இலக்கியம் பதிவு செய்துள்ளது.

❖ அன்னிக்கும் திதியனுக்கும் ஏற்பட்ட போரில், அன்னி திதியனைக் கொன்றான்.

❖ அக்கால மக்களிடையே மற்போர் புரிதல் வீரமாகக் கருதப்பட்டுள்ளது. அவ்வாறாக நடந்த யுத்தத்தில், மற்போரில் வல்லவனான பாணன் தன்னை எதிர்த்து வந்த ஆரியப் பொருணனின் திரண்ட தோள்களை உடைத்துக் கொன்றான்

- தலைமக்களின் காதல் வாழ்க்கையைக் குறிப்பிடும் அக இலக்கியங்கள் புற செய்தியான இறப்புகளையும் குறிப்பிட்டுள்ளன.
- கிள்ளிவளவன், பழையன் மாறனைப் போரில் கொன்ற செய்தியினை அக நூல்கள் வழி அறிய முடிகின்றது.
- ஏறு தழுவலின் பொருட்டு குடற் சரிந்து மரணம் கண்ட வீரர்களின் நிகழ்வுகளையும் பாலை நிலக் கள்வர்களால் வழிப் போக்கர்கள் கொல்லப்பட்ட செய்திகளும் வழிப் போக்கர்களைக் கொன்ற கள்வர்கள் அவர்களின் பிணங்களை பதுக்கைகளாக்கி வைத்த செய்திகளும் கிடைக்கப் பெறுகின்றன.
- துன்பம் நேர்கையில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் அக்கால மக்களிடையில் இருந்துள்ளதை அகப்பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.
- காதல் புரிந்த தலைமக்களின் பிரிவுத் துன்பங்களை அக இலக்கியங்கள் இறப்புடன் தொடர்புபடுத்தியுள்ளன. தலைவர்களின் பிரிவுத் துயரைச் சகித்துக் கொள்ள முடியாத தலைவிகளின் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் கொண்டிருந்தனர்.
- தலைவிகளை மணம் முடிக்க முயன்ற தலைவர்கள் மடலேறுதல் என்ற தற்கொலை முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.
- தலைவனும் தலைவியும் சில சூழல்களில் தற்கொலை செய்வதாக அச்சுறுத்தியுள்ளனர்.
- அகப்பாடல்களில், போரில் மரணமடைந்த வீரர்களின் நினைவாக நடப்பட்ட நடுகற்கள் குறித்தான செய்திகள் கிடைக்கின்றன.
- தலைவிகளின் காதல் நோயைப் போக்க வெறியாட்டு நடத்தி ஆடுகளைப் பலிகொடுத்த செய்திகளை அக நூல்கள் பதிவு செய்துள்ளன.
- விலங்குகள், பறவைகள் குறித்த தற்கொலைகளும் வேட்டைத் தொழில் புரிந்து விலங்குகளின் உயிர்களைப் பறித்த செய்திகளும் அகப் பாடல்களில் கிடைக்கின்றன.

- புற இலக்கியங்களில் மறப்பண்பு, மண்ணாசை, மானக்குறைவு, ஆட்சி விரிவாக்கம், தலைமை வகித்தல் போன்ற காரணங்களால் போர் நிகழ்ந்த வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளன.
- வேந்தர்கள் இருக்கும் போதும் இறக்கும் போதும் புகழை நிலைநாட்டுவதற்காக தங்களின் உயிரைத் துச்சமென எண்ணியுள்ளனர்.
- முடி வேந்தர்கள் தொடங்கி, கடைமட்டப் போர் வீரன் வரை பகை வீரர்களை சூளுரைத்துக் கொன்றுள்ளனர்.
- வேந்தர்கள் போர் புரிந்து இறந்த இடத்தின் பெயரை தங்களின் அடைமொழியாகக் கொண்டுள்ளனர் என்பதனை சங்கப் பாடல்கள் சான்று பகர்கின்றன.
- வேந்தர்கள் முதல் வள்ளல் தன்மை கொண்ட குறு நில மன்னர்கள் வரை அறம் செய்து இறந்துள்ளனர்.
- ஆட்சிப் பிரச்சினை, மானக்குறைவு, நட்பு போன்ற காரணங்களுக்காக வேந்தர்களும் புலவர்களும் வடக்கிருந்து உயிர் நீத்துள்ளனர்.
- அரசியை இழந்த அரசர் துயருற்றமையும் அரசனை இழந்த அரசி சிதையிலேறித் தற்கொலை செய்துள்ளமையும் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- விலங்குகளைக் கொன்று பலி கொடுப்பதைப் போன்று நன்னனைக் கொன்று கொற்றவைக்குப் பலி கொடுத்துள்ளனர்.
- போர் வீரர்களை இழந்த மகளிர் நிலை, மறக்குடிப் பெண்டிரின் வீர நிலை, இறந்துபட்ட வீரர்களின் மகளிர் தற்கொலை ஆகியவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- வேந்தர்களின் வெற்றிக்காக மறவர்கள் போர் புரிந்து இறந்துபட்டுள்ளனர்.
- போர் புரிந்து இறந்த வீரர்களின் நினைவாக அவர்களின் பீடெழுதி நடுகல் நடப்பட்டு வணங்கப்பட்டுள்ளன.

- பண்டைக்கால வேந்தர்களும் மக்களும் தங்களுக்காகவும் தங்களை நாடி வருவோரை உபசரிக்கவும், ஆடு, மிளா, பன்றி ஆகிய பல்வேறு விலங்குகளை உணவிற்காகப் பலியிட்டுள்ளனர்.
- புகழை மட்டுமே மையமாகக் கொண்டு பல்வேறு கொலைகளும் தற்கொலைகளும் அரங்கேறியுள்ளன.
- அற இலக்கியங்கள் மனித இனத்தின் பிறப்பு மட்டுமல்லாமல் இறப்பும் அற வழியில் அமைய வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன.
- அற இலக்கியங்கள் அறிவால் பெறப்படும் அறத்தையும் அறத்தால் வரும் இறப்பையும் மக்களுக்குப் போதிக்கின்றன.
- இவ்வுலகத்தில் தோன்றிய அனைத்து உயிர்களுக்கும் இறப்பென்னும் நிலையாமை நிச்சயம் உண்டென்பதை அற நூல்கள் குறிப்பிடுகின்றன.
- அறிவிற் சிறந்தோர் மானம் அழிவதின் காரணமாக உயிர் துறப்பர் என அற நூல்கள் கூறுகின்றன.
- அற நூல்கள் உயிர்க் கொலை புரிதல் அறமற்ற செயல் என்றும் உயிர்க் கொலை பாவத்தையும் பழியையும் மனிதர்களின் மறுமைக்கு இட்டுச்செல்லும் காரணம் என்று குறிப்பிடுகின்றன.
- மனிதர்களின் வாழ்க்கைச் சூழலில், அற வழியில் பொருளைத் தேடி, இன்பத்தைத் துறந்து இறப்பதே உண்மையான இறப்பென அற நூல்கள் குறிப்பிடுகின்றன.
- அற நூல்கள் மனிதர்களின் இறப்பிற்கான காரணங்களாக உடலுறுப்புகள் செயற்படாமை, உடல் உபாதைகள், விபத்துகள் முதலிய நிலைகளைச் சுட்டிக் காட்டியுள்ளன.
- மனிதர்களின் இளமைப் பருவம் நிலையாமை கொண்டது. இளமைக் காலத்தில் மரணம் நிகழும் எனக் குறிப்பிடும் அற நூல்கள், அறம் செய்து வாழ மனிதர்களைத் தூண்டுகின்றன.

- ❖ அன்பு, இரக்கம் ஆகிய கருணையில்லாதவர்கள் இறந்தவர்க்கு ஒப்பாவர் என அற நூல்கள் குறிப்பிடுகின்றன.
- ❖ அற இலக்கியங்கள், அறம் செய்யாதவர்கள், பிறரைப் பழி பேசுபவர்கள், கொலைக் குற்றம் புரிவோர்... இருப்பதை விட தற்கொலை செய்து சாதல் மேலானது என்கின்றன.
- ❖ கொடையறம் செய்து உயிர்களைக் காவாதவர்கள், பொருளை ஈட்டித் தானும் பயன் கொள்ளாமல் பிறருக்கும் கொடாதவர்கள் உயிருள்ள பிணம் என அற நூல்கள் கூறுகின்றன.
- ❖ அற நூல்கள் வேள்வி செய்யும் பொருட்டு உயிர்களைப் பலி கொடுத்து அதன் ஊனை உண்பவர்களுக்கு மரணம் உண்டு என்கின்றன.
- ❖ மனிதர்களின் மரணத்திற்கு கூற்றுவன் எனும் கண்களுக்குப் புலப்படாத மீமானுடம் இங்கு கூறப்பட்டுள்ளது. மனிதர்களின் இறப்பிற்கு கூற்றுவனைக் குறிப்பிடும் புலவர்கள் பிற உயிரினங்களின் இறப்பிற்கு கூற்றுவனைக் குறிப்பிடவில்லை.
- ❖ ஒருவரைப் பற்றி புறம் கூறுதல், சினம் கொள்ளுதல், தீமையான இடங்களைச் சேருதல் ஆகியவை மரணத்தைத் தருவன எனும் கருத்துக்கள் கிடைக்கின்றன.
- ❖ தலைமக்களின் பிரிவுத் துன்பத்தை மரணத்துடன் புலவர்கள் ஒப்பிட்டுள்ளனர். தலைவனின் பிரிவுத் துயர் தலைவிகளைத் தற்கொலைக்குத் தூண்டிய செய்திகள் கிடைக்கப் பெற்றுள்ளன.
- ❖ மனிதர்களின் வாழ்க்கையில், ஊழ்வினை, முற்பிறவி, மறுபிறவி எனும் நம்பிக்கையை அற நூல்கள் விதைத்துள்ளன.
- ❖ மனிதர்கள் இறந்த பின்பு, அவர்களின் அறச்செயல்கள், பழி பாவச் செயல்களை அடிப்படையாகக் கொண்டு மறுபிறவி அடைவார்கள் என ஓர் நம்பிக்கையையும் அற இலக்கியங்கள் கட்டியுள்ளன.

- சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளும் மணிமேகலையை இயற்றிய சாத்தனாரும் ஊழ்வினை என்ற கருத்தாக்கத்தைத் தமிழிலக்கியச் சூழலில் உருவாக்கியுள்ளனர்.
- இரு காப்பியங்களிலும் 'மீமானுடச் செயல்களைக்' கதையின் போக்கிற்காக ஆசிரியர்கள் அமைத்துள்ளனர்.
- கற்பனை, ஊகம், மாயாஜால வித்தைளை உள்ளடக்கியே காப்பியங்கள் இயற்றப்பட்டுள்ளன.
- நிரூபணம் ஆகாத அல்லது நிரூபிக்க முடியாத நம்பகத் தன்மையற்ற முற்பிறவியையும் மறுபிறவியையும் ஆசிரியர்கள் கட்டமைத்துள்ளனர்.
- சிலம்பில், கண்ணகி கோவலனையும், மணிமேகலையில், மணிமேகலை உதயகுமாரனையும் கதை மாந்தர்களாகப் படைத்த ஆசிரியர்கள், அவர்களின் இறப்பு ஊழ்வினையால் நிகழ்ந்தது என வாசகர்களை நம்பச் செய்துள்ளனர்.
- கோவலன் முற்பிறவில் வஞ்சகனாக இருந்தான். இப்பிறவில் கொல்லனின் வஞ்சகமும், சுயநலமும் கோவலன் மரணத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது.
- கோவலனின் வழக்கை விசாரிக்காத பாண்டியன் தவறான நீதியை வழங்கியதால், ஆத்திரம் கொண்ட கண்ணகி நீதியை ஆயுதமாகவும் தன்னுடைய காற்சிலம்பைப் பக்கபலமாகவும் கொண்டு பாண்டியனும், அவன் தேவியும் இறந்துபட பழி தீர்த்துக் கொண்டாள். முலையைத் திருகி எறிந்து மதுரையை எரித்தாள்.
- நிமித்தங்கள், கனவுகள் ஆகியவற்றைக் கொண்டு கதை மாந்தர்களின் இறப்பை முன்னோக்கு உத்தியாக ஆசிரியர்கள் உணர்த்தியுள்ளனர்.
- கோவலன், கண்ணகியின் இறப்பை அறிவித்த மாடலமறையோனின் சொல்லைக் கேட்டு கோவலன் கண்ணகியரது தாயர்கள், கவுந்தியடிகள், மாதரி ஆகியோர் தற்கொலை செய்து கொண்டனர். இவர்களின் இறப்பிற்கு மாடல மறையோனை இளங்கோவடிகள் ஒரு கொலைக் கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்.

- ஊழ்வினையைக் குறிப்பிடும் இளங்கோவடிகள், சங்கமனின் கொலைக்குக் காரணமான பரதனையும் கோவலனின் கொலைக்குக் காரணமான பொற்கொல்லனையும் வெறுமனே விட்டுவிட்டார்.
- வெற்றிவேல் செழியன், பாண்டிய மன்னன் மீதும், ஆட்சியின் மீதும் ஏற்பட்ட களங்கத்தைப் போக்க எவ்விதத் தவறும் இழைக்காத ஆயிரம் பொற்கொல்லர்களைப் பலி கொடுத்து பாண்டிய நாட்டுப் புகழைத் தக்கவைத்துக் கொண்டான்.
- காப்பியங்களில் கிளைக்கதைகளைப் படைத்துள்ள ஆசிரியர்கள், இறந்த உயிர்களை மீண்டும் பிறப்பிக்கும் வரம் தரும் தெய்வங்களையும் தவறிழைப்பவர்களையும் புடைத்துண்ணும் பூதங்களையும் படைத்துள்ளனர்.
- வேள்வி நடத்திப் பசுவின் ஊன் உண்ணும் அந்தணப் பாத்திரங்களைப் படைத்துள்ளார்.
- வெற்றியால் கிடைக்கும் புகழுக்காகவும் தம்முடைய பெருஞ்சோற்றுக் கடன் கழித்தலுக்காகவும் மறவர் குடிகள் தங்களின் தலைகளை அறுத்து (தற்கொலை செய்து) பலி கொடுத்துள்ளனர்.
- தெய்வங்களைப் படைத்துள்ள காப்பிய ஆசிரியர்கள் பேயையும் படைத்துள்ளனர். மணிமேகலையில் பேயாலொருவன் அச்சப்பட்டு இறந்தான் என மீமானுடச் செயலைக் குறிப்பிட்டுள்ளார் சாத்தனார்.
- இரு காப்பிய ஆசிரியர்களும் பெண்களுக்கு கற்புண்டு எனவும் பெண்களைப் பத்தினிகள் எனவும் குறிப்பிட்டுள்ளனர். கணவன் இறந்தால் மனைவி பத்தினித் தன்மையுடன் இறக்கும் வழிமுறைகளையும் தற்கொலைத் தூண்டல்களையும் பதிவு செய்துள்ளனர்.
- பிணங்களை உண்ணும் மக்களைக் குறித்த செய்திகளும் காப்பியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# துணைநூற் பட்டியல்

*முதன்மை சான்றாதாரங்கள்*


1. **ஆலிஸ் அ. (உ.ஆ)** — **பதிற்றுப்பத்து (மூ.உ)**
   பரிமணம் அ.மா (த.ப.ஆ)
   பாலசுப்பிரமணியன் கு.வெ (த.ப.ஆ)
   ஐந்தாம் பதிப்பு-2013
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
   அம்பத்தூர், சென்னை-600 098

2. **இராஜாராம் துரை. (உ.ந)** — **சிலப்பதிகாரம்(உரைநடை)**
   முதற் பதிப்பு-2015
   நர்மதா பதிப்பகம்
   சென்னை-600 034

3. **இளங்குமரானார் இரா (உ.ஆ)** — **தொல்காப்பியம் சொல்லதிகாரம்**
   கோபாலையர் தி.வே. (ப.ஆ)
   அரணமுறுவல் ந. (ப.ஆ)
   இளம்பூரணம்(மூ.உ)
   முதற் பதிப்பு-2003
   தமிழ்மண் பதிப்பகம்
   சென்னை-600 017

4. **இளங்குமரானார் இரா (உ.ஆ)** — **தொல்காப்பியம் சொல்லதிகாரம்**
   கோபாலையர் தி.வே. (ப.ஆ)
   அரணமுறுவல் ந. (ப.ஆ)
   சேனாவரையம்(மூ.உ)
   முதற் பதிப்பு-2003
   தமிழ்மண் பதிப்பகம்
   சென்னை-600 017

5. **இளங்குமரனார் இரா. (உரை)** — **முத்தொள்ளாயிரம் (மூ.உ)**
   முதற் பதிப்பு-2009
   தமிழ்மண் பதிப்பகம்
   சென்னை-600 017

6. **கதிர் முருகு (உ.ஆ)** — **பட்டினப்பாலை**
   நெடுநல்வாடை(மூ.உ)
   முதற் பதிப்பு-2009
   சாரதா பதிப்பகம்
   சென்னை-600 014

7. **கந்தையா ந.சி.** — **பத்துப்பாட்டு**
   (செவ்விலக்கிய கருவூலம்)
   முதற் பதிப்பு-2008
   தமிழ்மண் அறக்கட்டளை
   சென்னை-17

8. **குணசேகரன் கரு.அழ.** — **பதிற்றுப்பத்து**
(மூலமும் ஆராய்ச்சிப் புத்துரையும்)
முதற் பதிப்பு-2010
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 010

9. **கௌமாரீஸ்வரி எஸ். (ப.ஆ)** — **நாலடியார் (மூ.உ)**
எட்டாம் பதிப்பு-2018
சாரதா பதிப்பகம்
சென்னை-600 014

10. **கௌமாரீஸ்வரி எஸ். (ப.ஆ)** — **பழமொழி (மூ.உ)**
பன்னிரெண்டாம் பதிப்பு-2016
சாரதா பதிப்பகம்
சென்னை-600 014

11. **சரவணன் ப.** — **நாலடியார்**
முதற் பதிப்பு-2004
சந்தியா பதிப்பகம்
சென்னை-600 083

12. **சுப்பிரமணியன் ச.வே (உரை)** — **சங்க இலக்கியம்**
எட்டுத்தொகை (மூ.உ) தொகுதி-1
மூன்றாம் பதிப்பு-2015
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை-600 108

13. **சுப்பிரமணியன் ச.வே (உரை)** — **சங்க இலக்கியம்**
எட்டுத்தொகை (மூ.உ)தொகுதி-2
மூன்றாம் பதிப்பு-2015
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை-600 108

14. **சுப்பிரமணியன் ச.வே (உரை)** — **சங்க இலக்கியம்**
எட்டுத்தொகை (மூ.உ)தொகுதி-3
மூன்றாம் பதிப்பு-2015
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை-600 108

15. **சுப்பிரமணியன் ச.வே (உ.ஆ)** — **சிலப்பதிகாரம் (மூ.உ)**
மூன்றாம் பதிப்பு-2004
தியாகராயநகர்,
சென்னை-17

16. **சுப்பிரமணியன் ச.வே (உ.ஆ)** **தொல்காப்பியம்(மூ.உ)**
பன்னிரெண்டாம் பதிப்பு-2013
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை-600 108

17. **சுப்பிரமணியன் ச.வே (உ.ஆ)** **பதினெண் கீழ்க்கணக்கு**
நூல்கள்(மூ.உ)
மூன்றாம் பதிப்பு-2017
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை-600 108

18. **சுப்பிரமணியன் பெ. (உ.ஆ)** **பரிபாடல் (மூ.உ)**
பாலசுப்பிரமணியன் கு.வெ (உ.ஆ)
தட்சிணாமூர்த்தி அ. (உ.ஆ)
பரிமணம் அ.மா (த.ப.ஆ)
ஐந்தாம் பதிப்பு-2013
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

19. **செயபால் இரா. (உ.ஆ)** **அகநானூறு (மூ.உ)**
பரிமணம் அ.மா (த.ப.ஆ)
பாலசுப்பிரமணியன் கு.வெ (த.ப.ஆ)
ஐந்தாம் பதிப்பு-2013
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

20. **சேனாவரையர் (உ.ஆ)** **தொல்காப்பியம்**
சொல்லதிகாரம் (மூ.உ)
2007
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600113

21. **சொக்கன் என்** **மணிமேகலை (நாவல் வடிவம்)**
முதல் பதிப்பு-2010
கிழக்கு பதிப்பகம்
சென்னை- 600 014

22. **தட்சிணாமூர்த்தி அ. (உ.ஆ)** **ஐங்குறுநூறு (மூ.உ)**
பரிமணம் அ.மா (த.ப.ஆ)
பாலசுப்பிரமணியன் கு.வெ (த.ப.ஆ)
ஆறாம் பதிப்பு-2017
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

23. **துரைசாமிப்பிள்ளை சு. (உ.ஆ)** **பதிற்றுப்பத்து (மூ.உ)**
நான்காம் பதிப்பு-2012
சாரதா பதிப்பகம்
சென்னை-600014

24. **நக்கீரனார் (உரை)**
**இறையனார் களவியல் (மூ.உ)**
முதற் பதிப்பு-2009
தமிழ்மண் பதிப்பகம்
சென்னை-600 017

25. **நச்சினார்க்கினியர் (உ.ஆ)**
**தொல்காப்பியம்**
எழுத்ததிகாரம் (மூ.உ)
2007
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600113

26. **நச்சினார்க்கினியர் (உ.ஆ)**
**தொல்காப்பியம்**
பொருளதிகாரம் (மூ.உ)
முதற் பாகம்-2007
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

27. **நாகராசன் வி. (உ.ஆ)**
பரிமணம் அ.மா (த.ப.ஆ)
பாலசுப்பிரமணியன் கு.வெ (த.ப.ஆ)
**குறுந்தொகை (மூ.உ)**
ஆறாம் பதிப்பு-2017
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

28. **நாகராசன் வி. (உ.ஆ)**
பரிமணம் அ.மா (த.ப.ஆ)
பாலசுப்பிரமணியன் கு.வெ (த.ப.ஆ)
**பத்துப்பாட்டு (மூ.உ)**
ஆறாம் பதிப்பு-2017
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

29. **பஞ்சாங்கம் க.**
**சிலப்பதிகாரம் (மூ.உ)**
முதற் பதிப்பு- 2020
அன்னம் பதிப்பகம்
தஞ்சாவூர்-613 007

30. **பரிமேலழகர் (உரை)**
**திருக்குறள் (மூ.உ)**
பதினைந்தாம் பதிப்பு-2012
சாரதா பதிப்பகம்
சென்னை-600 014

31. **பாலசுப்பிரமணியன் கு.வெ (உ.ஆ)**
பரிமணம் அ.மா (த.ப.ஆ)
பாலசுப்பிரமணியன் கு.வெ (த.ப.ஆ)
**நற்றிணை (மூ.உ)**
ஆறாம் பதிப்பு-2017
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

32. **பாலசுப்பிரமணியன் கு.வெ (உ.ஆ)** — **புறநானூறு (மூ.உ)**
விசுவநாதன் அ. (உ.ஆ)
நாகராசன் வி. (உ.ஆ)
ஆரோக்யசாமி இரா. (உ.ஆ)
திலகவதி க. (உ.ஆ)
சத்தியநாராயணன் வெ. (உ.ஆ)
பரிமணம் அ.மா (த.ப.ஆ)
பாலசுப்பிரமணியன் கு.வெ (த.ப.ஆ)
ஆறாம் பதிப்பு-2017
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

33. **பாலுசாமி நா. (உ.ஆ)** — **திருக்குறள் (மூ.உ)**
பாண்டியன் புக் டிப்போ
மதுரை-625 001

34. **புலியூர்க்கேசிகன் (உ.ஆ)** — **மணிமேகலை (மூ.உ)**
முதற்பதிப்பு-2011
சாரதா பதிப்பகம்
சென்னை-600014

35. **பேராசிரியர் (உ.ஆ)** — **தொல்காப்பியம்**
பொருளதிகாரம் (மூ.உ)
இரண்டாம் பாகம்-2007
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

36. **மறைமலை அடிகள்(உரை)** — **முல்லைப்பாட்டு**
முதற் பதிப்பு-2007
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை-600 108

37. **மாணிக்கம் வ.சுப. (உ.ஆ)** — **இரட்டைக் காப்பியங்கள் (மூ.உ)**
முதற் பதிப்பு- 2007
மீனாட்சி புத்தக நிலையம்
மதுரை-625 001

38. **மாணிக்கனார் அ. (உ.ஆ)** — **பத்துப்பாட்டு (மூ.உ)**
இரண்டாம் பதிப்பு-2000
வர்த்தமானன் பதிப்பகம்
சென்னை-600 017

39. **மாணிக்கவாசகன் ஞா. (உ.ஆ)** — **தொல்காப்பியம் (மூ.உ)**
மூன்றாம் பதிப்பு-2010
உமா பதிப்பகம்
சென்னை-600 001

**40. மாணிக்கவாசகன் ஞா. (உ.வி)** **பதிற்றுப்பத்து (மூ.வி.உ)**
முதற் பதிப்பு-2005
சென்னை-600 001

**41. முடத்தாமக் கண்ணியார் (மூலம்)** **பொருநராற்றுப்படை (மூ.உ)**
கமலா முருகன் (உ.ஆ) முதற் பதிப்பு-2008
சாரதா பதிப்பகம்
சென்னை-600 014

**42. மோகன் இரா. ( உ.ஆ)** **பத்துப்பாட்டு (மூ.உ)**
பரிமணம் அ.மா (த.ப.ஆ) ஆறாம் பதிப்பு-2017
பாலசுப்பிரமணியன் கு.வெ (த.ப.ஆ) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

43. **விசுவநாதன் அ. (உ.ஆ)** **கலித்தொகை (மூ.உ)**
பரிமணம் அ.மா (த.ப.ஆ) ஆறாம் பதிப்பு-2017
பாலசுப்பிரமணியன் கு.வெ (த.ப.ஆ) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

**44. வேங்கடசாமி நாட்டார் ந.மு (உ.ஆ)** **சிலப்பதிகாரம் (மூ.உ)**
முதற் பதிப்பு-2014
இளங்கணி பதிப்பகம்
சென்னை-600 015

**45. வேங்கடசாமி நாட்டார் ந.மு (உ.ஆ)** **சிலப்பதிகாரம் (மூ.உ)**
ஆறாம் பதிப்பு-2013
ராமையா பதிப்பகம்
சென்னை-600014

**46. வேங்கடசாமி நாட்டார் ந.மு (உ.ஆ)** **மணிமேகலை (மூ.உ)**
துரைசாமிப்பிள்ளை சு. (உ.ஆ) முதற் பதிப்பு-2014
இளங்கணி பதிப்பகம்
சென்னை-600 015

***துணைமைச் சான்றாதாரங்கள்***

**1. அப்பாத்துரையார் கா.** **தென்னாட்டுப் போர்க்களங்கள்**
மூன்றாம் பதிப்பு-2014
பூம்புகார் பதிப்பகம்
சென்னை-600 108

2. **அப்துல் ரகுமான்** — **மரணம் முற்றுப்புள்ளி அல்ல**
ஐந்தாம் பதிப்பு-2018
நேஷனல் பப்ளிகேசன்
சென்னை-600 017

3. **அப்துர் ரஹீம் எஸ்.** — **இறுதிப் பயணம் அதன்**
ஒழுங்கு முறைகள்
முதற் பதிப்பு-2013
அறிவு நற்றங்கால்
சென்னை-11

4. **அருணாசலம் அ.** — **தமிழர் போர் முறைகள்**
முதற் பதிப்பு-2019
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
சென்னை-600 018

5. **அறவாணன் க.ப.** — **தமிழர்+தன்னம்பிக்கை-தற்கொலை**
முதற் பதிப்பு-1998
பச்சைப் பசேல்
11 இரண்டாம் தெரு
மோகன் நகர்
புதுச்சேரி-605 005

6. **அறிவுக்கன்பன்** — **தமிழரின் நெஞ்சைக் கொல்லும்**
சிலப்பதிகாரம்
முதற் பதிப்பு-2015
மணி ஆப்செட்
சென்னை-600 024

7. **கண்ணப்ப முதலியார் பாலூர்** — **சங்ககால வள்ளல்கள்**
முதற் பதிப்பு- 1951
அம்மையப்பர் அகம்
சென்னை

8. **கணபதி இளங்கோ** — **பண்டைத் தமிழர் வாழ்வியல்**
முதற் பதிப்பு-2014
பாவை பப்ளிகேசன்ஸ்
சென்னை-600 014

9. **கணியன்பாலன்** — **பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும்**
முதல் பதிப்பு-2016
எதிர் வெளியீடு
பொள்ளாச்சி-642 002

10. **கிருஷ்ணமூர்த்தி ச.** — **நடுகற்கள்**
இரண்டாம் பதிப்பு-2016
மெய்யப்பன் பதிப்பகம்
சிதம்பரம்-608 001

11. **குணா** — **சக்கரவாளக் கோட்டம்**
இரெண்டாம் பதிப்பு-2010
பாவாணர் பதிப்பகம்
கரூர்-639 004

12. **குருஜி வாசுதேவ்** — **மரணத்துக்குப் பின்**
இரண்டாம் பதிப்பு-2017
சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷன்ஸ்
சென்னை-600 017

13. **கேசவராஜ் வெ.** — **தென்னிந்திய வீரக்கற்கள்**
இரண்டாம் பதிப்பு-2014
காவ்யா வெளியீடு
சென்னை-600 024

14. **சந்தியா நடராஜன்** — **இனி இல்லை மரண பயம்**
இரண்டாம் பதிப்பு-2017
சந்தியா பதிப்பகம்
சென்னை-600 083

15. **சிதம்பரனார் சாமி.** — **சிலப்பதிகாரத் தமிழகம்**
முதற் பதிப்பு-2009
நல்லறப் பதிப்பகம்
சென்னை-17

16. **சுப்பு ரெட்டியார் ந.** — **வைணவமும் தமிழும்**
முதற் பதிப்பு-1998
திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
சென்னை-600 018

17. **சுலோசனா நா.** **செவ்விலக்கியச் சாரம்**
முதற் பதிப்பு-2014
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

18. **செங்கோட்டுவேல் இரா.** **எட்டுத்தொகை அகநூல்களில் தூது மரபு**
முதற் பதிப்பு-2019
ஸ்ரீசாய் எண்டர்பிரைசஸ்
சென்னை-14

19. **தட்சிணாமூர்த்தி** **தமிழர் நாகரிகமும் பண்பாடும்**
மறுபதிப்பு-2011
யாழ் வெளியீடு
சென்னை-600 040

20. **தியடோர் பாஸ்கரன் சு.** **இன்னும் பிறக்காத தலைமுறைக்காக**
முதற் பதிப்பு-2006
உயிர்மைப் பதிப்பகம்
சென்னை-600 055

21. **நடராசன் தி.சு.** **சிலப்பதிகாரம் மறுவாசிப்பு**
முதற் பதிப்பு-2015
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
சென்னை-600 098

22. **நிர்மால்யா** **மகாத்மா அய்யன்காளி**
முதற் பதிப்பு-2020
காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ்
நாகர்கோவில்-629 001

23. **பாலசுப்பிரமணியன் கு.வெ** **சங்க இலக்கியத்தில் புறப்பொருள்**
முதற் பதிப்பு-2017
மெய்யப்பன் பதிப்பகம்
சிதம்பரம்-608 001

24. **பிள்ளை கே.கே.** **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்**
முதற் பதிப்பு-2009
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 004

25. **பூங்குன்றன் ர.** **கொற்றவையும் நடுகற்களும்**
சசிகலா கோ. **(பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள்)**
முதற் பதிப்பு- 2019
சித்தன் புக்ஸ்
சென்னை-600 014

26. **பொதுவன் அடிகள்** **பத்துப்பாட்டு (தொகுதி ஒன்று)**
முதற் பதிப்பு-2009
கிரியேட்டிவ் ஆப்செட்
சென்னை-600 034

27. **பொதுவன் அடிகள்** **பத்துப்பாட்டு (தொகுதி இரண்டு)**
முதற் பதிப்பு-2009
கிரியேட்டிவ் ஆப்செட்
சென்னை-600 034

28. **பொதுவன் அடிகள்** **பத்துப்பாட்டு(தொகுதி மூன்று)**
முதற் பதிப்பு-2009
கிரியேட்டிவ் ஆப்செட்
சென்னை-600 034

29. **மறைமலையடிகள்** **மரணத்தின் பின் மனிதர் நிலை**
முதற் பதிப்பு- 2017
நர்மதா பதிப்பகம்
சென்னை-600 170

30. **மாணிக்கம் வ.சுப.** **தொல்காப்பியத் திறள்**
முதற் பதிப்பு-2016
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை-600 108

31. **மாதையன் பெ.** **தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள்**
(காலமும் கருத்தும்)
முதற் பதிப்பு-2011
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
சென்னை-600 098

32. **மார்க்ஸ் அ.** **குற்றம், தண்டனை,**
**மரண தண்டனை**
முதற் பதிப்பு-2013
கருப்புப் பிரதிகள்
சென்னை-600 055

33. **வேங்கடாசலம்** — **சட்டப்படியான பிரேத பரிசோதனை**
முதற் பதிப்பு-2007
தாமரை பப்ளிகேஷன்ஸ்
சென்னை-600 098

34. **வேங்கடசாமி மயிலை,சீனி** — **சங்ககால தமிழக வரலாற்றில் சில செய்திகள்**
முதற் பதிப்பு-2005
பாவை பப்ளிகேசன்
சென்னை-600 014

35. **வேங்கடசாமி மயிலை,சீனி** — **சமணமும் தமிழும்**
முதற் பதிப்பு-2009
பூம்புகார் பதிப்பகம்
சென்னை-600 108

36. **வேங்கடசாமி மயிலை,சீனி.** — **பௌத்தமும் தமிழும்**
முதற் பதிப்பு-1940
மறைமலையடிகள் நூல் நிலையம்
சென்னை

37. **வேதசகாய குமார் எம்.** — **நவீன வாசிப்பில் செவ்வியல் இலக்கியம்**
முதற் பதிப்பு-
அக்சரா ஆப்செட்
திருவனந்தபுரம்

38. **ராமஸ்வாமி ப.** — **பௌத்த தருமம்**
முதற் பதிப்பு-1956
ஹிலால் பதிப்பகம்
திருநெல்வேலி

39. **அறிவுநம்பி அ.** — **கோட்பாட்டியல் நோக்கில் சிலப்பதிகாரம்**
முதற்பதிப்பு-2017
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
சென்னை-600 098

40. **அறிவுடைநம்பி பு.** — **சிலப்பதிகாரம் காட்டும் அரசியல்**
முதற் பதிப்பு-2010
மணி ஆப்செட்
சென்னை-600 024

41. **இளங்கோ சி.** **2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் நிலம்**
முதற் பதிப்பு-2017
பத்மாவதி ஆப்செட்
சென்னை-600 032

42. **கதிரவன் க** **கவரி கருமை காளமேகம்**
(தமிழாய்வுக் கட்டுரைகள்)
முதற் பதிப்பு-2014
இராசகுணா பதிப்பகம்
சென்னை-600 005

43. **கரிகாலன் நைசி.** **புறநானூற்று ஆய்வுகள்**
முதற் பதிப்பு-2011
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
சென்னை-600 098

44. **காமராசு இரா.** **படுவழிப் படுக**
(சங்க இலக்கியக் கட்டுரைகள்)
முதற் பதிப்பு-2014
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098.

45. **குணசேகரன் அ.** **செவ்விலக்கியங்கள்.**
(சில பார்வைகளும் பதிவுகளும்)
முதற் பதிப்பு-
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

46. **குணசேகரன் கரு.அழ.** **பட்டினப்பாலை**
(மூலமும் ஆராய்ச்சிப் புத்துரையும்)
முதற் பதிப்பு-2015
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்
சென்னை-14

47. **சஞ்சீவி எழிலரசி** **புறநானூறு ஆய்வு (தமிழாக்கம்)**
முதல் பதிப்பு-2014
மணி ஆப்செட்
சென்னை-5

48. **சந்திர சேகரன் நா. (ப.ஆ)**
ஜெகதீசன் த. (து.ப)
தமிழ்ச்செல்வன் இரா. (து.ப)
முரளி மு. (து.ப)
**செவ்விலக்கிய மரபுகள் தமிழும் பிற மொழிகளும்**
முதற் பதிப்பு-2015
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்
சென்னை-14

49. **சிதம்பரனார்**
**பத்துப்பாட்டும் பண்டைத்தமிழரும்**
முதற் பதிப்பு-2021
சூர்யா பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ்
மதுரை-625 003

50. **சிவசுப்பிரமணியன் ஆ.**
**கோபுரத் தற்கொலைகள்**
முதற் பதிப்பு-2007
பரிசல் புத்தக நிலையம்
சென்னை-600 005

51. **சிவசுப்பிரமணியன் ஆ.**
**பண்டைத் தமிழ்ச் சமூகத்தில்**
இறந்தோர் வழிபாடும்
முன்னோர் வழிபாடும்
முதற் பதிப்பு-2021
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
சென்னை-600 098

52. **சுப்பிரமணியன் கா.**
**சங்ககாலச் சமுதாயம்**
ஆறாம் பதிப்பு-2021
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்
சென்னை-14

53. **செல்வராசு நா.**
**கண்ணகி தொன்மம்**
(சமூக மானுடவியல் ஆய்வு)
ஐந்தாம் பதிப்பு-2019
காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ்
நாகர்கோவில்-629 001

54. **சேதுராமன் சி.**
**செவ்விலக்கியப் புதுமைகள்**
முதற் பதிப்பு-2021
பாவை பப்ளிகேஷன்ஸ்
சென்னை-600 001

55. **தேவநேயப் பாவாணர் ஞா**
**தமிழர் வரலாறு**
முதற் பதிப்பு-2020
பொதுமைப் பதிப்பகம்
சென்னை-1

56. நிர்மலா இரா. **தமிழிலக்கியத்தில் மூப்பும் இறப்பும்**
முதற் பதிப்பு-1999
விழிச்சுடர் பதிப்பகம்
சென்னை-600 099

57. பாவெல் பாரதி **கண்ணகி கோவிலும்**
வைகைப் பெருவெளியும்
இரெண்டாம் பதிப்பு-2018
ரமணி பதிப்பகம்
சென்னை-89

58. பிரேம்குமார் ஶ்ரீ. **செவ்விலக்கிய ஆய்வுகள்**
(செந்தமிழ்ச் செல்வி இதழ்
கட்டுரைகள்)
முதற்பதிப்பு-2011
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
சென்னை-600 098

59. பூங்குன்றன் ர. **தொல்குடி வெளிர் வேந்தர்**
இரெண்டாம் பதிப்பு-2019
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

60. முருகேசன் ச. **செவ்வியல் இலக்கியச் செந்நெறி**
முதற் பதிப்பு-2014
இராசகுணா பதிப்பகம்
சென்னை-600 091

61. ரமேஷ் மு. **சங்க இலக்கியத்தில் நிலங்கள் குடிகள் வழிபாடுகள்**
முதற் பதிப்பு-2021
தமிழறம் பதிப்பகம்
சென்னை-600 003

62. இரமேஷ் மு. **பழந்தமிழில் சமூக சமய மரபுகளும் பனுவலாக்கக் கோட்பாடுகளும்**
முதற் பதிப்பு-2016
பாரதி அச்சகம்
சென்னை-600 005

63. **இராசமாணிக்கனார் மா.** **தமிழக வரலாறும் ஆட்சியும்**
முதற் பதிப்பு-2009
பூம்புகார் பதிப்பகம்
சென்னை-600 013

64. **இராசமாணிக்கனார் மா.** **தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்**
இரண்டாம் பதிப்பு-2015
ஸ்ரீசெண்பகா பதிப்பகம்
சென்னை-600 017

65. **இராசமாணிக்கனார் மா.** **பத்துப்பாட்டு ஆராய்ச்சி**
முதற் பதிப்பு-2021
நிலவன் பதிப்பகம்
சென்னை-600 017

66. **ராஜ் கௌதமன்** **தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும்**
முதற் பதிப்பு-2018
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்
சென்னை-14

67. **வசந்தா த.** **சங்க இலக்கியத்தில் மனிதநேயம்**
முதற் பதிப்பு-2013
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்
சென்னை-14

68. **விதாலி ஃபுர்னீக்கா** **பிறப்பு முதல் இறப்பு வரை**
முதற் பதிப்பு-2006
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

69. **வெண்ணிலா அ.** **மரணம் ஒரு கலை**
முதற் பதிப்பு-2018
தமிழ் திசை(தி இந்து குழுமம்)
சென்னை-600 002

## *ஆய்வேடுகள்*

1. **அகதா ம.** **தொல்காப்பிய உரைகள் வழி**
அறியலாகும் தமிழ்ச் சமூகம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
2004

2. **காமாட்சி மு.** **சங்க இலக்கியம்: தொல்லியல் பதிவுகள்**
முனைவர் பட்ட ஆய்வேடு
சென்னைப் பல்கலைக்கழகம்
2017

3. **பாக்யலட்சுமி** **தமிழ்க் காப்பியங்களில் கனவுகள்**
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்

4. **விஜயலட்சுமி ஹ.** **ஆற்றுப்படை நூல்களில் ஐவகை நில வருணனை**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
2019


## *ஆய்வுக் கட்டுரைகள்*

1. **அய்யப்பன் கா.** **தமிழ்ச் செவ்விலக்கியங்கள் பன்முக வாசிப்பு**
(கட்டுரைத் தொகுப்பு)
முதற் பதிப்பு-2016
மணி ஆப்செட்
சென்னை-600 024

2. **அரசு வீ.** **சங்க இலக்கியம் (பன்முக வாசிப்பு)**
முதற் பதிப்பு-2012
கே.பி.பிரிண்டர்ஸ்
சென்னை-106

3. **இறையன்பு வெ** **வரலாறு உணர்த்தும் அறம்**
முதற் பதிப்பு-2017
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்
சென்னை-14

4. **கலைவாணி அ.** **சங்க இலக்கியத்தில் வெறியாட்டயர்தல்**
சான்லாக்ஸ் பன்னாட்டு
தமிழியல் ஆய்விதழ்
ISSN:2454-3993
2018

5. **சுடரொளி பா.** **கடையேழு வள்ளல்கள்**
சான்லாக்ஸ் பன்னாட்டு
தமிழியல் ஆய்விதழ்
ISSN:2454-3993
2018

6. **சிவக்குமார் ஐ.** — **செவ்வியல் இலக்கிய ஆய்வுகள்**
செந்தமிழ் இதழ்க் கட்டுரைகள்
(1902-1935)
முதற் பதிப்பு-2011
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்
அம்பத்தூர், சென்னை-600 098

7. **சேதுப்பிள்ளை ராபி.** — **தமிழர் வீரம்**
ஏழாம் பதிப்பு-1964
பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை-5

8. **தமிழண்ணல் (ப.ஆ)**
அறவாணன் க.ப. (ப.ஆ)
செல்வராசு (ப.ஆ) — **ஆய்வுக் கோவை**
தொகுதி இரண்டு
தமிழியல் துறை
புதுச்சேரி-605 014

9. **முத்தையா சு.** — **சங்ககால மறவர்**
முதற் பதிப்பு-1998
ஆதித்யா கம்யூட்டர்ஸ்
சென்னை-41

### *ஆங்கில நூல்கள்*

1. **Dr.BR.AMBEDKAR.** — **The Constitution Of India**
Government Of India
Ministry Of Law And Justice

2. **DHARAM VIR.** — **Contemporary Social Science**
Volume 26 September-2017
University grants commission

## இணைய பக்கங்கள்


1. https//www.akaramuthala.in
2. https//www.computerhope.com
3. https://www.commonfolks.in
4. https//www.dinamalar.com
5. https://geotamil.com
6. https//www.quora.com
7. https://www.researchgate.net
8. https//www.solvallan.com
9. http://siragu.com
10. http://tjanakiraman.blogspot.com
11. https//www.tamildigitallibrary.in
12. https//www.tamilvu.org
13. https//www.tamilsurangam.in
14. https//www.tnpscjob.com

## பின்னிணைப்பு 1
## அக இலக்கியங்களில் இறப்புச்செய்திகள்




## பின்னிணைப்பு 2
## புற இலக்கியங்களில் இறப்புச்செய்திகள்



## பின்னிணைப்பு 3
## அற இலக்கியங்களில் இறப்புச்செய்திகள்




## பின்னிணைப்பு 4
## தமிழ் இலக்கியங்களில் இறப்புச்செய்திகள்



## பின்னிணைப்பு 5
## சங்க இலக்கியத்தில் இறப்புச்செய்திகள்

